# பகுதி II

# பகுதி II

## இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

**பக்கம்**




| | |
|---|---|
| கணக்குகளும் நிதியும் | (I) |
| வங்கி மேற்பார்வை | (XIX) |
| வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் | (XXIV) |
| தொடர்பூட்டல் | (XXIV) |
| நூலகமும் தகவல் நிலையமும் | (XXVI) |
| நாணயம் | (XXVI) |
| உள்நாட்டுத் தொழிற்பாடுகள் | (XXVIII) |
| பொருளாதார ஆராய்ச்சி | (XXXII) |
| ஊழியர் சேமநிதியம் | (XXXIV) |
| செலாவணிக் கட்டுப்பாடு | (XXXVII) |
| நிதியியல் உளவறிதல் பிரிவு | (XL) |
| நிதியியல் முறைமை உறுதிப்பாடு | (XLI) |
| மனித வளங்கள் முகாமைத்துவம் | (XLII) |
| பயிற்சி | (XLIII) |
| தகவல் தொழில்நுட்பம் | (XLVII) |
| பன்னாட்டுத் தொழிற்பாடுகள் | (XLIX) |
| சட்டம் | (LI) |
| முகாமைத்துவ கணக்காய்வு | (LI) |
| கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் | (LII) |
| கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு | (LVI) |
| பணிமனை | (LVI) |
| பொதுப்படுகடன் | (LVII) |
| பிரதேச அபிவிருத்தி | (LXI) |
| செயலகம் | (LXVII) |
| பாதுகாப்புப் பணிகள் | (LXVII) |
| புள்ளிவிபரவியல் மற்றும் கள அளவீடுகள் | (LXVIII) |
| வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை | (LXIX) |
| நலன்புரி | (LXXII) |

## 1. கணக்குகளும் நிதியும்


විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. — EF/J/CB/FA/2008
ඔබේ අංකය / உமது இல / Your No.
දිනය / திகதி / Date — 25 மார்சு 2009


### கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

2008 திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் உள்ளடக்குகிற ஐந்தொகை, வருமானக்கூற்று, பங்கு அசைவுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம் மற்றும் (01 - 24)வரையான ஏனைய விளக்கக்குறிப்புக்கள் என்பனவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 31ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் உறுப்புரை 154(1) இற்கு அமைவாக நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42(2) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியின் நிதிக்கூற்றின் கணக்காய்வு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் நியமிக்கப்பட்ட பொது நடைமுறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்டது.

#### நிதியியல் கூற்றுக்களுக்கான முகாமைத்துவ பொறுப்புக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க, நிதியியல்கூற்றுக்களை தயாரிப்பதற்கும் சிறப்பு சமர்ப்பித்தலுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக இருக்கிறது. இப் பொறுப்பு மோசடி அல்லது பிழை காரணமாக ஏற்படும் பாரதூரமான தவறான கூற்றுக்களின்றி நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பது என்பனவற்றுடன் தொடர்பான வடிவமைத்தல் நடைமுறைக்கிடுதல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளைப் பேணுதல் மற்றும் பொருத்தமான கணக்கீட்டு நியமங்களை தெரிவு செய்து பிரயோகித்தல், சூழ்நிலைக்கேற்ப நியாயமான கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ளல் என்பனவற்றை உள்ளடக்குகிறது.

#### அபிப்பிராயத்தின் அடிப்படையும் கணக்காய்வின் செயற்பரப்பும்

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயத்தை தெரிவிப்பது எனது கடமையாகும். கணக்காய்வானது பாரதூரமான தவறான கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வானது நிதிக்கூற்றுக்கள், கணிசமான அளவு பிழைகள் அறிக்கையிடலிலிருந்து விலக்கப்பட்டனவா இல்லையா என்ற ஏற்றுக்கொள்ளத்தக்க உறுதிப்படுத்தலை பெறுவதற்கு செயற்படுத்தப்பட்டதும் திட்டமிடப்பட்டதுமான கணக்காய்வை தேவைப்படுத்துகின்ற இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடாத்தப்படுகின்றது. கணக்காய்வானது நிதியியல்கூற்றுக்களில் குறிப்பிடப்படுகின்ற வெளிப்படுத்துகை தொகைகளுக்கும் ஆதாரமான சாட்சியங்களை ஒரு பரிசோதனை அடிப்படையில் பரீட்சிப்பதையும் உள்ளடக்குகின்றது. நிதியியல்கூற்றுகளின் மொத்த சமர்ப்பிப்புக்களை மதிப்பிடுவது போன்று ஒரு கணக்காய்வானது முகாமைத்துவத்தால் தயாரிக்கப்பட்ட குறிப்பிடப்பட்ட மதிப்பீடுகளையும், பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளை மதிப்பிடுதலையும் உள்ளடக்குகின்றது. என்னுடைய அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் என்னுடைய கணக்காய்வு நோக்கத்துக்கு தேவையாகவிருந்த அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டுள்ளேன். ஆகவே, என்னுடைய கணக்காய்வானது எனது அபிப்பிராயத்துக்கு ஒரு நியாயமான அடிப்படையை வழங்குகின்றது என நான் நம்புகின்றேன்.

#### அபிப்பிராயம்

இது வரையான எனது பரீட்சிப்புக்களிலிருந்து கண்டறியப்பட்ட எனது அபிப்பிராயத்தின்படி, 2008 திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற ஆண்டுக்கான வங்கியின் கணக்கீட்டு பதிவுகளை வங்கி சரியான முறையில் பேணியிருப்பதுடன் 2008 திசெம்பர் 31ஆம் நாளன்று உள்ளவாறு வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் வங்கி அலுவல்களின் நிலைபற்றி உண்மையானதும் சரியானதுமான பார்வையினைக் கொண்டிருப்பதுடன் இவ்வாண்டில் முடிவடைந்த இலாபங்களையும் காசுப் பாய்ச்சல்களையும் தருகின்றது.

#### பாராளுமன்றத்துக்கு அறிக்கை

அரசியல் யாப்பின் உறுப்புரை 154(6) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை உரிய காலத்தில் சமர்பிக்கப்படும்.

எஸ். சுவர்ணஜோதி
**கணக்காய்வாளர் நாயகம்**


නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව | சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை | INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA

දුරකථනය / தொலைபேசி — 2691151
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. — 2697451
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail — oaggov@sltnet.lk

# இலங்கை மத்திய வங்கி
## ஐந்தொகை
### திசெம்பர் 31இல் உள்ளவாறானது

| | குறிப்பு | 2008 ரூபா '000 | 2007 ரூபா '000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| காசு நிலுவையும் காசுக்குச்சமமானவையும் | 1 | **167,338,807** | 160,051,979 |
| நிதியியல் சொத்துக்கள் | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 2 | **50,381,845** | 113,583,131 |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 2 | **41,733,314** | 79,541,928 |
| ப.நா.நிதியத்துடன் தொடர்பான சொத்துக்கள் | 3 | **72,399,875** | 71,899,462 |
| ஏனைய வெளிநாட்டிலிருந்து பெறத்தக்கவை | | **1,427,899** | 767,873 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **333,281,740** | 425,844,373 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| முதலீட்டுப் பட்டியல் - இலங்கை அரச பிணையங்கள் | | **159,771,674** | 43,612,184 |
| அரசுக்கான முற்பணங்கள் | 4 | **76,307,700** | 60,679,200 |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் | 5 | **1,577,301** | 2,093,651 |
| ஏனைய உள்நாட்டுப் பெறத்தக்கவை | | **659,770** | 706,767 |
| நிதி மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் | 6 | **50,729** | 50,135 |
| ஏனைய சொத்துக்கள் | | **1,364,690** | 1,230,687 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **239,731,864** | 108,372,624 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | **573,013,604** | 534,216,997 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல்லாச் சொத்துக்கள்** | | | |
| தங்கத்தில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள் | | **10,427,432** | 13,991,886 |
| **உள்நாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| பொருட்களின் இருப்பு | 7 | **1,961,687** | 1,665,348 |
| தூய்மை செய்யப்பட்ட தங்க இருப்பு | | **-** | 59,766 |
| நானாவிதச் சொத்துக்கள் | | **2,405,922** | 2,155,045 |
| சொத்து, பொறிகள், இயந்திரங்கள் | 8 | **9,242,988** | 9,354,648 |
| அருவச் சொத்துக்கள் | 9 | **15,717** | 953 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | **24,053,746** | 27,227,646 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **597,067,350** | 561,444,643 |
| **பொறுப்புக்களும் பங்குகளும்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய தொகை | 10 | **336,091** | 6,730,522 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்குச் செலுத்தப்படவேண்டிய தொகை | | **91,354,909** | 48,454,327 |
| ப.நா.நி. தொடர்பான பொறுப்புக்கள் | 11 | **95,133,658** | 102,291,389 |
| ஏனைய வெளிநாட்டுச் செலுத்தப்பட வேண்டியவைகள் | | **1,517,077** | 1,615,652 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **188,341,735** | 159,091,890 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 12 | **82,311,214** | 91,053,024 |
| அரச, அரச முயற்சிகளிலுள்ள மீதிகள் | 13 | **1,245,624** | 1,416,075 |
| மீள் கொள்வனவின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | | **13,743,000** | 18,000 |
| ஊழியர்கள் நன்மைகள் திட்டத்திலுள்ள மீதிகள் | 14 | **1,155,061** | 2,250,167 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | | **1,664,352** | 1,923,545 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **100,119,251** | 96,660,811 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | | **288,460,986** | 255,752,701 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | | **186,098,914** | 173,363,722 |
| பிற்போடப்பட்ட அரச கொடைகள் | | **-** | 68 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய வேலைக்குப் பின்னைய நன்மைத் திட்டங்கள் | | **1,026,698** | 324,182 |
| நானாவிதப் பொறுப்புக்களும் ஒன்றுசேர்நதவையும் | | **531,960** | 614,603 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | | **187,657,572** | 174,302,575 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **476,118,558** | 430,055,276 |
| **பங்குகள்** | | | |
| மூலதன நிதியம் | 15 | **25,000,000** | 15,000 |
| ஒதுக்குகள் | 15 | **95,948,792** | 131,374,367 |
| **மொத்தப் பங்கு** | | **120,948,792** | 131,389,367 |
| **மொத்தப் பொறுப்புக்களும் பங்குகளும்** | | **597,067,350** | 561,444,643 |

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் முதன்மைக் கணக்காளரும் இந் நிதியியல் கூற்றுக்களை 2009 மாச்சு 6ஆம் நாள் வழங்குவதற்காக வங்கியின் சார்பிலும் அதற்காகவும் அதிகாரமளித்திருக்கின்றனர்

அஜித் நிவாட் கப்ரால் - **ஆளுநர்**

கே. எம். ஏ. என். டவுலகல - **முதன்மைக் கணக்காளர்**

# இலங்கை மத்திய வங்கி

## திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று

| | குறிப்பு | 2008 ரூபா '000 | 2007 ரூபா '000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டிவருமானம் | 16 | **11,129,190** | 13,240,762 |
| விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபம் (நட்டம்) | | **2,211,883** | 4,413,887 |
| விலை மாற்றங்களிலிருந்தான தேறல் செய்யப்பட்ட இலாபம் (நட்டம்) | | **6,648,280** | 2,189,134 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **19,989,353** | 19,843,783 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவுகள்** | | | |
| வட்டிச் செலவு | 17 | **(1,301,552)** | (2,226,270) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவு** | | **(1,301,552)** | (2,226,270) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம் (நட்டம்) | | **(22,810,925)** | 8,812,401 |
| **வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம் (நட்டம்)** | | **(4,123,124)** | 26,429,914 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 16 | **7,043,031** | 9,516,837 |
| வட்டிச் செலவு | 17 | **(511,709)** | (551,596) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **6,531,322** | 8,965,241 |
| ஏனைய வருமானம் | 18 | **454,250** | 421,396 |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம் (நட்டம்)** | | **2,862,448** | 35,816,551 |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்** | | | |
| **ஆளணிச் செலவுகள்** | | | |
| - சம்பளங்களும் கூலிகளும் | 19 | **(1,718,302)** | (1,591,667) |
| - வரைவிலக்கணம் செய்யப்பட்ட பகிர்ந்தளிப்புத் திட்டச் செலவு | 19 | **(215,066)** | (187,834) |
| - ஓய்விற்குப் பின்னரான வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நன்மைகள் திட்டச்செலவு | 19 | **(1,333,944)** | (1,671,606) |
| | | **(3,267,312)** | (3,451,107) |
| பெறுமானத் தேய்வும் கடன்தீர்ப்பனவும் | | **(302,977)** | (270,040) |
| பொருட்பட்டியல் செலவு | | **(926,586)** | (1,052,160) |
| நிருவாகச் செலவுகள் | 20 | **(1,472,257)** | (1,172,965) |
| அறவிடமுடியா மற்றும் ஐயப்படுகடன்கள் மற்றும் தேறிய சில்லறைகளின் பதிவழிப்பு | | **-** | (52) |
| **மொத்த தொழிற்பாட்டு செலவுகள்** | | **(5,969,132)** | (5,946,324) |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம் / (நட்டம்)** | | **(3,106,684)** | 29,870,227 |
| வருமானவரி | | **(1,937,740)** | (1,044,842) |
| **இவ்வாண்டிற்கான தேறிய இலாபம் / (நட்டம்)** | | **(5,044,424)** | 28,825,385 |

# இலங்கை மத்திய வங்கி

## திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | குறிப்பு | 2008 ரூபா '000 | 2007 ரூபா '000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| **மூலம்:** | | | |
| பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **11,970,696** | 13,091,488 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை | | **688,187** | 380,567 |
| திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும் | | **6,648,280** | 2,189,134 |
| பெறப்பட்ட செலாவணி இலாபம் / (இழப்பு) | | **(269,850)** | 89,345 |
| பெறப்பட்ட ஏனைய வருமானம் | | **454,182** | 348,438 |
| | | **19,491,495** | 16,098,972 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **1,447,241** | 2,234,299 |
| செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் | | **507,687** | 552,055 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | | **3,608,251** | 1,782,510 |
| வழங்குனர்களுக்கான கொடுப்பனவு | | **(23,623,338)** | 3,583,244 |
| செலுத்தப்பட்ட வருமானவரி | | **28,611,636** | 663,653 |
| | | **10,551,477** | 8,815,761 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்:** | 21 | **8,940,018** | 7,283,211 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்:** | | | |
| **மூலம்:** | | | |
| ஏனைய உள்ளூர் நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய (அதிகரிப்பு) / குறைப்பு | | **(304,851)** | (822,394) |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் அளவீடுகள் | | **252,307** | 393,795 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகளின் விற்பனை / மீட்டல் | | **(594)** | (4,950) |
| சொத்து, பொறி, கருவிகளின் விற்பனை | | - | - |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களின் முதலீடுகள் மீதான வருமானம் | | - | 28,591 |
| மீள விற்பதற்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய அதிகரிப்பு / குறைப்பு | | **13,725,000** | (544,000) |
| | | **13,671,863** | (948,958) |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணயப் பிணையங்களிலான தேறிய அதிகரிப்பு / குறைப்பு | | **(86,444,960)** | 6,186,179 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு / குறைப்பு | | **(541,626)** | 587,989 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/ குறைப்பு | | **(33,914,788)** | (12,345,621) |
| ஏனைய உள்ளூர் வைப்புக்களிலான தேறிய அதிகரிப்பு / குறைப்பு மற்றும் கொடுபடத்தக்கவை | | **(4,861)** | 4,409 |
| கொடைகள் தவிர்ந்த சொத்துப் பொறிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவுகள் | | **(2,269,492)** | 221,447 |
| தங்க இருப்பிலான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) | | **206,080** | (181,599) |
| | | **(122,969,647)** | (5,527,195) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **136,641,510** | 4,578,237 |
| **நிதியிடல் நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| **மூலம்:** | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை வெளியிடல் | | **219,507,915** | 209,034,025 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களை புறக்கீடு செய்தல் | | **(206,772,722)** | (192,909,909) |
| சுற்றோட்டத்திலுள்ள தேறிய நாணய வழங்கல் | | **12,735,193** | 16,124,116 |
| **கழிக்குக:** | | | |
| அரச கொடுக்கல் வாங்கல் மீதான சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய வழங்கல் / (மீளப்பெறல்) | 22 | **125,419,584** | (21,422,909) |
| வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்களிலுள்ள சுற்றுறோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல் / (மீளப்பெறல்) | 23 | **8,741,810** | (8,564,417) |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல் / (மீளப்பெறல்) | | **134,161,394** | (29,987,326) |
| | | **(121,426,201)** | 46,111,442 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் மீள் கொடுப்பனவு | | **8,313,981** | 605,092 |
| ஏனைய நிதிகளின் கொடுப்பனவுகள் | | - | 15,090 |
| அரசுக்கான மிகைக் கொடுப்பனவுகள் | | **8,000,000** | 4,000,000 |
| | | **16,313,981** | 4,620,182 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(137,740,182)** | 41,491,260 |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு** | | **7,841,345** | 53,352,706 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதான செலாவணி வீதத் தாக்கம் | | **(554,517)** | 1.097,587 |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | | **160,051,979** | 105,601,686 |
| **31 திசெம்பரில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்** | 24 | **167,338,807** | 160,051,979 |

# இலங்கை மத்திய வங்கி

## 2008 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பங்குடைமை அசைவுக் கூற்று

| | பங்களிக்கப் பட்ட மூலதனம் ரூபா "000 | மூலதனமாக ஒதுக்கப்பட்ட ஒதுக்குகள் ரூபா "000 | மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ரூபா "000 | ஏனைய ஒதுக்கங்கள் ரூபா "000 | திரட்டிய இலாபங்கள் ரூபா "000 | மொத்தம் ரூபா "000 |
|---|---|---|---|---|---|---|
| **2007 சனவரி 1இல் உள்ளவாறு** | 15,000 | - | 473,057 | 90,712,965 | 12,148,493 | 103,349,515 |
| தேறிய இலாபம் | - | - | - | - | 28,825,385 | 28,825,385 |
| அதேநேர மொத்த தீர்ப்பனவின் கடன்கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | - | - | - | 46,341 | (46,341) | - |
| பொது ஒதுக்கிற்கான மாற்றம் | - | - | - | 1,478,488 | (1,478,488) | - |
| இம வங்கி விசேட ஒதுக்குக்கான மாற்றல் | - | - | - | 100,914 | (100,664) | 250 |
| மீள்மதிப்பீடு மீதான இலாபம் அல்லது நட்டம் | - | - | 2,233,010 | - | - | 2,233,010 |
| அரசுக்கான இலாப மாற்றல் | - | - | - | - | (4,000,000) | (4,000,000) |
| கண்டிச் சொத்தின் விற்பனைப் பெறுகையின் மாற்றல் | - | - | - | - | (15,090) | (15,090) |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றல் | - | - | - | 8,812,401 | (8,812,401) | - |
| விற்பனைக்காக கிடைக்கத்தக்க பிணையங்களின் தேறிய | | | | | | |
| சந்தைப்பெறுமதி/ (நட்டம்) | - | - | - | 996,817 | - | 996,817 |
| உடன் விளைவு நிலைமை | - | - | - | - | (520) | (520) |
| **2008 சனவரி 1இல் உள்ளவாறு** | 15,000 | - | 2,706,067 | 102,147,926 | 26,520,374 | 131,389,366 |
| தேறிய இலாபம் (நட்டம்) | | | | | **(5,044,424)** | **(5,044,424)** |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கடன்கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | | | | **63,294** | **(63,294)** | |
| பொது ஒதுக்கிற்கான மாற்றல் | | | | **11,722,139** | **(11,722,139)** | |
| தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மீள்மதிப்பீட்டு நட்டத்தின் மாற்றல் | | | | **(22,810,925)** | **22,810,925** | |
| இம வங்கியின் விசேட ஒதுக்குக்கான மாற்றல் | | | | **150,377** | **(150,377)** | |
| விற்பனைக்காக கிடைக்கத்தக்க பிணையங்களின் தேறிய | | | | | | |
| சந்தைப் பெறுமதி /(நட்டம்) | | | | **2,603,850** | | **2,603,850** |
| மூலதன மாற்றலாக பொது ஒதுக்கிலிருந்து | | | | | | |
| ஒதுக்குக்கு ஒதுக்கப்பட்ட நிதியங்களின் மாற்றல் | | **24,985.000** | | **(24,985,000)** | | |
| அரசுக்கான இலாபமாற்றல்கள் | | | | | **(8,000,000)** | **(8,000,000)** |
| **2008 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **15,000** | **24,985,000** | **2,706,067** | **68,891,661** | **24,351,065** | **120,948,792** |

# இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் கூற்றின் பகுதியாக வாசிக்கப்பட வேண்டியவை

| | | 2008<br>'000 ரூபா | 2007<br>'000 ரூபா |
|---|---|---|---|
| 1. | **காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்** | | |
| | வெளிநாட்டு வங்கிகளிலுள்ள நிலுவைகள் | 45,683,515 | 6,831,527 |
| | வெளிநாட்டு வங்கிகளிலுள்ள தவணை வைப்புக்கள் | 39,017,982 | 130,280,290 |
| | ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலையான வைப்புக்கள் | - | 4,327,401 |
| | மீள்கொள்வனவு உடன்படிக்கையின கீழான வைப்புக்கள் | 82,637,310 | 18,612,761 |
| | | 167,338,807 | 160,051,979 |
| 2. | **நிதியியல் சொத்துக்கள்** | | |
| | இலாப அல்லது நட்டங்களூடாக சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் | 50,381,845 | 113,583,131 |
| | விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் | 41,733,314 | 79,541,928 |
| | மொத்த நிதியியல் சொத்துக்கள் | 92,115,159 | 193,125,059 |
| 3. | **பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான சொத்துக்கள்** | | |
| | சிறப்பு எடுப்பனவு உரிமையிலுள்ள உடைமைகள் | 220,853 | 740,172 |
| | பன்னாட்டு நாணய அனுமதிப் பங்கு | 72,041,564 | 71,023,774 |
| | பன்னாட்டு நாணய நிதியத்துடனான வைப்புக்கள் | 137,458 | 135,516 |
| | **பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான மொத்தச் சொத்துக்கள்** | 72,399,875 | 71,899,462 |
| 4. | **அரசுக்கான முற்பணங்கள்** | | |
| | சுழலும் கொடுகடன் | 76,307,700 | 60,679,200 |
| | **அரசுக்கான மொத்த முற்பணங்கள்** | 76,307,700 | 60,679,200 |
| 5. | **ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்** | | |
| | வெளிநின்ற மூலதனம் | | |
| | தொடர்பான தரப்பினர் | 48,058 | 50,670 |
| | ஏனையோர் | 2,148,718 | 2,152,116 |
| | சுசகன,சுனாமி கடன் திட்டத்தின்கீழ் பெறத்தக்கவை | | |
| | தொடர்பான தரப்பினர் | 821,613 | 1,046,496 |
| | ஏனையோர் | 737,404 | 1,022,861 |
| | பெறத்தக்க வட்டி | 4,220,236 | 4,218,134 |
| | பெறத்தக்க மொத்தம் | 7,976,029 | 8,490,277 |
| | கழிக்குக: ஐயத்திற்கிடமான பெறுகைகளுக்கான ஏற்பாடு | (2,178,492) | (2,178,492) |
| | இடைநிறுத்தப்பட்ட வட்டி | (4,220,236) | (4,218,135) |
| | தேறிய பெறத்தக்கவை | 1,577,301 | 2,093,650 |
| 6. | **நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகள்** | | |
| | வரையறுக்கப்பட்ட கொடுகடன் தகவல் பணியகம் | 15,479 | 12,135 |
| | வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர் | 29,500 | 29,500 |
| | பிச் ரேட்டிங் லங்கா லிமிடெட் | 3,500 | 3,500 |
| | வரையறுக்கப்பட்ட இலங்கை நிதியியல் பணிகள் பணியகம் | 2,250 | 5,000 |
| | நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான மொத்த முதலீடுகள் | 50,729 | 50,135 |
| 7. | **இருப்புக்கள்** | | |
| | சுற்றோட்டத்திற்கான தாள்கள் | 1,538,975 | 1,155,948 |
| | சுற்றோட்டத்திற்கான நாணயக் குத்திகள் | 441,512 | 497,949 |
| | இடைப்போக்கிலுள்ள நாணயக் குத்திகள் | 7,739 | 41,155 |
| | | 1,988,226 | 1,695,052 |
| | கழிக்குக: மெதுவாக அசையும் விடயங்களுக்கான ஏற்பாடு | (55,300) | (55,300) |
| | | 1,932,926 | 1,639,752 |
| | எழுதுகருவிகள் மற்றும் நானாவிதப் பொருட்கள் | 28,761 | 25,596 |
| | கிரயம் மற்றும் தேறிய கைத்தேறத்தக்க பெறுமதியின் குறைந்த பெறுமானத்தில் மொத்த இருப்புக்கள் | 1,961,687 | 1,665,348 |

**8. சொத்து பொறி மற்றும் கருவிகள்**

| | காணியும் கட்டடமும் ரூபா '000 | பொறிகளும் கருவிகளும் ரூபா '000 | தளபாடமும் கருவிகளும் ரூபா '000 | உந்து ஊர்திகள் ரூபா '000 | கணனி வன்கலம் ரூபா '000 | ஏனையவை ரூபா '000 | மொத்தம் 2008 ரூபா '000 | மொத்தம் 2007 ரூபா '000 |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஒன்று சேர்ந்த தேய்மானம் நீங்கலாக சனவரி 1ஆம் நாள் உள்ளவாறு | 8,166,228 | 780,271 | 193,868 | 98,446 | 61,880 | 53,954 | **9,354,647** | 7,717,183 |
| மீள்மதிப்பீடுகள் | - | - | - | - | - | - | - | 2,233,010 |
| புதிதாக வாங்கப்பட்டவை | 11,798 | 2,961 | 28,161 | - | 35,870 | 120,884 | **199,674** | 220,177 |
| விற்பனை செய்யப்பட்டவை | - | - | (263) | - | (85) | (13,287) | **(13,635)** | - |
| மீள் பகுப்பாய்வு செய்யப்பட்ட / பதிவழிக்கப்பட்டவையில் தேறிய விளைவு | - | - | - | - | - | - | - | - |
| ஆண்டிற்கான தேய்மானக் கட்டணம் | (121,064) | (52,575) | (45,097) | (27,033) | (50,435) | (1,495) | **(297,698)** | (269,722) |
| ஒன்று சேர்ந்த தேய்மானம் நீங்கலாக திசெம்பர் 31ஆம் நாள் உள்ளவாறு | 8,056,962 | 730,657 | 176,669 | 71,413 | 47,230 | 160,056 | **9,242,988** | 9,354,648 |

| | | 2008 '000 ரூபா | 2007 '000 ரூபா |
|---|---|---|---|
| **9.** | **அருவச் சொத்துக்கள்** | | |
| | **கணனி மென்பொருள்** | | |
| | **செலவு:** | | |
| | **சனவரி 1இல் உள்ளவாறு** | **464,420** | 463,149 |
| | புதிதாக வாங்கப்பட்டவை | **20,039** | 1,271 |
| | விற்கப்பட்டவை | - | - |
| | **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **484,459** | 464,420 |
| | **பதிவழிப்பும் பெறுமதி குறைவும்** | | |
| | **சனவரி 1இல் உள்ளவாறு** | **463,467** | 463,149 |
| | ஆண்டிற்கான பதிவழிப்புக் கட்டணம் | **5,275** | 318 |
| | **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **468,742** | 463,467 |
| | **தேறிய ஏட்டுப் பெறுமதி** | | |
| | சனவரி 1இல் உள்ளவாறு | **953** | **-** |
| | திசெம்பர் 31இல் உள்ளவாறு | **15,717** | 953 |
| **10.** | **வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு செலுத்தத்தக்க தொகை** | | |
| | வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | **-** | 6,246,208 |
| | ஏனைய நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டியவை | **336,091** | 484,313 |
| | | **336,091** | 6,730,522 |
| **11..** | **பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்பான பொறுப்புக்கள்** | | |
| | வட்டியுடனான கடன்கள் - நடைமுறையற்ற | **7,534,695** | 18,809,059 |
| | வட்டியுடனான கடன்கள் - நடைமுறை | **11,543,903** | 8,501,764 |
| | சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு | **12,349,883** | 12,175,406 |
| | ப.நா. நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ஏனைய தொகைகள் | **39,987,545** | 38,417,617 |
| | அனுமதிப் பங்குப் பொறுப்பு | **23,717,632** | 24,387,543 |
| | | **87,598,963** | 83,482,330 |
| | **பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்பான மொத்தப் பொறுப்புக்கள்** | **95,133,658** | 102,291,389 |

| | | 2008 '000 ரூபா | 2007 '000 ரூபா |
|---|---|---|---|
| **12.** | **வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்** | | |
| | வங்கிகளின் வைப்புக்கள்: | | |
| | - தொடர்பான தரப்பினர் | **33,347,603** | 38,250,751 |
| | - ஏனையோர் | **48,960,685** | 52,795,434 |
| | | **82,308,288** | 91,046,185 |
| | நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்: | | |
| | - தொடர்பான தரப்பினர் | **91** | 64 |
| | - ஏனையோர் | **2,836** | 6,775 |
| | | **2,926** | 6,839 |
| | கழிக்குக: ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் கீழான முற்பணங்கள் | - | - |
| | **வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் மொத்த வைப்புக்கள்** | **82,311,214** | 91,053,024 |
| **13.** | **அரச மற்றும் அரச முயற்சிகளுடனான நிலுவைகள் - தொடர்பான தரப்பினர்** | | |
| | அரசுடனான வைப்புக்கள் | **341,343** | 642,135 |
| | அரச முகவர்கள் மற்றும் நிதியங்கள் | **904,281** | 773,940 |
| | **அரச மற்றும் அரச முயற்சிகளுடனான மொத்த நிலுவைகள்** | **1,245,624** | 1,416,075 |
| **14.** | **ஊழியர் நன்மைகள் திட்டங்களிலுள்ள நிலுவைகள்** | | |
| | ஊழியர் சேம நிதியம் - தொடர்பான தரப்பினர் | **2,563** | 713 |
| | ஊழியர் இளைப்பாறல் ஓய்வூதிய திட்டம் - தொடர்பான தரப்பினர் | **(482,438)** | 437,867 |
| | விதவைகள் /விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் - தொடர்பான தரப்பினர் | **704,166** | 829,216 |
| | வெகுமதி தொடர்பாக கொடுபடத்தக்கவை | **39,337** | 46,488 |
| | மருத்துவ நன்மைத் திட்டம் தொடர்பாகக் கொடுபடத்தக்கவை | **891,433** | 935,883 |
| | **மொத்த ஏனைய வைப்புக்கள்** | **1,155,061** | 2,250,167 |
| **15.** | **மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | | |
| | மூலதனம் | **15,000** | 15,000 |
| | மூலதனமாக ஒதுக்கி வைக்கப்பட்ட ஒதுக்குகள் | **24,985,000** | - |
| | மூலதனப் பங்களிப்புக் கணக்கு | **-** | 577,859 |
| | நிலையான சொத்து மீள் மதிப்பீட்டுக் கணக்கு | **2,706,067** | 2,706,067 |
| | சந்தைப் பெறுமதியிடல் ஒதுக்கு - விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்கள் | **1,822,401** | (781,499) |
| | ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்) | **(5,044,424)** | 28,825,384 |
| | பன்னாட்டு ஒதுக்கு மீள்மதிப்பீடு | **38,651,679** | 61,422,435 |
| | ஏனைய ஒதுக்குகள் | **57,813,069** | 38,624,071 |
| | | **120,948,792** | 133,389,367 |
| **16.** | **நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| | **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| | காசு, காசுக்குச் சமமானவைகள் | **4,670,088** | 5,956,825 |
| | நிதியியல் சொத்துக்கள் | **6,334,568** | 7,086,382 |
| | பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான சொத்துக்கள் | **124,534** | 169,872 |
| | ஏனைய வெளிநாட்டுப் பெறுகைகள் | - | 27,683 |
| | **வெளிநாட்டு நாணய நிதியச் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **11,129,190** | 13,240,762 |
| | **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| | முதலீட்டுச் சொத்துப்பட்டியல் - இலங்கை அரச பிணையங்கள் | **6,538,858** | 9,207,485 |
| | ஏனைய கடன்களும் முற்பணங்களும் | **504,173** | 309,352 |
| | **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்தத் தேறிய வட்டிவருமானம்** | **7,043,031** | 9,516,837 |
| | **நிதியியல் சொத்திலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **18,172,221** | 22,757,599 |

| | | 2008 '000 ரூபா | 2007 '000 ரூபா |
|---|---|---|---|
| **17.** | **நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| | **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவு** | | |
| | ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்திற்கு கொடுபடவேண்டிய தொகைகள் | **869,784** | 1,330,404 |
| | பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் | **428,110** | 828,181 |
| | மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள் | **-** | 67,685 |
| | ஏனைய வெளிநாட்டுக் கொடுபடத்தக்கவை | **3,658** | - |
| | **வெளிநாட்டு நாணய நிதிய பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **1,301,552** | 2,226,270 |
| | **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டி செலவு** | | |
| | மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள் | **511,709** | 551,596 |
| | **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **511,709** | 551,596 |
| | **நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவு** | **1,813,261** | 2,777,866 |
| **18.** | **ஏனைய வருமானம்** | | |
| | பங்கிலாப வருமானம் - தொடர்பான தரப்பினர் | **9,048** | 12,648 |
| | - ஏனையவர்கள் | **-** | 394 |
| | சொத்துக்கள் பொறிகள் மற்றும் கருவிகளின் விற்பனையின் மீதான இலாபம் | **1,708** | 567 |
| | நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள முதலீடுகளின் விற்பனை மீதான இலாபம் | **308** | (12) |
| | பிற்போடப்பட்ட கொடைகளின் கடன்தீர்ப்பனவு | **68** | 60,007 |
| | பல்வகை வருமானம் | **443,119** | 347,792 |
| | **ஏனைய மொத்த வருமானம்** | **454,250** | 421,396 |
| **19.** | **ஆளணிச் செலவுகள்** | | |
| | தொழில் தருநரினால் செலுத்தப்பட்ட உழைக்கும்போதே செலுத்தும்வரி உட்பட சம்பளங்களும் கூலிகளும் | **1,718,302** | 1,591,667 |
| | ஊழியத்துக்குப் பின்னரான வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைத் திட்டங்களின் செலவுகள் | **1,333,944** | 1,671,606 |
| | வரைவிலக்கணம் செய்யப்பட்ட உதவு தொகைத் திட்டச் செலவுகள் | **215,066** | 187,834 |
| | **மொத்த ஆளணிச் செலவுகள்** | **3,267,312** | 3,451,107 |
| **20.** | **நிர்வாகச் செலவுகள்** | | |
| | திருத்தங்களும் பேணல்களும் | **441,637** | 341,234 |
| | தகவல் | **77,242** | 78,564 |
| | தொழில்ரீதியான பயணம் | **48,532** | 20,099 |
| | வாடகைச் செலவுகள் | **1,217** | 1,239 |
| | அச்சிடல் | **23,830** | 23,982 |
| | கணக்காய்வுக் கட்டணம் | **8,688** | 9,040 |
| | நாணச்சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் | **383** | 389 |
| | இலங்கை மத்திய வங்கி சேம நிதிய வட்டிச் செலவு | **468,165** | 453,125 |
| | பல்வகை | **402,563** | 245,293 |
| | **ஏனைய மொத்த தொழிற்பாட்டுச்செலவுகள்** | **1,472,257** | 1,172,965 |
| **21.** | **தொழிற்பாட்டு இலாபங்களை தொழிற்பாட்டு காசுப்பாய்ச்சலுடன் மீளிணைக்கப்படுத்தல்** | | |
| | **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அறிவிக்கப்பட்ட தேறிய இலாபம்** | **(5,044,424)** | 28,825,385 |
| | **கூட்டுக (கழிக்குக) காசல்லா விடயங்கள்** | | |
| | தேய்மானம் | **302,977** | 270,040 |
| | பெறப்பட்ட வட்டி - உள்ளூர் நாணயம் - முதலீட்டுச் சொத்துப்பட்டியல் | **(6,538,858)** | (9,131,665) |
| | வரைவிலக்கணம் செய்யப்பட்ட ஊழியர் நன்மைத் திட்டங்களுக்கான தேறிய ஒதுக்கு | **4,682,839** | - |
| | பெறப்படாத தேறிய வெளிநாட்டுச் செலாவணி (இலாபம் / குறைப்பு) | **22,541,075** | (8,723,055) |
| | ஏனைய ஒதுக்கங்கள் | **21,329,329** | 1,943,189 |
| | பிற்போடப்பட்ட கொடைகள் | **(68)** | (59,917) |

| | | 2008 '000 ரூபா | 2007 '000 ரூபா |
|---|---|---|---|
| | **கூட்டுக(கழிக்குக) ஏனைய தொழிற்படு மூலதன விடயங்களின் அசைவுகள்** | | |
| | இருப்புக்களின் (அதிகரிப்பு) / குறைப்பு | **(296,339)** | 602,189 |
| | பெறத்தக்க வட்டியின் (அதிகரிப்பு) / குறைப்பு | **1,025,519** | (141,746) |
| | பல்வகைப் பொறுப்புக்களின் அதிகரிப்பு / (குறைப்பு) | **(26,755,479)** | (2,304,419) |
| | கொடுபடத்தக்க வட்டியில் அதிகரிப்பு / (குறைப்பு) | **(141,667)** | (36,171) |
| | ஏனைய பெறத்தக்கவைகளில் அதிகரிப்பு / (குறைப்பு) | **46,997** | 450,759 |
| | **கூட்டுக(கழிக்குக) முதலீடு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள்** | | |
| | முதலீடுகளிலிருந்தான வருமானம் | **-** | 15,550 |
| | பெறப்பட்ட பங்கிலாபம் | **-** | (13,041) |
| | பெறப்படாத தேறிய சந்தைப் பெறுமதி மாற்றங்கள் | **(2,211,883)** | (4,413,887) |
| | **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **8,940,018** | 7,283,211 |
| **22.** | **அரச கொடுக்கல் வாங்கல்களின் மீதான சுற்றோட்ட நாணயத்தின் வழங்கல்/ (எடுப்பனவுகள்)** | | |
| | இலங்கை அரச பிணையங்கள் சொத்துப் பட்டியலின் முதிர்ச்சி | **-** | (233,522,233) |
| | முதலீட்டுச் சொத்துப் பட்டியலுக்காக இலங்கை அரச பிணையங்களின் கொள்வனவு | **114,186,270** | 209,516,796 |
| | பெறப்பட்ட வட்டி- உள்நாட்டு நாணயம் - முதலீட்டுச் சொத்துப் பட்டியல் | **(4,565,637)** | (9,021,548) |
| | இலங்கை அரசுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் அதிகரிப்பு/ (குறைப்பு) | **15,253,700** | 11,663,800 |
| | அரச, அரச முயற்சிகளுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு)/ குறைப்பு | **545,251** | (59,724) |
| | | **125,419,584** | (21,422,909) |
| **23.** | **வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல் (எடுப்பனவுகள்)** | | |
| | வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் செய்யப்பட்ட வைப்புக்களின்(அதிகரிப்பு)/ குறைப்பு | **8,741,810** | (8,564,417) |
| | | **8,741,810** | (8,564,417) |
| **24.** | **ஆண்டு முடிவில் காசு நிலுவைகள் மற்றும் காசுக்குச் சமமானவை** | | |
| | **வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள்** | | |
| | ஏனைய வெளிநாட்டு வங்கிகளுடனான காசு நிலுவைகள் | **167,338,807** | 160,051,979 |
| | **ஆண்டு முடிவில் காசு நிலுவைகள் மற்றும் காசுக்குச் சமமானவை** | **167,338,807** | 160,051,979 |

## 1.1 குறிக்கோள்கள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் பொறுப்புக்களும் தன்மையும் நிதியியல் செயலாற்றமும்

இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறையின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் என்பவற்றிற்குபொறுப்பான மேலாண்மை நிறுவனமாக மத்திய வங்கி நிறுவப்பட்டது. இச் சட்டத்திற்கிணங்க, மத்திய வங்கி பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு ஆகிய மையக் குறிக்கோள்களை அடைவதற்கு பொறுப்புடையதாக இருந்து வருகிறது.

ஆகவே, மத்திய வங்கியின் பெதுமக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய தன்மை மற்றும் அதன் தொழிற்பாடுகளின் வெற்றி என்பனவற்றின் அடிப்படையில் அதன் கொள்கைகள் மற்றும் தொழிற்பாடுகளின் காத்திரமான தன்மை அதன் மையக் குறிக்கோள்களை எய்துவதற்கு இட்டுச் செல்ல வேண்டுமேயன்றி, அதனளவில் இலாபமீட்டுவது அவசியமானதல்ல. இந்த நியதிக் குறிக்கோள்களே ஏனைய அரச அல்லது தனியார் நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கியினை வேறுபடுத்தும் அடிப்படைப் பண்புகளாக விளங்குகின்றன. இதன்படி இலாபத் தன்மையுடன் தொடர்பான அணுகுமுறையினை மத்திய வங்கி கொண்டிருக்குமாயின், வட்டி வீதங்கள் மற்றும் செலாவணி வீதங்களில் செல்வாக்கினை ஏற்படுத்தக் கூடிய அதன் நாணயக் கொள்கை நடவடிக்கைகளினூடாக அதன் இலாபங்களை உருவாக்கிக் கொள்ளக்கூடிய தனியாற்றலை அது கொண்டிருப்பதனால் அதன் மையக் குறிக்கோள்களை விட்டுக் கொடுக்கின்ற அதேவேளையில் வங்கி இலாபங்களை பெற்றிருக்க முடியும். ஆகவே, மத்திய வங்கிகளின் குறிக்கோள்களான பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு என்பனவற்றைப் பின்பற்றும் தனித்தன்மை கொண்ட நிறுவனமாக இருப்பதற்கு, தற்செயலான அல்லது கோட்பாடு ரீதியாக முக்கியமாக இருக்க வேண்டிய வெறுமனே இலாபத் தன்மை கொண்ட குறிக்கோள்களிலிருந்து தனித்திருப்பது அவசியமானதாகும்.

இப் பின்னணியில் மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள், செலாவணி வீத முகாமைத்துவம், நாணய வழங்கல் போன்றன அவை பெறப்பட்டவாறு அவற்றின் பெறுமதியிலும் பொதுவான பொதுமக்களுக்குப் பொறுப்புக்கூறும் தன்மையினை நிறைவேற்றுகின்றமையின் ஒரு பகுதியாக நிதியியல் தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டிய தன்மைக்கு அடிப்படையொன்றினை வழங்குவதற்காக ஏற்புடைத்தான கணக்கீட்டு மற்றும் அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்கவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இதன் காரணமாக, இக்கூற்றில் அறிக்கையிட்டவாறான நிதியியல் செயலாற்றமானது இப் பின்னணியின் அடிப்படையிலேயே விளக்கப்படவும் விளங்கிக் கொள்ளப்படவும் வேண்டும்.

## 1.2 அறிக்கையிடுகின்ற நிறுவனங்களும் நியதி அடிப்படையும்

இவை இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிருவாகம், மேற்பார்வை

மற்றும் ஒழுங்குபடுத்தல்என்பவற்றிற்கு பொறுப்பான அதிகாரசபையாக திருத்தப்பட்டவாறு 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயச் சட்ட விதியின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமான இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கூற்றுக்களாகும். இலங்கை மத்திய வங்கி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் உள்ளதுடன் இல.30 சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1இல் அமைந்திருக்கிறது.

இந்த நிதிக் கூற்றுக்கள் 2009 மாச்சு 6ஆம் நாளன்று ஆளுநராலும் முதன்மைக் கணக்காளராலும் வெளியீட்டிற்காக அதிகாரமளிக்கப்பட்டன.

## 1.3 கணக்கீட்டுக் கொள்கை

### 1.3.1. தயாரிப்பிற்கான அடிப்படை

நிதியியல் கூற்றுக்கள், கீழே குறித்துரைக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினால் அடையாளம் காணப்பட்டவாறு நியாயமான பெறுமதிகளில் அளவிடப்பட்டுள்ள காணி மற்றும் கட்டடம், குறிப்பிடத்தக்க நிதிச் சொத்துக்கள் தவிர்ந்த, வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**அறிக்கையிடுகின்ற வடிவம்**

வங்கியானது நிதியியற் சொத்துக்களையும், நிதியியற் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும், செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி வெளிப்படுத்துகிறது. ஐந்தொகையில் அத்தகைய தனித்தன்மை பெற்ற வகையிலுள்ள திரவத்தன்மையின் பொருட்டு சொத்துக்களும் பொறுப்புக்களும் விரிவாகக் காட்டப்பட்டுள்ளன. இவ் அறிக்கையிடும் அணுகு முறையானது முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் குறிப்பு 1.5இல் மிக முழுமையாக விபரிக்கப்பட்டவாறு வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

**இணங்குவிப்புக் கூற்று**

31 திசெம்பர் 2008இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந் நிதியியல் கூற்றுக்கள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடும் நியமங்களுடன் இணங்கும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன. சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, நாணய விதிச் சட்டத்திற்கிணங்க தயாரிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படுகிறது. பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களின் சில தேவைப்பாடுகள் காரணமாக வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கூற்றுக்களிலுள்ள பகுப்பாய்வுகளும் அதன் விளைவாக எண்களும் இந்நிதியியல் கூற்றிலுள்ளவற்றிலிருந்தும் வேறுபடும்.

**காட்டப்படும் நாணயம்**

வேறு விதமாக குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவின் ஆயிரத்திலேயே தரப்பட்டுள்ளன.

### 1.3.2 முக்கியமான கணக்கீட்டு தீர்ப்புக்கள் மற்றும் மதிப்பீடுகள்

மதிப்பீடுகளில் ஈடுபடுவது தவிர வங்கியானது கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிக்கும் செய்முறையின் போது நிதிக்கூற்றில் அடையாளம் காணப்பட்ட தொகைகளில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவற்றில் தீர்ப்புக்களை வழங்கியது.

**விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீட்டின் பெறுமதி இழப்பு**

செலவினைவிட சந்தைப் பெறுமதியில் குறிப்பிடத்தக்க அல்லது அதிகரிக்கக் கூடிய வீழ்ச்சி காணப்படும்பொழுது விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள் பெறுமதி குறைவடைந்ததனை வங்கி தீர்மானிக்கின்றது. இந்த தீர்மானமானமெடுத்தலில் குறிப்பிடத்தக்க அல்லது அதிகரிக்க கூடியளவு தொடர்பான தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வு பெற்றதன் பின்னரான நன்மைத் திட்டங்கள்**

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களுடைய செலவானது உண்மைப் பெறுமதி முறையினைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகிறது. உண்மைப் பெறுமதியிடலானது கழிவீட்டு வீதங்கள், சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்படும் திரும்பல் வீதங்கள், எதிர்கால இழப்பீட்டு தொகைகளுக்கான அதிகரிப்புக்கள், இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புக்கள் என்பன பற்றிய எடுகோள்கள் மேற்கொள்ளப்படுவதனை உள்ளடக்கியுள்ளது. இத்தகைய திட்டங்களின் நீண்டகாலத்தன்மை காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்கனவான நிலையற்ற தன்மையினைக் கொண்டிருக்கும்.

### 1.3.3 இந்த ஆண்டுக் காலப்பகுதியில் பின்பற்றப்பட்ட திருத்தப் பட்ட பன்னாட்டு நிதி அறிக்கையின் நியமங்கள்

பின்பற்றப்பட்ட கணக்கியல் கொள்கைகளானது, கடந்த ஆண்டுகளில் பின்பற்றப்பட்ட கொள்கைகளுடன் மாற்றமுறாமல் காணப்படுகின்றது.

### 1.3.3.1 அமுலுக்குக் கொண்டுவரப்படாத வெளியிடப்பட்ட நியமங் களுக்கான நியமங்கள், விளக்கவுரைகள் மற்றும் திருத்தப் பிரேரணைகள்

தற்போதுள்ள நியமங்களிற்குப் பதிலாக பிரசுரிக்கப்பட்ட சில புதிய நியமங்கள், திருத்தங்கள், விளக்கவுரைகள் ஆகியன வங்கியினுடைய 01 சனவரி 2009 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கப்படும் கணக்கிடல் காலத்துக்கோ அல்லது பின்னரான காலத்திற்கோ பொருத்தமானதாகும் ஆனால் வங்கியானது இவற்றை முன்கூட்டியே இணைக்கவில்லை, அவைகளாவன:

பன்னாட்டு நிதி அறிக்கை நியமம் 8, செயற்பாட்டுப் பகுதிகள் (2009 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும்) பன்னாட்டு நிதி அறிக்கை நியமம் 8ஆனது, ஒரு நிறுவனம் தனது வருடாந்த நிதி அறிக்கைகளில் அதனது செயற்பாட்டு பகுதிகள் பற்றிய தகவல்களை எவ்வாறு அறிக்கையிடல் என்பது பற்றி விபரிக்கிறது. வங்கியானது பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமம் 8 மற்றும் இதனது சுயமான பிரயோகம் என்பனவற்றின் தாக்கங்களை அளவிடும் செய்முறையை நடைமுறைப் படுத்துகிறது.

## 1.4 முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்

### 1.4.1 வெளிநாட்டு நாணய மாற்று வீதங்கள்

வங்கிகளின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பிப்பு நாணயமாக இலங்கை ரூபா காணப்படுகின்றது. வெளிநாட்டு நாணயங்களின் கொடுக்கல் வாங்கல்கள், கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்ற நாளன்று நடைமுறையில் இருந்த நாணய சந்தை விலையின்

அடிப்படையில் குறிக்கப்படுகின்றது. வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகைத் திகதியில் ஏற்புடைத்தாயிருந்த செலாவணிவீத சந்தை விலையை பயன்படுத்தி இலங்கை ரூபாவிற்கு மீளமாற்றப்பட்டன. அனைத்து வேறுபாடுகளும் வருமானக்கூற்றிற்கு கொண்டு செல்லப்பட்டன. மீள்மாற்றல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான இலங்கை ரூபாவின் செலாவணி வீதங்கள் பின்வருமாறு.

| | **2008 திசெ. ரூபா** | 2007 திசெ. ரூபா |
|---|---|---|
| 1 அவுத்திரேலிய டொலர் | **78.0495** | 95.5807 |
| 1 கனடா டொலர் | **92.7604** | 111.0061 |
| 1 யூரோ | **159.4536** | 160.2741 |
| 1 யப்பானிய யென் | **1.2524** | 0.9713 |
| 1 சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | **174.2660** | 171.8040 |
| 1 இசுடேர்லிங் பவுண் | **163.2777** | 217.1507 |
| 1 ஐ.அ.டொலர் | **113.1398** | 108.7194 |

வரலாற்று செலவு அடிப்படையில் கணிக்கப்பட்ட நிதிசார் அல்லாத வெளிநாட்டு நாணய விடயங்கள் முதல் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்ந்த திகதிகளில் உள்ள நாணயமாற்று வீதங்களில் மாற்றப்பட்டுள்ளது.

### 1.4.2 நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும்

வங்கியானது நிதியியல் சொத்துக்களையும் பொறுப்புக் களையும் அவற்றுடன் இணைந்த வருமானம் மற்றும் செலவுப் பாய்ச்சல்களையும் வெளிநாட்டு நாணயம் மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்திக் காட்டுகின்றது. வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியினது வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவ தொழிற்பாடுகளிலிருந்து எழுகின்றது. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல், நாணயங்களை வழங்குதல் மற்றும் வங்கித் தொழில் நடவடிக்கைகள் என்பவற்றுடன் தொடர்பான சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பிரதிபலிக்கின்றன.

வங்கியின் நிதி நிலைமை, நிதியியல் செயலாற்றம் மற்றும் இடர்நேர்வு தோற்றப்பாட்டினைச் சிறந்த முறையில் வழங்குவதற்காக இந் நடவடிக்கைகளை தனித்தனியாக அறிக்கையிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை இணைத்து அறிக்கையிடுவது நிதியியல் கூற்றுக்களின் தகவல் பெறுமதியினை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகின்றது.

அனைத்து முதலீடுகளும் ஆரம்பத்தில் செலவு நியதிகளில் இனங்காணப்பட்டுள்ளதுடன், இச்செலவு முதலீட்டுடன் இணைந்த கொள்வனவுக் கட்டணங்கள் உட்பட செலுத்தப்பட்ட நியாயமான பெறுமதியினையும் உள்ளடக்கியுள்ளது. ஆரம்ப இனங்காணலின் பின்பு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அளவைத் தளங்கள் கீழே விபரிக்கப்படுகின்றன. நிதிச் சொத்துக்களின் அனைத்துக் கிரமமானவழிக் கொள்வனவுகளும் விற்பனைகளும் வர்த்தகம் செய்யப்பட்ட திகதியில் இனங் காணப்பட்டன. கிரமமான வழிக் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளான நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளிற்கு ஒழுங்குவிதிகளின் மூலம் அல்லது சந்தையின் மரபு வழிமுறைகளினால் நிறுவப்பட்ட கால வரையறையினுள் சொத்துக்களின் வழங்கல் தேவைப்படுகின்றது.

#### இலாபம் அல்லது இழப்பினூடாக சந்தைப் பெறுமதியிலான பிணையங்கள்

வர்த்தக நடவடிக்கைக்காக வைத்திருக்கப்படுவது என வகைப்படுத்தப்பட்ட நிதியியல் சொத்துக்கள் இலாபம் அல்லது இழப்பினூடான சந்தைப் பெறுமதியிலான வகைப் பிணையங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்த பிணையங்கள் விலைக் குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் ஐந்தொகையில், வர்த்தகப்படுத்தக் கூடிய பிணையங்களின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சி ஒன்றாகவோ இனங்காணப்படுகின்ற வேளையில் ஏற்படும் இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

பிணையம் இன்னமும் சொந்தமாக இருக்குமிடத்து, இலாபம் அல்லது இழப்பு விலை மீள்மதிப்பீட்டிலிருந்து அடையப்படாத இலாபமாக (இழப்பு) பதிவு செய்யப்படும், இலாபமோ அல்லது இழப்போ பெறப்படுமிடத்து (பிணையத்தின் விற்பனை மூலம்) அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்பட்ட இலாபமாக (இழப்பு) பதிவு செய்யப்படும்.

#### வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்கு கிடைக்கத்தக்க தாகவுள்ள முதலீடுகள்

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்கு கிடைக்கத் தக்கதாகவுள்ள முதலீடுகள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. சந்தைப் பெறுதியில் ஏற்படும் மாற்றங்கள் ஐந்தொகையில் ஒதுக்குகளின் கீழ் விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்களின் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ அடையாளங்காணப்படும்.

வெளிநாட்டு நாணயத்திலான விற்பனைக்குக் கிடைக்கத் தக்கதாகவுள்ள முதலீடுகளின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்களிலிருந்து எழும் இலாபங்களும் இழப்புக்களும் முதலீடுகள் விற்கப்படும் வரை அல்லது சேகரிக்கும்வரை அல்லது வேறு விதமாக இதனை அகற்றும்வரை அல்லது முதலீட்டினை இல்லாதொழிப்பது என தீர்மானிக்கப்படும் வரை உரிமையாண்மையில் தனியொரு கூறாக (ஐந்தொகையின் ஒதுக்குகளின் கீழ் காட்டப்படுகின்றது) இனங் காணப்படுகின்றது. அந்த நேரத்தில் முன்னர் மூலதனப் பங்காக அறிவிக்கப்பட்ட ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது இழப்பு வருமானமாக உள்ளடக்கப்படும்.

#### தங்கம்

பன்னாட்டு ஒதுக்கின் ஒரு பகுதியாக தங்கம் மத்திய வங்கியால் வைத்திருக்கப்படலாமென்பதை இவ் ஒதுக்கின் உள் அமைப்பினை குறித்துரைக்கும் நாணயச் சட்டவிதியின் 67(1)ஆம் பிரிவு எடுத்துக்காட்டுகிறது. எனவே, இலங்கை மத்திய வங்கி 31.12.2008 இலுள்ளவாறான அதன் பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக ரூ.10,427,431 பெறுமதியான

தங்கத்தை வைத்திருக்கிறது. இத் தங்கம் பன்னாட்டு ஒதுக்கின் ஒரு பகுதியாக இருப்பதாலும் வழமையான வியாபாரத்தில் வர்த்தகம் செய்யப்படும் பொருளாகப் பயன்படுத்தப்படாததாலும் தங்கம் உண்மை விலையில் பெறுமதியிடப்பட்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றுக்கு மாற்றப்படுகிறது. இலாபங்களை ஒதுக்கீடு செய்வதற்கு முன்பு தங்கத்திலிருந்து பெறமுடியாத இலாபங்கள் அல்லது நட்டங்கள் உரிய ஒதுக்குக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

### பெறுதிக் கருவிகள்

பெறுதிக் கருவிகளில் வங்கியின் ஈடுபாடு முக்கியமாக முன்னோக்கிய வெளிநாட்டு ஒப்பந்தங்களில் காணப்படுகிறது. அத்தகைய பெறுமதி நிதியியல் கருவியின் நியாயமான பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றன. முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களின் நியாயப் பெறுமதியாக இதை ஒத்த முதிர்ச்சி தோற்றப்பாட்டுடனான ஒப்பந்தங்களுக்கான முன்னோக்கிய நடைமுறை செலாவணி வீதத்துடன் தொடர்பான வீதங்களில் கணிப்பிடப்படுகின்றன. இலாபம் அல்லது இழப்பு நிலையிலுள்ள அனைத்துப் பெறுதிக் கருவிகளும் வெளிநாட்டு நாணய வர்த்தகத்தின் நிலுவையில் அல்லது ஐந்தொகையில் உள்ள விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள பிணையங்களில் பதிவு செய்யப்படுகின்றன.

### பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான நிலுவைகள்

வங்கியானது இலங்கை அரசின் முகவராகத் தொழிற்படுவதனைக் காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையில் ப.நா.நிதியத்துடனான வங்கியின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் இந் நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பன்னாட்டு நாணய நிதியத்துடனான அனுமதிப்பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன் அனுமதிப் பங்கிற்காக ப.நா. நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகின்றது. ப.நா.நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்றுசேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாக கணிக்கப்படுகின்றன. ப.நா.நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு ஐந்தொகைத் திகதியிலுள்ள செலாவணி வீதத்தினைப் பிரயோகித்து ப.நா.நிதிய சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள் பெறுமதியிடலிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

ப.நா. நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்து கட்டணங்களும் வட்டியும் வருமானக் கூற்றில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன.

### காசும் காசிற்கு சமமானவைகளும்

காசும் காசிற்குச் சமமானவைகளும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களில் உள்ள காசு மற்றும் குறுங்கால வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது.

உள்நாட்டு நாணயத்திலான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்ட வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் மேற்கொள்ளுகின்றது. இவை காசின் நகர்வுடன் தொடர்பானவையல்ல இந் நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன் முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல் வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினூடான கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல் வாங்கல்கள் அடிப்படையில், ஏலங்களில் கோரப்படாத திறைசேரி உண்டியல்களின் பகுதியின் கொள்வனவு மற்றும் அரசாங்கம், மத்திய வங்கி என்பவற்றால் நாணயக் கொள்கை நடைமுறையின் கீழ் வழங்கப்பட்ட பிணைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. அத்தகைய கொள்வனவுகள் விற்பனைகள் அல்லது அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவேடுகளில் தனியே ஏட்டுப் பதிவுகளாக பிரதிபலிக்கப்படுகின்றன. இவை நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 22, மற்றும் குறிப்பு 29 என்பவற்றில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஏக அதிகாரங்கொண்ட அதிகார சபையாக விளங்கும் இலங்கை மத்திய வங்கி நாணய விதிச் சட்டத்திற்கிணங்க, பொதுமக்களுக்கு நாணயத்தினை வழங்குகின்றது. மத்திய வங்கியால் வழங்கல் செய்யப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனையும் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப்பாகவுள்ள வேளையில், உடமையாளரின் கையில் காசு விடயமாகவுள்ளது. சுற்றுறோட்டத்திலுள்ள நாணயத்திலான அசைவானது காசுப் பாய்ச்சல் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கின்ற, மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்றுறை முறைகளுடன் இசைந்த விதத்தில் நிதியிடல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி காசு/கொடுப்பனவு கட்டளை செயற் பாடுகளூடாக நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் என்பன வடிவில் பெறப்பட்ட பொருள்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குனர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பணம் கொடுபட வேண்டியோருக்கு காசினை பகிர்ந்தளிக்கின்றது. இது ஒன்றில் சுற்றோட்ட பொறுப்பிலுள்ள நாணயங்களுடன் அல்லது வர்த்தக வங்கிகளிலுள்ள மீதிகளுடன் சேர்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசுப் பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு காசு/கொடுப்பனவு கட்டளையின் பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் நீங்கலான காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

### மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்

மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் ஐந்தொகையில் சொத்துக்களாக தொடர்ந்தும் பதிவு செய்யப்படுகின்றன. மீள் கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள் கொள்வனவு செய்வதற்கான

உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப் பொன்றாகக் காட்டப்பட்டுள்ளது. மீள் கொள்வனவுகள் கொடுக்கல் வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள் கொள்வனவு விலைக்குமிடையிலான வேறுபாடும், நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமிடையிலான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தையும் பிரதிபலிப்பதுடன் இவை வருமானக் கூற்றில் செலவினமாகக் காட்டப்படுகின்றன.

நேர்மாற்று மீள் கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள் விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) ஐந்தொகையில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டும், ஒன்று சேர்ந்த வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி கொடுக்கல் வாங்கல் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன.

**இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள்**

சந்தையிலுள்ள அளவுக்கதிகமான திரவத்தன்மையை உள்வாங்குவதற்கு இலங்கை மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின்கீழ் காலத்துக்குக் காலம் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குகிறது.

வழங்கப்பட்ட பிணையங்கள் பொறுப்பாக பதிவு செய்யப்படுகிறது. வழங்கல் விலைக்கும் முகப்புப் பெறுமதிக்கும் இடையேயான வேறுபாடு வருமானக் கணக்கில் செலவாகப் பதிவு செய்யப்படுகிறது.

**முதலீட்டுப்பட்டியல் - இலங்கை அரச பிணையங்கள்**

வங்கியின் முதலீட்டுப் பட்டியல் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணையங்களை உள்ளடக்குகின்றது. இவை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன்களை பிரதிநிதித்துவப்படுத்துவதனால் ஐந்தொகையில் இச் சொத்துப்பட்டியல் தீர்ப்பனவு செய்யப்படும் செலவில் பதியப்படுகிறது.

**அரசிற்கான முற்பணங்கள்**

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 89இன் கீழ் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

**ஏனைய நிறுவனங்களிற்கான கடன்கள்**

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் வழங்கப்பட்ட ஆரம்பத் தொகைகளிலிருந்து சேகரிக்கப்பட முடியாத தொகை ஏதுமிருந்தால் அதை கழித்த பின்பு இனங்காணப்பட்டு, பேணப்படுகின்றது. வரவேண்டிய எல்லாத் தொகையையும் சேகரிப்பதற்கு வங்கியினால் முடியாத தன்மைக்கு போதிய சான்று காணப்படுமிடத்து ஐயக்கடன்களுக்கான (பெறமுடியாத கடன்கள்) ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஏற்பாடு செய்யப்பட்ட தொகையானது புத்தகத்திலுள்ள தொகைக்கும் மதிப்பிடப்பட்ட மீளப்பெறப்படத்தக்க தொகைக்குமிடையிலான வேறுபாடாகும். அறவிட முடியாக் கடன்கள் அடையாளம் காணப்படும்போது பதிவழிக்கப்படுகின்றன.

**பிணையங்கள் கடன் வழங்கல்**

கடன் கொடுக்கல் வாங்கல்களின் கீழான தொடர்புடைய தரப்பினருக்கான பிணையங்களின் மாற்றல்கள் ஐந்தொகையில் மட்டுமே பிரதிபலிக்கின்றது. உடமையினுடைய இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகள் ஏதுமிருப்பின் அவையும் மாற்றப்பட்டுள்ளது.

**நிதிச் சொத்துக்களின் பெறுமதி இழப்பு**

நிதிச்சொத்தொன்று பெறுமதி இழப்பு உடையதாக இருக்கின்றதா என்பதனை அறிவதற்காக வங்கியானது ஒவ்வொரு ஐந்தொகை திகதியிலும் மதிப்பீட்டினை மேற்கொள்கின்றது.

**கடன்தீர் செலவில் கொண்டுவரப்பட்ட சொத்துக்கள்**

கடன்தீர் செலவில் கொண்டுவரப்பட்ட கடன்கள் மற்றும் பெறுவனவுகள், பெறுமதி இழப்புக்கு உட்பட்டமை தொடர்பாக கண்டுகொள்ளக்கூடிய ஆதாரம் காணப்படுமானால் இழப்பின் தொகையானது சொத்துக்களின் அளவுக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலின் நடப்பு பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் (உறப்படாத எதிர்காலவரவு இழப்புக்கள் நீங்கலாக) நிதிச் சொத்துக்களின் பயனுறுதியிலுள்ள வட்டி வீத மூலத்தில் கழிவிடப்பட்டு கணிக்கப்படுகின்றது. (உ+ ம் பயனுறுதியிலுள்ள வட்டி வீதமானது ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது) சொத்தின் அளவானது நேரடியாகவோ அன்றி மேலதிக கொடுப்பனவுக் கணக்கினை பாவிப்பதன் ஊடாகவோ குறைக்கப்படும். இழப்பின் அளவானது வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

வங்கியானது பெறுமதி இழப்பு காணப்படுவதற்கான கண்டுகொள்ளக்கூடிய ஆதாரம் குறிப்பிடத்தக்க தனிப்பட்ட நிதிச் சொத்துக்களுக்கு தனிப்பட்டதாக மற்றும் குறிப்பிடத்தக்க தனிப்பட்டதற்ற நிதிச் சொத்துக்களுக்கு தனிப்பட்ட அல்லது ஒன்று சேர்ந்ததாக காணப்படுவதனை முதலில் மதிப்பிடுகின்றது. தனிப்பட்ட மதிப்பீட்டில் நிதிச் சொத்தில் பெறுமதி இழப்பு காணப்படுவதற்கான எந்த கண்டு கொள்ளக்கூடிய ஆதாரமும் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டால், குறிப்பிடத்தக்கதோ அன்றி குறிப்பிடத்தக்கதற்றதோ சொத்தானது அதே வரவு இடர்நேர்வு பண்புகளுடன் நிதிச் சொத்துக்களின் குழுவுக்குள் உள்ளடக்கப்படுவதுடன் அந்த நிதிச் சொத்துக்களின் குழு பலவீனத்திற்காக ஒன்றுசேர்த்து மதிப்பிடப்படுகின்றது. பலவீனத்திற்காக தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் தொடர்ச்சியாக இனங்காணப்பட்ட பலவீன இழப்புக்கள் பலவீனத்தின் ஒன்றுசேர்ந்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்படவில்லை.

ஒரு தொடர்ச்சியான காலத்தில் பலவீன இழப்பு வீழ்ச்சியடைவதுடன் அவ்வீழ்ச்சி பல்லின இழப்பு இனங் காணப்பட்டதன் பின்னரான நிகழ்வு ஒன்றுடன் கண்டுகொள்ளக் கூடிய வகையில் தொடர்புபட்டிருந்தால் ஆரம்பத்தில் இனங் காணப்பட்ட பலவீன இழப்பு எதிர்மறையாக்கம் வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது. அத்துடன் எதிர்மறையாக்கல் திகதியில் சொத்து கொண்டுள்ள பெறுமதி அதன் கடன்தீர் செலவினை விஞ்சாது.

### விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள முதலீடுகள்

விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள சொத்து பலவீனப்பட்டால், ஒரு தொகையானது செலவிற்கும்(எந்த ஆரம்ப கொடுப்பனவு மற்றும் கடன் தீர்ப்பனவு பெறுமதியின் நிகர பெறுமதி)மற்றும் அதன் தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம், இலாபத்திலோ அல்லது இழப்பிலோ முன்னர் இனங்காணப்பட்ட எந்த பெறுமதி இழப்பையும் கழிவீடு செய்தல் என்பன அதன் நிகர மதிப்பில் வருமானக் கூற்றிற்கு மாற்றப்படும். நிகர மதிப்பீட்டு கருவிகளிலான எதிர்மறையாக்கல்கள் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள வேறுபடுத்தல்களாக இலாபத்தில் இனங்காணப்படவில்லை. கருவிகளின் சந்தைப் பெறுமதி அதிகரிப்பானது பலவீன இழப்பொன்று இலாபத்திலோ அல்லது நட்டத்திலோ இனங்காணப்பட்டதன் பின்னரான நிகழ்வு ஒன்றுடன் கண்டுகொள்ளக்கூடிய வகையில் தொடர்புபட்டிருந்தால் கடன் கருவிகளினாலான பெறுமதி இழப்புக்கள் இலாபம் அல்லது இழப்பினூடாக எதிர்மறையாக்கப்படும்.

### வெளிநாட்டு நாணயத்திலான தவணைப் பொறுப்புக்கள்

வெளிநாட்டு நாணயத்திலான தவணைப் பொறுப்புக்கள், பொறுப்புக்களின் கடன்தீர்ப்பனவுக் கிரயச் செலவில் பதிவு செய்யப்படுகின்றன. இப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங்காணப்படுகின்றது. வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்களின் விளைவாக தோன்றும் இலாபங்களும் இழப்புக்களும் உடனடியாகவே வருமானக் கணக்கில் செலவுகளாக இனங்காணப்படுகின்றன. பொறுப்பு இன்னமும் செலுத்தப்பட வேண்டியிருக்குமிடத்து இலாபமோ அல்லது இழப்போ விலை மீள்பெறுமதியிடலிலிருந்தான பெற்றுக் கொள்ளப்படாத இழப்பாக (இலாபமாக) பதிவு செய்யப்படும். இலாபமோ அல்லது இழப்போ பெறப்பட்டிருக்குமிடத்து (பொறுப்பில் மீள் கொடுப்பனவினூடாக) அது விலை மாற்றங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இழப்புக்களாக (இலாபம்) பதிவு செய்யப்படுகிறது.

### நிதியியல் உத்தரவாதங்கள்

நிதியியல் உத்தரவாதங்களானது நிதி அறிக்கைகளில் நியாயமான பெறுமதியிலேயே ஆரம்பத்தில் மதிப்பிடப்படுகின்றது. இவை ஏனைய கொடுப்பனவுகளின் கீழ் நியாயமான பெறுமதியில் காட்டப்படுகிறது. ஆரம்ப மதிப்பீட்டைத் தொடர்ந்து வங்கியினுடைய ஒவ்வொரு உத்தரவாதங்களினதும் பொறுப்புக்கள், அத்தகைய உத்தரவாதங்களிலிருந்து எழுகின்ற ஏதேனும் நிதியியல் கடப்பாடுகளை தீர்க்கத் தேவைப்படும் செலவுகளுடைய சிறந்த மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படுகின்றது.

### ஏனைய நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயக்காசு, வைப்புக்கள் மற்றும் குறுங்கால முற்பணங்கள் என்பன வர்த்தகம் செய்யப்படும் நாளில் இனங்காணப்படுகின்றன.

## 1.4.3 ஏனைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

### துணை நிறுவனங்களில் முதலீடுகள்

விற்பனைக்காக வைத்திருக்கப்படுவனவற்றுடன் சேர்த்து துணை நிறுவனங்களில் வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் குறைந்த கிரயச்செலவு முறையில் கணிக்கப்படுகின்றன. உரிமையாண்மை முறைமையின் கீழ் கணக்கிடப்படாத அத்தகையவற்றினுடைய விளைவுகள் கணிசமானவையல்ல.

### இருப்புக்கள்

இருப்புக்கள் கிரயச் செலவு அல்லது விற்றுப்பெறக்கூடிய பெறுமதி இவற்றின் குறைந்த பெறுமதியில் வைத்திருக்கப்படுகின்றன. கிரயச் செலவு நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. மெதுவாக வெளிச்செல்லும் இருப்புக்களுக்கு ஒதுக்கம் செய்யப்படுகின்றது.

### சொத்து, பொறி மற்றும் கருவி

நாளுக்கு நாள் சேவையின் கிரயச் செலவுகள் நீங்கலாக பெறுமதியிலான திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு என்பன கழிவு செய்யப்பட்டு சொத்து, பொறி மற்றும் கருவி தொடர்பான சகல விடயங்களும் கிரயச் செலவில் குறிப்பிடப்படுகின்றது. இனங்காணப்பட்ட பிரமாணத்தை உள்ளடக்கப்படும் செலவானது அடையும் பொழுது குறிப்பிட்ட கிரயச் செலவுகள், குறிப்பிட்ட சொத்து, பொறி மற்றும் கருவிகளின் பாகங்களை மாற்றியமைத்தலுக்கான செலவினையும் உள்ளடக்கி இருக்கும். காணி மற்றும் கட்டடங்கள் காணி மீதான பெறுமானத் தேய்வுகள் மற்றும் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதியைத் தொடர்ந்து அறவிடப்பட்ட பெறுமதி இழப்புக்கள் என்பவற்றைக் கழித்து பெறப்பட்ட நியாயமான பெறுமதியில் கணிப்பிடப்படுகிறது.

| சொத்துக்களின் வகை | பயனுறுதிக்காலம் |
|---|---|
| இலவச காணியிலான கட்டடங்கள் | 50ஆண்டுகளுக்கு மேல் |
| குத்தகைக் காணியிலான கட்டடங்கள் | குத்தகைக்காலத்திற்குமேல் |
| பொறி மற்றும் பொறி செய்பாகங்கள் | 20 ஆண்டுகள் |
| தளபாடம் மற்றும் கருவிகள் | 10 ஆண்டுகள் |
| உந்து ஊர்திகள் | 5 ஆண்டுகள் |
| கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள் | 4 ஆண்டுகள் |
| ஏனையவைகள் | 3 ஆண்டுகள் |

இறையில் நிலங்கள் நீங்கலாக பெறுமானத் தேய்மானமானது மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தினைக் கருத்திற் கொண்டு நேர்கோட்டு வழிமுறையில் கணிக்கப்பட்டுள்ளது.

முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியானது மீளப் பெற்றுக் கொள்ள முடியாதபோது, நிகழ்வு அல்லது மாற்றம் குறிகாட்டும் சந்தர்ப்பத்தில் பொறி மற்றும் கருவிகளின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியானது பெறுமதி இழப்பிற்காக

மதிப்பிடப்படுகின்றது. கீழ்வரும் செலவு, காணி மற்றும் கட்டடங்களிலான ஆரம்ப இனங்காணல்களில் முன்கொண்டுவரும் மீள் பெறுமதியிடப்பட்ட தொகையானது கட்டடங்கள் மற்றும் தொடர்ந்துவரும் திரண்ட பலவீன இழப்புக்களிலான தொடர்ந்துவரும் திரண்ட பெறுமானத் தேய்வுகள் கழிவீடு செய்யப்பட்டு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதியிலான சந்தைப் பெறுமதியாகும்.

மீள் மதிப்பிடப்பட்ட சொத்தினது சந்தைப் பெறுமதியானது முன்கொண்டு வரப்படும் தொகையிலிருந்து வேறுபடுவதில்லை என்பதனை நிச்சயப்படுத்த அடிக்கடி மேற்கொள்ளும் மீள்மதிப்பீடானது போதுமானதாகும்.

முன்னரே வருமானச் செலவு கூற்றில் இனங்காணப்பட்ட மீள்மதிப்பீட்டு பெறுமதிகளிலான குறைவுகளிற்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட ஒதுக்குகள் தவிர்ந்த மதிப்பீட்டின் மிகைகள் ஐந்தொகையின் உரிமையாண்மைப் பகுதியில் உள்ள மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தினுள் வரவு வைக்கப்படுகின்றது. இந்நிலையில், அதிகரிப்பானது வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது. வருடத்தின் மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திலுள்ள அதே சொத்தின் பதிவழிக்கப்பட்ட பற்றாக்குறை தவிர்ந்த மறுமதிப்பீட்டின் பற்றாக்குறை தொகையானது வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது. குறிப்பிட்ட சொத்துக்கள் தொடர்பானமிகைகள் விற்பனை செய்யப்பட்டு வைத்திருக்கப்படும் வருவாய்களுக்கு மாற்றல் செய்யப்படுகின்றன. பாவனை அல்லது ஒதுக்கிவைத்தலில் எதிர்காலத்தில் எந்தப் பொருளாதார நன்மைகளும் எதிர்பார்க்கப்படாதபோது அல்லது சொத்து, பொறி மற்றும் கருவியின் பாகம் ஒன்று ஒதுக்கிவைத்திலின் போது மீள் இனங்காணப்படுகின்றது. இனங்காணப்படாத சொத்துக்களிலிருந்து தோன்றும் எந்த இலாபமும் அல்லது நட்டமும் (தேறிய அகற்றப்பட்ட பெறுகைகளுக்கும் சொத்துக்கள் கொண்டிருக்கும் தொகைக்குமிடையிலான வேறுபாடு எனக் கணிக்கப்பட்டது) சொத்து இனங்காணப்படாத ஆண்டின் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. சொத்துக்களின் மீதி பெறுமதிகள், பயன்தரு ஆயுட் காலம் மற்றும் முறைகள் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமான சந்தப்பங்களில் ஒழுங்காக சீராக்கப்படுகின்றது.

**அருவச் சொத்துக்கள்**

கணனி வன் பொருளுடன் சேர்க்கப்படாத கணனி மென்பொருள் ஆனது அருவச் சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளதுடன் கிரயச் செலவில் கணிக்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கணிப்பீட்டைத் தொடர்ந்து இத்தகைய அருவச் சொத்துக்களானது 4 வருட பயனுள்ள ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஏதேனும் ஒன்றுதிரட்டப்பட்ட பதிவழிப்புக்களை கிரயத்திலிருந்து கழித்துப்பெறப்பட்ட பெறுமதியில் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

**பெறுவனவுகள்**

பெறக்கூடிய கணக்குகள், ஐயத்திற்கிடமான படுகடன்களுக்கான ஒதுக்கினைச் செய்தபின்னர் எதிர்பார்க்கப்படும் பெறப்படத்தக்க பெறுமதியில் குறிக்கோள் சான்றுகளின் அடிப்படையில் முன்கொண்டு செல்லப்படுகின்றன.

**நானாவிதச் சொத்துக்கள்**

**அலுவலர் கடன்கள்**

இலங்கை மத்திய வங்கி ஊழியர்கள் சலுகை ரீதியிலான வட்டிவீதங்களின் கீழ் கடன் வசதிகளைப் பெறுவதற்குத் தகுதியுடையோர்களாக விளங்குகின்றனர். இக்கடன்கள் கழிவிடப்பட்ட காசுப் பாய்ச்சலைப் பயன்படுத்தி பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 39இன்படி நியாயமாக பெறுமதியிடப்பட்டது.

**கழிவு வீதம்**

இவ்வீதம் ஐஅ.டொலர் மீதான நீண்ட தவணை பணவீக்க இலக்கை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தால் தொகுக்கப்படுகிறது. வங்கியின் கணக்காய்வுக் குழுவால் இணங்கப்பட்டவாறு இடர்நேர்வு மிகைக்காக 1 சதவீதத்தை வர்த்தக வட்டி தொடர்பு வீதத்துடன் கூட்டிப் பெறப்படும் வட்டி கழிவு வீதமாகப் பயன்படுத்தப்படுவதுடன் இக்கடன்களின் காலப்பகுதியுடன் மாறுபடுகிறது.(15 ஆண்டுகள் வரை 10.93% மற்றும் 15இலிருந்து 30 ஆண்டுகள்வரை 9.78%)

ஆண்டிறுதியிலும் ஆண்டின் தொடக்கத்திலும் அலுவலர் கடனின் தற்போதைய பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு சலுகை ரீதியிலான வீதங்களில் இக்கடன்களை வழங்குவதில் வங்கியால் ஏற்பட்டசெலவைப் பதிவு செய்வதற்கு ஒவ்வொரு ஆண்டும் கடன் தீர்க்கப்படுவதுடன் இதற்குச் சமனான தொகை சந்தை வீதங்களில் இக்கடன்கள் வழங்கப்பட்டிருப்பின் வங்கியால் சம்பாதிக்கப்பட்ட வருமானத்தைப் பதிவு செய்வதற்காக ஏனைய வருமானப் பதிவு செய்யப்படுகிறது.

நியாயமான பெறுமதியின் கணிப்பிற்காக எடுகோள்கள் பயன்படுத்தப்பட்டன.

- 2008ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அலுவலர் கடன்கள் கணக்கில் எடுக்கப்பட்டுள்ளன.
- அலுவலர் கடன் வழங்கப்பட்ட திகதி 2008 சனவரி 1ஆகக் கருதப்பட்டது.
- இக் கடன்களுக்காக எந்தவித திருத்தங்களோ தீர்ப்பனவுகளோ இருக்கவில்லை.

ஏனைய நானாவிதச் சொத்துக்கள் எதிர்பார்க்கப்பட்ட உண்மையான பெறுமதிகளில் கொண்டு செல்லப்பட்டன.

**நிதிசாரா சொத்துக்களின் பெறுமதி இழப்பு**

நிதிநிலைமைகளின் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள், கொண்டு செல்லப்படும் பெறுமதியானது பெறுமதி இழப்புக்கு உள்ளாக்கப்படலாம் என வெளிக்காட்டுமாயின் வங்கியானது அதன் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும், அதன் நிதிசாரா சொத்துக்கள் பெறுமதி இழப்புக்கு உட்படுவதாக வெளிக்காட்டப்படுகிறதா என அளவிட்டுக் கொள்ளும். ஏதாவது அத்தகைய குறியீடுகள் காணப்படுமாயின், வங்கியானது சொத்துக்களுடைய மீள் பெறுகை செய்யப்படக்கூடிய தொகையின் மதிப்பீட்டினை மேற்கொள்ளும். கொண்டு செல்லப்படும் சொத்துப் பெறுமதியானது மீள் பெறுகை செய்யக் கூடிய சொத்துப் பெறுமதியைவிட அதிகமாக காணப்படின் அந்தச் சொத்து, பெறுமதி இழப்புக்கு உட்பட்டதாக

கருதப்படுவதுடன் அதன் மீள் பெறுகை செய்யக்கூடிய பெறுமதிக்கு மதிப்பிறக்கம் செய்யப்படும்.

### ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்ட ரீதியான அல்லது அமைப்புரீதியான) கொண்டிருக்குமிடத்து ஏற்பாடுகள் இனங்காணப்பட்டு அக்கடப்பாட்டை தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் மூலங்களின் வெளிப்பாய்ச்சல், தேவைப்படுவதுடன் இக் கடப்பாட்டுத் தொகையை நம்பத்தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறியமுடியும். ஏற்பாடு ஒன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக மீளளித்தல் இனங்காணப்படுகிறது.

### சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது, சுற்றோட்டத்திலுள்ள நாணயத்திற்கான பொறுப்பு ஐந்தொகையில் முகப்பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

### ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் ஏனைய பிந்திய ஊழியர் நன்மைகள் திட்டம்

### நிர்ணயிக்கப்பட்ட நன்மை திட்டங்கள்

ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், ஓய்வூதிய வெகுமதி, ஓய்வு பெற்றதன் பின்னரான மருத்துவ நன்மைகள் ஆகிய நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களை வங்கி நடைமுறைப்படுத்துகின்றது. முதல் மூன்று திட்டங்களுக்கும் வங்கியும் திட்டத்திற்கு பொருத்தமான நன்மை பெறுவோரும் தனியாக நிர்ணயிக்கப்படும் நிதியமொன்றிற்கு உதவு தொகையினை செலுத்தி வருகின்றன. நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் கீழான நன்மைகளை வழங்குவதற்கான செலவு எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் உண்மைப் பெறுமதி முறையினைப் பயன்படுத்தி தனித்தனியாக தீர்மானிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை உண்மையான மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.

சேவைக்குப் பின்னரான செலவானது நன்மைகள் உரித்தாகும்வரை சராசரிக்காலத்தின் அடிப்படையில் நேர்கோட்டு முறையில் இனங்காணப்படுகின்றது. அறிவுரையை பின்பற்றுவதன் மூலம் நன்மையானது ஏற்கனவே உரித்தாக்கப்பட்டிருக்குமானால் மாற்றங்கள், நன்மைத் திட்டம், சேவைக்குப் பின்னரான செலவு உடனடியாக இனங்காணப்படுகின்றது.

அனுபவ அடிப்படையிலான சீராக்கங்கள் மற்றும் திட்டமிடல் சொத்துக்களின் பெறுமதியில் 10 சதவீதத்திலும் விஞ்சியதான உண்மை எடுகோள்களின் மாற்றங்கள் அல்லது நிர்ணயிக்கப்பட்ட நன்மை கடமைப்பாடுகளுடைய 10 சதவீதம் என்பவற்றிலிருந்து எழுகின்ற உண்மை இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஊழியர்களுடைய எதிர்பார்க்கப்படும் மிதமாக உள்ள சராசரி வேலை காலத்தின் மீதான வருமானத்திற்கு எதிராக ஓர் ஒழுங்குமுறையில் அறவிடப்படும் அல்லது வரவு வைக்கப்படும். இதன் விளைவாக உண்மை இலாபங்கள் அல்லது நட்டங்கள் விரைவாக இனங்காணப்படுகின்றது.

### நிர்ணயிக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்கள்

ஊழியர்கள், தொடர்பான நியதிகள்மற்றும் ஒழுங்கு விதிகளுக்கிணங்க ஊழியர் சேமநிதிய பங்களிப்புக்களுக்கும், ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேம நிதியத்திற்கு 24 சதவீதத்தினையும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் பங்களிப்புச் செய்கின்றது. இவை தனித்தனியாக நிர்வகிக்கப்பட்டு வரும் வரைவிலக் கணப்படுத்தப்பட்ட உதவுதொகைத் திட்டங்களாகும்.

### கொடைகள்

கொடைகள் பெறப்படும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் இணங்கி ஒழுகப்படும் என்பதற்கான உறுதிப்பாடு இருக்குமிடத்து கொடைகள் அவற்றின் சாதாரண பெறுமதியில் இனங்காணப்பட்டு, மூலதனத்தின் கீழ் காட்டப்படும். கொடைகள் செலவு விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும்பொழுது, ஒழுங்கு முறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஈடு செய்வதற்கு தேவையான காலப்பகுதிக்கு வருமானக் கணக்குக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. கொடைகள் சொத்தொன்றுடன் தொடர்பானதாக இருக்குமிடத்து, சாதாரண பெறுமதி பிற்போடப்பட்ட அரசகொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு தொடர்பான சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம்வரை, தொடர்பான சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்கு முறையான அடிப்படையில் வருமானக் கூற்றிற்கு விடுவிக்கப்படும்.

### ஆளணிச் செலவுகள்

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. சம்பளங்கள் மற்றும் ஆண்டின் இறுதியில் ஒன்றுசேரும் விடுப்புக்கள் என்பன மற்றைய உள்ளூர் செலுத்த வேண்டியவையினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### தொழிற்பாட்டிலுள்ள குத்தகைகள்

வங்கி, குத்தகைதாரராக இருக்குமிடத்து தொழிற்படு குத்தகைகள்மீது செலுத்த வேண்டிய வாடகைகள் குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து பெறப்படும் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளுடன் இசைந்து செல்லும் அடிப்படையில், குத்தகையின் தவணையை கருத்திற் கொண்டு வருமானக் கூற்றில் இனம் காணப்படுகின்றது.

### வருமானவரி

1949ஆம் ஆண்டு திருத்தப்பட்டவாறான 58ஆம் இலக்க நாணயச் சட்டத்தின் 118ஆம் பிரிவின் கீழ் வங்கி வருமானத்திற்கு வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றது.

### வருமானம் மற்றும் செலவினங்கள்

வங்கிக்கு பொருளாதார நன்மைகளை பெரும்பாலும் கொண்டுவரக் கூடியதாகவும் அவ்வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக் கூடியதாகவும் உள்ளபோது வருமானமானது இனங்காணப்படுகின்றது. உறப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின்

வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக் கூற்றில் செலவுகள் இனங் காணப்பட்டுள்ளன. வியாபாரத்தை கொண்டு நடத்துவது தொடர்பாகவும் சொத்து,பொறி மற்றும் கருவியை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் உறப்பட்ட அனைத்து செலவினங்களும் ஆண்டிற்கான இலாபத்தினைக் கணிக்கும்போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும், செலவினத்தையும் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பரிமாணங்கள் அடையாளம் காணப்பட வேண்டும்.

**வட்டி**

உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி ஒன்று சேர்ந்த அடிப்படையின் மீது அனைத்து வட்டி உழைக்கும் கருவிகளுக்குமான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. வட்டி வருமானமானது, நிலையான வருமான முதலீடு மற்றும் வர்த்தகம் செய்யப்படுகின்ற பிணையங்கள் என்பன மீதான நறுக்கிலிருந்து வருவாய்களையும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் மீது கொடுபட வேண்டிய கழிவுகளையும் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும் பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும்வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

**பங்கிலாபங்கள்**

பங்குடைமையாளர்கள் கொடுப்பனவினைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்பட்டவுடன் பங்கிலாப வருமானம் இனங் காணப்படுகின்றது.

**பல்தரப்பட்டவை**

பல்தரப்பட்ட வருமானமும், செலவினங்களும் ஒன்றுதிரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளன.

சொத்து, பொறி மற்றும் கருவிகளின் விற்பனை மீதான வருமானத் தன்மையின் தேறிய இலாபங்களும், இழப்புக்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்து கொண்டுள்ள பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக் கணக்கில் காட்டப்பட்டுள்ளன.

எதிர்பாராத நடவடிக்கைகள் மற்றும் முக்கிய வருமானத்தினை உருவாக்குகின்ற நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து எழும் இலாபங்களும், இழப்புக்களும் மற்றும் குறிப்பிடத்தக்களவில் இல்லாத அவ்வாறான கொடுக்கல் வாங்கல் தொகுதியிலிருந்து எழும் இலாபங்களும், இழப்புக்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

**ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்கள் உள்ளிட்ட எதிர்பாராத மற்றும் கடப்பாட்டு விடயங்கள்**

ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்களைப் பிரதிபலிக்கின்ற படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடு என்பன ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்கள் என இனங்காணப்பட்ட தொடர்பான தலைப்புக்களுக்கு கீழே காட்டப்பட்டுள்ளன. பொருத்தமான வேளைகளில் அத்தகைய தொகைகள் சிறந்த மதிப்பிடல்களில் அளவிடப்படுகின்றது.

## 1.5 நடவடிக்கைகளின் தன்மையும் அளவும்

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் பின்பற்றுவதற்கு அல்லது மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளை அல்லது வழிமுறைகளை நிர்ணயிப்பதற்கு மேலதிகமாக மத்திய வங்கி அதிகாரங்கள் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இது பொதுவாக வங்கியின் முகாமை, தொழிற்பாடுகள் மற்றும் நிருவாகம் என்பனவற்றிற்கும் பொறுப்பாக இருக்கும். வங்கி இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறை என்பனவற்றின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் என்பனவற்றுக்கு முக்கிய பொறுப்பாக இருப்பதுடன், அரசாங்கத்தின் இறைமுகவராண்மையாகவும் தொழிற்படுகின்றது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாக பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

- நாணய மற்றும் செலாவணிவீத கொள்கையை நடைமுறைப்படுத்தல்
- நாணய வெளியீடு
- நிதியியல் முறையில் சுதந்திரமான போட்டியையும் உறுதிப் பாட்டினையும் வசதிப்படுத்தல்
- வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கலும் மேற்பார்வையிடலும்
- வங்கிகளுக்கிடையிலான தீர்ப்பனவு முறையினை ஒழுங்கு செய்தலும் முகாமைப்படுத்தலும் மற்றும் கொடுப்பனவு முறையின் சுமூகமான தொழிற்பாட்டினை மேம்படுத்தலும்
- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல்.
- அரசுடனும் அரசின் சார்பில் தொழிற்படுகின்ற முகவர்களுடனும் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குகளின் கீழ் அரசின் வைப்பாளராகத் தொழிற்படல்.

இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் அபிவிருத்தியினை ஊக்குவித்து மேம்படுத்தும் பொருட்டு அதன் பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறை உறுதிப்பாடு ஆகிய குறிக்கோள்களை எய்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வகைப்படுத்திக் கொள்ளமுடியும். இந்த நடவடிக்கைகளுடைய விளைவுகள், வருமானக் கூற்றின் அமைப்பில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் அர்த்தத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

**வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்**

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக, மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ

தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலமாக ஏற்படுகின்றது. வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ சொத்துப்பட்டியல் வெளிநாட்டுச் செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணய சொத்துக்களையும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் ஏனைய வெளிநாட்டு நாணய சொத்துக்களையும் உள்ளடக்குகிறது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. முக்கியமான நாணய இனங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர், யூரோ, இசுடேர்லிங் பவுண் மற்றும் யப்பானிய யென் என்பன காணப்பட்டன. இவ்வெளியீட்டு நாணயச் சொத்துக்களில் வைத்திருக்கப்பட்ட நிதியியல் கருவிகள், முக்கியமாக வேறு நாடுகளினது அரச பிணையங்கள், நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கட்டுக்காப்பு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் நிலுவைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் உள்நாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட வைத்திருக்கின்றது.

#### உள்நாட்டு நாணய நடவடிக்கைகள்

உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் பின்வருமாறு தோன்றுகின்றன.

(i). திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள். திரவத்தன்மை முகாமைத்துவமானது வங்கித் தொழில் முறைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்குதல் மூலம் அல்லது வங்கித் தொழில் முறையிலிருந்து நிதியங்களை மீளப்பெறல் மூலம் அரசுக்கான நாளாந்த தேறிய பாய்ச்சலையும் அல்லது அரசிடமிருந்தான தேறிய நாளாந்தப் பாய்ச்சல்களையும் இலங்கை மத்திய வங்கி நாளாந்தம் எதிரீடு செய்வதில் பெருமளவு ஈடுபடுகின்றது. இத் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மேற்கொள்ளப் படுகின்றன.

(ii). சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பொறுப்பிற்கு உதவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் பிணையங்களை உள்ளடக்கிய முதலீட்டுப் பட்டியலொன்றைக் கொண்டுள்ளது. வர்த்தக நடவடிக்கைக்காக அன்றி நாணய தொழிற்பாடுகளுக்காக இம்முதலீடுகளை வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

#### பொறுப்பாண்மை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

கட்டுக்காப்பு மற்றும் நிருவாக ஒழுங்குமுறைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட தொகைகளானது வங்கியினுடைய நிதிக்கூற்று மூலங்களினுடையே பகுதியாகக் கட்டமைக்கப்படாததால் இந்த நிதிக் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை.

**இலங்கை மத்திய வங்கி பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுடன் இணங்கி ஒழுகுவது தொடர்பான அதன் நிதியியல் கூற்றுக்கள்**

நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளுக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கணக்காளர் நாயகத்தினால் மேற் கொள்ளப்பட்ட நியதிச் சட்ட கணக்காய்வுகளுக்குப் புறம்பாக, மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள், பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கியுள்ளமை பற்றி பரீட்சிப்பதற்காக ஏர்னஸ்ட் அன்ட் யங், பட்டயக் கணக்காளரினால் சிறப்பு நோக்கங்களுக்காக, தனியான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. இக் கணக்காய்வு அறிக்கையின் படிகள் நாணயச்சபைக்கும் கணக்காய்வாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

உலகின் மற்றைய மத்திய வங்கிகளின் அத்தகைய கணக்குகளுடன் ஒப்பிடும் விதத்தில், உலகளாவிய நடைமுறை நியதிகளில் மத்திய வங்கியின் கணக்குகளை நாளதுவரையில் பூரணப்படுத்துவதற்காகவும், அரசின் சார்பில் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கான விதத்தில் பன்னாட்டு மூலதனம் மற்றும் நிதியியல் சந்தைகளில் தொழிற்படுவதற்கு மத்திய வங்கிக்கு வசதியளிப்பதற்காகவும் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் 2002ஆம் ஆண்டு தொடக்கம் சுய விருப்பு அடிப்படையில் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களின் நியதிகளில் நாணயச்சபையின் விருப்பத்திற்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

ஏர்னஸ்ட் அன்ட் யங் இன் அறிக்கை தனியாக வெளியிடப்பட்டிருக்கிறது.

### 2. வங்கி மேற்பார்வை

இலங்கையிலுள்ள சகல வங்கித் தொழில் நிறுவனங்களின் தொடர்ச்சியான மேற்பார்வை மற்றும் காலாந்தர பரீட்சிப்பு நோக்கங்களுக்காக நாணயச் சட்ட விதியின் பிரிவு 28(1)இன் கீழ் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நிறுவப்பட்டது. இதன்படி, வங்கித் தொழில்முறையின் பாதுகாப்பு மற்றும் ஆற்றலை உறுதிப்படுத்தி அதன் மூலம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பேணும்பொருட்டு, வங்கித் தொழில்துறையின் இடர்நேர்வுகளைக் குறைக்கும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் தொடர்பான மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாட்டை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நிறைவேற்றுகிறது. 2008இன் இறுதியில், மத்திய வங்கியின் ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வையின் கீழ் 22 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 14 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுமாக 36 உரிமம் பெற்ற வங்கிகள் தொழிற்பாட்டில் இருந்தன. இவ் வங்கிகளின் பெயர்கள் நெடுங்கணக்கு எழுத்து ஒழுங்கில் இணைப்பு I இல் காணப்படுகின்றன.

ஐக்கிய அமெரிக்க நாட்டில் துணை வாடிக்கையாளர் ஈட்டுச் சந்தையின் நெருக்கடி உலகளாவிய நிதியியல் நெருக்கடியாக மாறியுள்ளதன் மூலம் 2008ஆம் ஆண்டு வங்கித் தொழில் முறைமையின் தாக்குப்பிடிக்கக் கூடிய தன்மையைப் பேணுவதில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு புதிய சவால்களைக் கொண்டுவந்தது. பன்னாட்டு நிதியியல் சந்தையிலான குழப்பங்கள் இடர்நேர்வு முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடுகள். வங்கி முகாமைத்துவத்தின் பொறுப்புக்கூற வேண்டிய தன்மை, கம்பனி ஆளுகை மற்றும் இணங்கிச் செல்லல் என்பவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. இது சம்பந்தமாக வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பாசல் II இற்கு நகரல், பன்னாட்டுக் கணக்கீட்டு

நியமங்களைப் பின்பற்றுவதற்காக தயார் செய்தல், வங்கிகளில் ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையின் நடைமுறைப்படுத்தலுக்கான அறிவுறுத்தல்களை வரைதல், மற்றும் வங்கிகளின் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவத்தைப் பலப்படுத்தும் விதத்தில் தற்போதைய பணிப்புரைகளைத் திருத்துதல் என்பவற்றின் மூலம் ஆற்றல்மிக்க இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளைத் தொடர்ந்து மேம்படுத்தியது. மேலும், வங்கிகளின் கம்பனி ஆளுகை தொடர்பான பணிப்புரைகளின் சுமுகமான நடைமுறைப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கு மீளாய்விற்குரிய ஆண்டில் இடைநிலையிலான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் பணிப்பாளர்களின் பொறுப்புக்களையும் பொறுப்பாகக் கொடுக்கப்பட்ட கடமைகளையும் வலியுறுத்துவதற்கு வங்கிகளின் பணிப்பாளர் சபைக்கான கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. நெருக்கடி நிலையிலுள்ள வங்கிகளின் உறுதிப்பாட்டை பேணுவதை நோக்கி வங்கி மேற்பார்வைத் திணைக்களம் விரைவான நடவடிக்கையை எடுத்ததன்மூலமும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டைப் பேணியது.

இதன்படி, 2008இல் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

### 2.1 முன் மதியுடைய ஒழுங்கு விதிகள் மற்றும் தொடர்பான வழிமுறைகள்

2008இல் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஏற்கனவே நடைமுறையிலுள்ள முன்மதியுடைய ஒழுங்கு விதிகளும் அறிவுறுத்தல்களும் மற்றும் திருத்தங்களின் சுருக்கமும் பின்வருமாறு. இவ் ஒழுங்கு விதிகளினதும் அறிவுறுத்தல்களினதும் விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி 111இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(அ) நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறை மீதான பாசல் 11 இன் நடைமுறைப்படுத்தல்:**

2008இலிருந்து வங்கிகள் கொடுகடன் இடர்நேர்வுக்காக நியமப்படுத்தப்பட்ட அணுகுமுறையையும், சந்தை இடர்நேர்வுக்காக நியமப்படுத்தப்பட்ட அளவீட்டு முறையையும் மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்காக அடிப்படைக் குறிக்காட்டி அணுகுமுறையையும் பிரயோகிக்குமாறு வேண்டப்படுகின்றன. இக் கட்டமைப்பின் அடிப்படையில் வங்கிகளால் மேற்கொள்ளப்பட்ட அறிவிப்புக்கள் பரீட்சிக்கப்பட்டதுடன் சகல வங்கிகளும் பணிப்புரைப்படி அறிவித்தலின் சரியான நியமங்களைப் பின்பற்றுகிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்கு கூற்றுக்கள் மீளாய்வு செய்யப்பட்டன.

**(ஆ) கம்பனி ஆளுகை மீதான பணிப்புரைக்கான திருத்தங்கள்:**

கம்பனி ஆளுகை மீதான பணிப்புரை மீது சில வங்கிகளால் நீதிமன்றங்களில் வழக்குத் தொடுக்கப்பட்டது. உச்ச நீதிமன்றம் பணிப்புரைகளிலுள்ள தத்துவங்களை நிலைநிறுத்தியது. வங்கி மேற்பார்வைத் திணைக்களம் வயது, பணியின் கால அளவு மற்றும் உரிமம் பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்களால் வைத்திருக்கக் கூடிய பணிப்பாளர் பதவிகள் தொடர்பான வரையறைகளில் உச்ச நீதிமன்றத்தின் கட்டளையின் அடிப்படையில் இடையீட்டு நிலையான ஏற்பாடுகளை ஒன்றிணைக்கும் திருத்தத்தை வழங்கியது.

**(இ) கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைப்படுத்தல், வருமானத்தை இனங்காணல் மற்றும் ஏற்பாடுகளை மேற்கொள்ளல்:**

வங்கிகளின் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவத்தை மேலும் பலப்படுத்தும் குறிக்கோளுடன் ஏற்கனவே இருப்பனவற்றுக்கு பல புதிய ஏற்பாடுகள் ஒருங்கிணைப்பதன் மூலம் திரண்ட பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. இதன்படி, வங்கிகள் முழுமையான மீளப்பெறும் தன்மை ஐயத்திற்கிடமாக இருக்குமிடத்து வங்கிகள் கொடுகடன் வசதிகளை காலப்பகுதி மற்றும் உள்ளார்ந்த இடர்நேர்வின் அடிப்படையில் வகைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதுடன் இப் பிரமாணம் ஐந்தொகையிலான மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான இரு விடயங்களுக்கும் ஏற்புடையதாகும். கடன் அட்டைகளுக்கான விசேட வகைப்படுத்தல் பிரமாணம் மற்றும் தேவைப்பாடுகளை ஏற்பாடு செய்தலும் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், கொடுகடன் வசதியைவிட கடன்பாட்டாளர் அடிப்படையிலான வகைப்படுத்தல் கொள்கையும் 2010 சனவரியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

**(ஈ) வங்கிக் கிளைகளை நிறுவுதல் :**

மேல் மாகாணத்தில் நிறுவப்படும் ஒவ்வொரு புதிய கிளைக்கும் மேல் மாகாணத்திற்கு வெளியே ஆகக் குறைந்தது இரு கிளைகளையாவது நிறுவுவதற்கு வங்கிகளைக் கேட்டுக் கொள்ளும் புதிய கொள்கை அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. இது மேல் மாகாணத்திற்கு வெளியேயுள்ள பிரதேசங்களில் பொருளாதார அபிவிருத்தியை அதிகரிப்பதற்கு வசதிப்படுத்து மென்பதுடன் நாட்டில் சமமான பிரதேச அபிவிருத்தியை அடைவதற்கு பங்களிப்புச் செய்வதன்மூலம் நிதி பெறும் வழியை அதிகரிப்பதற்கும், நிதியை உள்ளீர்த்தல் மற்றும் சேமிப்புப் பழக்கங்களைத் தூண்டுதல் என்பன மூலம் அப்பிரதேசங்களில் பொருளாதாரச் செயற்பாடுகளை அதிகரிக்கிறது.

**(உ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் (எஸ்எல்ஏஎஸ்) 44 மற்றும் எஸ்எல்ஏஎஸ் 45ஐப் பின்பற்றல்:**

2011ஆம் ஆண்டளவில் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் (ஐஏஎஸ்) 32 மற்றும் 39உடன் தொடர்பான எஸ்எல்ஏஎஸ் என்பவற்றுடன் முழுமையாக இணங்கிச் செல்வதற்கு வங்கித் தொழில் கைத்தொழிலுக்கு வழிகாட்டல் ஒன்று வழங்கப்பட்டது. மேலும், அறிவை அதிகரிப்பதற்கும் இப்புதிய நியமங்கள் பின்பற்றப்படுவதை வசதிப்படுத்துவதற்கும் பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வங்கியாளர்களுக்காக நடத்தப்பட்டன.

**(ஊ) வங்கித் தொழிற் செயற்பாடுகளை வெளி மூலங் களிலிருந்து பெற்றுக் கொள்ளல்:**

இது தொடர்பான வழிகாட்டல்கள் தொழில்நுட்ப ரீதியிலான நவீனப்படுத்தல், அதிகரித்த சிறப்பியல்படைதல், செலவுக் கட்டுப்பாடு மற்றும் சந்தையிலான போட்டி என்பனவற்றின் சவால்களை எதிர்கொள்வதற்கு பல வங்கிகள் முக்கியமற்ற

தொழிற்பாடுகளை வெளிமூலங்களிலிருந்து பெறும் செயற்பாடுகளுக்கான ஒப்புதலளிக்கும் செயல்முறையை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கும் வங்கிகளின் வெளிமூலங்களிலிருந்து பெறப்படும் செயற்பாடுகள் தொடர்பான வழிகாட்டல்களை வழங்குவதற்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைத்தொழிலின் கருத்துரை எதிர்பார்க்கப்படுகிறது.

(எ) **வங்கிகளில் ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளை நடைமுறைப்படுத்தல்**:

வங்கியொன்றின் ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவ செயல்முறைக்கான ஒட்டுமொத்த கட்டுமானத்தை வழங்கும் வரைவு வழிகாட்டல்கள் வங்கித் தொழில் கைத்தொழிலின் கருத்துரைகளுக்காக வெளியிடப்பட்டது.

(ஏ) **நாணயக்கடிதங்கள் மீதான குறைந்தபட்ச அளவுத் தேவைப்பாடு மற்றும் வெளிநாட்டுச் செலாவணியிலான முன்னோக்கிய விற்பனைகளின் கொடுக்கல் வாங்கல்கள்**:

ஏற்றுக் கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங் களூடாக இறக்குமதிகளுக்காக வங்கித் தொழில் முறைமைக்கு வெளியே வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவுகள் வழிப்படுத்தப்படும் சாத்தியங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தெரிந்தெடுக்கப்பட்ட அத்தியாவசியமற்ற பொருட்கள்மீது 100 சதவீத குறைந்த பட்சத் தேவைப்பாட்டை விதிப்பதற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. மேலும், சாத்தியமான ஆரோக்கியமற்ற ஊக வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலான அளவுக்கதிகமான தளம்பலைத் தவிர்க்கும் நோக்கில் வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தத்தில் ஈடுபடும் நேரத்தில் ஒப்பந்தப் பெறுமதியின் 100 சதவீதத்திற்கும் குறையாத வைப்புக்களையும் பெறுமாறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன. இவ்வழிகாட்டல்கள் 2008 ஒத்தோபர் 31இலிருந்து நடைமுறையிலிருந்தன.

### 2.2. வங்கிகள், கிளைகள் மற்றும் ஏனைய வங்கித் தொழில் நிலையங்களுக்கான ஒப்புதல்கள்:

வங்கித் தொழில் சட்டத்தின் நியதிகளில், வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது வங்கித் தொழிலுக்கான புதிய உரிமங்கள் மற்றும் வங்கிக் கிளைகளையும் ஏனைய வங்கிச் சேவை நிலையங்களையும் திறத்தல், மூடுதல், வேறு இடங்களில் மீள அமைத்தல் ஆகிய கோரிக்கைகளை தொடர்ந்து செயல்முறைப்படுத்தியது. 2008இன் ஆரம்பத்தில், எஸ்எம்ஈ வங்கி லிமிடெட் , லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி லிமிடெட்டுடன் ஒருங்கிணைந்ததுடன் ஸ்ராண்டட் சாட்டட் வங்கி (பாக்கித்தான்) லிமிடெட்டின் இலங்கைக் கிளையின் வங்கித் தொழில் வியாபாரத்தையும் பெற்றுக்கொள்வதற்கு ஸ்ராண்டட் சாட்டட் வங்கி லிமிட்டெட்டுக்கான ஒப்புதலும் வழங்கப்பட்டது. மேலும், இலங்கை வங்கியின் லண்டன் கிளையை அதன் துணைக் கம்பனியாக்குவதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கையில் அமானா வங்கி லிமிடெட் ஐ நிறுவுவதற்காக தற்காலிக ஒப்புதல் கடிதம் வழங்கப்பட்டது. இலங்கையில் புதிய கிளைகளைத் திறப்பதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனிநபர்களாலும் நிதியியல் நிறுவனங்களாலும் காட்டப்பட்ட அதிகரித்த கரிசனை காரணமாக வங்கித் தொழில் சட்டத்துடன் இணங்கிச் செல்லும் வகையில் புதிய வங்கிகளைத் திறப்பது தொடர்பான வழிகாட்டல்கள் பொதுமக்களின் அறிவுக்காக கிடைக்கத்தக்க முறையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ்வாண்டில் 47 புதிய கிளைகளுக்கும், 486 ஏனைய வங்கித் தொழில் நிலையங்களுக்கும் (அதாவது விரிவாக்க அலுவலகங்கள், நடமாடும் வங்கித் தொழில் பிரிவுகள் மற்றும் மாணவர் சேமிப்புப் பிரிவுகள்) 49 கிளைகளையும் 15 விரிவாக்க அலுவலகங்களையும் வேறிடத்தில் அமைப்பதற்கும், 15 விரிவாக்க அலுவலகங்களை முழு அளவிலான கிளைகளாக தரமுயர்த்துவதற்கும், வங்கி அமைவிடங்களுக்கு வெளியில் 24 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளை நிறுவுவதற்கும், 2 தன்னியக்கக்கூற்றுப் பொறிகளையும் ஒரு விரிவாக்க அலுவலகத்தை மூடுவதற்கும் ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. இதன்படி, 2008 இறுதியில் 1,787கிளைகளும், 2,622 ஏனைய வங்கித் தொழில் நிலையங்களும், தொழிற்பாட்டிலுள்ள 1,569தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் காணப்பட்டன. வாடிக்கையாளரை மையமாகக் கொண்டு வங்கிகள் வழங்கும் பணிகளைக் கவனத்திற் கொண்டு நடமாடும் காசு, வீட்டு வாசலிலான வங்கித் தொழில் மற்றும் காசு முகாமைப் பணிகள் என்பவற்றூடாக பணவனுப்பல்கள் போன்ற நவீன வங்கித் தொழில் கோட்பாடுகளுடன் தோற்றம் பெற்ற புதிய வங்கித் தொழில் சாதனங்களுக்கு ஒப்பதல் வழங்கப்பட்டன.

### 2.3 உரிமம் பெற்ற வங்கிகளின் தொடர்ச்சியான மேற்பார்வை

தொடர்ச்சியான மேற்பார்வை என்பது முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் ஒரு பொறிமுறை ஆகும். இதன்மூலம் மேலதிக புலன் விசாரணை மற்றும் பரீட்சிப்பை வேண்டிநிற்கும் நிதியியல் நிலைமைகளிலான எந்தவிதமான குறிப்பிடத்தக்க மாறுபாடுகளும் இணையத்தளத்தின் அடிப்படையில் அறிக்கைப்படுத்தும் முறைமையூடாக இனங்காணப்படுகின்றன. வங்கிகளின் செயலாற்றத்தை மதிப்பிடுவதற்கு வங்கிகள் தொடர்பான தகுநிலை அறிக்கைகள் காலாந்தர ரீதியில் திரட்டப்பட்டன. இத்துடன், ஊர்தி இறக்குமதிக்காக வங்கிகளால் திறக்கப்பட்ட நாணயக் கடிதங்கள், காசோலைத் திரும்பலின் குறியீடுகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளாலும் விதிக்கப்பட்ட கட்டணங்கள் மற்றும் தரகுக் கூலிகள் உள்ளடங்கலாக விசேட பிரச்சனைகள் தொடர்பான அறிக்கைகள் திரட்டப்பட்டன.

### 2.4 உரிமம் பெற்ற வங்கிகளின் நியதிப் பரீட்சிப்பு

நாணயச் சட்டவிதி மற்றும் வங்கித் தொழில் சட்டம் என்பன உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் காலாந்தர நியதிப் பரீட்சிப்பை நடத்துமாறு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தைத் தேவைப்படுத்துகிறது. பரீட்சிப்புக்கள் வங்கிகளிலான கொடுகடன் சந்தை மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவ கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்களைப் பலப்படுத்தும் நோக்குடன் இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையைத் தொடர்ந்து பின்பற்றியது. 2008இல், திரவத்தன்மை இடர் நேர்வு முகாமைத்துவம், கம்பனி ஆளுகை நடைமுறைப்படுத்தல்கள்

மற்றும் ஆற்றல்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளைப் பலப்படுத்துவதற்கு உரிமம் பெற்ற வங்கிகளால் விசேட கவனம் செலுத்தப்பட்டது. 2008ஆம் ஆண்டில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 33 நியதிப் பரீட்சிப்புக்களை கையாண்டதுடன், இது 2008இல் ஆரம்பமான 22 பரீட்சிப்புக்களையும் 2007இலிருந்து தொடர்ந்து நடைபெற்ற 11 பரீட்சிப்புக்களின் பூரணப்படுத்தலையும் உள்ளடக்குகிறது. இதன்படி, 2008இல் தொடர்பான வங்கிகளின் முகாமைத்துவத்துடனான வழமையான கலந்தாலோசனைகள் மற்றும் நாணயச்சபைக்கு அறிக்கைகள் சமர்ப்பிப்பதனூடாக 16 வங்கிகளின் பரீட்சிப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் 17 பரீட்சிப்புக்கள் பூர்த்தியடையும் நிலையிலும் காணப்பட்டன.

### 2.5 செலான் வங்கி பிஎல்சி மீதான தீர்மான நடவடிக்கை

வைப்பு மீளப் பெறுகைகள் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட திரவத்தன்மைப் பிரச்சனைகள் தொடர்பாக செலான் வங்கி பிஎல்சி இனால் எதிர்கொள்ளப்பட்ட இடர்பாடுகளை ஏற்படுத்திய கோல்டன் கீ கிறெடிற் காட் கம்பனி லிமிடெட்டில் (சிலிங்கோ குழுமத்தின் உறுப்பினர்) நிகழ்ந்த சம்பவங்கள் பற்றி நாணயச்சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதன் விளைவாக, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக்கு ஏற்படும் எந்தவிதமான சாத்தியமான ஆபத்தையும் தீர்க்கும் நோக்கில் நாணயச்சபை நாணயச்சட்ட விதியின் 30ஆம் பிரிவின் கீழ் 2008 திசெம்பர் 29ஆம் திகதியில் பணியிலிருந்த செலான் வங்கி பிஎல்சி இன் சகல பணிப்பாளர்களின் பணிகளை இடைநிறுத்துவதற்கும் செலான் வங்கி பிஎல்சி இன் வியாபாரத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு இலங்கை வங்கியை நியமிப்பதற்கும் தீர்மானித்தது. அத்தகைய தலையீட்டினூடாக செலான் வங்கியிலான சந்தை நம்பகத்தன்மை மீள ஏற்படுத்தப்பட்டதுடன் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டுக்கான அச்சுறுத்தல் வெற்றிகரமாகக் கையாளப்பட்டது.

### 2.6 காப்பிடல் கொடுக்கல் வாங்கல்களின் புலன் விசாரணைகள்

2008 நவெம்பர் முற்பகுதியில் ஊடக அறிக்கைகளைப் பின்பற்றி ஸ்ரான்டட் சாட்டட் வங்கி, சிற்றிபாங்க் என்ஏ, டொயிஸ் பாங்க் ஏஜி, கொமர்ஷல் வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகிய ஐந்து வங்கிகளுடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட பெறுதிகளின் கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்பட்ட புலன் விசாரணைகளை இலங்கை மத்திய வங்கி ஆரம்பித்தது. இதேவேளை இப் பெறுதிகளின் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் இரு அடிப்படை உரிமை மனுக்களும் தாக்கல் செய்ப்பட்டன. சந்தேகத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக புலன் விசாரணையை நடத்துவதற்கும் அதன்பின்பு நடவடிக்கை எடுப்பதற்கும் உச்ச நீதிமன்றம் நாணயச் சபையைப் பணித்ததுடன், இது வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட பரீட்சிப்பின் செயற்பரப்பை விரிவாக்கியது. இதன்படி, ஐந்து வங்கிகளால் நிறைவேற்றப்பட்ட எண்ணெய் காப்பிடல் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஐந்து உடன் பரீட்சிப்புக்கள் நடத்தப்பட்டதுடன் அறிக்கைகள் நாணயச்சபைக்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டன. இத்துடன், உயர் நீதிமன்றத்தால் பணிக்கப்பட்டவாறு பரீட்சிப்பின் கண்டுபிடிப்புக்கள் மேலதிக புலன் விசாரணைக்காக இலஞ்ச ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டது. 2008 திசெம்பர் 16ஆம் திகதியன்று தொடர்பான வங்கிகள் அவற்றின் கொடுக்கல் வாங்கல்களைத் தொடரவோ அல்லது செயல் வடிவம் கொடுக்கவோ வேண்டாமென அறிவுறுத்தப்பட்டன.

### 2.7 தடைசெய்யப்பட்ட திட்டங்களின் நடத்தை தொடர்பான புலன் விசாரணைகள்

வங்கித் தொழில் சட்டத்தின் 83(இ) பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட திட்டங்களின் நடத்தை தொடர்பான புலன்விசாரணைகள் 2008இல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. இது சம்பந்தமாக அநுராதபுரம், பலப்பிட்டி, மாகோ - குருநாகல், பன்வில, தெல்தெனியா, மற்றும் பொல்பித்திகம ஆகிய இடங்களில் விசாரிக்கப்பட்ட 9 வழக்குகள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் கலந்து கொண்டது. சட்டரீதியற்றதும் மோசடிமிக்கதுமான பிரமிட் திட்டங்களைத் தூண்டுதல் மற்றும் உதவி செய்வதால் ஏற்படும் ஆபத்துக்கள் தொடர்பாக பொது மக்களுக்கு அறிவூட்டும் பொருட்டு பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.

### 2.8 வழக்குத் தொடுத்தல்

2008ஆம் ஆண்டில் கம்பனி ஆளுகை மீதான பணிப்புரை, பங்கு உரிமை மீதான பணிப்புரை, பிரமுக வங்கியை ஒடுக்கி விடுதல், வங்கிகளின் பங்கு மூலதன தேவைப்பாட்டை அதிகரித்தல், எண்ணெய் பெறுதிகளின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய விடயங்கள் போன்ற பல பிரச்சனைகள் தொடர்பாக மாவட்ட நீதிமன்றம், மேல் நீதி மன்றம், மேன்முறையீட்டு நீதி மன்றம், உயர் நீதிமன்றம், தொழில் நீதிமன்றம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றில் வழங்குத் தொடுக்கப்பட்டது. இது தொடர்பாக மீளாய்விற்குரிய ஆண்டில் 17 நீதிமன்ற வழக்குகள், முடிவுக்காக காத்திருக்கையில் 16 வழக்குகள் முறைப்பாட்டுக்காரர்களால் மீளப் பெறப்பட்டும், 03 வழக்குகள் தள்ளி வைக்கப்பட்டும், 02 வழக்குகள் முடிவு செய்யப்பட்டும் காணப்பட்டன. 2008 யூலையில் உயர் நீதிமன்றம் உரிமம் பெற்ற வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை மீதான பணிப்புரைகளை உறுதிப்படுத்தியதுடன் வயது, பணியின் கால அளவு மற்றும் உரிமம் பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்களால் வைத்திருக்கக்கூடிய பணிப்பாளர் பதவியின் எண்ணிக்கை தொடர்பில் வரையறைகள் இருக்க வேண்டும் என்ற கோட்பாடுகளை நிலைநிறுத்தியது.

### 2.9 பிரதேச அபிவிருத்தி வங்கிகளை ஒருங்கிணைத்தல்

பிரதேச சங்வர்த்தன வங்கியினை நிறுவுவதற்கும் பிரதேச அபிவிருத்தி வங்கியினை ஈர்த்துக் கொள்வதற்கும் வசதியளித்த 2008ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க பிரதேச சங்வர்த்தன வங்கிச் சட்டம் 2008 ஒத்தோபரில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

### 2.10 பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வாளர்களுடனான அதிகரித்த ஒருங்கிணைப்பு

இடர்நேர்வு முகாமைத்துவம், முன்மதியுடைய மற்றும் கணக்கீட்டு நியமங்கள் தொடர்பான புதிய முன்னெடுப்புக்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் என்பவற்றைக் கலந்தாலோசிப்பதற்குமாக வங்கிப் பணிப்பாளர்களுக்கான முதலாவது கூட்டம் நடத்தப்பட்டது. வங்கிகள் பயனுறுதிமிக்க கட்டுப்பாடுகளை பின்பற்றுவதை

உறுதிப்படுத்துவதற்கும் மேற்பார்வைக்குரிய விடயங்களைக் கலந்தாலோசிப்பதற்குமாக மத்திய வங்கி வங்கிகளின் கணக்காய்வு சபைக் குழுக்களையும் வங்கிகளின் வெளியகக் கணக்காய்வாளர்களையும் சந்திக்கிறது.

### 2.11 உள்ளக ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் சபை மற்றும் ஏனைய பொதுக் கூட்டம்

நிதியியற் சந்தைகளின் நன்கு ஏற்பாடு செய்யப்பட்ட அபிவிருத்திக்காக பொருத்தமான கொள்கைப் பணிப்புரைகள் மற்றும், பரந்தளவில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் கரிசனையில் சகல ஒழுங்கமைப்பு முகவர்கள் ஒருங்கிணைந்து தகவலைப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள உள்ளக ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் சபையில் உறுப்பினராக வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் தொடர்ந்தும் உறுப்பினராக இருப்பார். உள்ளக ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் சபைக்கு மத்திய வங்கி ஆளுநர் தலைமை தாங்குவதுடன் இது தேசிய கொடுப்பனவுச் சபை, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச்சபை, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கைக் காப்புறுதிச்சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, கம்பனிகள் பதிவாளர் திணைக்களம், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைவர்களை உள்ளடக்குகிறது. உள்ளக ஒழுங்கமைப்பு நிறுவனங்கள் சபை 2008இல் மூன்று கூட்டங்களை நடத்தியது. மேலும், வங்கித்தொழில் கைத்தொழில் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் கொள்கைகள் பற்றிய கருத்துக்களை பரிமாறும் தொடர்ச்சியான கூட்டமாகக் கருதப்படும் உரிமம் பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடன் மாதாந்தக் கூட்டங்களை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்து நடத்தியது. பாரிய நிதியியல் வியாபாரக் குழுமங்கள் ஒழுங்கு முறைப்படுத்துனர்களின் செயற்குழு அதன் செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொண்டதுடன் இவ்வாண்டில் 8 கூட்டங்களை நடாத்தியது. இதற்கு மேலதிகமாக வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் தேசிய கொடுப்பனவு சபையின் உறுப்பினராகவும் இலங்கைக் கொடுகடன் தகவல் பணியகத்தின் பணிப்பாளராகவும் தொடர்ந்து பணியாற்றுகிறார்.

### 2.12 வருடாந்த உரிமக் கட்டணம்

பலநாடுகள் ஒழுங்கமைப்பு மற்றும் மேற்பார்வைச் செலவுகளை அளவிடும் நோக்கில் வெவ்வேறான உபாயங்களைப் பின்பற்றுகின்றன. வங்கி மேற்பார்வையின் செலவுகளை பகுதியளவில் மீளப்பெறும் நோக்கில் நாணயச்சபை ஒரு தசாப்தத்திற்கும் மேலாக உரிமக் கட்டணங்கள் மாற்றப்படாதிருப்பதைக் கவனத்திற் கொண்டு கவனமாகப் பரீட்சித்து காலவரையறையின் அடிப்படையில் வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணங்களை அதிகரிப்பதற்குத் தீர்மானித்தது. இதன்படி, கரைகடந்த வங்கித் தொழில் வியாபாரம் உள்நாட்டு வங்கித் தொழில் வியாபாரம் இரண்டையும் நடத்தும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு 2009 இற்கான உரிமக் கட்டணம் ரூ.500,000 ஆகவும், கரைகடந்த வங்கித் தொழில் வியாபாரத்தை மட்டும் நடத்தும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு ரூ.300,000 ஆகவும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு ரூ.200,000 ஆகவும் இருக்கும்.

### 2.13 பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

நிதியியல் முறைமை தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டல் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான அவர்களது கொடுக்கல் வாங்கல்களில் இடர்நேர்வுகள் மற்றும் இலாபங்கள் பற்றி அறிந்திருக்க வேண்டிய தேவையின் பொருட்டும் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தகவலை பொதுமக்களுக்கு தொடர்ந்து பரப்பியது. இதன்படி, பதிவு செய்யப்பட்ட நிதியியல் நிறுவனங்கள், வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்கள், கம்பனி ஆளுகை மற்றும் உலகளாவிய நிதியியல் நெருக்கடி தொடர்பாக பத்திரிகை வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

**இணைப்பு II.1**

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்**

1. இலங்கை வங்கி
2. சிற்றி பாங்க் என்.ஏ
3. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் லிமிடெட்
4. டொயிஷ் பாங்க் ஏஜி
5. டீஎவ்சீசீ வர்தன பாங்க் லிமிடெட்
6. ஹபீப் பாங்க் லிமிடெட்
7. ஹட்டன் நசனல் பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. இந்தியன் பாங்க்
10. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
11. எம்சிபி பாங்க் லிமிடெட்
12. நெசனல் டெவலப்மென்ற் பாங்க் லிமிடெட்
13. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் லிமிடெட்
14. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
15. மக்கள் வங்கி
16. பப்ளிக் பாங்க் பெர்காட்
17. சம்பத் பாங்க் லிமிடெட்
18. செலான் பாங்க் லிமிடெட்
19. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
20. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
21. த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
22. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு லிமிடெட்

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்**

1. செலிங்கோ சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
2. டிஎவ்சீசீ வங்கி
3. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
4. கந்துரட்ட அபிவிருத்தி வங்கி
5. லங்காபுத்திர அபிவிருத்தி வங்கி லிமிடெட்
6. தேசிய சேமிப்பு வங்கி
7. ரஜரட்ட அபிவிருத்தி வங்கி
8. றுகுண அபிவிருத்தி வங்கி
9. சப்ரகமுவ அபிவிருத்தி வங்கி
10. சனச அபிவிருத்தி வங்கி லிமிடெட்
11. எஸ்.எம்.இ. பாங்க் லிமிடெட்
12. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
13. ஊவா அபிவிருத்தி வங்கி
14. வயம்ப அபிவிருத்தி வங்கி

## 3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம்

வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் உயர் தரத்தில் பரந்த அளவிலான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கல்விசார்ந்த கூட்டங்கள் மற்றும் பகிரங்க விரிவுரைகளை வழங்குவதன் மூலம் அதன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் உள்ளடக்கத்தையும் தரத்தையும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தது. 2008இல் வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் பொதுமக்கள் நலன்கருதி மாலை நேர விளக்கச் சொற்பொழிவுகள் மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளின் தொடரை அறிமுகப்படுத்தியது. மேலும், வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் உபாய வலையமைப்பூடாக அறிவைப் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளல் மற்றும் நெருக்கமான தொடர்பை உருவாக்கும் நோக்கத்திற்காக உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களுடன் இணைப்பை உருவாக்குவதற்கு முன்னெடுப்புக்களை மேற்கொண்டது. 2008ஆம் ஆண்டில், பன்னாட்டு நிலையமாக சிறந்து விளங்கும் வகையில் வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தை மீண்டும் கொண்டு வரும் நோக்கில் பன்னாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் கூடிய முக்கியத்துவத்தைக் கொடுத்துள்ளது. இதன் பொருட்டு 2009ஆம் ஆண்டிலிருந்து உள்நாட்டு மற்றும் பன்னாட்டு பங்கேற்பாளர்களுக்காக உயர்தரமான ஏற்பாடுகளை வழங்கும் நோக்கில் வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் தற்போதைய வதிவிட வசதிகளும் பன்னாட்டு தரத்துக்கமைய தரமுயர்த்தப்பட்டன.

2008ஆம் ஆண்டின் வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் 98 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. இவை 59 அட்டவணையிடப்பட்ட உள்நாட்டு நிகழ்ச்சித் திட்டங்களையும், 5 பன்னாட்டு நிகழ்ச்சித் திட்டங்களையும், கேள்வியின் நிமித்தம் வழங்கப்பட்ட 34 நிகழ்ச்சித் திட்டங்களையும் உள்ளடக்கியிருந்தன. மேற்கூறிய நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியோரின் எண்ணிக்கை முறையே 1,763 ; 171 மற்றும் 1,325 ஆக விளங்கியது. வங்கித்தொழில் மற்றும் நிதி, கணக்கீடு மற்றும் நிதியியல் முகாமைத்துவம், நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான சட்டவாக்கம், தகவல் தொழில்நுட்பம், மொழிகள் மற்றும் தொடர்பூட்டல் தேர்ச்சிகள், மனிதவள முகாமைத்துவம் மற்றும் பொது முகாமைத்துவ கிராமியத்துறை அபிவிருத்தி மற்றும் நுண்பாக நிதி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகிய துறைகளில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. இத்துடன், முக்கிய கொள்கைப் பிரச்சனைகள் மற்றும் நிதியியல்துறை அபிவிருத்திகள் தொடர்பான விசேட நிகழ்ச்சித்திட்டங்களும் இவ்வாண்டில் நடத்தப்பட்டன.

மத்திய வங்கியின் சமூக பொறுப்பாண்மை முன்னெடுப்புக்களின் ஒரு பகுதியாக பகிரங்க விரிவுரைகள், மாலைநேர விளக்க சொற்பொழிவுகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான விசேட கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் தொடரை ஏற்பாடு செய்வதனூடாக மத்திய வங்கியும் பொதுமக்களுடன் அறிவைப் பகிர்ந்து கொள்ளும் அதன் முயற்சிகளைத் தொடருவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. இவ் ஆய்வரங்குகளும் விரிவுரைகளும் புதிய கருத்துக்களைப் பரப்புவதற்கும் பொதுமக்கள் அவர்களின் கருத்துக்களை வெளியிடுவதற்கும் அறிவைப் பகிர்ந்து கொள்வதற்குமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. 2008இல் பதினைந்து பகிரங்க விரிவுரைகள், நான்கு மாலைநேர விளக்கச் சொற்பொழிவுகள், மற்றும் பதினெட்டு கல்விசார் விரிவுரைகள் என்பனவற்றில் முறையே 3,410, 236 மற்றும் 2,547 பேர் பங்கேற்றனர். கல்விசார் விரிவுரைகளுக்கு மேலதிகமாக மாணவர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்களின் நன்மை கருதி பதின்மூன்று தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

## 4. தொடர்பூட்டல்

கடந்த ஆண்டு முழுவதும் உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்கு மத்தியிலும் மத்திய வங்கி பரந்த அளவிலான ஊடக வலையமைப்பினூடாக பொது மக்களுடன் தீவிரமான தொடர்பூட்டலைக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. விசேடமாக நெருக்கடி நிலைமையின் கீழ் விலை, பொருளாதார மற்றும் நிதியியல்முறை உறுதிப்பாடு தொடர்பாக மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைத் தீர்மானங்கள் தொடர்பான தகவலில் பொதுமக்கள் பெருமளவு தங்கியிருந்தமையால் இவ்வகையான தீவிரமான தொடர்பூட்டல் முயற்சி இன்றியமையாததாகும். இச் செயற்பாட்டில், தொடர்பூட்டல் திணைக்களம் வங்கியின் வெளியக மற்றும் உள்ளகத் தொடர்பூட்டல் பணித் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதில் முக்கிய பங்கை வகித்தது.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, திணைக்களம் நாளாந்தச் செலாவணி வீதங்கள், வாராந்த மற்றும் மாதாந்த பொருளாதாரக் குறிகாட்டிகள், இலங்கை வங்கிகளுக்கிடையேயான வழங்கல் வீதங்கள், எண்ணெய் விலைகள், நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் ஏலங்கள் தொடர்பாக அரச பிணையங்கள் மீதான தகவலைத் தொடர்ந்து வெளியிட்டது. இவ்வாண்டில் திணைக்களம் 1,352 பத்திரிகை வெளியீடுகளை வெளியிட்டும், 152 செய்தித் தாள் விளம்பரங்கள், மற்றும் 12 வர்த்தமானி அறிவித்தல்களைப் பிரசுரித்தது. கிரமமான பத்திரிகை வெளியீடுகள் மற்றும் அறிவித்தல்களுக்கு மேலதிகமாக, திணைக்களம் 15 ஊடக மாநாடுகளை ஏற்பாடு செய்ததுடன் பல தரப்பட்ட பொருளாதார மற்றும் நிதியியற் பிரச்சனைகள் தொடர்பாக தொடர்ச்சியான பொதுமக்கள் விழிப்புணர்வை உருவாக்கும் விதத்தில் மத்திய வங்கியின் சிரேஷ்ட அலுவலர்களுடன் ஒன்றுக்கு ஒன்று என்ற அடிப்படையில் ஊடக நேர் காணல்களையும் ஒழுங்கு செய்தது. உலகளாவிய நிதியியல் நெருக்கடி மற்றும் நாட்டின் பொருளாதாரத்தில் அதன் தாக்கம் தொடர்பான தற்போதைய போக்குகள் மற்றும் பிரச்சனைகள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு அறிவூட்டுவதற்காக திணைக்களம் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கும் மதிய போசனத்துடனான மூன்று கூட்டங்களை ஒழுங்கு செய்தது.

முக்கிய அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களின் உதவியுடன் திணைக்களம் நாட்டுக்கான பன்னாட்டு மதிப்பு முகாமைத்துவப் பிரசாரத்தை ஒருங்கிணைத்தது. நாடு தொடர்பாக பாதகமான பன்னாட்டுப் பிரசாரம் இருந்த நேரத்தில் இப்பிரசாரம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இக்காலப்பகுதியில் முதலாவது நாட்டுக்கான முறி பன்னாட்டுச் சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்டதுடன் இப்பிரசாரம் இம் முதலாவது முறி வழங்கல் சாதகமான விதத்தில் இடம்பெறுவதற்கு உதவியது. பிரசாரத்தின் உண்மையான பெறுபேறு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில்

இலங்கை தொடர்பான பொதுவான பன்னாட்டுத் தோற்றப்பாட்டைப் பிரதிபலிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

வங்கியின் இணையத்தளம் பிரதான தொடர்பூட்டல் நுழைவாயிலாக முக்கிய பங்கை வகித்ததுடன் இதனூடாக உலகளாவிய பார்வையாளர்கள் வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளனர். அதேநேர சாதாரண செயலாற்றல், ஞாபகார்த்த நாணயக் குத்திகள் மற்றும் வெளியீடுகளின் அதேநேர விற்பனைக் கருமபீடம் போன்ற புதிய பண்புகளின் அறிமுகத்துடன் இது இவ்வாண்டில் கூடியளவிற்கு பிரபல்யமாகவும் வந்துள்ளது. இணையத்தளத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 2007இன் நாள் ஒன்றுக்கான 88,000 மற்றும் 2006இல் நாளொன்றுக்கான 600 உடன் ஒப்பிடுகையில் 2008இல் நாளொன்றுக்கு 103,012 இற்கு அதிகரித்தது. வங்கியின் தொடர்பான திணைக்களங்களின் உதவியுடன் திணைக்களம் இவ்வாண்டு முழுவதும் சகல மூன்று மொழிகளிலும் நாளதுவரை பூரணப்படுத்தப்பட்ட இணையத்தளத்தை வைத்திருந்தது.

அரசுசார்பாக வங்கியால் மேற்கொள்ளப்பட்ட முகவர் தொழிற்பாடுகள் தொடர்பான தகவலுக்காக பொது மக்களால் மேற்கொள்ளப்படும் அடிக்கடி நிகழ்கிற விசாரணைகளுக்குப் பதிலிறுக்கும் வகையில் 1919 உடன் தொடர்பு ஊடாக பொதுமக்கள் இலங்கை மத்திய வங்கி தகவலைப் பெறும் வகையில் தொடர்பான திணைக்களங்களை அரச தகவல் நிலையத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தை இணைத்தல் இவ்வாண்டில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இந்த 1919 உடன் தொடர்பூடாக பொதுப்படுகடன் மற்றும் ஊழியர் சேம நிதியம் தொடர்பான விசாரணைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கவனமாக வடிவமைக்கப்பட்ட தோற்றப்பாட்டினூடாக நேர்மை, தொழில்சார் நிபுணத்துவம் மற்றும் புலன்களால் அறியக்கூடிய தன்மை என்பவற்றின் செய்தியை அறிவிக்கும் குறிக்கோளுடன் இலங்கை மத்திய வங்கிக்கு புதிய நிறுவன வடிவமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. சகல தொடர்பூட்டல் மாதிரி உருவங்களும் இதற்கமைய மீள்வடிவமைக்கப்பட்டதுடன் ஆண்டறிக்கை, உபாயத் திட்டம், வழிகாட்டல்கள், படுகடன் செய்தித் திரட்டு என்பன போன்ற இலங்கை மத்திய வங்கி வெளியீடுகளுக்கு புதிய தோற்றம் அளிக்கப்பட்டது.

உள்ளக தொடர்பூட்டல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வங்கித் தொழில் மற்றும் நிதி, பொருளாதார குறிகாட்டிகள் அறிவித்தல்கள், விளக்கவுரைகள் மற்றும் ஊழியர்களுக்கான அறிவித்தல்கள் தொடர்பாக வானிலை அறிக்கையிலிருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செய்திகள்வரை நாளாந்த தகவலை வழங்கும் சிபிஎஸ்எல் டெயிலி இணையப் பெரும் நுழைவாயிலை திணைக்களம் தொடர்ச்சியாகப் புதுப்பித்தது. இது நடைமுறை விடயங்கள் தொடர்பான ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்காக ஊழியர்களுக்கான அதேநேர மன்றத்தையும் வசதிப்படுத்தியது. சிபிஎஸ்எல் டெயிலி இணையத்தளத்திலான துணுக்குகளின் எண்ணிக்கை 2007இன் நாளொன்றுக்கான 300 துணுக்குகளிலிருந்து 2008இல் நாளொன்றுக்கு 350 துணுக்குகளுக்கு உயர்ந்தது. அலுவலர்கள் உள்ளகச் செய்திகள் மற்றும் சிறப்பு அம்சங்களைக் கொண்ட சஞ்சிகைகளிடையே திணைக்களத் தொழிற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு திணைக்களம் அதிகரித்த பண்புகளுடன் ‘கவுலுவ’ வைத் தொடர்ந்து வெளியிட்டதுடன் இது ஊழியர்கள் பல தரப்பட்ட பிரச்சனைகள் தொடர்பாக தமது எண்ணங்கள் மற்றும் கருத்துக்களை வெளிப்படையாகக் கூறுவதற்காக கூடிய இடப்பரப்பை வழங்குகிறது.

முன்னைய ஆண்டுகளைப் போலவே செய்தித் தாள்களில் வெளியான நாட்டின் பொருளாதாரம் மற்றும் இலங்கை மத்திய வங்கி தொடர்பான செய்திகள், கட்டுரைகள் மற்றும் நோக்கங்கள் என்பவற்றின் சேகரிப்பு ஊடகத்தில் எவ்வாறு விடயங்கள் அறிவிக்கப்படுகின்றன என்பது பற்றிய சிந்தனையை வைத்திருப்பதற்கு நிறுவன முகாமைத்துவத்தை வசதிப்படுத்துவதற்கு அதற்கு வழங்கப்பட்டது. பலதரப்பட்ட பொருளாதார, நிதியியல் மற்றும் சமூகப் பிரச்சனைகள் தொடர்பாக 1,290 அத்தகைய புதிய விடயங்கள் முகாமைத்துவத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டன. ஊடகத்தில் வங்கி எவ்வாறு வருணிக்கப்படுகிறதென்பதைக் கண்டுபிடிப்பதற்காக மத்திய வங்கி தொடர்பான செய்தித்தாள் அறிக்கைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன் அவ்விடயம் தொடர்பான விளக்கவுரை திணைக்களத் தலைவர்களின் கூட்டத்தில் முன் வைக்கப்பட்டது. ஊடகத்தில் பிரசுரிக்கப்பட்ட பிழையான அறிக்கைகள் கூட்டத்தில் பேசப்பட்டதுடன் தொடர்பான திணைக்களங்களின் உதவியுடன் திருத்தப்பட்டன.

கல்வி மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வின் கீழ் பொருளாதாரம், வங்கித் தொழில் மற்றும் நிதி தொடர்பாக 24 பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பாடசாலைக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பொதுப்படுகடன் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க கால்நடைப் பண்ணைத் தொழிலை இலாபகரமான வீட்டுத்துறை பொருளாதாரச் செயற்பாடாகவும் மற்றும் அரச பிணையங்கள் மீதான முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும் இரு விவரணப் படங்கள் தயாரிக்கப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பொது மக்களிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதுடன் அதிக எண்ணிக்கையான சபையோருக்கு ஒளிபரப்பு செய்வதற்காக ஒளி இறுவட்டுக்களின் பிரதிகள் தயாரிக்கப்பட்டு விசேடமாக இலக்கிடப்பட்ட சபையோருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. திணைக்களம் பொருளாதாரம் மற்றும் நிதியியற் தகவல், மற்றும் இலங்கை மத்திய வங்கியின் கொள்கைகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக பலதரப்பட்ட பொருட்காட்சிகளிலும் ஏனைய பொது நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றியது. கொழும்பு பன்னாட்டு புத்தகக் கண்காட்சி மற்றும் தயற்ற கிருல பொருட்காட்சியிலுள்ள வங்கியின் காட்சியறை குறிப்பிடத்தக்களவு பொதுமக்கள் பங்கேற்பைப் பதிவு செய்தது. எக்ஸ்போ லங்கா, கமின் லொவற்ற மற்றும் பொத்பியஸ பொருட்காட்சிகள் குறிப்பிடத்தக்க ஏனைய பொருட்காட்சிகளாக விளங்கின. திணைக்களம் இக்காட்சியறையில் அதன் வெளியீடுகள் பலவற்றை விற்கக் கூடியதாகவிருந்தது. இவ்வாண்டில் திணைக்களம் பொதுமக்களின் வசதி கருதி ராஜகிரியவிலுள்ள வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தில் வெளியீடுகள் விற்பனைக் கருமபீடத்தை புதிதாக திறந்தது.

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்புப் பிரிவு வங்கியின் சகல தமிழ் மொழிபெயர்ப்புத் தேவைப்பாடுகளையும் நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தில் நிறுவப்பட்டது. இதன்மூலம் திணைக்களம் பத்திரிகை வெளியீடுகள், விளம்பரங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் வங்கியின் வெளியீடுகள் போன்றவற்றை கூடிய வினைத்திறனுடன் கையாளக் கூடியதாகவிருந்தது. இப்பிரிவு இவ்வாண்டில் 175 தமிழ் மொழிபெயர்ப்புக்கள் தொடர்பான வேலைகளைக் கையாண்டது.

கடந்த ஆண்டுகளைப் போலவே திணைக்களம் மத்திய வங்கியால் வெளியிடப்படும் ஏனைய வெளியீடுகளின் வெளியீட்டு முகவராக பணிபுரிவதற்கு மேலதிகமாக சற்றகன மற்றும் செய்தித் திரட்டு போன்ற அதன் சொந்த வெளியீடுகளை தொடர்ந்து வெளியிட்டது. மத்திய வங்கி அச்சகம் இலங்கை சமூகப் பொருளாதாரத் தரவு, இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளி விபரங்கள், செய்தித்திரட்டு, சற்றகன, கவுலுவ, அலுவலர் ஆய்வுகள், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு, வழிகாட்டல், உபாயத் திட்டம், பொதுப்படுகடன் செய்தித் திரட்டு என்பனவற்றின் சகல அச்சிடல் தேவைகளையும் மற்றும் வருகையாளர் முகவரிச்சீட்டு, வாழ்த்து மடல்கள், குறிப்புப் புத்தகங்கள், கோவை அட்டைகள், இலங்கை மத்திய வங்கி தினக்குறிப்பு போன்ற ஏனைய திணைக்களத் தேவைப்பாடுகளையும் தொடர்ந்து நிறைவேற்றியது.

வங்கியால் நடத்தப்பட்ட முக்கிய சம்பவங்களைப் புகைப்படமெடுத்தல் திணைக்களத்தின் புகைப்படப் பிரிவால் கையாளப்பட்டது. இது இவ்வாண்டில் வங்கிப் பணிமனையினுள்ளும் வெளியேயும் அத்தகைய அறுபது சம்பவங்களை உள்ளடக்கியது.

#### நூலகமும் தகவல் நிலையமும்

நூலகமும் தகவல் நிலையமும் வங்கி அலுவலர்களுக்கும் வேண்டுதலின் பேரில் மற்றையவர்களுக்கும் நூலகப் பணிகளை தொடர்ந்தும் வழங்கியது. இது அதன் புத்தக சேகரிப்புக்களை 20,586 இலிருந்து 21,906இற்கும், அறிக்கைகளை 13,827இலிருந்து 14,662இற்கும் இறுவட்டுக்களை 1,082 இலிருந்து 1,142இற்கும் அதிகரித்துக் கொண்டதுடன் இவ்வாண்டில் ஒன்று திரட்டப்பட்டுக் கட்டப்பட்ட 500 தொகுதிகளும் சேகரிக்கப்பட்டன. வங்கித் தொழில் ஆய்வு நிலையத்திலுள்ள நூலகம் அதன் நூல் சேகரிப்புக்களை 5,273 இலிருந்து 5,516இற்கு அதிகரித்தது.

மீளாய்விற்குரிய காலப்பகுதியில், பொருளாதாரம், அளவுப் பொருளாதாரம் மற்றும் நிதி தொடர்பான 100இற்கும் மேற்பட்ட சஞ்சிகைகளை அதே நேரத்தில் அணுகத்தக்க விதத்தில் ‘விஞ்ஞான வழிகாட்டல்’தரவுத் தளத்தின் பயன்பாடு அதிகரிக்கப்பட்டது. நூலகமும் தகவல் நிலையமும் அண்மைய சேர்க்கைகள் (அதாவது புதிய நூல்கள்) தெரிந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் பட்டியல், மத்திய வங்கித் தொழில் பற்றிய செய்திகள், நியூஸ் அலேட் போன்ற இலத்திரனியல் வெளியீடுகளைத் திரட்டி இணையத்தளமூடாக அவற்றைப் பரப்பியது. தெரிந்தெடுக்கப்பட்ட தகவற் பரம்பல் பணி பேணப்பட்டது.

வங்கி அலுவலர்கள் அதேநேர நூலக வசதிகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு 11 தினங்களை உள்ளடக்கும் 11 பயன்பாட்டாளர் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. ஊழியர்களின் நன்மை கருதி பலதரப்பட்ட முக்கியமான விடயங்கள் மற்றும் தலைப்புக்களில் இருபத்துநான்கு (24) விவரணப் படங்கள் நூலகத்தின் மண்டபத்தில் மதியபோசன இடைவெளியின்போது காண்பிக்கப்பட்டன. பொருளாதார மற்றும் வங்கித் தொழில் நூலக வலையமைப்பு பேணப்பட்டதுடன் அதன் 22 உறுப்பினர் நூலகங்கள் மின்னஞ்சல் மூலமாக தகவல்களைப் பகிர்ந்து கொள்வதில் பெரும் நன்மையடைந்தன. நூலகமும் தகவல் நிலையமும் தேசிய வாசகர் மாதமான ஒத்தோபரில் ஒரு புத்தகக் கண்காட்சியை ஒழுங்கு செய்து புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட 723 நூல்களைக் காட்சிக்கு வைத்தது. இந்தக் கண்காட்சிக்கு அலுவலர்களிடமிருந்து நல்ல வரவேற்புக் கிடைத்தது. புத்தக ஆய்வுரைப் போட்டி மற்றும் மின்னஞ்சல் மூலமான கேள்வி பதில் நிகழ்ச்சித் திட்டம் என்பன தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித் திட்டங்களாக நினைவு கூரும் ஏனைய பிரபல்யமான விடயங்களாக விளங்கின. ‘இலங்கை - காணி மற்றும் அதைப் பாதுகாத்தல்’ தொடர்பான விரிவுரையொன்று வங்கி அலுவலர்கள் இத்தேசிய பிரச்சனையை அறிந்திருப்பதற்காக நூலக மற்றும் தகவல் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.

சுய அணுகல் மொழி ஆய்வு கூடமானது இலங்கை மத்திய வங்கி அலுவலர்கள் இவ்வசதியை இலகுவாக அடைவதற்காக நூலக மற்றும் தகவல் நிலையத்தின் உசாத்துணைப் பிரிவுக்கு நகர்த்தப்பட்டது. இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தால் நூலக மற்றும் தகவல் நிலையத்துக்கு ஐஎஸ்ஓ 9001:2000 சான்றிதழ் பத்திரம் வழங்கியமை மீளாய்விற்குரிய ஆண்டில் இடம்பெற்ற தனித்துவமான சாதனையாகும்.

## 5. நாணயம்

### 5.1. நாணய வெளியீடு மற்றும் முகாமைத்துவம்

இலங்கையில் நாணயத்தினை வெளியிடும் அதிகாரங் கொண்ட தனியொரு நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கி 2008ஆம் ஆண்டிலும் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்துவதற்காக சட்ட ரீதியான நாணயத்தை வழங்குகின்ற அதன் தொழிற்பாட்டினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. 2008இறுதியில் சுற்றோட்டத்திலிருந்த நாணயத் தாள்களினதும் குத்திகளினதும் பெறுமதி ரூ.186 பில்லியனாக காணப்பட்டது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் மொத்தப் பெறுமதியில் சுற்றோட்டத்திலுள்ள தாள்கள் 97 சதவீதத்தைக் கொண்டிருந்தன. 2008ஆம் ஆண்டில் வர்த்தக வங்கிகளுக்கு நாணயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட புதிய மற்றும் பயன்படுத்தத்தக்க நாணயங்களின் பெறுமதி முறையே ரூ.27 பில்லியன் மற்றும் ரூ.193பில்லியினாக காணப்பட்டன. வர்த்தக வங்கிகளிடமிருந்தான நாணயத் தாள் வைப்புக்களின் பெறுமதி ரூ.207 பில்லியனாக விளங்கியது. இதன்படி, 2008 இறுதியில் சுற்றோட்டத்துக்கான நாணயத்தாள்கள் மற்றும் நாணயக் குத்திகளின் தேறிய வழங்கல் முறையே ரூ.13 பில்லியனாகவும் ரூ.252 மில்லியனாகவும் விளங்கியது.

### 5.2 நாணய வழங்கல் மற்றும் முகாமைத்துவத்துக்கான செலவுச் சிக்கனம் வாய்ந்த வழிமுறைகள்

வீட்டுத்துறையில் சேர்ந்துள்ள பாவனையில் இல்லாத நாணயக் குத்திகளை மீள் சுற்றோட்டத்திற்கு விடுவதற்கு நாடு தழுவிய

நாணயக் குத்திச் சேகரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை நாணயத் திணைக்களம் தொடர்ந்து மேற்கொண்டது. இதன்படி, 2008இல் ஒன்பது மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டன. 2008 இறுதியில் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட நாணயக் குத்திகளின் மொத்த முகப்புப் பெறுமதி கிட்டத்தட்ட ரூ.50 மில்லியனாக விளங்கியது. சேகரிக்கப்பட்ட நாணயக் குத்திகளின் இருப்பின் வார்ப்புச் செலவை நாணயக்குத்தி சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக நாணயத் திணைக்களத்திற்கு ஏற்படும் செலவுடன் ஒப்பிட்டு கவனத்தில் எடுக்கையில் சேமிப்புக்கள் நியதிகளிலான மொத்தத் தேறிய நன்மைகள் ரூ.77 மில்லியனாக விளங்கியது. கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட உயர் உலோகப் பெறுமதியுடைய நாணயங்களின் நன்மைகளைப் பாதுகாப்பதற்கு அவற்றை குறைந்த செலவுடைய நாணயக் குத்திகளால் பிரதியீடு செய்வதற்காக நாணயத் திணைக்களம் உயர் உலோகப் பெறுமதியுடைய நாணயக்குத்திகளை ஏற்றுமதி செய்தது. 2008இல் இச் செயற்றிட்டத்தினூடாக உருவாக்கப்பட்ட வருமானம் கிட்டத்தட்ட ரூ.30 மில்லியனாக விளங்கியது. மேலும், நாணயச் செயல்முறையின் வினைத்திறன் உயர்வேகத்தில் தாளை எண்ணும் பொறிகளை தேடிப் பெற்றதன் மூலம் அதிகரிக்கப்பட்டது.

### 5.3 நாணயத்தில் பொதுமக்கள் நம்பகத் தன்மையைப் பேணுதல்

வங்கியின் பொறுப்புக்களில் ஒன்றான நாணயத்தில் பொதுமக்கள் நம்பகத் தன்மையைப் பேணுவதற்கு நாணயத் திணைக்களம் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயத்தாள் பணியகத்தின் நெருக்கமான ஒத்துழைப்புடன் தொடர்ந்தும் பணியாற்றியது. இதுபோல், நாணயத் திணைக்களம் போலி நாணயத் தாள்கள் தொடர்பான 22 நீதிமன்ற வழக்குகளில் கலந்து கொண்டது. 2008ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டு வங்கியின் உறுதிப்படுத்தலுக்காகத் தொடர்பு கொள்ளப்பட்ட போலி நாணயங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மில்லியன் தாள்களுக்கும் கிட்டத்தட்ட 2 தாள்களாகக் காணப்பட்டது. சட்ட நடைமுறைப்படுத்தல் அலுவலர்கள், காசைக் கையாளுபவர்கள் மற்றும் பொது மக்கள் உண்மையான தாளுக்கும் போலித் தாளுக்குமிடையே உள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டுவதில் அவர்களை இயலச் செய்யும் அறிவை அதிகரிப்பதற்கு உண்மையான நாணயத் தாள்களின் புதிய பாதுகாப்புப் பண்புகள் தொடர்பான பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் நாணயத் திணைக்களம் நடத்தியது.

### 5.4 சுத்தமான நாணயத்தாள் கொள்கையை ஊக்குவித்தல்

சுற்றோட்டத்திலுள்ள சுத்தமான தாள்களைப் பேணுதல் நாணய வெளியீடு மற்றும் முகாமைக்குப் பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட நன்மைகளைக் கொண்டுள்ளது. தாள்களை நல்ல பழக்கவழக்கங்களுடன் கையாளல் தாள்களின் வாழ்கைக் காலத்தை நீடிப்பதுடன் புதிய தாள்களை அச்சிடுவதற்கான செலவைக் குறைக்கவும் உதவும், சுத்தமான தாள்கள் உண்மையான தாள்களுக்கும் போலித் தாள்களுக்கிடையேயான வேறுபாட்டை வேறுபடுத்த உதவுவதுடன் வெளிநாட்டவர்களிடையே நாட்டின் மதிப்பையும் உயர்த்தும். நாணயத் திணைக்களம் சுற்றோட்டத்துக்கு புதிய தாள்களைத் தொடர்ந்து வெளியிட்டதுடன் சுத்தமான தாள்கள் கொள்கையினை ஊக்குவிக்கும் ஒரு பகுதியாக பயன்படுத்த முடியாத தாள்களை அகற்றியது. இத்துடன், நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குத்திகளைக்கையாளும் நல்ல பழக்க வழக்கங்கள் தொடர்பான விடயங்கள் இவ்வாண்டில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்தாலோசிக்கப்பட்டது. சுற்றோட்டத்திலுள்ள தாள்களின் தர நியமங்களைப் பேணுவதற்காக தாள்களுக்கான நியமங்களைப் பிரித்தெடுப்பது பற்றிய வழிகாட்டல்கள் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்டன. வர்த்தக வங்கிகளால் வைப்புச் செய்யப்பட்ட தாள் கட்டுக்களின் மாதிரிகள் செயல்முறைப்படுத்தும் நாணயத்தின் தரத்தை சரி பார்ப்பதற்காக எழுமாறியாகச் பரிசோதிக்கப்பட்டன.

### 5.5 நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய செயற்றிட்டங்கள்

#### (அ) புதிய நாணயத் தாள் தொடர்

உள்ளூரிலுள்ள செயற்றிறன்மிகுந்த, ஆக்க ஆர்வம் மிகுந்தவர்களை கவர்ந்து ஊக்குவிக்கும் நோக்குடன் புதிய நாணயத் தாள் தொடரை வடிவமைப்பதற்கு பங்களிப்புச் செய்யும் ஆற்றல்மிக்க, ஆக்கம்மிக்க மற்றும் ஓவியத்திறன் வாய்ந்த குடிமக்களை வரவேற்கும் நாடளாவிய போட்டியை நாணயத் திணைக்களம் ஆரம்பித்தது. இச் செயற்றிட்டம் 219 வடிவமைப்பாளர்களிடமிருந்து 1,175 வடிவமைப்புக்களுடனான மிகச் சிறந்த வரவேற்பைப் பெற்றது. மிகவும் பொருத்தமான இரு வடிவமைப்புக்கள் தேர்வுக்கான இறுதிச் சுற்றில் தெரிந்தெடுக்கப்பட்டன. புதிய தொடருக்கான வடிவமைப்புக்கள் ‘அபிவிருத்தி மற்றும் சுபீட்சம்’ மற்றும் ‘இலங்கையின் நடனக்காரர்கள்’என்ற தொனிப் பொருளின் கீழ் இறுதிப்படுத்தப் பட்டன.

#### (ஆ) அநுராதபுரத்திலுள்ள நாணய நூதனசாலை

இலங்கை மத்திய வங்கியின் இரண்டாவது நாணய நூதனசாலை அநுராதபுரத்திலுள்ள மத்திய வங்கியின் பிரதேச அலுவலகத்தில் 2008 செத்தெம்பர் 5ஆம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது. இக்குறிக்கோள் இலங்கை மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகளில் உள்ள நாணயம் தொடர்பான தகவலைச் சேகரிப்பதற்கு புராதன நகரான அநுராதபுரத்துக்கு வரும் பாடசாலை மாணவர்கள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விருந்தினர்கள் உள்ளிட்ட பொது மக்களுக்கு வசதிப்படுத்துவதாகும். கிறிஸ்துவுக்கு முன் மூன்றாவது நூற்றாண்டிலிருந்து இன்று வரை இலங்கையில் பயன்படுத்தப்பட்ட புராதன நாணயங்கள், மத்திய வங்கி நிறுவப்படும்வரை வெவ்வேறான காலணித்துவ காலப்பகுதியின் கீழ் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட நாணயங்கள் மற்றும் 1951ஆம் ஆண்டிலிருந்து இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட நாணயக் குத்திகள் மற்றும் பல வெளிநாடுகளின் தாள்கள் மற்றும் நாணயக் குத்திகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

### 5.6 நாணயம் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தல்

நாணயத் திணைக்களம் வங்கி அலுவலர்கள், பொலிஸ் அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் போலித் தாள்களை அடையாளம் காணல், தூய நாணயத்தாள் கொள்கை மற்றும் நாணயக் குத்திகளின் மீள் சுற்றோட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை பகிரங்க விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகத்தினூடாக நடத்தியது. 2008இல் நடத்தப்பட்ட அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 15ஆக விளங்கியது.

நாணயத்திணைக்களம் நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குத்திகள் தொடர்பான பொதுமக்கள் விழிப்புணர்வு மற்றும் இலங்கையில் அதன் வரலாற்று ரீதியான விருத்திகளை அதிகரிக்கும் நோக்கில் பின்வரும் பொருட்காட்சிகளிலும் பங்குபற்றியது.

1. 2008 சனவரி 25 - 27 வரை கேகாலையிலுள்ள அத்தல சிறிபோதி றுகறாம விகாரையில் நடைபெற்ற 'அபிமானி 2008'
2. 2008 பெப்புருவரி 4-10வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற 'தயற்ற கிருல - 2008'
3. 2008 ஏப்பிறல் 03-06 வரை பொலனறுவையிலுள்ள தொப்பவெவ பாடசாலையில் நடைபெற்ற 'புளதசி நவோதய'
4. 2008 திசெம்பர் 13- 14வரை அம்பாந்தோட்டையிலுள்ள சுசி தேசிய பாடசாலையில் நடைபெற்ற 'றுகுணு எக்ஸ்போ - கமீன் லொவட்ட'

இச் சகல பொருட்காட்சிகளிலும் இடம்பெற்ற மத்திய வங்கி விற்பனை நிலையம் பாடசாலை மாணவர்களினதும் பொது மக்களினதும் ஆதரவைப் பெற்றது.

ராஜகிரியவிலுள்ள வங்கித் தொழில் கற்கைளுக்கான கல்வி ஆய்வு நிலையத்தில் அமைந்துள்ள நாணய நூதன சாலை, நாணயத்தில் ஆர்வமுள்ளோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வார நாட்களில் திறந்து வைத்திருக்கப்பட்டது.

### 5.7 ஞாபகார்த்த நாணயக் குத்திகள் மற்றும் தாள்களின் விற்பனை

இலங்கை மத்திய வங்கி புதிய ஞாபகார்த்தக் குத்திகளின் இரு தொகுதிகளை 2008இல் வெளியிட்டது. முதலாவது தொகுதி 2007 உலகக் கோப்பை கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இலங்கைக் கிரிக்கெட் குழு இரண்டாவதாக வந்த நிகழ்வைக் குறிக்கும் முகமாக ரூ.1,000 நாணயவகை (நிக்கல் முலாம் பூசப்பட்ட உருக்கு, பிரகாசமானது சுற்றோட்டத்துக்கு விடப்படாத வகை) மற்றும் சுற்றோட்டத்திலுள்ள தற்போதைய ரூ. 5 நாணயக் குத்தியுடன் சேர்த்து சுற்றோட்டத்து விடவிருக்கும் ரூ.5 (பித்தளை முலாம் பூசப்பட்ட உருக்கு) நாணயவகை வெளியிடப்பட்டது. இரண்டாவது தொகுதி ஊழியர்சேம நிதியத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு விழாவின் ஞாபகார்த்தமாக ரூ.1000 நாணயவகை (நிக்கல் பூசப்பட்ட உருக்கு, பிரகாசமானது சுற்றோட்டத்துக்கு விடப்படாத வகை) மற்றும் தற்போதைய ரூ.2 நாணயக் குத்தியுடன் சேர்த்து சுற்றோட்டத்துக்கு விட இருக்கும் ரூ.2 (நிக்கல் முலாம் பூசப்பட்ட உருக்கு) நாணயவகை வெளியிடப்பட்டது.

திணைக்களம் பயனுள்ள விற்பனை ஊக்குவிப்பு உபாயங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஞாபகார்த்த நாணயக் குத்திகள், உறைகளிலிடப்பட்ட நாணயம் மற்றும் தாள் என்பவற்றை நாணயங்கள் பற்றிய ஆய்வில் அறிஞர்களுக்கும் சேகரிப்பாளர்களுக்கும் தொடர்ந்து விற்பனை செய்தது. ஞாபகார்த்த நாணயக் குத்திகளின் விற்பனை மையங்களில் இரு கடன் அட்டைப் பொறிகள் நிறுவப்பட்டுள்ளதுடன் இலங்கை மத்திய வங்கியின் இணையத் தளத்தினூடான விற்பனைகளும் 2008 ஒகத்து 8இல் ஆரம்பிக்கப்பட்டன.

## 6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அதன் முக்கிய தொழிற்பாடுகளான மத்திய வங்கியின் நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல், அரசாங்கத்துக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் வங்கியாளராக தொழிற்படுவது என்பவற்றைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. மேலும், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கீழான தீர்ப்பனவுகளுக்கு நிதி கிடைப்பதனை உறுதிப்படுத்தியதன் மூலம் திணைக்களம் வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியினைத் தொடர்ந்து வழங்கியது.

### 6.1. நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்

*(அ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்*

திணைக்களம் விலை உறுதிப்பாட்டின் இறுதிக் குறிக்கோளை அடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட காலாண்டு இலக்குகளினுள் ஒதுக்குப் பணத்தைப் பேணுவதற்கும் சாத்தியமான அளவுக்கு வங்கிகளுக்கிடையிலான வட்டி வீதத்திலான தளம்பலைக் கட்டுப்படுத்துவதற்கும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துகிறது. இதற்கமைய, ஒதுக்குப்பண இலக்குகளை அடைவதற்கு வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் மத்திய வங்கியிலிருந்து நிதியங்களைப் பெறும் வசதி மீது வரையறைகளை விதிக்கும் அதேவேளை திணைக்களம் திரவத்தன்மையை தீவிரமாக ஈர்த்ததுடன் வட்டி வீதங்களிலான அளவுக்கதிகமான தளம்பல் வங்கிகளுக்கிடையேயான வட்டி வீதங்களில் மேல் மட்டத்தை ஏற்படுத்துவதன் மூலமும் வங்கித் தொழில் முறைமையில் அளவுக்கதிகமான திரவத் தன்மைப் பற்றாக்குறை கட்டியெழுப்பப்படுவதை தவிர்ப்பதன் மூலமும் கட்டுப்படுத்தப்பட்டது.

திரவத் தன்மையை ஈர்த்தல் தற்காலிக அடிப்படையில் ஓரிரவு மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களூடாகவும் நிரந்தர அடிப்படையில் வங்கியிடமிருந்த திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனைகளூடாகவும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இத்துடன், இவ்வாண்டில் சார்பு ரீதியில் நீண்டகால அடிப்படையிலான ஈர்த்தலும் தவணை அடிப்படையிலான மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களூடாக அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் தொடர்ச்சியான ஈர்த்தல் காரணமாக மத்திய வங்கியிடம் திறைசேரி உண்டியல்களின் போதிய அளவு இல்லாதவிடத்து நாளாந்த அடிப்படையிலும் தவணை அடிப்படையிலும் திரவத் தன்மையை ஈர்ப்பதற்காக மத்திய வங்கி அதன் சொந்தப் பிணையங்களை வழங்கியது.

இவ் உபாயத்துடன் இணைந்து செல்லும் விதத்தில் மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியை வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் பெறுவதை நிறுவனம் ஒன்றுக்கு மாதமொன்றுக்கு மூன்று தடவை என்ற வரையறையை மத்திய வங்கி தொடர்ந்து மேற்கொண்டதுடன் மதிப்பிடப்பட்ட திரவத்தன்மைப் பற்றாக்குறைக்கு இவ் வசதியின் கீழ் நிதியம் அளவிற்கு விடுவிக்கப்பட்டது. வங்கிகளுக்கிடையே ஏற்படக்கூடிய அளவுக்கதிகமான தளம்பல் 2007 திசெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்ட 19 சதவீத தண்ட வீதத்தில் மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் கீழ் நிதியங்களை வழங்குவதன் மூலம் கட்டுப்படுத்தப்பட்டது. பாரிய

அளவிலான திரவத்தன்மைப் பற்றாக்குறையின் கட்டிமுெப்பல், முதன்மை மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டிலும் திறைசேரி உண்டியல்களின் கொள்வனவூடாகவும் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டைக் குறைப்பதன் மூலமும் தவிர்க்கப்பட்டது.

சராசரியாக இவ்வாண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் மிகையாக விளங்கிய வங்கித் தொழில் முறைமையிலான திரவத்தன்மை நிலைமை இறுதிக் காலாண்டில் பற்றாக்குறைக்கு (வரைபடம் II-I) முதலாம் காலாண்டில் சராசரியாக கிட்டத்தட்ட ரூ.8 பில்லியனாகக் காணப்பட்ட அளவுக்கதிகமான திரவத்தன்மை மத்திய வங்கியால் கொள்வனவு செய்யப்பட்ட வங்கித் தொழில் முறைமைக்கான வெளிநாட்டு நாணயத்தின் அதிகளவான உட்பாய்ச்சலால் பெரும்பாலும் ஏற்பட்டிருக்கையில் யூனில் மிகைத் திரவத் தன்மையிலான உச்ச அளவு முக்கியமாக அரசுக்கான வெளிநாட்டுக் கூட்டுக்கடனின் பெறுகையால் ஏற்பட்டதாகும். கடந்த ஆண்டுகளைப் போலவே, ஏப்பிறலின் முதல் இரு வாரங்களில் பண்டிகைக் காலத்தில் நாணயத்துக்கான உயர்கேள்வி காரணமாக திரவத்தன்மைப் பற்றாக் குறையையும் இதைத் தொடர்ந்து இந் நிதியங்கள் திரும்பி வந்ததன் காரணமாக திரவத் தன்மையில் அதிகரிப்பையும் ஏற்படுத்தியது. இதேவேளை, உலகளாவிய நிதியியல் நெருக்கடி காரணமாக அரச பிணையங்களிலான பெருமளவு வெளிநாட்டு முதலீடுகள் மீளப் பெறப்பட்டமையின் முக்கிய காரணத்தால் எழும் கேள்வியை எதிர்கொள்வதற்கு மத்திய வங்கி சந்தைக்கு தொடர்ச்சியாக வெளிநாட்டுச் செலாவணியை வழங்கியதன் காரணமாக கணிசமானதும் நீடித்து நிலைத்திருந்த திரவத் தன்மைப் பற்றாக்குறை செத்தெம்பரிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதியில் அவதானிக்கப்பட்டது.

மத்திய வங்கியின் கொள்கை வீதங்களான மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்கள் 2008 முழுவதும் முறையே 10.5 சதவீதத்திலும் 12 சதவீதத்திலும் மாற்றமின்றி தொடர்ந்து விளங்கின. இக்காலப்பகுதியில் தண்ட வீதம் 19 சதவீதத்தில் பேணப்பட்டது.

வரைபடம் II - 1
2008 இல் சந்தைத் திரவத்தன்மை




## (i) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழான ஏலங்கள்

### ஓரிரவு மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்

வங்கித் தொழில் முறைமையிலுள்ள திரவத்தன்மை மிகை மீள் கொள்வனவு அடிப்படையில் திறைசேரி உண்டியல்களை விற்பதற்கான ஏலங்களை நடத்துவதன் மூலம் நாளாந்த அடிப்படையில் ஈர்க்கப்பட்டது. சராசரியாக ரூ.6.6 பில்லியன் ஏலத்துக்காக வழங்கப்பட்டிருக்கையில் மதிப்பிடப்பட்ட திரவத் தன்மையின் 71 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூ.5.2. பில்லியன் ஏலத்திலிருந்து ஈர்க்கப்பட்டது. ஏலங்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் 2008 சனவரியின் 11.93 சதவீதத்திலிருந்து திசெம்பர் 11.6 சதவீதத்துக்குக் குறைவடைந்து வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது.(வரைபடம் II-2)

வரைபடம் II - 2
திறந்த சந்தைத் தொழிற்பாட்டுகள் - 2008 (மாதாந்த சராசரி)




### தவணை மீள் கொள்வனவு மீள் கொடுக்கல் வாங்கல்கள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் சார்பு ரீதியில் நீண்ட தவணை அடிப்படையில் திரவத் தன்மையை ஈர்க்கும் உபாயமாக திறைசேரி உண்டியல்களை விற்பதற்காக 2008 மேயில் தவணை மீள் கொள்வனவு ஏலத்தை அறிமுகப்படுத்தியது. தவணை ஏலத்தின் காலப்பகுதி ஒரு வாரமாக இருக்கையில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் 15.94 சதவீதமாக விளங்கியது.

### நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்

நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் 2008ஆம் ஆண்டில் நடத்தப்படவில்லை.

## (ii) துணைநில் வசதிகள்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் பங்கேங்கும் நிறுவனங்களுக்கு மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வளவு வீதங்களில் துணை நில் வசதிகளைத் தொடர்ந்து வழங்கியது. இவ்வசதி வங்கிகளுக்கிடையேயான பணச்சந்தை மற்றும் நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஏலங்களுடன் அவற்றின் குறுங்கால திரவத் தன்மையை முழுமையாக முகாமை செய்ய இயலாத பங்கேற்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

### மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்

மீள் கொள்வனவு துணைநில் வசதியிலுள்ள முக்கிய முதலீட்டாளர்களாக மீள்கொள்வனவு ஏலத்தில் பங்கேற்க இயலாத பங்கேற்கும் நிறுவனங்கள் அல்லது விலைக் கோரல்கள் நிராகரிக்கப்பட்ட நிறுவனங்கள் என்பன விளங்கின. அளவுக்கதிகமான திரவத்தன்மையின் பெரும் பங்கு திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஓரிரவு மீள்கொள்வனவு ஏலத்தினூடாக ஈர்க்கப்பட்டமையால் 2008இல் துணைநில்

வசதியின் கீழான மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் சராசரியாக நாளொன்றுக்கு ரூ.1.4 பில்லியனாக விளங்கின.

### நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்

மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் நோக்கம் நிதியங்களின் மாற்று மூலங்களைப் பெறுதல் கிடைக்காதவிடத்து இறுதி வழிமுறையாக பங்கேற்பாளரின் அவசியத் திரவத் தன்மைத் தேவைப்பாட்டை நிறைவேற்றல் விளங்கியது. அதற்கமைய நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் அளவுக்கதிகமான பயன்பாட்டை ஊக்கமிழக்கச் செய்வதற்கும் பங்கேற்கும் நிறுவனங்களின் திரவத் தன்மைத் தேவைபாடுகளை எதிர்கொள்வதற்குமிடையே ஒரு சமநிலையை ஏற்படுத்துவதற்கு மத்திய வங்கி முயற்சி செய்தது. இதன்படி, முறைமையில் திரவத் தன்மைப் பற்றாக்குறை காணப்படும் நாட்களில் மட்டும் மத்திய வங்கி பங்கேற்பாளர் ஒருவருக்கு கலண்டர் மாதமொன்றுக்கு மூன்று தடவைகள் வரை நேர்மாற்று மீள் கொள்வனவு வீதத்தில் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியை வழங்கவும் இவ்வரையறைக்குப் பின்னர் 2008 பெப்புருவரி 22ஆம் நாளிலிருந்து ஆண்டொன்றுக்கு தண்ட வீதமான 19 சதவீதத்தில் வழங்குவதற்கும் தீர்மானித்தது. இத்துடன், முறைமையின் திரவத்தன்மை பரந்தளவில் சமநிலையாக இருக்கும் நாட்களிலும் தண்ட வீதத்திலான நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி கிடைக்கத்தக்கதாக ஏற்பாடு செய்யப்பட்டது.

2008 ஒத்தோபரில் உலகளாவிய நிதியியல் சந்தைகளில் பாதகமான அபிவிருத்திகள் காரணமாக சந்தை குறிப்பிடத்தக்க திரவத்தன்மைப் பற்றாக்குறையை அனுபவித்தபோது மத்திய வங்கி கலண்டர் மாதமொன்றுக்கு 10 தடவைகள்வரை நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியைப் பயன்படுத்த அனுமதிப்பதன் மூலம் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதுடன் பங்கேற்கும் நிறுவனங்களின் அவசியத் திரவத்தன்மைத் தேவைகளைக் கருத்திற்கொண்டு இதன்பின்பு 19 சதவீதத்தில் கடன்பெறுவதற்கும் அனுமதித்தது. எனினும் இறுக்கமான நாணயக் கொள்கை நிலையுடன் தொடர்ந்து செல்லும் பொருட்டு 2008 நவெம்பர் 1இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் கலண்டர் மாதமொன்றுக்கு மூன்று தடவைகளுக்கு மட்டும் என இக் கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டன.

முறைமையிலான கணிசமான திரவத்தன்மைப் பற்றாக்குறையின் விளைவாக குறிப்பாக 2008இன் இறுதிக் காலாண்டில் துணைநில் வசதியின்கீழ், நேர்மாற்று மீள் கொள்வனவு வசதி, பங்கேற்கும் நிறுவனங்களால் கூடியளவில் பயன்படுத்தப்பட்டது. இதன்படி, நேர்மாற்று மீள்கொள்வனவு மீதம் மற்றும் தண்ட வீதத்தில் வழங்கப்பட்ட நேர்மாற்று மீள் கொள்வனவு வசதி முறையே ரூ.377.5 பில்லியனாகவும் ரூ.527 பில்லியனாகவும் விளங்கியது.

### (iii) மத்திய வங்கிப் பிணையங்களின் வழங்கல்

மிகையான திரவத் தன்மையை ஈர்த்துக் கொள்வதற்கு மத்திய வங்கியிடம் திறைசேரி உண்டியல்களின் போதுமான அளவு இல்லாததால் மத்திய வங்கிப் பிணையங்கள் ஓரிரவு அடிப்படையிலும் (1 நாள் முதிர்ச்சியுடன்) தவணை அடிப்படையிலும் வழங்கப்பட்டது. ஓரிரவு அடிப்படையில் இலங்கை மத்திய வங்கி பிணையங்களை வழங்குவதற்கான முதலாவது ஏலம் 2008 யூன் 26ஆம் திகதியன்று நடத்தப்பட்டதுடன் இதைத் தொடர்ந்து அளவுக்கதிகமான திரவத்தன்மையை ஈர்ப்பதற்கு 2008 யூலையிலிருந்து செத்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் இப் பிணையங்கள் தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டன.

சராசரியாக இலங்கை மத்திய வங்கி பிணையங்கள் ஏலங்களுக்கு ரூ.6.4 பில்லியன் வழங்கப்பட்டிருக்கையில் இக்காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட திரவத் தன்மையின் 77.7 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூ.5.2 பில்லியன் ஏலங்களிலிருந்து ஈர்க்கப்பட்டன. ஏலங்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் 2008 யூனிலிருந்து செத்தெம்பர் வரை 11.64 சதவீதத்திலிருந்து 11.89 சதவீதத்திற்குட்பட்ட வீச்சினுள் காணப்பட்டன. மீள் கொள்வனவு வீதத்தில் துணைநில் வசதியின் கீழ் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களும் வழங்கப்பட்டுள்ளதுடன் வழங்கப்பட்ட தொகை சராசரியாக நாளொன்றுக்குக் கிட்டத்தட்ட ரூ.1.4 பில்லியனாக விளங்கியது.

சார்பு ரீதியில் நீண்ட தவணை அடிப்படையில் திரவத்தன்மையை ஈர்க்கும் உபாயமாக உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதற்கு பல தவணை ஏலங்களையும் நடத்தியது. வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.10 பில்லியனாக விளங்கியது. தவணை ஏலங்களின் காலப்பகுதி இரண்டிலிருந்து மூன்று வாரங்களாக விளங்குகையில் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் கிட்டத்தட்ட 15.7 சதவீதமாக விளங்கின.

### (iv) உடனடிக் கொடுக்கல் வாங்கல்கள்

நிரந்தர அடிப்படையில் அளவுக்கதிகமான திரவத்தன்மையை ஈர்க்கும் பொருட்டு மத்திய வங்கி அதன் சொந்த சொத்துப் பட்டியலிலுள்ள திறைசேரி உண்டியல்களை விற்பதற்கு உடனடி ஏலங்களை நடத்தியது. இது போலவே 2003இல் சந்தையை அடிப்படையாகக் கொண்ட நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் கட்டமைப்பை அறிமுகப்படுத்தியதன் பின்பு நிரந்தர அடிப்படையில் சந்தைக்கு திரவத்தன்மையைப் புகுத்தும் பொருட்டு திறைசேரி உண்டியல்களின் உடனடிக் கொள்வனவுக்கான ஏலங்களை முதற் தடவையாக மத்திய வங்கி 2008 ஒத்தோபரில் அறிமுகப்படுத்தியது.

இவ் உடனடி ஏலங்களூடாக விற்கப்பட்ட மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதி முறையே ரூ.26.6 பில்லியனாகவும் ரூ.8 பில்லியனாகவும் விளங்கின. விற்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் காலம் 10 இலிருந்து 49 நாள் வீச்சிலான மிகக் குறுகிய தவணையாக இருக்கையில் விளைவு வீதங்கள் முதலாந்தரச் சந்தையில் 91நாள் திறைசேரி உண்டியல்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களுடன் ஒப்பிடுகையில் குறைவாகக் காணப்பட்டது. இதற்கு முரணாக கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் காலம் 53இலிருந்து 291 நாட்கள் வீச்சிலான முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள நாட்களுடன் சார்பு ரீதியில் நீண்டதாக இருந்தது. இக் கொள்வனவுகளின் நிறையேற்றப்பட்ட சராசரி வீதம் ஒவ்வொரு உடனடிக் கொள்வனவு நேரத்திலான முதலாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துக் காணப்பட்டது.

### (ஆ) நியதி ஒதுக்குத் தேவைப்பாடு

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் நாணயக் கொள்கைக் கருவியாக நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாக இருக்கிறது. உள்நாட்டு டொலர் சந்தையில் கேள்வியை எதிர் கொள்வதற்கு வெளிநாட்டு நாணயத்தை வழங்குவதற்கு சந்தையில் மத்திய வங்கி தலையிட்டமையின் விளைவாக ஏற்பட்ட வங்கித் தொழில் முறைமையில் நீடித்திருந்த திரவத் தன்மைப் பற்றாக்குறை பொருளாதாரச் செயற்பாடுகளில் பாதகமான விளைவுகளுக்கு இட்டுச் சென்றது. நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டைக் குறைப்பதன் மூலம் எழக்கூடிய எந்தவொரு திரவத் தன்மைத் தடைகளையும் குறைப்பதற்கு மத்திய வங்கி நிரந்தர அடிப்படையில் மேலதிகத் திரவத் தன்மையைப் புகுத்துவதற்கு வழிமுறைகளை முன்னெடுத்தது. இதன்படி, 2001 ஒத்தோபர் 19 இலிருந்து 10 சதவீதத்தில் மாற்றமுறாது தொடர்ந்திருந்த நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 2008 ஒத்தோபர் 17இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 75 அடிப்படைப் புள்ளிகளால் வைப்புப் பொறுப்புக்களின் 9.25 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதன் மூலம் சந்தைக்குக் கிட்டத்தட்ட ரூ.7.5 பில்லியன் திரவத்தன்மையை விடுவிக்கிறது. எனினும், தொடர்ச்சியான திரவத்தன்மைப் பற்றாக்குறையைக் கவனத்திற் கொண்டு 2008 நவெம்பர் 28இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 150 அடிப்படைப் புள்ளிகளால் 7.75 சதவீதத்திற்கு மேலும் குறைக்கப்பட்டது. இந்நடவடிக்கை சந்தைக்கு மேலும் ரூ.17 பில்லியனை விடுவித்ததன் மூலம் திரவத் தன்மைப் பற்றாக்குறையைத் தணித்தது.

### (இ) வங்கி வீதம்

நாணயச் சட்ட விதியின் 87ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதமானது (வங்கிவீதம்) 15 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது. எனினும், எந்தவொரு வங்கியும் வங்கி வீதத்தில் கடன் பெறுவதற்கு மத்திய வங்கியினை நாடாததினால் இவ்வீதம் தொழிற்படாமலிருந்தது.

## 6.2 வர்த்தக வங்கிகளுக்கும், அரசிற்கும் வங்கியாளராகத் தொழிற்படுகின்றமை

### 6.2.1 நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்

வர்த்தக வங்கிகளின் வங்கியாக மத்திய வங்கி தொழிற்படுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் வங்கிகளுக் கிடையிலான கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறை வினைத்திறனுடன் தொழிற்படுவதை உறுதிப்படுத்தும் விதத்தில் வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர் களுக்குமான நடைமுறைக் கணக்கு வசதிகளை திணைக்களம் வழங்கியது. இக் கணக்குகள் வங்கியின் தன்னியக்கப் படுத்தப்பட்ட பொதுப்பேரேட்டு முறைமைக்கமைவாக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு அடிப்படையில் தொழிற் படுத்தப்பட்டன.

### 6.2.2 அரச கணக்குகள்

அரசுக்கான வங்கியாளராகத் தொழிற்படுவதில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அரச திணைக்களங்கள், அரச முகவர்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட நியதிச்சபைகள் என்பனவற்றின் கணக்குகளையும் பேணி தேவையான வங்கித் தொழில் வசதிகளையும் வழங்கியது. அரசின் வேண்டுகோளின்படி இரண்டு புதிய கணக்குகள் திறக்கப்பட்டு இரண்டு கணக்குகள் மூடப்பட்டதன் மூலம் 2008 இறுதியில் மத்திய வங்கியால் பேணப்பட்ட கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 52ஆக விளங்கியது. நாணயச் சட்ட விதியின் பிரிவு 89இன் நியதிகளில் மத்திய வங்கி அரசுக்கு முற்பணங்களை வட்டியில்லாமல் வழங்குகின்றது. அத்தகைய முற்பணங்கள் மீதான வரையறை மதிப்பிடப்பட்ட அரசின் அரசிறையின் 10 சதவீதமாக இருக்கிறது. 2008இல் தற்காலிக முற்பணம் மீதான வரையறை ரூ.15.1 பில்லியனால் ரூ.77 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

## 6.3 ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதி ஏற்பாடு

வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாட்டை வழங்குவதன் மூலம் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமூகமானதும் வினைத்திறன் மிக்கதுமான தொழிற்பாட்டை உறுதிப்படுத்தியது. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி அரச திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளைப் பிணையாகக் கொண்டு கட்டணமெதுவுமின்றி வழங்கப்படுவதுடன் இவை அதே நாளில் விலைகளில் ஏற்படக் கூடிய மாற்றங்களை உள்ளடக்குவதற்குப் போதுமான இலாபம் ஒன்றிற்கேற்ப இப்பிணையங்கள் அவற்றின் நடைமுறைச் சந்தை விலைகளில் மதிப்பிடப்படுகின்றன.

இவ்வாண்டில் எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மொத்தப் பெறுமதியும், சராசரிப் பெறுமதியும் முறையே ரூ.2,186 பில்லியனாகவும், ரூ.9.07 பில்லியனாகவும் (வரைபடம் II-3) விளங்குகையில் 2007இற்கான தொடர்பான எண்தொகைகள் முறையே ரூ.1,222 பில்லியனாகவும், ரூ.5.03 பில்லியனாகவும் விளங்கின. வங்கி வீதத்தில் தண்டல் வீதம் மற்றும் திரும்பத் திரும்ப செலுத்தத் தவறுவதற்காக வசதியை இடைநிறுத்தல் போன்ற கடுமையான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியமை லங்காசெற்றிலின் வியாபாரத்தை மூடுவதற்கு முன்பு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாடு உரியமுறையில் எதிர்மாறநடைந்ததை உறுதிப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக இவ்வாண்டுக் காலப்பகுதியில் ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியில் செலுத்தத்தவறிய நிகழ்வுகள் எதுவும் காணப்படவில்லை.

வரைபடம் II - 3
எடுக்கப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி - 2008



## 7. பொருளாதார ஆராய்ச்சி

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் மத்திய வங்கியில் "பொருளாதாரச் சிந்தனைகளின் கருவூலம்" ஆக தொழிற்படும் அதே வேளையில் அதன் நியதிச் சட்டபொறுப்புக்களைத் தொடர்ந்து மேற்கொண்டது. அதன் முக்கிய நியதிச் சட்ட கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தகவலை வழங்கல், நாணயச் சபைக்கான பொருளாதார பகுப்பாய்வு மற்றும் ஆலோசனை, ஒழுங்கு முறைப்படுத்தலில் நாணயச்சபைக்கு உதவுதல் மற்றும் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் மற்றும் அரசுக்கான பொருளாதார ஆலோசகராக வங்கியின் தொழிற்பாட்டை நிறைவேற்றல் என்பவற்றில் தானாகவே ஈடுபட்டது. பொதுமக்களுக்குப் பொருளாதாரத் தகவலைப் பரப்புவதும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய பொறுப்பாகும். இப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில், இத் திணைக்களம் பொருளாதார ஆராய்ச்சி சார்ந்த அதன் கொள்கையைத் தொடர்ந்த அதே வேளையில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு மூலங்கள் இரண்டிலுமிருந்தான பொருளாதாரச் செயற்பாடுகள் பற்றிய தகவலைச் சேகரித்ததுடன் நாணயக் கொள்கையை உருவாக்குவதிலும் நடத்துவதிலும் நாணயச்சபையை வழிநடத்துவதற்கான அத்தியாவசியமான உள்ளீடுகளாக அத்தகைய தரவைப் பகுப்பாய்வு செய்து சிறந்த கொள்கை பெறுபேறுகளை உருவாக்குவதற்கு ஏற்றவிதத்தில் பிரச்சனைகளை விளங்கிக் கொள்ளும் ஆற்றலையும் மேம்படுத்துகிறது. இத்துடன், திணைக்களம் இவ்வாண்டில் அரசால் ஆரம்பிக்கப்பட்ட பல எண்ணிக்கையான முன்னெடுப்புகளுக்கு அதன் நிபுணத்துவத்தினைத் தீவிரமாக வழங்கிய அதேவேளை வங்கியிலுள்ள ஏனைய திணைக்களங்கள், அரசு மற்றும் பலதரப்பட்ட ஏனைய பங்காளிகளுக்கு பொருளாதார விடயங்கள் தொடர்பான கொள்கை மதியுரையை வழங்கியது. இத்திணைக்களம் பொது மக்களின் நலன்கருதி பொருளாதார மற்றும் நிதியியல் தகவல்களை நியதிச்சட்ட மற்றும் ஏனைய வெளியீடுகள், பத்திரிகை வெளியீடுகள் மற்றும் பொருளாதார குறிகாட்டிகள் மற்றும் மத்திய வங்கியின் வெப்தளத்தில் மேற்கொள்ளப்படும் புதுப்பித்தல் ஊடாக தொடர்ந்து பரப்பியது.

இத்திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகள் நாணயக் கொள்கையை உருவாக்கும்போதும் நடைமுறைப் படுத்துகையிலும் முக்கிய கவனத்தில் கொள்ளப்பட்டன. இவை நாட்டின் பரந்தளவான பேரண்டப் பொருளாதாரக் குறிக்கோளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் ஏனைய பொருளாதாரத் துறைகளில் கொள்கைகளின் பொருத்தமான வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. இவ் ஆழ்ந்த யோசனைகள் குறிப்பாக, நாணயச்சபையின் கலந்தாலோசனைக்காக நாணயக் கொள்கை தொடர்பான பகுப்பாய்விலும் விதந்துரைப்புக்களை மேற்கொள்வதிலும் ஈடுபட்டுள்ள நாணயக் கொள்கைக் குழுவின் முயற்சிகளை வசதிப்படுத்துவதிலும் பலப்படுத்துவதிலும் இத் திணைக்களத்தின் முக்கிய பங்கை நோக்கிச் செயலாற்றுவதற்கு நெறிப்படுத்தப் பட்டன. இத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட பொருளாதாரப் பகுப்பாய்வின் அனைத்தையும் உள்ளடக்கிய அறிக்கைகள் நாணயக் கொள்கைக் குழுவின் கருத்துக்களையும் கரிசனைகளையும் ஒருங்கிணைத்த பின்பு நாணயக் கொள்கைத் தீர்மானம் எடுக்கும் நோக்கத்துக்காக நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், பொருளாதாரத்திலான ஆகப்பிந்திய விருத்திகளுடன் நாணயச்சபையை இணைத்து வைத்திருக்கும் பொருட்டு பொருளாதார நிலை தொடர்பான கிரமமான புதுப்பித்தல்கள் இத் திணைக்களத்தால் நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

மேலும் சமகால முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் மீது பொருளாதார ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. அவற்றினுள் 2008இல் பூர்த்தி செய்யப்பட்ட பின்வரும் ஆய்வுக் கட்டுரைகள் வங்கி உயர் அலுவலர் ஆய்வுகள் 2008இன் தொகுதி 38, இலக்கம் 1 மற்றும் 2இல் வெளியிடப்பட்டுள்ளன.

(அ) "இலங்கையில் பொருளாதார வளர்ச்சி மற்றும் பணவீக்கம் மீதான நாணயக் கொள்கையின் தாக்கம் : திரு சி. அமரசேகர

(ஆ) "பணவீக்க இலக்கிடல் எதிர் நாணய இலக்கிடல் - இலங்கை நிலைமை": செல்வி. எஸ்.எம். விமலசூரிய

(இ) "ஏற்றுமதியால் வழிநடத்தப்பட்ட வளர்ச்சி என்ற வாதத்துக்கு ஆதாரமான கருத்து இலங்கைக்குச் செல்லுபடியாகுமா? ஏற்றுமதியால் வழிநடத்தப்பட்ட வளர்ச்சி என்ற வாதத்துக்கு ஆதாரமான காலத் தொடர் பகுப்பாய்வு": திருமதி. டபிள்யூ. எ. டில்றுக்சினி

(ஈ) பங்குச் சந்தை வினைத்திறன் மற்றும் ஒருங்கிணைத்தல்: ஆசிய பசுபிக் பிராந்தியத்திலுள்ள எட்டுப் பொருளாதாரங்களின் ஆய்வு": திருமதி. திமுத்து சமரதுங்க

பிராந்திய மத்திய வங்கிகளிடையே ஆராய்ச்சிப் பெறுபேறுகளை பகிர்ந்து கொள்ளும் நோக்குடன் "மத்திய வங்கித் தொழில் மற்றும் நிதியியல் சந்தைகள்" தொடர்பான பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டின் ஆரம்ப வைபவத்தையும் இத் திணைக்களம் ஒருங்கிணைத்தது. தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் நிலையம் போன்ற பன்னாட்டு நிறுவனங்களுடன் இணைந்து ஆராய்ச்சியை நடாத்துவதற்கும் இத் திணைக்களத்தின் அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இத்துடன், பொருளாதார ஆராய்ச்சியை நடத்துவதற்கு வங்கிகளிலுள்ள அலுவலர்களை ஊக்குவிக்கும் நோக்கில் தெரிந்தெடுக்கப்பட்டு வெளியிடப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை கலந்தாலோசிப்பதற்காக ஆராய்ச்சி கலந்தாலோசனைத் தொடர் ஆரம்பிக்கப்பட்டது. இத்துடன் திணைக்களத்தின் சகல அலுவலரின் பற்கேற்புடன் தற்போதைய விவாதத்திற்குரிய பிரச்சனைகள் தொடர்பான நோக்கங்களை பகிர்ந்து கொள்வதற்கு வாராந்த கலந்தாலோசனைத் தொடர் ஒன்றும் திணைக்களத்தினுள் ஆரம்பிக்கப்பட்டது.

2008 சனவரி 2இல் ஆர்வலர்களுக்கு அறிவிக்கப்பட்ட மத்திய வங்கியின் பகிரங்கக் கொள்கை அறிக்கையான "2008 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கை வழிகாட்டல்கள்" (வழிகாட்டல் - 2008) பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டது. இது பொருளாதாரத்திலான அபிவிருத்திகள் மீதான பகுப்பாய்வு, 2007இல் நாணய மற்றும் நிதியியல்துறை கொள்கைகளின் நடத்தை, 2008 இற்கான நாணயக் கொள்கை மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டு இலக்குகளையும் அவற்றை அடைவதில் உள்ள

சவால்களையும் உள்ளடக்கியிருந்தது. இவ் வெளியீட்டின் முக்கிய குறிக்கோள் யாதெனில் எதிர்வரும் காலத்தில் ஆர்வலர்கள் தமது திட்டங்கள் மற்றும் உபாயங்களை உருவாக்குவதற்கும் சிறந்த முறையில் வரையறுப்பதற்கும் அவர்களுக்கு உதவும் கொள்கை ஊக்குவிப்புத் தன்மையையும் ஒளிவுமறைவற்ற தன்மையினையும் அதிகரிக்கச் செய்வதாகும். இதே போன்றதொரு கொள்கை அறிக்கை 2009 இற்கும் தயாரிக்கப்பட்டு 2009 சனவரி 2ஆம் நாளன்று அறிவிக்கப்பட்டது.

வெளியிலுள்ள நிபுணர்களின் நிபுணத்துவத்தைப் பெறுவதனூடாக நாணயக் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறையை மேலும் பலப்படுத்துவதற்கு நிறுவப்பட்ட நாணயக் கொள்கை ஆலோசனைக் குழு, தொடர்பான வேலையையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஒருங்கிணைத்தது. நாணயக் கொள்கை ஆலோசனைக்குழு பேராசிரியர் ஏ.வி.டீ.எஸ். இந்திரரட்ண (தலைவர்) திரு. சோலி கப்டன், திரு. யோகன் பெரேரா, திரு. மகேன் தயானந்த, திரு.ஆர்.எம்.பீ. சேனநாயக்க, திரு. எம்.பி. ஜெயவர்தன மற்றும் குப்பி விஜேதுங்கா ஆகியோரை உள்ளடக்கியுள்ளது. இவ்வாண்டில் நாணயக் கொள்கை ஆலோசனைக் குழு பொருளாதார அபிவிருத்திகளை மீளாய்வு செய்வதற்கு மாதாந்த அடிப்படையில் சந்தித்ததுடன் நாணயக் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறையை அதிகரிப்பதற்கு பெறுமதிமிக்க பங்களிப்புக்களையும் வழங்கியது. குழுவின் நிபுணத்துவத்தை விரிவுபடுத்தும் பொருட்டு முனைவர். ஜி. உஸ்வத்தைஆராய்ச்சியும் 2009 சனவரியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் இக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

இத் திணைக்களம் பொறுப்புக்களை ஏற்பதற்கு ஆயத்தமாகும் கொள்கை மதியுரையை அரசுக்கு வழங்கும் பல எண்ணிக்கையான கொள்கைப் பத்திரங்களை நாணயச்சபைக்குச் சமர்ப்பித்தது. திணைக்களம் முக்கிய பொருளாதார உட்பொருளைக் கொண்ட அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பான சுதந்திரமான கருத்துக்களைத் தொடர்ந்து வழங்கியது. அரசால் பெறப்பட்ட சகல வெளிநாட்டுக் கடன்களின் நாணய உட்பொருளின் மதிப்பீடும் திணைக்களத்தால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

2008இன் முதலரைப்பகுதியில் தொழிற்சாலைக் கைத்தொழில் செயலாற்றத்தின்மீது பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் சிறப்பு அளவீடொன்றும் அனைத்து வகைக் கைத்தொழில் வகைகளின் முக்கிய கம்பனிகளின் பங்கேற்புடன் எதிர்கால வாய்ப்புப் பற்றிய அளவீடொன்றும் மேற்கொள்ளப்பட்டது. உள்நாட்டு மட்டத்திலான இறைத் தரவைப் பெறுவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மீதான அளவீட்டுடன் தொடர்பான தரவு சேகரிப்பும் இத் திணைக்களத்தால் பூர்த்தி செய்யப்பட்டது. திணைக்களம் பலதரப்பட்ட கொள்கை முன்னெடுப்புக்களைக் கலந்தாலோசிப்பதற்கு பல எண்ணிக்கையான அரச நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டது. இது நலக் கவனிப்பு மற்றும் ஊட்டச்சத்து அமைச்சு, சுற்றாடல் மற்றும் இயற்கை மூலவளங்கள் அமைச்சுடனான கொள்கை மட்ட கலந்துரையாடல்களையும் மற்றும் சில உயர் கல்வி நிறுவனங்களுடனான கலந்துரையாடல்களையும் உள்ளடக்குகிறது. திணைக்களம் தனியார்துறைக் கைத்தொழில்களிடமிருந்து திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட தகவலின் தரத்தை அதிகரிப்பதற்கு பலதரப்பட்ட தனியார்துறை பிரதிநிதிகளுடனும் கூட்டங்களை ஏற்பாடு செய்தது.

திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் பொருளாதார விடயங்கள்மீது அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழுக்களிலும் ஏனைய பல்வேறு வெளிக்குழுக்களிலும் தமது பணிகளை வழங்கினர். இது தேசிய பொருளாதாரசபை, மின்வலுத் தீர்வைக்குழு, வலு உருவாக்க விரிவாக்கக்குழு, உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைச் செலவுக்குழு மற்றும் சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு விரிவாக்கம் மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்றிட்ட மதிப்பீட்டுக்குழு என்பவற்றை உள்ளக்குகிறது. இத்துடன், திணைக்களம் 2008 ஒத்தோபரில் அரசால் மீளச் செயற்படுத்தப்பட்ட தேயிலைக்கான சமநிலைப்படுத்தல் நிதியம் தொடர்பான வேலையிலும் பங்கேற்றது. திணைக்களத்தின் பணிப்பாளர் இந் நிதியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். இத்திணைக்கள அலுவலர்கள் பாரெயின், துபாய் மற்றும் அபுதாபியில் மத்திய வங்கியால் நடத்தப்பட்ட வர்த்தகமற்ற பிரசாரங்களிலும் பங்குபற்றினர்.

வங்கியின் நியதி அறிக்கைகளையும் ஏனைய விசேட அறிக்கைகளையும் மூன்று மொழிகளிலும் தயாரிக்கும் பொறுப்பு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, 2007இற்கான ஆண்டறிக்கை, அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் 2008ஆம் ஆண்டிற்குரிய முக்கிய பண்புகளும் 2009ஆம் ஆண்டிற்கான வாய்ப்புக்களும் மற்றும் மாதாந்த செய்தித் திரட்டுக்கள் என்பவற்றின் வெளியீடுகளை திணைக்களம் ஒருங்கிணைத்தது. நாணயச் சட்ட விதியின் ஏற்பாடுகளின் கீழ் அரசின் வரவு செலவுத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு முன்னதாக நிதியமைச்சிற்கு வங்கியினால் சமர்ப்பிக்கப்படுகின்ற இரகசிய அறிக்கையான செத்தெம்பர் 15ஆம் நாள் அறிக்கையின் தயாரிப்பும் பூர்த்தி செய்யப்பட்டது. பொது மக்களுக்கு பொருளாதார விடயங்கள் தொடர்பான தகவலைப் பரப்புவதற்கான அதன் பொறுப்பின் முக்கிய பங்காக, திணைக்களம் நாணயக் கொள்கை, சென்மதி நிலுவைகள் மற்றும் பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான கிரமமான பத்திரிகை வெளியீடுகளைத் தொடர்ந்து வெளியிட்டது. பலதரப்பட்ட பொருளாதார அபிவிருத்திகள், பிரச்சினைகள், கோரல்கள் மற்றும் தவறான கருதுகோள் என்பனவற்றை விளக்குவதற்கும் தெளிவுபடுத்துவதற்கும் காலத்துக்குக் காலம் பத்திரிகை வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

திணைக்களம் மத்திய வங்கி மற்றும் அரசின் சார்பில் ஏனைய பன்னாட்டு பல்புடை நிதியியல் நிறுவனங்களுடன் தொடர்ச்சியான அடிப்படையில் உறவு முறைகளை ஒருங்கிணைப்பதிலும் ஈடுபடுத்திக் கொண்டது. இது, வருடாந்த பநா நிதிய உறுப்புரை IV ஆலோசனைக் கூட்டங்கள், சார்க்நிதி ஆளுநர்கள் கூட்டம், அரசுகளுக்கிடையிலான குழு 24 (ஜீ -24) தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம், "சியென்சா"குழுமம் என்பவற்றுடன் தொடர்பான ஒருங்கிணைப்பு வேலையை உள்ளடக்கியிருந்தது. திணைக்களம் தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் அமைப்பு, பநாநி என்பன போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தேவையான தரவை கிரமமான அடிப்படையில் தொடர்ந்து வழங்கியது. திணைக்களம் பிட்ச் ரேட்டிங் மற்றும் எஸ் அன்ட் பி ரேட்டிங்

சேர்விஸ் போன்ற பன்னாட்டு தரமிடல் முகவர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றியது. உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, பல்புடை மற்றும் இருபுடை அபிவிருத்திப் பங்காளர்களை ஒருங்கிணைக்கும் செயற்பாட்டில் திணைக்களம் அதன் உதவியை நிதி திட்டமிடல் அமைச்சுக்கும் விரிவுபடுத்தியது.

## 8. ஊழியர் சேம நிதியம்

ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் (ஊசேநி) தொழிற்பாடுகள் ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நாணயச்சபை அதன் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளைச் செயலாற்றுவதற்கு வசதிப்படுத்தியது. சட்ட நியதிகளின்படி ஊழியர் சேம நிதியத்தின் பாதுகாவலனாக இருக்கும் நாணயச் சபையானது உறுப்பினர் பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களின் சேகரிப்பு, மற்றும் உறுப்பினரின் கணக்குகளைப் பேணல், மேலதிக நிதிகளின் முதலீடு, சட்டத்தின் கீழ் தொழில் ஆணையாளர் மற்றும் நாணயச்சபை தங்களுடைய கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளின் செயலாற்றத்தில் ஏற்படக்கூடிய செலவை நிதியத்தின் வருமானத்துக்கு விதித்தல், நிதியத்தின் நன்மை பெறுனர்களுக்கு நன்மைகளைச் செலுத்துதல், உறுப்பினர் கணக்குகளுக்கு வட்டியை வரவு வைத்தல் மற்றும் நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களைத் திரட்டுதல் மற்றும் அவற்றை மாண்புமிகு தொழில் அமைச்சருக்கு ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் முடிவிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஒப்படைத்தல் ஆகியவற்றைப் பிரதானமாக உள்ளடக்கிய நிதியத்தின் முகாமை தொடர்பான அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளுக்கும் பொறுப்பாகவுள்ளது.திணைக்களமானது மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை நாணயச்சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கை நியதிகளின் படியும், தொழில் ஆணையாளரின் நெருங்கிய ஒத்துழைப்புடனும் 2008இல் செயலாற்றியது.

### 8.1 உறுப்புரிமை, உறுப்பினர் நிலுவைகள் மற்றும் மீளளிப்புக்கள்

2008இன் இறுதியில் உள்ளவாறு நிதியம் (உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பு) ரூ.645.0 பில்லியனாக விளங்கி 2007இன் இறுதியில் இருந்த ரூ.549.4 பில்லியனிலிருந்து 17.4 சதவீதம் அல்லது ரூ.95.6 பில்லியன் அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. (அட்டவணை II.1) இது பெரும்பாலும் இவ்வாண்டில் உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் உதவு தொகைகளிலும் மற்றும் உறுப்பினர்களிடையேயான வருமான பகிர்ந்தளிப்புகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பால் ஏற்பட்டது. உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 12.46 மில்லியனுக்கு அதிகரித்ததுடன் இதில் 2.3 மில்லியன் உதவுதொகை செலுத்தும் செயற்படும் உறுப்பினர் கணக்குகளாக விளங்கியது. 2008இன் இறுதியில் உதவு தொகை செலுத்தும் தொழில் தருநரின் எண்ணிக்கை 64,000ஆக விளங்கி 2007இன் 61,116 இலிருந்து 4.7 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது.இவ்வாண்டில் தேறிய உதவுதொகை (நன்மைகளின் மீளளிப்புக்களைத் கழித்த உதவுதொகை) 2007இன் ரூ.18.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.20.02 பில்லியனாக விளங்கியது. 2008இல் உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்ட உரித்தாளர்களுக்கும் மீளளிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.25.9 பில்லியனாக விளங்கி 2007இன் 21.8 பில்லியனிலிருந்து 19.2 சதவீத அதிகரிப்பை எடுத்துக் காட்டுகையில் மீளளிப்புக்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.8 சதவீதத்தால் அதிகரித்தது.

அட்டவணை II - 1
நிதியின் அடிப்படை தகவல்கள்

| விடயம் | 2007 | 2008 | மாற்றம் (%) |
|---|---|---|---|
| உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை'000 | 11,888 | 12,463* | 4.84 |
| உதவுதொகை செலுத்தும் உறுப்பினர் கணக்குகள் '000 | 2,181 | 2,296* | 5.27 |
| உதவுதொகை செலுத்தாத உறுப்பினர் கணக்குகள் '000 | 9,707 | 10,167* | 4.74 |
| உதவி தொகை செலுத்தும் தொழில் தருநர் | 61,116 | 64,000* | 4.72 |
| மொத்த உதவு தொகைகள் (ரூ.மில்.) | 40,574 | 45,951 | 13.20 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.மில்.) | 21,752 | 25,931 | 19.20 |
| மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 97,936 | 100,706 | 2.83 |
| உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு(ரூ.பில்) | 549.4 | 645 | 17.40 |
| நிதியின் மொத்தப் பெறுமதி(ரூ.பில்) | 560.4 | 653.2 | 16.56 |

* தற்காலிகமானவை

மூலம்: ஊழியர் சேம நிதியம்

### 8.2 நிதியங்களின் முதலீடும் வருமானமும்

#### (அ) முதலீட்டுச் சொத்துப் பட்டியல்

நிதியத்தின் மொத்தச் சொத்துப் பட்டியல் 2007இன் இறுதியிலான ரூ.541 பில்லியனிலிருந்து 2008இன் இறுதியில் ரூ.627 பில்லியனுக்கு 15.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. (அட்டவணை II.2) ஊசேநி திணைக்களம் நிதியத்தின் பணத்தை நிதியத்தின் முதலீட்டுக் கொள்கையுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தொடர்ந்து முதலிட்டது. அதாவது உறுப்பினர்களுக்கு இலாபத்தின் நீண்டகால நேர்க்கணிய உண்மை வீதத்தினை உறுதிப்படுத்தும் அதே வேளை மீளளிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய செலவினத்தை எதிர்கொள்வதற்கு நிதியங்களின் பாதுகாப்பையும் திரவத் தன்மையையும் பேணுகிறது. இதன்படி, சொத்துப்பட்டியலின் 96.9 சதவீதம் அரச பிணையங்களில் வைத்திருக்கப்பட்டது. எஞ்சியவை சிறந்த திரவத் தன்மை நிலைமையைப் பேணுவதற்கு கம்பனித் தொகுதிக் கடன்கள், பங்குகள் (2.5 சதவீதம்) மற்றும் மீள் கொடுப்பனவுகள் (0.6 சதவீதம்) போன்ற உயர் திரவச் சொத்துக்களில் வைக்கப்பட்டிருந்தன.

அட்டவணை II - 2
முதலீட்டுச் சொத்துப்பட்டியல்

| முதலீட்டின் வகை | 2007 ரூ. பில். | 2007 பங்கு% | 2008 ரூ. பில். | 2008 பங்கு% |
|---|---|---|---|---|
| திறைசேரி முறிகள், உண்டியல்கள் | 453.7 | 83.8 | 539.6 | 86.0 |
| அரசிற்கான ரூபாக் கடன்கள் | 68.9 | 12.7 | 68.5 | 10.9 |
| கம்பனி தொகுதிக்கடன்கள் | 7.9 | 1.5 | 8.7 | 1.4 |
| உரிமை முதல் | 6.7 | 1.2 | 6.9 | 1.1 |
| மீள்கொள்வனவுகள் மற்றும் ஏனையவை | 4.3 | 0.8 | 3.5 | 0.6 |
| **மொத்தம்** | **541.5** | **100.0** | **627.2** | **100.0** |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

#### (ஆ) வருமானம்

முதலீடுகள் மீதான மொத்த வருமானம் 2007இன் ரூ.59.4 பில்லியனிலிருந்து 2008இல் ரூ.79.5 பில்லியனுக்கு 33.8 சதவீதத்தால் அதிகரித்தது. (அட்டவணை II.3) கடந்த

ஆண்டுகளைப் போலவே, கடன் தீர்ப்பனவு இலாபம் உள்ளிட்ட வட்டி வருமானம் நிதியத்துக்கான வருமானத்தின் முக்கிய மூலமாக விளங்கியது. இது அரச பிணையங்கள் சொத்துப் பட்டியலில் கழிவிடப்பட்ட முறிகளால் ஏற்பட்டதாகும். வட்டி வருமானம் 2007இன் ரூ.58.8 பில்லியனிலிருந்து ரூ.78.9 பில்லியனுக்கு ரூ.20.1 பில்லியனால் வளர்ச்சியடைந்தது. சராசரி மொத்தப் பட்டியலிலான இலாப வீதம் 2007இன் 12.7 சதவீதத்திலிருந்து 2008இல் 13.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. கடந்த காலத்தில் நிதியங்களின் 96.5 சதவீதம் வெவ்வேறு வட்டிவீதங்களிலான அரச பிணையங்களில் முதலிடப் பட்டிருப்பதால் முதலீடு மீதான மொத்த வருமானம் அரச பிணையங்களின் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றத்துடன் கூடியளவில் தொடர்புபட்டிருந்தது. 2008ஆம் ஆண்டுக்கான அரச பிணையங்கள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி வருமானம் 13.9 சதவீதமாக இருந்ததுடன் விளைவு 2008 இறுதியிலான முதிர்ச்சியைப் பொறுத்து 10.4 சதவீதத்துக்கும் 15.3 சதவீதத்திற்குமிடையே வேறுபட்டது. (அட்டவணை II.4) முக்கியமாக மந்தமான சந்தை நிலைமைகள் காரணமாக பங்குச் சொத்துப் பட்டியலிலிருந்து அடையப்பட்ட மூலதன இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் 2007இன் ரூ.434 மில்லியனிலிருந்து 2008இல் ரூ.225 மில்லியனுக்கு 48 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. இதன்படி, சராசரி பங்குச் சொத்துப்பட்டியல் மீதான இலாப வீதம் 2007இன் 8.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 3.8 சதவீதமாக விளங்கியது.

**அட்டவணை II - 3**
**முதலீட்டு மீதான வருமானம்**

| முதலீட்டின் வகை | 2007 ரூ. பில். | 2007 பங்கு% | 2008 ரூ. பில். | 2008 பங்கு% |
|---|---|---|---|---|
| வட்டி | 49,885 | 84.0 | 61,445 | 77.3 |
| பங்கு இலாபம் | 146 | 0.2 | 152 | 0.2 |
| மூலதன இலாபம் | 288 | 0.5 | 108 | 0.1 |
| கடன் தீர்ப்பனவு இலாபம் | 8,945 | 15.0 | 17,452 | 22.0 |
| ஏனையவை | 158 | 0.3 | 306 | 0.4 |
| **மொத்த வருமானம்** | **59,422** | **100.0** | **79,463** | **100.0** |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

**அட்டவணை II - 4**
**அரச பிணையங்கள் சொத்துப் பட்டியலின் முதிர்ச்சித் தோற்றம்**

| முதிர்ச்சி | தொகை ரூ.மில் | பங்கு% | நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு% |
|---|---|---|---|
| 1 ஆண்டிலும் குறைந்தது | 124,363 | 20 | 10.41 |
| 1- 2 ஆண்டுகள் | 206,684 | 34 | 15.33 |
| 3- 4 ஆண்டுகள் | 218,881 | 36 | 14.83 |
| 5 ஆண்டுக்களுக்கும் கூடியது | 61,780 | 10 | 13.34 |
| **மொத்தம்** | **611,708** | **100** | **13.95** |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

### (இ) செலவுகள்

நிதியத்தின் தொழிற்பாட்டுச் செலவினம் 2007இன் ரூ.546 மில்லியனிலிருந்து 2008இல் ரூ.637 மில்லியனுக்கு 16.5 சதவீதத்தால் உயர்ந்தது. (அட்டவணை II.5) நிதியம் அதன் மொத்தத் தொழிற்பாட்டு செலவினத்தை 2008இல் அதன் மொத்த வருமானத்தின் 0.80 சதவீதத்தில் பேணக் கூடியதாக இருந்தது. தொழிற்பாட்டுச் செலவினத்தை மொத்த வருமானத்தின் 1 சதவீதத்திற்கும் கீழ் பேணுதல் கடந்த ஆண்டுகளில் முக்கிய பண்பாக வந்துள்ளது.

**அட்டவணை II - 5**
**தொழிற்பாட்டுச் செலவினங்கள்** (ரூ.மில்லியன்)

| செலவின விடயம் | 2007 | 2008 | % மாற்றம் |
|---|---|---|---|
| ஆளணிச் செலவினங்கள் | 318.2 | 323.1 | 1.5 |
| நிர்வாகச் செலவினங்கள் | 211.0 | 289.0 | 37.0 |
| நிதியியல் செலவினங்கள் | 16.9 | 24.7 | 46.7 |
| மொத்த தொழிற்பாட்டுச்செலவுகள் | 546.1 | 636.8 | 16.5 |
| மொத்த அரசிறையின் % மொத்தச் செலவினங்கள் | 0.90 | 0.80 | (0.1) |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

### 8.3 உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டிக் கொடுப்பனவு

2008இல் நிதியத்தின் உறுப்பினர்களுக்கு வட்டியாக ரூ. 75,466 மில்லியன் பகிர்ந்தளிப்பதற்காக கிடைக்கத்தக்கதாக இருந்தது. (அட்டவணை II.6) இதன்படி, உறுப்பினர் நிலுவைகளுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் மொத்த உறுப்பினர் நிலுவைகள் மீது 13.2 சதவீதம் கொண்ட வீதத்தில் விளங்கியது. 2007இல் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட 11.2 சதவீத வட்டி வீதத்துடன் ஒப்பிடுகையில், இது 200 அடிப்படைப் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பாகும். எனினும் முழு ஆண்டுக்காகவும் ஆண்டு இறுதியிலுள்ள நிலுவைமீது வட்டியைச் செலுத்தும் நடைமுறையைக் கவனத்திற் கொள்கையில் பயனுறு வட்டி வீதம் (வபவீ)[1] 13.44 சதவீதமாக மதிப்பிடப்படுகிறது.

### 8.4 உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள்

2008இன் முதல் அரைப்பகுதிக்கான உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள் அவர்களின் தொழில் தருநர்களூடாக 2008 திசெம்பரில் வழங்கப்பட்டன. 2008இன் இரண்டாம் அரைப் பகுதிக்கான கணக்குக் கூற்றுக்களை 2009 யூன் இறுதியில் வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அட்டவணை II - 6**
**உறுப்பினர்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகள்**

| விடயம் | 2007 ரூ.மில் | 2008 ரூ.மில் | சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| மொத்த அரசிறை | 59,422 | 79,463 | 33.70 |
| மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள் | 546 | 637 | 16.60 |
| வருமான வரி | 4,451 | 5,426 | 21.90 |
| பங்கீட்டுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள தேறிய வருமானம் | 54,612 | 73,618 | 34.80 |
| நடைமுறை மீளளிப்புக்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி பகிர்ந்தளிப்புக்கான கிடைக்கத்தக்கதாகவுள்ள தேறிய | 879 | 1,152 | 31.20 |
| வருமானம் (நடைமுறை மீளளிப்புக்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுக்குப்பின்) | 53,733 | 72.466 | 34.86 |
| ஒதுக்குகளிலிருந்தான மாற்றல்கள் | 1,725 | 3,000 | 73.91 |
| ஒதுக்குகளிலிருந்து மாற்றல்களுக்குப் பின் பகிர்ந்தளிப்புக் காகக் கிடைக்கத்தக்கதாகவுள்ள தேறிய வருமானம் | 55,458 | 75,466 | 36.07 |
| உறுப்பினர் நிலுவைகள் மீது செலுத்தப்பட்ட வட்டி | 55,240 | 75,027 | 35.82 |
| முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | 218 | 439 | 101.40 |
| உறுப்பினர் நிலுவைகள்மீது செலுத்தப்பட்ட வட்டி % | 11.2 | 13.2 | 2.00 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: ஊழியர் சேம நிதியம்

### 8.5 வீடமைப்புக் கடன் வசதி

ஊழியர் சேம நிதிய ஊழியர்களின் ஊழியர் சேம நிதிய நிலுவைகளுக்கெதிராக அவர்களுக்கு உத்தரவாதளிக்கப்பட்ட சான்றிதழ்களைத் தொடர்ந்து வழங்கியது. 1988இல்

1. பயனுறு வட்டி வீதம் = (உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட வட்டி)/ [ஆண்டின் ஆரம்பத்திலான உறுப்பினர் நிலுவைகள் +ஆண்டின் இறுதியிலான உறுப்பினர் நிலுவைகள்)]/2

அட்டவணை II - 7
வீடமைப்புக் கடன் வசதிகள் பற்றிய விபரங்கள் ரூ.மில்

| ஆண்டு | வழங்கப்பட்ட சான்றிதழ் (எண்ணிக்கை) | ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் | கடன் வழங்கிய நிறுவனங்களுக்கு செலுத்திய தொகை |
|---|---|---|---|
| 2000 | 12,938 | 1,648 | 262 |
| 2001 | 16,066 | 2,091 | 381 |
| 2002 | 19,502 | 2,673 | 541 |
| 2003 | 18,689 | 2,792 | 670 |
| 2004 | 14,307 | 2,452 | 735 |
| 2005 | 14,600 | 2,766 | 900 |
| 2006 | 15,136 | 3,049 | 1,078 |
| 2007 | 12,969 | 2,872 | 1,240 |
| 2008 | 13,133 | 3,181 | 1,400 |
| மொத்தம் | 137,340 | 23,524 | 7,207 |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம் உறுப்பினர்கள் 6 பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களான இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் முதலீட்டு வங்கி, கூட்டுறவுக் கிராமிய வங்கிகள், மற்றும் தேசிய வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து வீடமைப்புக்கடனைப் பெறுவதற்கு வசதிப்படுத்துகிறது. இவ்வாண்டில் ரூ.3,181 மில்லியன் பெறுமதியான வீடமைப்புக் கடன்களின் ஒப்புதலுக்காக பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு 13,133 உறுப்பினர் நிலுவைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (அட்டவணை II.7) இதேவேளை , 2008ஆம் ஆண்டுக்காக நிலுவையிலுள்ள கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு பங்கேற்கும் கடன்வழங்கும் நிறுவனங்கள் கிட்டத்தட்ட ரூ.1,400மில்லியன் தொடர்பான உறுப்பினர் கணக்குகளிலிருந்து கழிக்கப்பட்டு பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டன. 2000- 2008 காலப்பகுதியில் 137,340 உறுப்பினர்களுக்காக ரூ.23.5 பில்லியன் கொடுகடன் ஒப்புதலளிக்கப்பட்டதுடன் நிலுவையிலுள்ள கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு ரூ.7,207 மில்லியன் அனுப்பப்பட்டது.

### 8.6 பொதுமக்கள் விழிப்புணர்வு

ஊழியர் சேம நிதியம் அதன் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை 2008இல் தொடர்ந்து மேற்கொண்டது. இவ்வாண்டில், இலத்திரனியல் ஊடகமூடாக உறுப்பினர் தகவலைச் சேகரித்தல் மற்றும் உறுப்பினர்களின் மீள் பதிவு தொடர்பாக தொழில் தருநர்களுக்காக 2 நடமாடும் சேவைகளும் (வலப்பனையிலுள்ள நில்டன்டகின்ன பெருந்தோட்டம் மற்றும் நுவரெலியாவிலுள்ள களனிவெலி பெருந்தோட்டம்) 10 கருத்தரங்குகளும் (சகல முதலீட்டுச்சபை வலயங்களுக்காக 7 கருத்தரங்குகள் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பகா மாவட்டங்களில் உள்ள தொழில் தருநர்களுக்காக 3 கருத்தரங்குகள்) நடத்தப்பட்டன. திணைக்களம் பொதுமக்களுக்கான 2 பொருட்காட்சிகளிலும் பங்கேற்றது. (மனித வளப்பணி வழங்குவோரின் பொருட்காட்சி மற்றும் தேசத்துக்கு மகுடம் என அழைக்கப்படும் தயற்ற கிருல) இதேவேளை, அரையாண்டு உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள் மற்றும் மீள்பதிவு செயற்றிட்டம் பற்றி உறுப்பினர்களுக்கு அறிவிப்பதற்காக பல பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.

### 8.7 ஊழியர் சேம நிதியத்தின் 50ஆவது ஆண்டுநிறைவு

2008 யூன் 1ஆம் நாளன்று ஊழியர் சேம நிதியம் அதன் 50 ஆண்டுப் பணிகளை நிறைவு செய்தது. ஊழியர் சேம நிதியம் அதன் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை 2008இலும் தொடர்ந்து மேற்கொண்டது. அதன் பொன் விழாவைக் குறிக்கும் வகையில் ஊழியர் சேம நிதியத் திணைக்களமும் தொழிற்றிணைக்களமும் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்றை பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் 2008 செத்தெம்பர் 11ஆம் திகதி அன்று ஏற்பாடு செய்தது. இத்துடன் மூன்று வகையான ஞாபகார்த்த நாணயங்களான ரூ.1,000முகப்புப் பெறுமதியைக் கொண்ட நிக்கல் முலாம் பூசப்பட்ட உருக்கிலான மாசுபடாத சுற்றோட்டத்திற்கு விடப்படாத நாணயக்குத்தி, ரூ.1,000 முகப்புப் பெறுமதியைக் கொண்ட நிக்கல் முலாம் பூசப்பட்ட உருக்கிலான பிரகாசமான சுற்றோட்டத்திற்கு விடப்படாத நாணயக்குத்தி மற்றும் ரூ.2 முகப்புப் பெறுமதியைக் கொண்ட நிக்கல் முலாம் பூசப்பட்ட சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குத்திகள் என்பன வெளியிடப்பட்டன. மேலும், தொலைக் காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பத்திரிகை மாநாடு தொழில் திணைக்களத்துடன் இணைந்து நடத்தப்பட்டது.

### 8.8 கணனி முறைமையினை மேம்படுத்தல்

ஊழியர் சேம நிதிய இணையத் தளத்தின் 2ஆம் கட்டம், தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியுடன் உறுப்பினர் பணிகளின் தரத்தை அதிகரிப்பதற்கு இணையத்தை அடிப்படையாகக் கொண்ட உறுப்பினர் தகவல் பணியை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. இப்புதிய வசதி கணக்கு நிலுவை விசாரணை, தற்போதைய உதவுதொகை விபரங்கள், மீளளிப்பு விண்ணப்பத்தின் நிலைமை மற்றும் வீடமைப்புக் கடன் விண்ணப்பம் போன்ற தகவலை இணையத்தினூடாகப் பெறுவதை வசதிப்படுத்துகிறது. இத்துடன் குறுந் தகவல் பணி என்ற தகவல் பணியும் அறிமுகப்படுத்தப் பட்டது. இவ்வாண்டின் நான்காம் காலாண்டில், குறுந்தகவல் பணி என்ற தகவல் பணியின் கீழ் 340 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டனர்.

### 8.9 உறுப்பினர்களின் மீள்பதிவு

மீள் பதிவுச் செயற்றிட்டம் முழுமையாக தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட முறைமையை நோக்கி ஊசேநிதியத்தின் மீள இயக்கப்படுத்தலின் 1ஆவது கட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. நிதியத்தின் சகல உறுப்பினர்களையும் தேசிய அடையாள அட்டையில் இருக்கும் பெயரில் மீளப் பதிவு செய்வதற்கும், அவர்களது உறுப்பினர் எண்களாக தேசிய அடையாள அட்டை எண்களைக் ஒதுக்கிக் கொடுப்பதற்கும், அவர்களது முன்னைய உறுப்பினர் கணக்குகளை ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் அதே நேரத்திலான மற்றும் கூடிய பாதுகாப்புடைய உறுப்பினர் கணக்கு முறைமையை விருத்தி செய்யும் பொருட்டு இலக்க வடிவத்தில் அவர்களது பெருவிரல் அடையாளங்களைப் பெறுவதற்கும் தொழிற்றிணைக்களமும் ஊழியர் சேம நிதியத் திணைக்களமும் இணைந்த செயற்றிட்டத்தை ஆரம்பித்தன. 2008 இறுதியில் உறுப்பினர் தகவலில் 70 சதவீதம் சேகரிக்கப்பட்டது. தரவை சரி பார்த்தல் மற்றும் தரவுத் தளத்தைப் பூரணப்படுத்தல் 2009 இறுதியளவில் பூர்த்தி செய்யப்படும். மீள் இயக்கப்படும்

செயற்றிட்டம் முகாமைத் தகவல் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துக்கான பொருத்தமான முறைமைகளுடன் வங்கியின் தொழிற்பாட்டு மாதிரியாக நிதியத்தை முகாமைசெய்வதற்கு ஊழியர் சேம நிதியை இயலச் செய்யும்.

## 9. செலாவணிக் கட்டுப்பாடு

திருத்தப்பட்டவாறான 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகிப்பதில் அரசாங்கத்தின் முகவரான இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடுகளை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. இதற்கமைய, 2008ஆம் ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நடவடிக்கைகள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் ஏனையோருக்கும் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்/ தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுக்கான ஒப்புதல்களை வழங்குதல், பல்வேறுபட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணித்தல் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவது தொடர்பான புலனாய்வுகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. செலாவணிக் கட்டுப்பாட்டுத் தொழிற்பாடு மத்திய வங்கியின் வழிகாட்டல்: 2008இல் அறிவிக்கப்பட்ட கொள்கைப் பணிப்புரைகளை நோக்கி மீள் ஒழுங்குபடுத்தப்பட்டது. கொள்கைப் பணிப்புரை உள்நாட்டு மூலவள இடைவெளியை நிரப்புவதற்கு வெளிநாட்டு மூலவளங்களை நவீனமுறையில் கொண்டு வருவதற்கும் இலங்கை ஒப்பீட்டளவிலான அநுகூலங்களை உருவாக்குவதற்கு உலகளாவிய நிதியியல் நிலையங்களை அடையக் கூடிய செயல்முறையை வசதிப்படுத்துவதற்கும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் தொழிலை நவீனமுறையில் பயன்படுத்துவதாக இருந்தது.

### 9.1 புதிய பணிப்புரைகளை/ தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வழங்குதல்

மேலதிக தாராளமயமாக்கலுடன் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களை மேலும் ஒழுங்கமைக்கும் பொருட்டும் பன்னாட்டு முதலீட்டாளர் நம்பகத் தன்மையை ஊக்குவிக்கும் பொருட்டும் 2008இல் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் (உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்) மற்றும் ஏனைய தரப்பினருக்கும் பல்வேறு புதிய பணிப்புரைகளை/தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வழங்கியது. அத்தகைய பணிப்புரைகள்/அறிவுறுத்தல்களின் தொகுப்பொன்று கீழே தரப்படுகிறது. இப்பணிப்புரைகள்/அறிவுறுத்தல்களின் விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன.

(அ) **வெளிநாட்டு முதலீட்டாளர்களால் திறைசேரி உண்டியல்களின் மேற்கொள்ளப்படும் முதலீட்டுக்கான அனுமதி** : வெளிநாட்டு பிரசைகள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள் மற்றும் வெளிநாட்டு நிதியங்கள் சமவாய நிதியங்கள் மற்றும் பிராந்திய நிதியங்கள் போன்ற வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் வெளிநின்ற மொத்த திறைசேரி உண்டியல்கள் இருப்பின் 10 சதவீதத்தை விஞ்சாத அளவிற்கு திறைசேரி உண்டியல்களை "திறைசேரி உண்டியல் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு" என்று அழைக்கப்படும் சிறப்பு ரூபாக் கணக்கூடாக திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம், விற்கலாம் அல்லது மாற்றல் செய்யலாம்.

(ஆ) **இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணய கணக்குகள்**: ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் கொள்கை வழிமுறையாக, இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் ஏற்றுமதியாளர்களின் வெளிநாட்டுச் செலாவணித் தேவைப்பாடுகளை வசதிப்படுத்துவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டு நாணய கணக்குகளை ('இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்கு') திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்பட்டனர்.

(இ) **சிறப்பு வெளிநாட்டு, முதலீட்டு வைப்புக் கணக்கு** வெளிநாட்டுப் பிரசைகள், இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கைப் பிரசைகள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்,மற்றும் நாட்டு நிதியங்கள் சமவாய நிதியங்கள் மற்றும் பிராந்திய நிதியங்கள் போன்ற வெளிநாட்டு நிறுவன ரீதியிலான முதலிட்டாளர்கள் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலோ அல்லது இலங்கை ரூபாவிலோ தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களைத் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகளில் இருக்கவேண்டிய ஆகக் குறைந்த வைப்புத் தொகை ஐ.அ.டொலர் 10,000 அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏனைய வெளிநாட்டு நாணயத்திற்குச் சமமானதாக அதன் தொகை அல்லது இலங்கை ரூபாவிற்குக் சமமானதற்கு கீழ் இருக்கக்கூடாது என்பதுடன் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள் மீதான மொத்த வைப்புப் பொறுப்புக்கள் அதன் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவின் மொத்த வைப்புப் பொறுப்புக்களின் 20 சதவீதத்தை விஞ்சலாகாது. மேலும் சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள் வருமானவரி, பிடித்துவைத்தல் வரி மற்றும் பற்று வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

(ஈ) **வதியாதோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்குகளிலிருந்து நிதியங்களை வெளிமுக பணவனுப்பல்கள்:** 2008 யூலை 01இலுள்ளவாறு தற்போதைய வதியாதோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்குகளின் வெளிநிற்கும் மொத்த நிலுவையை கணக்கு உடமையாளர்களுக்கோ அல்லது அவர்களின் சட்டரீதியான பயனாளிகளுக்கோ வெளியில் அனுப்புவதற்கான அனுமதி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு

வழங்கப்பட்டது. 2008 யூலை 01இற்குப் பின்பு தொழிற்பாட்டிலிருந்த தடுத்து வைக்கப்பட்ட கணக்குகளிலிருந்து வருடாந்தம் ஆகக்கூடியது ஐ.அ.டொலர் 20,000 அல்லது அதற்குச் சமனான நிதியங்களை வெளியே அனுப்புவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

(உ) **புலம் பெயர்ந்தோருக்கு வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை**: குடும்பம் ஒன்றுக்கு அல்லது அவர்களின் வெளிச் செல்லும் நேரத்தில் இணையாத ஒவ்வொரு தனிநபருக்கும் அவர்கள் இலங்கையிலிருந்து வெளிச்செல்லும் பொழுது சொந்தப் பொருட்கள் மற்றும் சொந்த ஆபரணங்களின் பெறுமதி உள்ளடங்கலாக ஆகக்கூடிய அளவான ஐ.அ.டொலர் 150,000அல்லது அதற்குச் சமனான தொகை வரை புலம்பெயர்ந்தோருக்கு வெளியே அனுப்புவதற்காக குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வெளிநாட்டுச் செலாவணியை விற்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. புலம் பெயர்ந்தோருக்குச் சொந்தமான நிதிகள் ஐ.அ.டொலர்கள் 150,000ஐ விஞ்சுமிடத்து அவை தடுத்து வைத்தல் கணக்கிற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.

(ஊ) **மூத்த வெளிநாட்டுப் பிரசைகளுக்கான சிறப்புக் கணக்குகள்**:வதிவோர் விசாவில் இலங்கையில் நீண்ட காலம் தங்கியிருக்க விரும்பும் மூத்த வெளிநாட்டுப் பிரசைகளை வரவேற்பதற்கு அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட "இலங்கை - எனது கனவு இல்லம் நிகழ்ச்சித் திட்டம்" இன் கீழ் "மூத்த வெளிநாட்டுப் பிரசைகளின் நிலையான வைப்புக் கணக்கு" அவர்களின் கொடுக்கல் வாங்கல்களை வசதிப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது. ஆகக் குறைந்த உள்நோக்கிய பணவனுப்பலாக ஐ.அ.டொலர் 15,000 அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏனைய வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமனான தொகையினை இக் கணக்கில் வைப்பிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பிரதான விண்ணப்பதாரியின் மாதாந்த பணவனுப்பலான ஐ.அ.டொலர் 1,500 இற்குப் புறம்பான, வாழ்க்கைத் துணைவர் மற்றும் தங்கியிருக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் இலங்கையில் அவர்கள் வாழ்வதற்காக ஐ.அ.டொலர் 750 அல்லது அதற்குச் சமமான வேறு வெளிநாட்டு நாணயங்களை கணக்கு வைத்திருப்பவரின் பெயரிலுள்ள இலங்கை ரூபா கணக்கில் வைப்பிலிட வேண்டும்.

(எ) **வெளிநாட்டுக்குப் பயணஞ்செய்யும் இலங்கையருக்கு வெளிநாட்டு நாணயத்தாள்களின் வழங்கல்**: வெளிநாட்டுக்குப் பயணச் செய்யும் இலங்கையருக்காக பயணப்படியின் ஒரு பகுதியாக வழங்கப்படும் வெளிநாட்டு நாணயம் ஐ.அ.டொலர் 1,000 இலிருந்து ஐ.அ.டொலர் 2,000 இற்கோ அல்லது குறித்துரைக்கப்பட்ட வேறு ஏதாவது வெளிநாட்டு நாணயத்திற்குச் சமனானதற்கோ அதிகரிக்கப்பட்டது.

(ஏ) **2007இல் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நாட்டுக்கான பன்னாட்டு முறியில் (நாபமு) வர்த்தகம் செய்வதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை அனுமதித்தல்**: பன்னாட்டு முறியின் கொள்வனவு தொடர்பாக இலங்கைக்கு வெளியே வதியும் நபர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7(அ) இன் ஏற்பாடுகளின் நியதிகளிலும், பன்னாட்டு முறியை இலங்கைக்கு வெளியேயுள்ள நபர்களுக்கு மாற்றுவதற்கும் அத்தகைய பன்னாட்டு முறியை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடையே வர்த்தகம் செய்வதற்கு பிரிவுகள் 11(2)மற்றும் 17(2)இன் ஏற்பாடுகளின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

(ஐ) **பயண நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியின் விடுவிப்பினை கண்காணிக்கும் திட்டம்:** அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் 2008 நவெம்பர் 3 இலிருந்து ஆள் ஒருவருக்கு வெளிநாட்டுப்பயண நோக்கத்துக்காக அவர்களால் விடுவிக்கப்படும் வெளிநாட்டுச் செலாவணி ஐ.அ.டொலர் 5,000ஐ அல்லது ஏனைய வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட அதற்குச் சமனானதை விஞ்சுமிடத்து மாதாந்த அடிப்படையில் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

(ஒ) **வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறத்தல்:** வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கைத் திறப்பதற்குத் தேவையான ஆகக் குறைந்த வைப்பு ஐ.அ.டொலர் 500 அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏனைய நாணயங்களுக்குச் சமனானவையிலிருந்து ஐ.அ.டொலர் 100 இற்கு அல்லது அதற்குச் சமனானதற்கு குறைக்கப்பட்டது.

(ஓ) **வதிவோர் /வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்:** கடவுச்சீட்டு மீதான சுங்க உறுதிப்பாடு அல்லது சுங்க வெளிப்படுத்துகையின்றி வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் வரவுக்கு கணக்கு வைத்திருப்பவரால் கொண்டு வரப்படும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் எந்தத் தொகையையும் ஏற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர். கணக்கு வைத்திருப்பவரின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களிடமிருந்து வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் வரவுக்கு வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட தொகையை ஏற்றுக் கொள்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

(ஔ) **முற்பணக் கொடுப்பனவு நியதிகள் மீது மேற் கொள்ளப்பட்ட இறக்குமதிகளுக்கான அளவுத் தேவைப்பாடுகள்**: முற்பணக் கொடுப்பனவு நியதிகளுக்கு எதிராக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மொத்த விலைப் பட்டியல் பெறுமதிமீது முற்பணக் கணக்கு மேற்கொள்ளும்

நேரத்தில் 100 சதவீத அளவு வைப்பு இறக்குமதியாளர்களுக்கு விதிக்கப்பட்டது. துறைமுகத்தில் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் வர்த்தகத்தின்மீது மீள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு இவ்வளவுத் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப் பட்டது.

### 9.2 வெளிநாட்டு முதலீடுகளுக்கும் வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்குமான ஒப்புதல்

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், வெளிநாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டுக் கடன்பாடு என்பவற்றின் ஒப்புதலுக்கான 85 கோரிக்கைகளை ஆராய்ந்ததுடன் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் தொடர்பான ஏற்பாட்டு நியதிகளின் கீழ் கீழே காட்டப்பட்டுள்ள 41 கோரிக்கைகளுக்கு ஒப்புதல்களை வழங்கியது.

(அ) பெரும்பாலும் முதலீட்டு வங்கித் தொழில், வர்த்தகம் செய்தல், கப்பற்படுத்தல், சில்லறைத் தொழிற்பாடுகள் மற்றும் ஊழியர் பங்கு விருப்பத் திட்டங்கள் ஆகிய துறைகளில் ஐ.அ.டொலர் 7.16 மில்லியன் கொண்ட தொகையை வெளிநாட்டில் முதலிடுவதற்கு 20 வதிவிடக் கம்பனிகளுக்கான ஒப்புதல்கள்.

(ஆ) கிட்டத்தட்ட ஐ.அ.டொலர் 124.36 மில்லியன் கொண்ட மொத்தத் தொகையை வெளிநாட்டிலிருந்து கடன்பெறுவதற்கு 21 வதிவிடக் கம்பனிகளுக்கான ஒப்புதல்கள்

### 9.3 சரக்கு அனுப்புவோர், நாணய மாற்றுனர்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள்/ உரிமங்களை வழங்குதல்

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் சரக்கு அனுப்புவோர், நாணய மாற்றுனர்கள் மற்றும் மற்றைய மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கும் கீழே காட்டப்பட்டவாறு அனுமதிப் பத்திரங்களைத் தொடர்ந்தும் வழங்கியது.

(அ) இருபத்தொன்பது புதிய கம்பனிகள் சரக்கு அனுப்புவோராக பதிவு செய்யப்பட்டதுடன் 2008 இறுதியில் சரக்கு அனுப்புவோரின் மொத்த எண்ணிக்கையானது 277 இனை அடைந்தது.

(ஆ) ஐந்து புதிய நாணய மாற்றுனர் உரிமங்கள் வழங்கப்பட்டு மூன்று உரிமங்கள் மீளப் பெறப்பட்டதுடன் நாணய மாற்றுனர்களின் மொத்த எண்ணிக்கை 68இனை அடைந்தது. மேலும் ஆண்டொன்றுக்கு ஐ.அ.டொலர் 4 மில்லியனுக்குக் கூடுதலான வெளிநாட்டு நாணயத்தை வெற்றிகரமாகக் கொள்வனவு செய்த பத்து நாணய மாற்றுனர்கள் வெளிநாட்டு நாணயத்தை விற்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

(இ) தீர்வையற்ற கடைகள், சுற்றுலா விடுதிகள், பயண முகவர்கள் மற்றும் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் போன்ற ஏனைய மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களுக்கு ஐம்பது புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப் பட்டமையுடன் அத்தகைய மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் மொத்த எண்ணிக்கை 701இனை அடைந்தது.

### 9.4 வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல் மீதான கண்காணிப்பு:

செலாவணி கட்டுப்பாட்டுத் திணைக்களம் சந்தை ஒழுக்கத்தை மேம்படுத்தும் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஒப்புதலளிக்கப்பட்ட பயண முகவர்கள் மற்றும் நாணய மாற்றுனர்கள் போன்ற தொடர்பான பகுதியினரால் அறிவிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான அதன் கண்காணிப்பை தொடர்ந்து பலப்படுத்தியது.

அறிவிக்கப்பட்ட தகவல்கள் இலத்திரனில் நிதிய மாற்றல் அட்டைகள் மற்றும் அனுமதியளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் திட்டங்களின் பல வகைகளூடான வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்களின் விற்பனைகளையும் கொள்வனவுகளையும் உள்ளடக்கியிருந்தது. இவ்வாண்டில் இணையத்தை அடிப்படையாகக் கொண்ட அறிவிக்கும் முறைமையை நிறுவுதல் பூர்த்தி செய்யப்பட்டது. இது வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்களின் அளவை மதிப்பிடுவதற்கு அதே நேர கண்காணிப்பு முறைமையை விருத்தி செய்வதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தை இயலச் செய்தது.

### 9.5 செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவது பற்றிய புலனாய்வுகள்

பலதரப்பட்ட குழுக்களால் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டமை தொடர்பான 135 புலன் விசாரணைகள் 2008இல் பூர்த்தி செய்யப்பட்டதுடன் அத்தகைய குழுக்கள்மீது விதிக்கப்பட்ட தண்டங்கள் **ரூ.16,890,331.19** ஆக விளங்கியதுடன் இது திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டது.

இப் புலன் விசாரணைகள் பெரும்பாலும் வெளிநாட்டு நாணயத்தினை அதிகாரமளிக்கப்படாது ஏற்றமை, தனிநபர்களால் மேற்கொள்ளப்பட்ட அதிகாரமளிக்கப்படாத நாணய மாற்றல்கள், வரையறுக்கப்பட்ட நடைமுறைகளுக்கு முரணாக பிணையங்களில் முதலீடுகளை மேற்கொண்டமை தொடர்பாகக் காணப்பட்டன.

### 9.6 ஏனைய செயற்பாடுகள் - தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான விழிப்புணர்வு

வங்கித் தொழில் மற்றும் பல வழிகளிலான ஏனைய முறைசார் வழிமுறைகளூடாக தொழிலாளர் பணவனுப்பல்களை மேம்படுத்து வதற்கான தொடர்ச்சியான முயற்சிகளாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் வங்கிகளுடன் இணைந்து குருணாகலில் வாய்பைப் பெற்ற 300 புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு 1 நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தில் வாய்ப்புப் பெற்ற புலம் பெயர்ந்த தொழிலாளர்களில் அநேகமானோர் வெளிநாட்டு நாணய பணவனுப்பல்கள் தொடர்பாக அவர்களின் ஐயப்பாடுகளைத் தீர்த்துக் கொண்டனர்.

## 10. நிதியியல் உளவறிதல் பிரிவு

நிதியியல் உளவறிதல் பிரிவு 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளின் நியதிகளில் அதன் தொழிற்பாடுகளை 2008இலும் தொடர்ந்து மேற்கொண்டது. அதன் முக்கிய

தொழிற்பாடுகள் நிதிசார் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்ட பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியிடல் மற்றும் சட்ட விரோதச் செயற்பாடுகள் தொடர்பான நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் மீதான தகவலைச் சேகரித்தல், சந்தேகத்திற்கிடமான நிதியியல் கொடுக்கல் வாங்கல்களில் விசாரணைகளை நடத்துதல் மற்றும் தொடர்பான நியதிச்சட்டங்களில் உள்ளடக்கப்பட்ட குற்றங்களைத் தவிர்ப்பதற்கு வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல் மற்றும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் மீதான சட்ட / நடைமுறைப்படுத்தல் நடவடிக்கையைத் தொடுப்பதற்கும் ஒழுங்கு முறைகளை விடுப்பதற்கும் பொருத்தமான ஒழுங்கமைப்பு மற்றும் சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரசபைகளுக்கு புலனாய்வுகளின் தகவலையும் விபரங்களையும் பரப்புதல் என்பவற்றை உள்ளடக்குகிறது. 2008இல் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளின் முக்கிய பண்புகள் பின்வருமாறு:

### 10.1 தகவலைச் சேகரித்தல் மற்றும் புலனாய்வு செய்தல்

நிதியியல் உளவறிதல் பிரிவால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளின் நியதிகளில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், பதிவு செய்யப்பட் நிதிக் கம்பனிகள் மற்றும் பங்குத் தரகு நிறுவனங்கள் 2008 மே 31 வரை ரூ.500,000 அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயத்தினையும் மற்றும் 2008 யூன் 01 இலிருந்து ரூ.1,000,000அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணய கீழ்மட்ட அளவை விஞ்சுமிடத்து அத்தகைய காசுக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் இலத்திரனியல் நிதி மாற்றல்களை தொடர்ந்து அறிவிக்க வேண்டும். ஆய்விற்குரிய ஆண்டில் அறிக்கையிடும் நிறுவனங்களின் பரப்பெல்லை காப்புறுதிக் கைத்தொழிலையும் உள்ளடக்குவதற்கு விரிவுபடுத்தப்பட்டது. சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் நிறுவனங்களால் அறிவிக்கப்பட்ட தகவல்/தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கு வடிவமைக்கப்பட்ட **லங்காபின்** என்ற தகவல் தொழில்நுட்பமுறைமை இவ்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. இம்முறைமை இவ்வாண்டில் 2.5 மில்லியனுக்கும் கூடுதலான கொடுக்கல் வாங்கல்களை கூர்ந்தாராய்வதற்கும் 247 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்களைப் பரீட்சிப்பதற்கும் நிதியியல் உளவறிவுப் பிரிவை இயலச் செய்தது. மேலும் அறிக்கையிடும் நிறுவனங்கள் 90 சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் மீதான அறிக்கையைச் சமர்ப்பித்தன. ஆரம்ப புலன் விசாரணை நடத்திய பின்பு சந்தேகத்திற்கிடமான 12 கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தை நடைமுறைக்கிடும் முகவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களமும் குற்றத்தடுப்புப் புலன்விசாரணைத் திணைக்களமும் அத்தகைய இரு சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் தொடர்பான குற்றச்சாட்டுக்களைத் தாக்கல் செய்தன.

### 10.2 பணிப்புரைகளை /ஒழுங்கு விதிகளை வழங்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்

நிதியியல் உளவறிதல் பிரிவு பின்வரும் விதிகள்/பணிப்புரைகளை வழங்கியுள்ளதுடன் இவை இவ்வறிக்கையின் பகுதி III இல் விபரமாகத் தரப்பட்டுள்ளன.

(i) காப்புறுதிக் கைத்தொழிலுக்கு ''உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளரை நெருக்கமாகக் கவனித்தல்'' தொடர்பான விதிகள். இவ்விதிகள் காப்புறுதிக் கம்பனிகள் வாடிக்கையாளர்களின் நிதியியற் கொடுக்கல் வாங்கல்களின் தன்மை மற்றும் மூலங்கள் உள்ளிட்ட அவர்கள் பற்றிய விரிவான தகவலை வைத்திருப்பதைத் தேவைப்படுத்துகிறது. இத்துடன் காப்புறுதிக் கம்பனி அலுவலர் பயிற்சி, எழுத்து மூலமான கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட பணம் தூயதாக்கலுக்கு எதிரான நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

(ii) பணம் தூயதாக்கலுக்கு எதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதை ஒழித்தல் தொடர்பான சிறந்த ஆளுகையைப் பலப்படுத்தும் பொருட்டு ''உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்∴ வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கவனித்தல்'' தொடர்பாக கடுமையான வழிமுறைகளை ஏற்பாடு செய்வதற்கும் அறிவிக்கும் நிறுவனங்களை வேண்டிக் கொள்வதற்காக அறிவிக்கும் தேவைப்பாடுகள் மீது இணங்கிச் செல்வதிலுள்ள குறிப்பிட்ட குறைபாடுகளைத் தீர்ப்பதற்கும் நான்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

### 10.3 ஏனைய செயற்பாடுகள்

(i) **புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல்:** சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் தொடர்பான தகவலைப் பரிமாறிக் கொள்வதற்காக மலேசிய மத்திய வங்கி (பாங்க் நெகரா மலேசியா) மற்றும் கொரியாவின் நிதியியல் உளவறிதல் பிரிவுடன் மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 2008இல் கைச்சாத்திடப்பட்டன.

(ii) **நிறுவன ரீதியிலான இயலளவைக் கட்டியெழுப்புதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்**:

பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்துக்கான நிதியிடல் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை பகுப்பாய்வு செய்தல், கண்டுபிடித்தல் மற்றும் அறிவித்தல் தொடர்பாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள், பொலிஸ் திணைக்களம், கல்வி நிறுவனங்கள், மற்றும் பொதுமக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் 2,300 இற்கும் மேற்பட்ட பங்கேற்போரை உள்ளடக்கும் வகையில் மேற்கு, மத்திய, வடமத்திய மற்றும் தென் மாகாணங்களில் பதினைந்து பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் இவ்வாண்டில் நடத்தப்பட்டன.

(iii) **பன்னாட்டு உறவுகள்**

(அ) **எக்மன்ற் குழு:** எக்மன்ற் குழு என்பது பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியிடலைக் கண்டு பிடிப்பதற்கும் ஒழிப்பதற்குமாக உறுப்பினர் நாடுகளுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கும் தகவலைப் பகிர்ந்து கொள்வதற்குமாக 1995 யூனில் நிறுவப்பட்ட நிதியியல் உளவறிதல் பிரிவுகளின் அமைப்பாகும். 2006இல் எக்மன்ற் குழு உறுப்பினர்களுக்காக இலங்கையால்

சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்திற்கிணங்க 2008இல் அவதானி என்ற பதவிநிலை பெறப்பட்டது. உறுப்பினர் அந்தஸ்து 2009இல் எதிர்பார்க்கப் படுகிறது.

(ஆ) **பணம் தூயதாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக்குழு:** பணம் தூயதாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் குழுவின் உறுப்பினர் நாடாக இலங்கை 2008 யூலையில் நடைபெற்ற அதன் 11ஆவது வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டது. நிதியியல் உளவறிதல் பிரிவு உலகளாவிய பணம் தூயதாக்கலின் பலதரப்பட்ட புதிய முறைகள், உபாயங்கள் மற்றும் போக்குகளைக் கலந்தாலோசிப்பதற்காக 11ஆவது ஆசிய பசுபிக் குழுவின் வருடாந்த முற்படிவக் கோட்பாட்டுச் செயலணியை கொழும்பில் 2008 ஒத்தோபர் 27 - 29 காலப்பகுதியில் நடத்தியதுடன் இதில் 29 நாடுகளிலிருந்து 84 வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் இலங்கையிலிருந்து 41 பங்கேற்பாளர்களும் கலந்து கொண்டனர்.

## 11. நிதியியல் முறைமை உறுதிப்பாடு

மத்திய வங்கியின் குறிக்கோள்களில் ஒன்றான நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பேணும் வகையில் 2007 சனவரியில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களம் உருவாக்கப்பட்டது. இது இலங்கையின் நிதியியல் முறைமை பாதுகாப்பானது என்பதையும் நிதியியல் உறுதிப்பாட்டிற்கான அச்சுறுத்தல்கள் கண்டறியப்பட்டு குறைக்கப்படுவதையும் உறுதிப்படுத்துகிறது. எனவே, திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடுகளாக நிதியியல் முறைமைகளுக்கான இடர்நேர்வுகளை ஆரம்பக் கட்டத்திலேயே அடையாளம் காணுதல், நிதியியல் உறுதியின்மையினைத் தவிர்ப்பதற்கு தடுப்பு மற்றும் மீட்புக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது, மற்றைய வழிமுறைகள் தோல்வி காணுமிடத்து நெருக்கடிகளுக்கு தீர்வு காண உதவுவது என்பன காணப்படுகின்றன. நிதியியல் சமமின்மைகள் மற்றும் பாதிக்கக்கூடிய தன்மைகளின் சாத்தியமான கட்டமைப்பைக் கண்டறிவதற்காக முன்னோக்கிய அணுகுமுறையொன்று பின்பற்றப்படுகிறது.

இலங்கையின் நிதியியல் முறைமையானது வர்த்தக வங்கிகள், சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், நிதிக் கம்பனிகள், குத்தகைக் கம்பனிகள், முதனிலை வணிகர்கள், காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் தரகர்கள், பங்குத் தரகர்கள், ஓய்வூதிய மற்றும் சேம நிதியங்கள் மற்றும் நுண்பாக கொடுகடன் நிறுவனங்கள் போன்ற நிதியியல் நிறுவனங்களையும், பணச் சந்தை, முறிகள் சந்தை, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மற்றும் மூலதனச் சந்தை போன்ற நிதியியல் சந்தைகளையும் கொடுப்பனவு மற்றும் வர்த்தகப்படுத்தல் தீர்ப்பனவு முறை உள்ளடக்கிய நிதியியல் உட்கட்டமைப்பையும் கொண்டுள்ளது.

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களமானது நிதியியல் முறைமையிலுள்ள அனைத்து துறைகளின் அபிவிருத்திகளைக் கண்காணிப்பதற்கும், பகுத்தாராய்வதற்கும் என பரந்த முறைமையிலான அணுகுமுறையொன்றை மேற்கொண்டது. இது பேரண்ட மற்றும் உண்மைப் பொருளாதாரம், உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிதியியல் சந்தைகள், முறையியல் சார்ந்த முக்கியத்துவம்மிக்க நிதியியல் நிறுவனங்கள் மற்றும் பிரதான நிதியியல் உட்கட்டமைப்பின் தொழிற்பாடுகள் என்பனவற்றிலான அபிவிருத்திகளின் கண்காணிப்பைக் கட்டாயமாக்கியது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களம், திரண்ட நிதியியல் மற்றும் பொருளாதாரத் தரவுகளின் வீச்சுக்களை மதிப்பிட்டமையானது நிதியியல் முறைமையின் உறுதி மற்றும் சாத்தியமான பாதிக்கப்படும் தன்மைகளை அளவிடுவதற்கு உதவியது. இவை பேரண்டப் பொருளாதாரம், வைப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனங்கள், ஏனைய நிதியியல் நிறுவனங்கள், கம்பனிகள் மற்றும் வீட்டுடமையாளர்துறை என்பனவற்றுடன் தொடர்பான அளவுசார் நிதியியல் உறுதிப்பாட்டு ஆற்றல் குறிகாட்டிகளின் பரந்த வீச்சினை உள்ளடக்கியிருந்தன. இக் குறிகாட்டிகள் நிதியியல் துறையின் ஆரோக்கியத்தை மதிப்பிடுவதுடன் அதிகாரிகள் மற்றும் பங்குபற்றுநர்களுக்கும் உள்ளார்ந்த இடர்நேர்வுகளின் எச்சரிக்கையினை நேரகாலத்துடன் தெரிவிக்கும் முறைமையாகத் தொழிற்படுகின்றன. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களம் காலம் காலமாக வங்கித்தொழில்துறையின் ஒருங்கிணைந்த உறுதியைக் கண்காணிப்பதற்கு வங்கித்தொழில் உறுதிப்பாட்டுச் சுட்டெண்ணைத் (வஉசுட்டெண்) தொகுக்கிறது. வங்கித்தொழில் உறுதிப்பாட்டுச் சுட்டெண் மூலதன மட்டங்கள், இலாபகரத்தன்மை, சொத்தின் தரம், திரவத்தன்மை மற்றும் சொத்துப் பொறுப்பின் பொருந்தாத தன்மைகள் தொடர்பான குறிகாட்டிகளிலிருந்து தொகுக்கப்பட்டது. இத்துடன், கடுமையான நிகழ்வுகள் அல்லது சந்தை நிலைமைகள் காணப்பட்டபோதிலும் கொடுகடன், சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகளுக்கான உள்ளார்ந்த வெளிப்படுத்துகையை அளவிடுவதற்கு திணைக்களம் வங்கிச் சொத்துப்பட்டியலில் கிரமமான அழுத்தப் பரீட்சிப்புக்களையும் நடத்துகிறது.

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களமானது வருடாந்தம் வெளியிடப்படும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு அறிக்கையைத் தயாரிப்பதற்கும் பொறுப்புடையது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு இலங்கையின் நிதியியல் முறைமை, அது முகங்கொடுக்கும் இடர்நேர்வு என்பவற்றின் மதிப்பீட்டை வழங்குகின்றது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வு மேலும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் உள்ளடக்குகிறது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் நோக்கம் இடர்நேர்வுகளுக்கேற்ப ஆயத்தமாவதையும், முகாமை செய்வதையும் இயலச் செய்வதற்கு வேண்டிய தகவல்களை நிதியியல் நிறுவனங்களுக்கும் சந்தைப் பங்குபற்றுநர்களுக்கும் வழங்குதலும் விழிப்புணர்வை ஊக்குவித்தலும் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பாதிக்கும் விடயங்களையிட்டு விவாதித்தலுமாகும்.

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக்குப் பொறுப்பான துணை ஆளுநரால் தலைமை வகிக்கப்பட்ட நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவின் செயலகப் பணிமனையாகவும் தொழிற்படுகிறது. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு மாதாந்தம் கூடி நிதியியல் முறைமை உறுதிப்பாடு தொடர்பான பிரச்சனைகளை நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத் திணைக்களமூடாக நாணயச்சபைக்கு அறிக்கையிடுகிறது.

## 12. மனித வளங்கள் முகாமைத்துவம்

பயிற்சித் தொழிற்பாட்டை மனித வளத் திணைக்களத்துடன் ஒன்றுசேர்த்ததனூடாக வங்கியின் மனித வளங்கள் முகாமைத்துவம் 2008இல் மேலும் மேம்படுத்தப்பட்டது. 2008இன் மனித வளத் திணைக்களத்தால் நிறைவேற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகள் வங்கியின் உபாயத் திட்டத்தில் அதனால் இனங்காணப்பட்ட மனித வளத் தேவைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்திலான ஆட்சேர்ப்புக்கள், செயலாற்ற முகாமைத்துவம், பதவி உயர்வுகள், பயிற்சி மற்றும் அபிவிருத்தி, மற்றும் தொழில் சுழற்சிகளை உள்ளடக்கியிருந்தன.

### 12.1 மனித வள அமைப்பு முறை

2008 இறுதியில் வங்கியின் மொத்த அலுவலர் 554 உயர் வகுப்பு அலுவலர்கள், 538 உயர் வகுப்பல்லாத அலுவலர்கள், 150 சிற்றூழியர்கள் மற்றும் 62 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களுமாக 1,304 ஆக விளங்கியது. அலுவலரின் சராசரி வயது 43 வருடங்களாகும். அட்டவணை II.8 இல் காட்டப்பட்டவாறு உயர் அலுவலர் வகையிலுள்ள ஊழியர்களில் கிட்டத்தட்ட 85 சதவீதமானோர் முதல் பல்கலைப் பட்டத்தையோ அல்லது உயர் கல்விசார் தகைமைகளையோ கொண்டிருந்தனர். 2008இல் வங்கிப் பணியிலிருந்து 27 ஊழியர்கள் ஓய்வு பெற்றதுடன் 13 ஊழியர்கள் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தனர்.

### 12.2 ஆட்சேர்ப்பு

2008இல், மனித வளத் திணைக்களம் அடையாளம் காணப்பட்ட திறமைகளின் இடைவெளிகளை நிரப்புவதற்கு புதிய ஆட்சேர்ப்பிற்கு உயர் முன்னுரிமையை அளித்தது. இதற்கமைய 123 வங்கித் தொழில் உதவியாளர்கள் 16 ஓட்டுனர்கள் மற்றும் 63 சிற்றூழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். இத்துடன், பல திணைக்களங்களின் தொழில்நுட்பத் திறமைத் தேவைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு 1 முறைமை முகாமையாளர், 3 மென்பொருள் விருத்தியாளர், 3 நிதி முகாமையாளர்கள் மற்றும் 6 தகவல் தொழில்நுட்ப வியலாளர்களை (பயிற்சி பெறுபவர்) ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு 2008இல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன், 4 பெண் பாதுகாப்பு அலுவலர்கள், பெற்றோலிய புவிச்சரிதவியலாளர் மற்றும் நிதியியல் உளவறிதல் பிரிவுக்கான 1 அலுவலர் என்போர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். மனித வளத் திணைக்களம் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தால் கையாளப்பட்ட வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி செயற்றிட்டம் II இற்கு 7 கனிஷ்ட நிறைவேற்றுத்தரத்திலான அலுவலர்களின் ஆட்சேர்ப்பையும் வசதிப்படுத்தியது.

### 12.3 செயலாற்ற முகாமைத்துவ முறைமை

வங்கியின் செயலாற்ற மதிப்பீட்டு முறைமை சகல தனிபட்ட அலுவலர்களின் செயற்பாடுகளை வங்கியின் தொலைநோக்கு மற்றும் பணிகளுடன் இணைக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆண்டின் ஆரம்பத்தில், செயலாற்ற மதிப்பீட்டுச் செயல்முறை மேற்பார்வையாளரின் ஆலோசனையுடன் இலக்குக்கான பொருத்தமான நிறையுடன் ஊழியர்கள் தமது சொந்த இலக்குகளை ஏற்படுத்துவதுடன் ஆரம்பமாகிறது. இவ் இலக்குகளின் அடிப்படையில், ஒவ்வொரு இலக்கிற்கும் செலாற்ற தரமிடலை வழங்குவதன்மூலம் ஊழியர்கள் செயலாற்ற மதிப்பீட்டுப் படிவத்தின் சுயமதிப்பீட்டுப் பிரிவைப் பூர்த்தி செய்கிறார்கள்.

**அட்டவணை II - 8**
**மனிதவள அமைப்பு - 2008.12.31இல் உள்ளவாறு**

| ஊழியர்களின் வகைகள் | ஊழியர்களின் எண்ணிக்கை | | | சராசரி வயது | கல்வி/ தொழில்சார் தகமைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | | பட்டப்பின் படிப்பு முதற்பட்டம் தொழில்சார் தகமைகள் | பட்டப்பின் படிப்பு முதற்பட்டம் | பட்டப்பின் படிப்பு தொழில்சார் தகமைகள் | முதற்பட்டம் தொழில்சார் தகமைகள் | முதற் பட்டம் | தொழில்சார் தகமைகள் |
| **(1) உயர் அலுவலர் வகுப்பு** | | | | | | | | | | |
| (i) தரம் IV உம் அதற்கு மேலும் | 45 | 14 | 59 | 52 | 07 | 39 | 02 | 04 | 07 | 0 |
| (ii) தரம் III | 82 | 28 | 110 | 50 | 13 | 57 | 01 | 03 | 36 | 0 |
| (iii) தரம் II | 46 | 37 | 83 | 45 | 06 | 19 | 01 | 10 | 35 | 0 |
| (iv) தரம் I (முகாமைத்துவ பயிலுநர்கள் உட்பட) | 135 | 167 | 302 | 41 | 02 | 22 | 02 | 27 | 167 | 08 |
| **(2) உயர் அலுவலர் அல்லாதோர் வகுப்பு** | | | | | | | | | | |
| (i) தரம் V | 31 | 71 | 102 | 54 | 0 | 0 | 0 | 0 | 32 | 0 |
| (ii) தரம் IV | 61 | 51 | 112 | 48 | 0 | 0 | 0 | 0 | 07 | 02 |
| (iii) தரம் III | 87 | 20 | 107 | 48 | 0 | 0 | 0 | 0 | 06 | 03 |
| (iv) தரம் II (வங்கித்தொழில் உதவியாளர் உட்பட) | 110 | 77 | 187 | 32 | 0 | 0 | 0 | 0 | 01 | 01 |
| (v) தரம் I | 29 | 01 | 30 | 43 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| **(3) சிற்றூழியர் தரம்** | | | | | | | | | | |
| (i) தரம் I, II மற்றும் III | 143 | 07 | 150 | 36 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| **(4) ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள்** | | | | | | | | | | |
| (i) அனைத்து வகைகளும் | 51 | 11 | 62 | 40 | 0 | 06 | 0 | 0 | 0 | 0 |
| **மொத்தம்** | **820** | **484** | **1304** | **43** | **28** | **143** | **06** | **44** | **291** | **14** |

இறுதிச் செயலாற்ற மதிப்பிடலை அடையும் பொருட்டு ஊழியருக்கும் மேற்பார்வையாளருக்குமிடையே செயலாற்ற மதிப்பீட்டு கலந்தாலோசனை நடத்தப்படுகிறது. மேற்பார்வையாளர்களால் வழங்கப்பட்ட ஓட்டுமொத்த தரமிடல்கள் தரப்படுத்தப்பட்ட தரமிடல் அமைப்பைப் பேணுவதற்கு தொடர்பான திணைக்களத் தலைவர் மற்றும் முகாமைத்துவத்தால் மீளாய்வு செய்யப்படுகிறது. இத்துடன், ஊழியர், செயலாற்ற மதிப்பீட்டுப் படிவத்துடன் சேர்த்து கற்கை,பயிற்சி மற்றும் தொழில்சார் விருத்தித் திட்டங்களை அவரது மதிப்பீட்டிற்காக மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்கிறார்.

2007ஆம் ஆண்டுக்கான செயலாற்ற மதிப்பீடு 2008இல் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது. 2008ஆம் ஆண்டுக்காக ஏற்படுத்தப்பட்ட தனிநபர் மற்றும் திணைக்கள இலக்கும் இவ்வாண்டின் ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்ட நேர இலக்குகளின்படி ஒரே சமயத்தில் நிறைவேற்றப்பட்டது.

### 12.4 பதவியுயர்வுகள்

உரிய நேரத்தில் கிடைக்கவேண்டிய பதவியுயர்வை வழங்குவதனூடாக ஊழியர்களின் தொழில்சார் முன்னேற்றம் உறுதிப்படுத்தப்பட்டது. பதவியுயர்வுகளுக்கான மதிப்பீட்டுப் பிரமாணமாக பணியிலுள்ள ஆண்டுகளின் எண்ணிக்கை , செயலாற்ற மதிப்பீட்டுத் தரமிடல் மற்றும் திணைக்களத் தலைவரால் வழங்கப்பட்ட விதந்துரைப்புக்கள் பயன்படுத்தப்பட்டன. 2008இல் மொத்தமாக 177 அலுவலர்கள் உறுப்பினர்களுக்கு அவர்களது தரம், வகுப்பு மற்றும் பதவி என்பவற்றின் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. இதன் அடிப்படையில், 22 பிரதித் திணைக்களத் தலைவர்கள் பதில் மேலதிக திணைக்களத் தலைவர்களாக உயர்பதவி தரம் iv இற்குப் பதவி உயர்த்தப்பட்டவேளையில் பிரதித் திணைக்களத் தலைவர்கள் ஒருவர் திணைக்களத் தலைவராக உயர்பதவி தரம் iv இற்கு பதவி உயர்த்தப்பட்டார். இத்துடன் உயர் வகுப்புத் தரம் iii இலுள்ள 22 அலுவலர்கள் பிரதித் திணைக்களத் தலைவர்களாக பதவி குறித்துரைக்கப்பட்டனர். இத்துடன் உயர்பதவியல்லாத் தரம் iv மற்றும் V இலுள்ள 22 தனிப்பட்ட உதவியாளர்கள் உயர்பதவி தரம் i இற்கு பதவி உயர்த்தப்பட்டனர்.

### 12.5 பயிற்சி

2008இல் பயிற்சி பல்தேர்ச்சியுள்ள அலுவலரை விருத்தி செய்வதை நோக்கி கவனஞ் செலுத்தியது. விசேட பயிற்சிகளை வழங்குவதனூடாக அடையாளங் காணப்பட்ட இடைவெளிகளை நிரப்பும் நோக்குடன் சகல திணைக்களங்களில் தற்போதைய திறமைகளின் இடைவெளிகளை அடையாளங் காண்பதற்கான பயிற்சியை மனித வளத் திணைக்களம் பூர்த்தி செய்தது. இதன்படி, உள்நாட்டிலும் அதுபோல் வெளிநாட்டிலும் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் கருத்தரங்குகள் செயலமர்வுகள், மாநாடுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற குறுகிய கால நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பட்டப் பின் கற்கைகளையும் உள்ளடக்கியிருந்தன. இவ்வாண்டில் ஏறத்தாழ அத்தகைய 1,712 பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

#### (அ) வெளிநாட்டுப் பயிற்சி

வெளிநாட்டில் பிரபல்யமான பயிற்சி நிறுவனங்களால் நடத்தப்பட்ட பரந்த அளவிலான வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் பங்குபற்றுவதற்காக 2008இல் 150 அலுவலர்களுக்கு வங்கி வாய்ப்புக்களை வழங்கியது. சக அலுவலர்களிடையே வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களூடாக பெறப்பட்ட அறிவை வெளிப்படுத்தும் பொருட்டு, பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்ற அலுவலர்கள் வங்கியில் கிரமமான கருத்தரங்குகளை நடத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். இதன்படி, 33 கருத்தரங்குகள் புதன் கிழமைகளிலும் வியாழக்கிழமைகளிலும் நடத்தப்பட்டன. அத்துடன், குறுகிய கால பயிற்சியில் பங்குபற்றுவதனூடாக பெறப்பட்ட அறிவைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு அலுவலர்களால் இணங்கப்பட்ட விசேட ஒப்படைகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கு மூன்று உதவி ஆளுநர்கள் மற்றும் மனிதவளத் திணைக்களப் பணிப்பாளரை உள்ளடக்கிய பயிற்சி உபகுழு நியமிக்கப்பட்டது.

**அட்டவணை II - 9**
**குறுங்கால வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்கள் - 2008**

| துறை | பங்குபற்றியோரின் எண்ணிக்கை |
|---|---|
| பொருளாதாரம் மற்றும் கொடுப்பனவுக் கொள்கைகள் | 40 |
| நிதியியல் முறைமை மற்றும் ஒழுங்குவிதிகள் | 18 |
| இடர் முகாமைத்துவம் | 15 |
| நிதி | 19 |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் கொடுப்பனவு முறைமை | 15 |
| அரச படுகடன் முகாமைத்துவம் | 12 |
| மத்திய வங்கித்தொழில் | 09 |
| மனிதவள முகாமைத்துவம் | 13 |
| ஏனையவை | 09 |
| **மொத்தம்** | **150** |

#### (ஆ) பட்டப்பின் படிப்புக் கற்கைகள்

கடந்த ஆண்டுகளைப் போன்றே, வங்கி அதன் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்க நாடுகள், யப்பான், மற்றும் அவுத்திரேலியாவிலுள்ள அடையாளங் காணப்பட்ட பல்கலைக்கழகங்களிலிருந்து முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டம் ஆகிய இரு பட்டப்பின் படிப்பு தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அதன் அலுவலர்களுக்கான வசதிகளைத் தொடர்ந்து வழங்கியது. வங்கியில் புலமைத்துவத்தின் இயலளவை அதிகரிக்கும் நோக்கில் பட்டப்பின் படிப்புத் தகவலைப் பெறுவதற்கு அலுவலர்களுக்கு கூடிய வாய்ப்புக்களை கொடுப்பதற்காக பட்டபின் படிப்புக் கற்கைகள் மீதான தற்போதைய பிரமாணம் 2008இல் திருத்தி அமைக்கப்பட்டது. இதன்படி 2008இல் 04 அலுவலர்களுக்கு கலாநிதிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பளிக்கப் பட்டிருக்கையில் 05 அலுவலர்கள் முதுமாணிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தனர். முதுமாணிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர் 04 அலுவலர்கள் 2008இல் கடமையைப் பொறுப்பேற்றனர்.

#### (இ) உள்நாட்டுப் பயிற்சி

2008இல் வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் மற்றும் உள்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய பயிற்சி நிறுவனங்களால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்பதற்காக அலுவலர்களுக்கு 1,562 வாய்ப்புக்களை வழங்கியது. உள்நாட்டுப் பயிற்சியை வழங்குவதில், தகவல் தொழில்நுட்பம், தொடர்பூட்டல், நிதியியல் மற்றும் மூலதனச் சந்தைகள், வங்கி மேற்பார்வை, பேரண்டப் பொருளாதார

பகுப்பாய்வு, உள்ளகக் கணக்காய்வு, பொது முகாமைத்துவம் போன்ற துறைகளில் அறிவை அதிகரிப்பதற்கு முன்னுரிமைகள் வழங்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, 59 முகாமைத்துவப் பயிலுனர்கள் மற்றும் 123 வங்கித் தொழில் உதவியாளர்களுக்கான அடிப்படை நிகழ்ச்சித் திட்டங்கள் 2008இல் ஒழுங்கு செய்யப்பட்டன. வங்கி அலுவலர்களின் தொடர்பூட்டல் மற்றும் விரிவுரையாற்றும் தேர்ச்சிகளை அதிகரிக்கும் நோக்கில் 50 அலுவலர்களுடன் அறிமுகப்படுத்தும் களரி ஒன்றையும் உருவாக்கியது.

### 12.6 தொழில் சுழற்சி

பல தேர்ச்சிகள் கொண்ட அலுவலர்களை விருத்தி செய்தல் மற்றும் வங்கியின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் என்பவற்றின் நோக்குடன் திணைக்களமொன்றில் ஐந்து ஆண்டுகளுக்கும் கூடுதலாகப் பணியாற்றிய ஊழியர்கள் அலுவலர்களின் திறன், மட்டம் மற்றும் பலதரப்பட்ட திணைக்களங்களின் திறன் தேவைப்பாடுகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு இன்னுமொரு திணைக்களத்துக்கு மாற்றல் செய்யப்பட்டனர். இந் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், மொத்தமாக 98 அலுவலர் உறுப்பினர்கள் 2008 தொழில் சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டனர்.

### 12.7 தொழில்தருநர் - ஊழியர் உறவுகள்

மனித வளத் திணைக்களம் இவ்வாண்டில் தொழிற் சங்கங்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் இடையே நெருங்கிய உரையாடலின் பேணலை வசதிப்படுத்தியது. தேவையேற் படும்போது பிரச்சனைகளைக் கலந்துரையாடுவதற்கு முகாமைத்துவத்தைச் சந்திப்பதற்கு தொழிற் சங்கங்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. இதன்படி, இவ்வாண்டில் 6 கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இவ் உரையாடல் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுகள், பயிற்சி நலன்புரி மற்றும் பொது நிருவாகம் தொடர்பான பல எண்ணிக்கையான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு முகாமைத்துவத்தை வசதிப்படுத்தியது.

### ஆளுநர் பங்கு பற்றிய கூட்டங்கள்

1. சனவரியில் இந்தியாவில் நடைபெற்ற முகாமைத்துவக் கணக்கீடு பற்றிய உலக உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு
2. சனவரியில் ஹொங்கொங்கில் நடைபெற்ற சிறந்த சொத்துடைய நாட்டுக்கான முறியின் விருது வழங்கும் வைபவத்தில் பங்கேற்பதற்கு
3. சனவரியில் மலேசியா நெகரா வங்கியின் ஆளுநரைச் சந்திப்பதற்கு
4. சனவரியில் புறூனையிலுள்ள தறுசலாமில் கௌரவ நிதி அமைச்சருடனான கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு
5. பெப்புருவரியில் லண்டனிலுள்ள முதலீட்டாளர்களைச் சந்திப்பதற்கும் இலங்கைப் பொருளாதாரம் பற்றி கலந்துரையாடுவதற்கும்
6. 2008 மாச்சில் பாக்கித்தானிலுள்ள கராச்சியில் நடைபெற்ற 2ஆவது உலக முகாமைத்துவ உச்சி மாநாட்டில் உரையாற்றுவதற்கு
7. மாச்சில் இந்தோனேசியாவிலுள்ள ஜகர்த்தாவில் நடைபெற்ற 43ஆவது தென்கிழக்காசிய ஆளுநர் மாநாட்டிலும் தென்கிழக்காசிய ஆளுநர்கள் சபையின் 27ஆவது கூட்டத்திலும் கலந்து கொள்வதற்கு
8. ஏப்பிறலில் வாஷிங்டனில் நடைபெற்ற ப.நா.நிதியம்/உலக வங்கி குளிர்காலக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு
9. யூனில் லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய அரசுத் தலைவர்களின் பூர்வாங்க கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு
10. யூனில் மியன்மாரிலுள்ள நைபைரோ இல் நடைபெற்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் சபையின் 37ஆவது கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு
11. யூனில் துபாய் மற்றும் அபுதாபியிலுள்ள முதலீட்டாளர் களுடனான கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும் இலங்கைப் பொருளாதாரத்தின் செயலாற்றம் பற்றி கலந்துரையாடுவதற்கும்
12. செத்தெம்பரில் தாய்லாந்திலுள்ள பாங்கொக்கில் தென்கிழக்காசியா நியூசிலாந்து மற்றும் அவுத்திரேலியா ஆளுநர்களின் கருத்தரங்கு மற்றும் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு

### பதவி உயர்வுகள்/நியமனங்கள்

1. நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் திரு. எஸ். அபேசிங்க நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளராக பதவி வகிப்பதால் 2008 செத்தெம்பர் 23 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் முனைவர் பி. பீ. ஜெயசுந்தர இற்குப் பதிலாக நாணயச்சபை உறுப்பினராக வந்துள்ளார்.
2. பின்வரும் பதவி உயர்வுகள் மற்றும் நியமனங்கள் 2008 யூலை 3 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மேற் கொள்ளப்பட்டன.

   I. திரு. பி. ஜி. ஜயசூரியா பதவி உயர்த்தப்பட்டு பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

   II. திரு. எச்.எம். எகநாயக்க பதவி உயர்த்தப்பட்டு பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

   III. திரு.ஜீ.டி. குணரத்ன பதவி உயர்த்தப்பட்டு நாணயத் திணைக்களத்தின் பதில் மேலதிக கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

   IV. திரு.கே.டி.ரணசிங்க பதவி உயர்த்தப்பட்டு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

   V. திரு. டி. எம். ரூபசிங்க பதவி உயர்த்தப்பட்டு நிதியியல் உளவறிதல் பிரிவின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

   VI. திருமதி எஸ். குணரத்ன பதவி உயர்த்தப்பட்டு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

   VII. திரு. எம். ஜே. எஸ். அபேசிங்க பதவி உயர்த்தப்பட்டு புள்ளிவிபரவியற் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

VIII. திருமதி. ஆர்.ஏ.எஸ்.எம். தயாரத்ன பதவி உயர்த்தப்பட்டு தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

IX. திருமதி. கே. குணதிலக பதவி உயர்த்தப்பட்டு ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

X. திரு. யூ.எச்.ஈ. சில்வா பதவி உயர்த்தப்பட்டு ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XI. திரு. கே.பி.என்.எஸ். கருணாகொட பதவி உயர்த்தப்பட்டு வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XII. திரு. பி.வி.எல். நந்தசிறி பதவி உயர்த்தப்பட்டு நிதித் திணைக்களத்தின் பதில் மேலதிக முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

XIII. திருமதி. ரி.எம்.ஜே.வை.பி. பர்னாந்து பதவி உயர்த்தப்பட்டு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்

XIV. திரு. எஸ்.ஜே.ஏ. கந்தகம பதவி உயர்த்தப்பட்டு தொடர்பூட்டல் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XV. திரு. டி.ஏ.ஜீ.கே. விஜேதுங்க பதவி உயர்த்தப்பட்டு உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XVI. திரு. ஜே.பி.ஆர். கருணாரத்தன பதவி உயர்த்தப்பட்டு செயலகத் திணைக்களத்தின் பதில் மேலதிகச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

XVII. திரு. ஏ.ஆர்.கே. விஜேசேகர பதவி உயர்த்தப்பட்டு மனிதவளத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XVIII. திரு. சி.என். விஜேசேகர பதவி உயர்த்தப்பட்டு பொதுப்படுகடன் திணைக்களத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XIX. திரு. பி.டபிள்யூ. டி என். ஆர். றொட்றிக்கோ பதவி உயர்த்தப்பட்டு கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XX. திரு.ஏ.ஏ.எம். தாசிம் பதவி உயர்த்தப்பட்டு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XXI. திரு.ஆர்.ஜே. பெரேரா பதவி உயர்த்தப்பட்டு பணிமனைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XXII. திரு.எவ்.சி.எஸ். மென்டிஸ் பதவி உயர்த்தப்பட்டு முகாமைக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

XXIII. திரு.பி.எச்.ஓ. சந்திரவன்ச பதவி உயர்த்தப்பட்டு வங்கியல்லா நிதியியல் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

3. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் மேலதிகக் கட்டுப்பாட்டாளர் திரு.யூ.பி. அலவத்தகே 2008 ஏப்பிறல் 20இலிருந்து 2008 ஏப்பிறல் 30 வரையான காலப்பகுதிக்கு வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் மேலதிகப் பணிப்பாளராகவும் 2008 மே 1இலிருந்து பதில் பணிப்பாளராகவும் 2008 நவெம்பர் 1இலிருந்து பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

4. வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் பணிப்பாளர் முனைவர் டபிள்யூ.எம். ஹேமசந்திர 2008 மே 01 இலிருந்து கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து 2008 யூலை 24 இலிருந்து கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டார்.

5. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திரு.எஸ்.எஸ்.ரத்னாயக்க 2008 மே 10 இலிருந்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்

6. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திரு.பீ.டி.டபிள்யூ. ஏ சில்வா 2008 யூன் 03 இலிருந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

7. மனிதவளத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திரு. எஸ். லங்காதிலக 2008 யூன் 03 இலிருந்து மனிதவளத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

8. பொதுப்படுகடன் திணைக்களத்தின் பதில் கண்காணிப்பாளரும் பதிவாளருமான திரு. சி.ஜே.பி சிறிவர்த்தன 2008 யூன் 03இலிருந்து பொதுப்படுகடன் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் கண்காணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

9. சம்பளமற்ற விடுப்பில் சென்ற மேலதிகப் பணிப்பாளர் திரு.ஏ.ஈ.எட்டியாராச்சி 2008 யூலை 21 இலிருந்து செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் பதில் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.

10. நலன்புரித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திருமதி. எஸ்.என். பெரேரா 2008 யூலை 22 இலிருந்து நலன்புரித் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

11. செலாவணிக் கட்டுப்பாட்டாளரான திரு.டி. வசந்த 2008 யூலை 21ஆம் நாளிலிருந்து ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் சிறப்ப அலுவலராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 2008 யூலை 24ஆம் நாளிலிருந்து ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

12. தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி ஜே.பி. மாம்பிட்டிய 2008 ஓகத்து 18இலிருந்து கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

13. தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் பதில் மேலதிகப்பணிப்பாளர் ஆர்.ஏ.எஸ்.எம். தயாரத்ன 2008 ஓகத்து 18இலிருந்து கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

14. செயலகத் திணைக்களத்தின் பதில் மேலதிகச் செயலாளர் ஜே.பி.ஆர். கருணாரத்ன 2008 திசெம்பர் 26 இலிருந்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

**ஓய்வுபெறல்**

1. தனிச் சிறப்பு வாய்ந்த பொருளியலாளரும் நிருவாகியும், உயர்தர தொழில்சார் நிபுணத்துவத்தினை மத்திய வங்கி பேணிக் கொள்ள வழிகாட்டியாக இருந்தவருமான முனைவர் பி.பீ. ஜெயசுந்தர நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து 2008 செத்தெம்பர் 23ஆம் நாளிலிருந்து நாணயச் சபையின் உறுப்பினராக தொழிற்படுவதிலிருந்தும் நிறுத்தப்பட்டார். .
2. உதவி ஆளுநர் திரு.வை.எம்.டபிள்யூ.பீ. வீரசேகர 2008 சனவரி 14 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
3. நிதி அமைச்சுக்கு திறைசேரிக்கான பிரதிச் செயலாளராகவும் மூத்த பொருளாதாரக் கொள்கை ஆலோசகராகவும் விடுவிக்கப்பட்ட உதவி ஆளுநர் திரு.ஆர்.ஏ. ஜெயதிஸ்ஸ 2008 நவெம்பர் 21இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
4. நலன்புரித் திணைக்களப் பணிப்பாளர் திரு.எம்.வி.எம். பர்னாந்து 2008 சனவரி 22 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
5. பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. பி.பி. சிறிசேன 2008 பெப்புருவரி 04 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
6. முறிவடைந்த நிதிக் கம்பனிகள் தொடர்பான விடயங்களைப் புலனாய்வு செய்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் செயலாளராக விடுவிக்கப்பட்டிருந்த திருமதி. ஜே.ஏ.என். திஸநாயக்க 2008 பெப்புருவரி 19ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
7. பணிமனைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் திரு.எச்.எம்.பி. ஹேரத் 2008 பெப்புருவரி 25 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
8. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. கே.ஆர்.எம். சிறிவர்த்தன 2008 ஓகத்து 16இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.
9. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு.எம்.எம். அத்தநாயக்க 2008 செத்தெம்பர் 10 இலிருந்து ஓய்வுபெற்றார்.
10. நாணயத் திணைக்களத்தின் கண்காணிப்பாளர் திரு.ஏ.ஜீவந்தர 2008 செத்தெம்பர் 26 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
11. ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் கண்காணிப்பாளர் திரு. எல்.வை. தர்மசேன 2008 ஒத்தோபர் 09இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

**விடுவிப்பில்/ விடுப்பிலுள்ள அலுவலர்கள்**

1. உதவி ஆளுநர் திரு.கே.ஜி.ஜி.டி. தீரசிங்க பன்னாட்டு நாணய நிதியத்திற்கு மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக
2. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு.ஜே.பி.ஆர். கருணாரத்ன பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சுக்கு (பகுதிநேர அடிப்படையில்)
3. திரு. எஸ்.ஆர். ஆட்டிக்கல திணைக்களப் பிரதித் திணைக்களத் தலைவர் நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
4. செல்வி கே.ஜி.ஆர்.கே. தீரசிங்க, திணைக்களப் பிரதித் திணைக்களத் தலைவர் திட்டமிடல் அமைச்சுக்கு
5. திரு.பி. லொக்குறானமுக, உயர் அலுவலர் தரம் III, நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
6. செல்வி. ரி.எம்.ஆர்.பி. யட்டிகமன, உயர் அலுவலர் தரம் II, நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
7. திரு. எச்.பி.எம். வசந்தகுமார, உயர் அலுவலர் தரம் II, நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
8. திரு.எம். மகிந்தசாலிய உயர் அலுவலர் தரம் II, நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
9. திருமதி. டி.ஜி.டி.ஐ. ஏகநாயக்க உயர் அலுவலர் தரம் I, நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
10. திரு. ஈ.டபிள்யூ.கே.ஜே.பீ. எகெலப்பொல உயர் அலுவலர் தரம் I அலுவலர் நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
11. திரு.கே.ஏ.யூ.எஸ்.கே. திலகரத்ன, உயர் அலுவலர் தரம் I, நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
12. திருமதி. டி.கே. உயன்கொடகே உயர் அலுவலர் தரம் I, நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
13. திருமதி. எச்.எம்.என்.எஸ். குணவர்த்தன, சட்ட அலுவலர் (ஒப்பந்தம்) நிதி திட்டமிடல் அமைச்சுக்கு
14. திருமதி. ஆர். தீரசிங்க, உயர் அலுவலர் தரம் IV அலுவலர் சம்பளமற்ற விடுப்பில்.

## 13. தகவல் தொழில்நுட்பம்

இவ்வாண்டில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் முக்கிய கவனம் யாதெனில் அதன் பணி வழங்குபவர் மரபு வழியான பங்கிலிருந்து விலகி வங்கித் தொழிற்பாடுகளுக்கான நவீன தீர்வுகளை அறிமுகப்படுத்தும் வியாபாரத்தை இயலச் செய்பவராக தொழிற்படுவதாகும். இதன் விளைவாக, வியாபாரத்தை இயலச் செய்பவராக தொழிற்படும் குறிக்கோளை அடைவதற்கு திணைக்களத்தின் முக்கிய கடமைகள் நான்கு (4) விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

1. வியாபாரச் செயற்றிட்டங்களின் அபிவிருத்தி மற்றும் பேணல்
2. தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம்

3. தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு அபிவிருத்திகள்

4. நிதியியல், அரசதுறைக்கு ஆலோசகராக செயற்படல்

### 13.1. வியாபாரச் செயற்றிட்டங்களின் அபிவிருத்தி மற்றும் பேணல்

நடைமுறையிலிருக்கும் பிரயோகங்களின் பேணலில் கவனம் செலுத்தும் அதேவேளை வங்கியின் முக்கிய குறிக்கோள்களை அடைவதற்கும் செலாவணிக் கட்டுப்பாடு, ஊழியர் சேம நிதியம், பொதுப்படுகடனின் முகாமைத்துவம், பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் மற்றும் பணம் தூயதாக்கலுக்கெதிரான நடவடிக்கை ஆகிய துறைகளில் முகவர் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் திணைக்களம் பயன்படுத்துநர் சிநேகபூர்வமான பாதுகாப்பான மற்றும் செயல்விளைவு கொண்ட வெப்தளத் தீர்வுகளை அறிமுகப்படுத்தியது.

இதன்படி, 2007இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த செயற்றிட்ட அபிவிருத்தி எண்ணக்கரு பின்வருவனவற்றுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

(அ) வெளிநாட்டுச் செலாவணி வணிகர்களிடமிருந்து வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் மீதான தரவைச் சேகரிப்பதற்கு **'பொறெக்ஸ் நெற்'** என அழைக்கப்படும் வெளிநாட்டு செலாவணி வலையமைப்பு என்ற புதிய வெப் பிரயோகத்தை நடைமுறைப்படுத்துவதற்கு செலாவணி கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு

(ஆ) **'லங்கா பின்'** என அழைக்கப்படும் இலங்கை நிதி முறைமையூடாக வர்த்தக வங்கிகளால் சமர்ப்பிக்கப்பட்ட ஐயத்துக்கிடமான மற்றும் காசுக் கொடுக்கல் வாங்கல்களை பகுப்பாய்வு செய்வதற்கு/ அறிவிப்பதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவுக்கு

(இ) ஓரிரவு மீள்கொள்வனவு நேர்மாற்றல்களை தொகுதித் தரவு மாற்றலாக தீர்ப்பனவு செய்வதற்கும் முதனிலை வணிகர்களுக்கான புதிய அறிக்கையிடல் பொறிமுறையை அறிமுகப்படுத்துவதற்கும் பொதுப்படுகடன் திணைக்களத்துக்கு

(ஈ) வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களிடமிருந்த பணச் சந்தை வீதங்களை சேகரிப்பதற்கும், அறிவிப்பதற்கும் உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் மற்றும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்துக்கு

அத்துடன், வெப்தளத்தை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்துக்கான திரவத்தன்மை கண்காணிப்பு முறைமை மற்றும் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்துக்கான வெளிநாட்டு செலாவணி கொடுக்கல் வாங்கல் கண்காணிப்பு முறைமை என்பவற்றுக்கான மென்பொருள் அபிவிருத்தி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வங்கியுடனான திறந்த சந்தை தொழிற்பாடுகளில் மத்திய வங்கிப் பிணையங்களை துணையாதரவுப் பிணையமாக வைக்கும் பொருட்டு தற்போதுள்ள இரண்டாந்தரச் சந்தை வர்த்தகப்படுத்தல் முறைமை திருத்தி அமைக்கப்பட்டது.

தீவிர ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வேலையின் பின்னர் மறைமுக ஆவண முகாமையாளரைப் பயன்படுத்தி இவ்வாண்டில் வங்கிக்கான இலத்திரனவியற் கொள்கை நூலகம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஊழியர் சேம நிதிய முறைமையை தொடர்ந்து பேணியதுடன் ஆண்டு முழுவதும் அநேகமாக 100 சதவீத முறைமைக் கிடைப்பனவை அடையக் கூடியதாகவிருந்தது. ஊழியர் சேம நிதிய வெப்தளம் உறுப்பினர்கள் மற்றும் தொழில்தருநர்கள் ஆகிய இரு துறையினருக்கும் கூடிய பணிகளை வழங்கும் குறிக்கோளுடன் விரிவுபடுத்தப்பட்டது. செல்லிடத் தொலைபேசிப் பாவனைகளில் ஏற்பட்ட விசாலமான பரப்பெல்லையைக் கவனத்திற் கொண்டு செல்லிடத் தொலைபேசி தொடர்பூட்டல் வழிமுறைகளைப் பயன்படுத்தி குறும் செய்தி அடிப்படையில் உறுப்பினர் தகவலைப் பெறும் பணி இவ்வாண்டில் தொடக்கி வைக்கப்பட்டது. ஊழியர் சேம நிதியத்தின் உள்ளக தொழிற்பாடுகளை மீள இயக்குவதற்கான மென்பொருள் அபிவிருத்தி இவ்வாண்டில் ஆரம்பமானது. மீள் இயக்கப்படுவதன் குறிக்கோள் யாதெனில் வெவ்வேறான துணை முறைமைகளிடையே கூடிய ஒருங்கிணைப்பு மூலம் வினைத்திறனையும் பயனுறுதியையும் அதிகரிப்பதற்காக தற்போதைய வியாபார செயல்முறைகளை மேம்படுத்துவதாகும். ஊழியர் சேம நிதிய வீடமைப்புக் கடன் வழங்கும் வசதியை விரைவுபடுத்துவதற்கு தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் பன்முகப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன் சான்றிதழ் வழங்கும் முறைமையை அறிமுகப்படுத்தியதுடன் ஊழியர் சேம நிதிய நன்மைபெறுவோர் அவர்களின் மீளளிப்புகளை அரச பிணையங்களில் முதலிடுவதை வசதிப்படுத்துவதற்கான முறைமையையும் விருத்தி செய்தது.

திணைக்களத்தால் வழங்கப்பட்ட சகல மென்பொருள் விருத்திச் செயற்றிட்டங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பணிகளுக்கான தொழிலின் விலையிடல் முறைமையை அறிமுகப்படுத்தியமை இவ்வாண்டின் முக்கிய மைல்கல்லாகும். இதன்படி, முறைமை ஆய்வு அல்லது தேவைப்பட்ட பணிகளின் வழங்கல் பூர்த்தியடைந்ததும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் செயற்றிட்ட/ பணிச் செலவை வாடிக்கையாளர் திணைக்களங்களுக்கு சமர்ப்பித்துள்ளது.

### 13.2 தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம்

கொடுப்பனவுகளின் அதேநேர தீர்ப்பனவுக்கான ஆகக்கூடிய கிடைப்பனவை உறுதிப்படுத்துவதற்கு முறைமை ரீதியில் முக்கியமான கொடுப்பனவு முறைமைகள் மற்றும் தொடர்பான உள்ளக இணைப்பு மென்பொருளைப் பேணுதல் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாகும். 2008 திசெம்பர் 31ஆம் நாளில் தகவல் தொழில்நுட்ப திணைக்களம் கொடுப்பனவு முறைமைகளுக்கான 99.6 சதவீத உரிய நேரத்தை அடையக்கூடியதாக இருந்தது.

வங்கியின் தகவல் தொழில்நுட்ப முறைமைகளுக்கு சேதம் விளைவிக்கும் முயற்சிகளைக் கண்டுபிடிப்பதற்கும் தவிர்ப்பதற்கும் வங்கி வலையமைப்பு நுழைவு வழியில் நிறுவப்பட்ட அனுமதியின்றி அணுகும் தன்மையைத் தவிர்க்கும் முறைமை மேலும் பலப்படுத்தப்பட்டது. தகவல் தொழில்நுட்ப பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்கள் தொழில்நுட்பத் தீர்வுகளால் மட்டும் குறைக்க முடியாததால் நிறுவன ரீதியிலான தகவல் பாதுகாப்புக் கொள்கை மீளாய்வு செய்யப்பட்டு பூரணப்படுத்தப்பட்டது.

மேலும், வங்கி அலுவலர்களிடம் தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் விதத்தில் பாதுகாப்பு தொடர்பான நூலொன்று 3 மொழிகளிலும் தயாரிக்கப்பட்டது.

வங்கியின் தடங்கலற்ற வியாபாரத்திட்டம் இவ்வாண்டில் பூரணப்படுத்தப்பட்டதுடன் லங்கா செட்டில் பங்கேற்பாளர்கள், வெளிநாட்டு இணைத்தரப்பினர் மற்றும் உள்ளகத் திணைக்களங்களின் பங்கேற்புடன் இரு தடங்கலற்ற வியாபாரத்திட்டப் பயிற்சிகள் அனர்த்த மீட்புத் தலத்திலிருந்து நடத்தப்பட்டது. சார்க் உச்சி மாநாட்டுக் காலப்பகுதியான 2008 யூலையில் வங்கித் தொழிற்பாடுகள் தூர இடங்களில் அமைந்துள்ள அனர்த்த மீட்புத் தலத்திலிருந்து தொடர்ச்சியாக 5 நாட்கள் கொண்ட காலப்பகுதிக்கு நடத்தப்பட்டது. தடங்கலற்ற வியாபாரத்திட்டத்தின் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு சகல உரிய அலுவலர் உறுப்பினர்களுக்கும் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட துண்டுப்பிரசுரம் வெகுவிரைவில் வழங்கப்படும். தகவல் தொழில்நுட்ப திணைக்கள அலுவலர்கள் லங்கா செட்டில் பங்கேற்பாளர்களின் தடங்கலற்ற வியாபாரத்திட்ட பரீட்சிப்பு மீளாய்வுகளில் தீவிரமாகப் பங்குபற்றினர்.

இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் எடுப்பான தன்னியக்கச் சூழலில் நிறைவேற்றப்படுவதால் பயன்பாட்டாளர்களின் விசாரணைகளுக்கான விரைவான பதிலிறுப்பு மிகவும் முக்கியமானதாக வந்துள்ளது. 0700 மணியிலிருந்து 1830 மணி வரை தொழிற்படும் தொழில்நுட்பத் தகவல் உதவிப்பீடம் அவர்களின் முக்கிய தேவைப்பாடுகளை நிறைவேற்றுகிறது. தகவல் தொழில்நுட்ப சம்பவங்கள் மற்றும் உதவிப்பீட விசாரணைகளைப் பதிவு செய்வதற்கும், கண்காணிப்பதற்கும், பதிலிறுப்பதற்கும் திணைக் களத்தினுள்ளேயே விருத்தி செய்யப்பட்ட பிரயோகம் ஆகிய 'பிரச்சனையைப் பின்தொடரும் முறை' நடைமுறைப் படுத்தப்பட்டது.

### 13.3 தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு விருத்திகள்

வங்கிகள் மற்றும் முதன்மை வணிகர்களின் திறைசேரி அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்ட மத்திய வங்கியின் பரந்தளவிலான வலையமைப்பு நிதியியல்துறைக்கு எதிர்பார்க்கப்பட்ட பணிகளை வழங்குவதற்காக நிருவகிக்கப்பட்டது. கடந்த ஆண்டுகளில், முன்பு மத்திய வங்கியால் சுமக்கப்பட்ட குத்தகை இணைப்புகளின் பேணல் செலவை பங்கேற்கும் நிறுவனங்களுக்கு மாற்றல் செய்வதற்கான ஒழுங்குமுறைகள் இறுதிப்படுத்தப்பட்டன. இத்துடன், உட்புகும் பாதுகாப்புத் தடுப்பு முறைகள் மற்றும் அனுமதியின்றி அணுக முடியாத தன்மையை கண்டுபிடித்தல்/ தவிர்த்தல் முறைமைகள் போன்ற சாதனங்களை நிறுவுவதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் உள்ளக வலையமைப்பு தொடர்ந்து பலப்படுத்தப்பட்டது. அறிவுக் கலாச்சாரத்தை ஊக்குவித்து தகவலின் உதவியுடன் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட அறிவிக்கும் நோக்கங்களுக்காக வங்கியின் வெப் பிரயோகங்களை அடைவதற்கு நிதியியல் நிறுவனங்களுக்கான விரைந்த அர்ப்பணிப்புள்ள இணைப்பை வைத்திருப்பதற்கான தேவையைத் தீர்ப்பதற்கும் வெப் தேடலுக்கான உயர் கேள்வியைக் கருத்திற் கொண்டு இணையத்தள இணைப்பின் இயலளவு செக்கனுக்கு 2 மெகா பைற்றுக்கு விரிவாக்கப்பட்டது. தலைமை அலுவலகத்திற்கும் அனர்த்த மீட்புத் தலத்திற்குமிடையே உயர் கிடைப்பனவையும் விரைந்த தரவு மாற்றலையும் அடைவதற்கு மெற்றோ எதநெற் இணைப்பினைப் பயன்படுத்தி தலைமை அலுவலகத்திலிருந்து அனர்த்த மீட்புத்தலத்திற்கான இணைப்பு செக்கனுக்கு 4 மெகா பைற்றுக்கு தரமுயர்த்தப்பட்டது.

பதிலிறுக்கும் மென்பொருள் மற்றும் தொழிற்பாட்டு முறைமைகளைத் தரமுயர்த்துவதன் மூலம் முறைமைகளின் விரைவில் மீளும் திறன் இவ்வாண்டில் மேலும் மேம்பாடடைந்தது.

அதேநேர மொத்தத் தீர்ப்பனவுகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவுகளுக்கான நிதியியல் செய்தியனுப்பும் வலையமைப்பாக சுவிப்ற் தொழிற்படுகிறது. சுவிப்ற் அதன் தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்பை தரமுயர்த்துவதற்கான செயற்றிட்டத்தைத் தொடங்கியது. இச் செயற்றிட்டம் இரண்டு கட்டங்களைக் கொண்டிருந்தது. சுவிப்ற்நெட் கட்டம் II இவ்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டதுடன் சுவிப்ற்நெட்டின் மேம்பட்ட பாதுகாப்பு மற்றும் பணிகளைப் பயன்படுத்துவதற்கு வங்கியை இயலச் செய்தது. மேலும், வங்கியின் அனர்த்த மீட்புத்தலத்தின் இரண்டாந்தர சுவிப்ற்நெட் இணைப்பு, சுவிப்ற் இற்கான இணைப்புச் செலவை சேமிப்பதற்காக இலங்கை சுவிப்ற் பயன்படுத்துனர் தொகுதியால் உருவாக்கப்பட்ட இலங்கையின் சுவிப்ற் பணிப் பணியகத்தினூடாக நேரடி இணைப்பிலிருந்து மறைமுக இணைப்பிற்கு மாற்றப்பட்டது.

### 13.4 நிதியியல்/ அரசதுறைக்கு ஆலோசகராகச் செயற்படல்

திணைக்களம் தேசிய நலன் கொண்ட செயற்றிட்டங்களுக்கு அதன் ஆலோசனைப் பணியையும் தொழில்நுட்ப உதவியையும் தொடர்ந்து வழங்கியது. 2009 இலிருந்து நாட்டின் அதேநேர சில்லறைக் கொடுப்பனவு முறையாக விளங்கும் இலங்கை பொது கொடுப்பனவு ஆளியை நடைமுறைப்படுத்துவதில் நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்கான பொருத்தமான தீர்வைத் தேர்ந்தெடுப்பதற்கும் சான்றிதழ் வழங்கும் அதிகாரசபையை அறிமுகப்படுத்துவதற்கும் தொழில்நுட்ப முன்மொழிவுகளை மதிப்பிடுவதில் திணைக்களத்தின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

தகவல் தொழில்நுட்ப அலுவலர்கள் இலத்திரனியல் ஊடாக பங்களிப்புச் சேகரிப்பை ஊக்குவிக்கும் விளக்கவுரைகள் மற்றும் ஊழியர் சேம நிதியம் மற்றும் தொழில் திணைக்களத்திற்கான செயலமர்வுகளில் தீவிரமாகப் பங்குபற்றியதுடன் ஊழியர் சேமநிதிய மீள்பதிவு செயற்றிட்டத்துக்குத் தேவையான தொழில்நுட்ப உதவியையும் வழங்கியது.

வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தில் வள ஆளணியினர்களாக அலுவலர்களை விடுவிப்பதன் மூலம் இலங்கை மத்திய வங்கி அலுவலர்களிடையேயும் அதுபோல் நிதியியல் நிறுவனங்களின் அலுவலர்களிடையேயும் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப போட்டித்தன்மைகளைத் தொடர்ச்சியாகப் புதுப்பிப்பதற்கு திணைக்களம் ஈடுபட்டதுடன் திணைக்கள இணைப்பு அலுவலர்களுக்கான உள்ளக பயிற்சி விழிப்புணர்வுத் தொடர்களையும் நடத்தியது.

## 14. பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

இலங்கை ரூபாவின் வெளிநாட்டு உறுதித் தன்மையினைப் பேணுவதை வசதிப்படுத்துவதற்கும், நாட்டின் பன்னாட்டுக்

கொடுக்கல் வாங்கல்களில் சாத்தியமானளவிற்கு கூடியளவு சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கும் நாணயச் சட்ட விதியால் தேவைப்படுத்தப்பட்டவாறு நாட்டின் அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் பேணப்படுவதை முகாமை செய்யும் பொறுப்பு பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதேவேளை, உள்நாட்டில் வெளிநாட்டு செலாவணிச் சந்தையின் சுமூகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக உள்நாட்டுச் செலாவணிச் சந்தையையும் திணைக்களம் கண்காணிக்கின்றது.

### 14.1 வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவம்

2008ஆம் ஆண்டு உலகளாவிய முதலீட்டாளர்களுக்கு சவால்மிக்க ஆண்டாக விளங்கியது. துணை வாடிக்கையாளர் ஈட்டுச் சந்தை நெருக்கடியுடன் உலகளாவிய நிதியியல்துறை 2007இலிருந்து முன்னெப்போதுமில்லாத சவால்களை எதிர்கொண்டதுடன் உலகளாவிய பொருளாதாரத்தின் எஞ்சிய பகுதிக்கு அளவுக்கதிகமான விளைவுகளை ஏற்படுத்தியது. இதன் விளைவாக, உலகளாவிய வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் மோசமடைந்ததுடன் நிதியியற் சந்தைகள் முன்னெப்போதுமில்லாத பிரச்சனைகளை எதிர்கொண்டன. இது வலு நெருக்கடி மற்றும் உணவு நெருக்கடியுடன் இணைந்து 2008இல் முக்கிய பொருளாதாரங்களில் மந்தநிலை அச்சங்களை விளைவித்தது. இவ்வாண்டில் உலகளாவிய பல வர்த்தக வங்கிகள் தரம் குறைக்கப்பட்டன. நிதியியற் சந்தைக் குழப்பநிலை, உலக வட்டி வீதங்கள் அதுபோல் சொத்து விலைகளைத் தொடர்ச்சியாக அச்சுறுத்தி தங்கம் தவிர்ந்த பொருட்களின் விலைகளில் கடுமையான வீழ்ச்சியை ஏற்படுத்தியது. பாரிய நிதியியல் சந்தைகளில் ஏற்பட்ட வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்கள் கடனிறுக்கத் தவறியமையால் ஏற்பட்ட கடன் வழங்குவதற்கான பரந்தளவான தயக்கம் வர்த்தக வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள வெளிநாட்டு நாணய கொடுகடன் வழிமுறைகளை குறிப்பிடத்தக்களவில் தடை செய்தது. பன்னாட்டுச் சந்தையில் உருவான திரவத்தன்மை மற்றும் கொடுகடன் இறுக்கமும் இலங்கைத் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளிலான வெளிநாட்டு உடைமைகளின் மீளப் பெறல்களை ஏற்படுத்தி இலங்கை ரூபாவின் செலாவணி வீதம் மீது மேலதிக அழுத்தத்தை உருவாக்கியது. இதனால், ஒதுக்கு முகாமைத்துவம் 2008ஆம் ஆண்டில் சவால்மிக்க பணியாக விளங்கியது.

வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் முதலீடுகள் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக் குழுவின் மேற்பார்வையின் கீழ் நாணயச்சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவ வழிகாட்டல்களின்படி மேற்கொள்ளப்பட்டது. ஐக்கிய அமெரிக்க டொலர்கள், யூரோ, ஸ்ரேலிங் பவுண், அவுத்திரேலிய டொலர்கள் போன்ற நாணயங்களையும் தங்கத்தையும் உள்ளடக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் நிலையான வருமானமுள்ள பிணையங்கள் மற்றும் பணச் சந்தைக் கருவிகள் ஆகிய இரு சொத்து வகைகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. வங்கியின் நிலையான வருமானப் பிணையங்களின் சொத்துப்பட்டியல் உயர்ந்தளவில் தரமிடப்பட்ட நாட்டிற்கான அரச பிணையங்கள், அரசினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்கள் மற்றும் அரச முகவர்களினதும் நாடுகளினதும் அதிகாரங் களுக்கப்பாற்பட்ட நிறுவனங்களினதும் பிணையங்கள் என்பவற்றினை உள்ளடக்கியிருந்தன. நிலையான வருமானமுள்ள பிணையங்கள் மற்றும் பணச்சந்தை இரண்டிலுமான முதலீடுகள் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல்கள் அத்தகைய சொத்துக்கள் தொடர்பான பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் வருவாய் என்பவற்றுக்கு உரிய கவனம் செலுத்தி முகாமைத்துவத்தால் ஒப்புதலளிக்கப்பட்ட வரையறைகள் அமைப்பினுள் உயர்ந்த தரமிடப்பட்ட மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட இணைக்கிணைத்தரப்பினூடாக மட்டும் மேற்கொள்ளப்பட்டன. வங்கியின் திரவத்தன்மைத் தேவைப்பாடுகள், படுகடன் பணி மீள் கொடுப்பனவுகள், இடர்நேர்வு முகாமைத்துவத்தின் வரையறுக்கப்பட்ட பண்புகள், வருமானத்தை உருவாக்கும் ஆற்றல்கள் மற்றும் நாணயச்சபையின் விசேட பணிப்புரைகள் என்பன ஒதுக்குகள் சொத்துப்பட்டியலின் சொத்து மற்றும் நாணயத்தின் உள்ளடக்கத்தைத் தீர்மானிப்பதில் முக்கிய விடயங்களாகக் கருதப்படுகிறது.

கொடுகடன் இடர்நேர்வில் ஏற்படும் எந்தவொரு வெளிப்படுத்துகையையும் குறைக்கும் பொருட்டு வர்த்தக வங்கிகள் வைத்திருக்கும் முதலீடுகள் மீளப் பெறப்பட்டு மத்திய வங்கிகள் மற்றும் பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கியில் மீள் முதலீடு செய்யப்பட்டது. இரு சொத்து வகைகளிலும் உயர் திரவத்தன்மையுடைய குறுகிய தவணைக் கருவிகளில் ஒதுக்குகளின் போதுமான விகிதாசார அளவைப் பேணுவதன் மூலம் திரவத்தன்மைத் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டன.

இருந்தபோதிலும், வங்கியின் ஒட்டுமொத்த ஒதுக்கு முகாமைத்துவத் தொழிற்பாடுகள் 2008ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 153 மில்லியன் அல்லது ரூ.16,687 மில்லியன் தேறிய வெளிநாட்டு வருமானத்தை உருவாக்கி மதிப்பிடப்பட்ட வருமானமான ஐ.அ.டொலர் 118 மில்லியனையும் முன்னைய ஆண்டின் வருமானமான ஐ.அ.டொலர் 125 மில்லியனையும் விஞ்சிக் காணப்பட்டது. பாரிய பொருளாதாரங்களில் நிலவிய ஒப்பீட்டளவில் குறைவான வட்டி வீதங்களின் மத்தியில் நிலையான வருமானமுள்ள பிணையங்கள் மீதான மூலதன இலாபங்கள் வருமானத்திலான இவ் அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்தன.

### 14.2 இடர்நேர்வு முகாமைத்துவம்

வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் மற்றும் அவற்றின் முதலீடுகளுடன் இணைந்த இடர்நேர்வுகள் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் நடு அலுவலகத்தால் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுகின்றன. வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் மற்றும் அவற்றின் முதலீடுகள் பல வகையான இடர்நேர்வுகளுக்கு உள்ளாகியுள்ளன. இவ் இடர்நேர்வு வகைகளினுள் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு, வட்டிவீத இடர்நேர்வு, கொடுகடன் இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பன பிரதான கூறுகளாகக் கருதப்படுகின்றன. செலாவணி வீதங்களிலான தளம்பல்கள் காரணமாக எழும் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு அல்லது மூலதன இழப்பின் இடர்நேர்வு முக்கியமாக முதலீட்டு நாணயங்களை பல்வகைப்படுத்துவதனூடாக முகாமை செய்யப்படுகிறது. வட்டி வீதங்களில் ஏற்படும் அசைவுகளால் ஏற்படும் வட்டிவீத இடர்நேர்வு அல்லது வங்கியின் ஒதுக்குகள் சொத்துப்பட்டியலின் ஆபத்துக்குள்ளாகும் தன்மை சொத்துப்பட்டியல் நீடித்திருக்கும் காலத்தின் பொருத்தமான சீராக்கத்தினூடாக முகாமை செய்யப்படுகிறது. கொடுகடன்

இடர்நேர்வை முகாமை செய்வதற்கு இணைந்த கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமை பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தால் பயன்படுத்தப்படுகிறது. நிர்ப்பந்தம் காரணமாக ஒடுக்குதல் ஏற்படுமிடத்து உள்ளாகும் மூலதன இழப்புக்களின் இடர்நேர்வான திரவத்தன்மை இடர்நேர்வு திரவத்தன்மை தேவைப்பாடுகளை ஏற்படுத்துவதன் மூலமும் உயர் திரவத்தன்மை வடிவில் சொத்துக்களின் போதியளவு விகிதாசாரத்தைப் பேணுவதன் மூலமும் முகாமைத்துவப்படுத்தப் பட்டது. மனிதத்தவறுகள், பழுதடைந்த முறைமைகள் மற்றும், பற்றாக்குறையான நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளால் விளைவிக்கப்படும் தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பன பல வழிமுறைகளூடாக முகாமை செய்யப்பட்டன.

மத்திய வங்கிகளுக்கான பணச்சந்தை முதலீடுகளை மாற்றுதல் மற்றும் வெளிநாட்டு வர்த்தக வங்கிகளுக்கான இடர்காப்பின்மையை உரிய நேரத்தில் இல்லாமற் செய்தல், உயர் தளம்பலையுடைய சந்தை நிலைமைகளில் வர்த்தகச் செயற்பாடுகளை மட்டுப்படுத்தல், கண்காணிப்பைப் பலப்படுத்தல் மற்றும் கொடுகடனையும் திரவத்தன்மை இடர்நேர்வையும் மதிப்பிடுதல் போன்ற பொருத்தமான முன்னெச்சரிக்கை வழிமுறைகள் உலகளாவிய நிதியியல் நெருக்கடியினூடாக விளைவிக்கப்பட்ட மோசமான தாக்கத்தைக் குறைப்பதற்கு பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தால் பின்பற்றப்பட்டது.

### 14.3 உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தை அபிவிருத்திகளைக் கண்காணித்தல்

உள்நாட்டில் வெளிநாட்டுச் சந்தையின் சுமூகமான தொழிற்பாட்டினை மேம்படுத்துவதற்காகவும் இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் ஒழுங்கான சீரமைப்பினை உறுதிப்படுத்துவதற்காகவும் முக்கியமாக வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவு தேறிய வெளிநாட்டுச் செலாவணி நிலைமைகள் உள்ளிட்ட உள்நாட்டில் வெளிநாட்டுச் சந்தையைக் கண்காணிக்கும் செயற்பாடுகள் திணைக்களத்தால் 2008இல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகளை மேலும் தளர்த்தியமை அதிகரித்த வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை விளைவித்ததுடன் இவ்வாண்டின் முதல் எட்டு மாதங்களில் செலாவணி வீதத்தில் அழுத்தத்தை ஏற்படுத்தியது. இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வடைதல் மற்றும் பொருளாதாரம், ஏற்றுமதிகள், இறக்குமதிகள், போன்றவற்றில் இதனால் ஏற்படும் எதிர்க்கணியத் தாக்கத்தைத் தவிர்க்கும் பொருட்டு உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மேலதிக வெளிநாட்டுச் செலாவணி ஐ.அ.டொலர் 674 மில்லியனாக விளங்கியது. எனினும், 2008 செத்தெம்பரிலிருந்து உலகளாவிய நிதியியல் நெருக்கடி காரணமாக நிலைமை மாற்றமடைந்தது. இவ்வாண்டின் இறுதி நான்கு மாதங்களில் வெளிநாட்டுச் செலாவணியின் திடீர் வெளிப்பாய்ச்சல் காரணமாக உருவாக்கப்பட்ட அளவுக்கதிகமான தளம்பல்களை அமைதிப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட வேண்டியிருந்தது. இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள்/முறிகள் மீதான வெளிநாட்டு உடமைகளின் மீளளிப்புக்கள் மற்றும் இவ்வாண்டின் இறுதிக் காலாண்டில் செலுத்தவேண்டிய ஒப்பீட்டளவில் உயர்விலை மட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பெற்றோலிய கொள்வனவுகள் மீதான இறக்குமதி உண்டியல்களின் தீர்ப்பனவு குறிப்பிடத்தக்க வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல்களுக்கு பங்களிப்புச் செய்தன. இதனால், இலங்கை மத்திய வங்கி 2008ஆம் ஆண்டில் உள்நாட்டில் வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கு ஐ.அ.டொலர் 1,532 மில்லியனை உட்செலுத்தியது.

ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் செலாவணி வீதம் 2008ஆம் ஆண்டில் 3.91 சதவீதம் கொண்ட பெறுமானத்

**அட்டவணை - II.10**

**வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களின் அளவு - 2008**

(ஐ.அ.டொ. மில்.)

| மாதம் | உடன் | நாளை | காசு | முன்னோக்கிய | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சனவரி | 552 | 150 | 95 | 476 | 1,273 |
| பெப்புருவரி | 398 | 127 | 138 | 414 | 1,077 |
| மாச்சு | 451 | 95 | 160 | 389 | 1,094 |
| ஏப்பிறல் | 409 | 269 | 177 | 375 | 1,230 |
| மே | 331 | 140 | 140 | 387 | 998 |
| யூன் | 306 | 256 | 101 | 434 | 1,097 |
| யூலை | 417 | 210 | 187 | 602 | 1,416 |
| ஓகத்து | 292 | 170 | 106 | 542 | 1,110 |
| செத்தெம்பர் | 393 | 231 | 138 | 556 | 1,318 |
| ஒத்தோபர் | 826 | 169 | 120 | 768 | 1,883 |
| நவெம்பர் | 391 | 139 | 87 | 298 | 915 |
| திசெம்பர் | 306 | 108 | 75 | 231 | 720 |
| | **5,070** | **2,064** | **1,526** | **5,472** | **14,132** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை - II .11**

**மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனை பற்றிய மாதாந்த தொகுப்பு - 2008**

(ஐ.அ.டொ. மில்.)

| மாதம் | கொள்வனவு | விற்பனை | தேறிய |
|---|---|---|---|
| சனவரி | 136 | 24 | 112 |
| பெப்புருவரி | 160 | 7 | 153 |
| மாச்சு | 95 | 14 | 81 |
| ஏப்பிறல் | 57 | 136 | -79 |
| மே | 5 | 47 | -42 |
| யூன் | 31 | 51 | -20 |
| யூலை | 124 | 0 | 124 |
| ஓகத்து | 14 | 36 | -22 |
| செத்தெம்பர் | 0 | 203 | -203 |
| ஒத்தோபர் | 0 | 588 | -588 |
| நவெம்பர் | 0 | 266 | -266 |
| திசெம்பர் | 53 | 160 | -108 |
| | **674** | **1,532** | **-858** |

தேய்வைக் காட்டியது. இது 2007 இறுதியில் ஐ.அ.டொலர் ஒன்றுக்கான ரூ.108.71இலிருந்து 2008இறுதியில் ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ரூ.113.13இற்கு நகர்ந்தது.

வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களின் அளவு 2007இன் ஐ.அ.டொலர் 9,275 மில்லியனிலிருந்து 2008இல் ஐ.அ.டொலர் 14,132 மில்லியனுக்கு அதிகரித்து 2008ஆம் ஆண்டில் 52.36 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்தது.

மேலும் உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சுமூகமான தொழிற்பாடுகளை அச்சுறுத்திய ஊகக் கொடுக்கல் வாங்கல்களின் மட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் திணைக்களம் வர்த்தக வங்கிகளின் அனுமதிக்கப்பட்ட தேறிய திறந்த வெளிநாட்டுச் செலாவணி வெளிப்படுத்தல் நிலைகளை 2008இல் திருத்தியமைத்தது. அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முகவர்கள் மற்றும் ஏனைய பகுதியினருக்கு ஏனைய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் செலாவணி வீதங்களின் தகவலை வழங்கும் செயல்முறை 2008இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

## 15. சட்டம்

2008ஆம் ஆண்டில் சட்டத் திணைக்களம் மத்திய வங்கி அதன் குறிக்கோள்களை அடைவதற்கு அதற்குத் தொடர்ந்து உதவியளித்தது. இவ் உதவியின் தன்மை கொள்கையை உருவாக்கல் மற்றும் நடைமுறைப்படுத்தல், சட்டவாக்கம் அதுபோல் துணைச் சட்டவாக்கத்தைத் தயாரித்தல் மற்றும் நீதிமன்றங்களிலும் மற்றைய சட்ட மன்றங்களிலும் வங்கியின் உரிமைகளை வற்புறுத்துதல் மற்றும் பாதுகாத்தல் ஆகிய வடிவில் காணப்பட்டது.

திணைக்களம் வங்கித் தொழில், வைப்புக் காப்புறுதி மற்றும் கம்பனியைப் புத்துயிர் பெறச் செய்தல் மற்றும் மீள ஒழுங்கமைத்தல் தொடர்பான சட்டங்களைத் தயாரிப்பதில் தீவிரமாகப் பங்காற்றியது. குறிப்பாக கம்பனி ஆளுகை மற்றும் கொடுப்பனவுக் கருவிகள் உள்ளிட்ட நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுத்துறையில் பல துணைச் சட்டங்கள் சட்டத் திணைக்களத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்டன.

அறிமுகப்படுத்தப்பட்ட முன்மதியுடைய தேவைப்பாடுகளின் செல்லுபடியாகும் தன்மை தொடர்பாக வங்கிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட பல எண்ணிக்கையான வழக்குகளைக் கவனத்திற் கொள்கையில் குறிப்பாக 2008 ஆம் ஆண்டு சவால் மிக்கதாக வந்துள்ளது. இச் சவால் கூடியளவு பொதுமக்கள் நலன் கருதிய இறுதிக் குறிக்கோள்களை நோக்கிய செயற்பாடுகள் சார்ந்த அணுகுமுறையுடன் வங்கியால் வெற்றிகரமாக எதிர்கொள்ளப்பட்டது. அநேகமான வழக்குகளில், நிதியியல் நிறுவனங்களின் பயனுறுதிமிக்க ஒழுங்கு விதிக்கான தேவையை நிலை நிறுத்துவதற்கு சட்டமுறையான அறிவிப்பு பெறப்பட்டது.

## 16. முகாமைத்துவக் கணக்காய்வு

இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வு அணுகுமுறையூடாக வங்கியின் தொழிற்பாடுகளையும் கட்டுப்பாட்டு முறைமைகளையும் முன்னேற்றுவதற்கான விதந்துரைப்புக்களைச் செய்வதன் மூலம் உபாயத்திட்டம் 2008இல் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு வங்கியை வசதிப்படுத்தும் குறிக்கோளுடன் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் 2008இல் அதன் உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவப் பணிகளை மேற்கொண்டது. இத் திணைக்களமானது நாணயச்சபையின் கணக்காய்வுக் குழுவின் செயலகமாகவும் வங்கியின் வங்கி முழுவதற்குமான இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவாகவும் பணியாற்றியது.

2008 கணக்காய்வு திட்டத்தின்படி, திணைக்களம் தீர்மானிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்படுவதை நிரூபிப்பதற்கு இணக்க கணக்காய்வுகளை தொடர்ந்து மேற்கொள்ளும் அதேவேளையில் நடைமுறையிலுள்ள உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமாந்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பல கணக்காய்வு ஒப்படைகளை நிறைவேற்றியது. அவ்வாறே திணைக்களங்களின் இடர்நேர்வு மதிப்பீட்டின் அடிப்படையில் சில உள்ளகக் கணக்காய்வுகள் நிறைவேற்றப்பட்டதுடன் இடர்நேர்வு மட்டங்களுக்கு கூடிய கவனம் செலுத்துவதன் மூலம் தனிப்பட்ட கணக்காய்வு ஒப்படை நிகழ்ச்சித்திட்டங்கள் சிலவும் தயாரிக்கப்பட்டன. முன்னைய ஆண்டுகளைப் போலவே, கணக்காய்வு விதந்துரைப்புகளின் நடைமுறைப்படுத்தலின் மட்டத்தை உறுதிப்படுத்துவதற்கு பின் தொடரும் கணக்காய்வு மீளாய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் கணக்காய்வுத் திட்டம் 2008 இலுள்ள அநேகமான கணக்காய்வுகளைப் பூர்த்தி செய்ததுடன் செயலகத் திணைக்களம் மற்றும் நலன்புரித் திணைக்களம் தொடர்பான முன்கூட்டியே மேற்கொள்ளப்பட்ட சகல கணக்காய்வுகளையும் பூர்த்தி செய்தது. மனிதவளத் திணைக்களம் மற்றும் செயலகத் திணைக்களம் தொடர்பான இணங்கிச் செல்லும் கணக்காய்வுகளையும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தது.

தொடர்பான திணைக்களங்களின் தொழிற்பாடுகளினதும் நடைமுறைகளினதும் பயனுறுதியை உறுதிப்படுத்துவதற்கு உயர் மற்றும் மிதமான இடர்நேர்வு தொழிற்பாட்டுத்துறைகளில் கூடிய வளங்களை ஒதுக்கீடு செய்வதன் மூலம் திணைக்களம் பல விசேட ஒப்படைகளையும் நிறைவேற்றியது. இது சம்பந்தமாக, திணைக்களம் தடங்கலற்ற வியாபாரத்திட்டம், வங்கியின் நுழைவுக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் பாதுகாப்பு புகைப்படக்கருவி முறைமை மற்றும் நிதித் திணைக்களத்தின் முன்கூட்டிய நிருவாகம் மீதான நியாயமான அணுகல் என்பவற்றிலும் கணக்காய்வைப் பூர்த்தி செய்தது. அனர்த்த மீட்புத் தலத்திலான தவறுகள் தொடர்பான பரீட்சிப்பு, அலுவலர்க்கான விடுதிகளின் பணிகளது விலையிடற் கொள்கை, தேயிலை அபிவிருத்தி செயற்றிட்ட சுழலும் நிதியத்தின் 2007 நிதியியல் கூற்றுக்களுக்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகள், வறுமையொழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டத்தின் கோரலுக்குப் பின்பான மீட்சிச் செயல்முறை மற்றும் முறைமைகளின் பயனுறுதி, அச்சகத்தின் செலவின் மீதான கட்டுப்பாடு, இணைத்தரப்புக் குழு வரையறைகளுக்கு இணங்கியொழுகுவதனை மீளாய்வு செய்தல், வணிகர் எல்லைகள் மற்றும் நாணய எல்லைகள், செயலகத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் மூலதனச் செலவின வரவுசெலவுத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் மீளாய்வு, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தின் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய கொடுக்கல் வாங்கல்கள், பன்னாட்டு

தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் ஒதுக்கு முகாமைத்துவ செயற்பாடுகள் மீது விதிக்கப்பட்ட வரையறைகள் மற்றும் செயலகத் திணைக்களத்தின் பணி உடன்படிக்கைகள் தொடர்பான செயற்பாடுகளின் ஒட்டுமொத்த மீளாய்வு என்பன ஏனைய சில முக்கிய அறிக்கைகளாகும். இத்துடன், வங்கியினுள் தொழிற்படும் மென்பொருள் முறைமைகளின் பயனுறுதியை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வு உயர் கவனத்தைச் செலுத்தி பன்னாட்டு நியம கணக்காய்வை ஆரம்பித்ததுடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திலுள்ள முறைமையை ஆராயத் தொடங்கி வரையறுக்கப்பட்ட வாய்ப்புடன் தகவல் முறைமை கணக்காய்வு ஒப்படைகளையும் நடத்தியது.

2008 இல் திணைக்களம் கணக்காய்வுகளை செயல்முறைப்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுத்ததுடன் நடைமுறைகள் தொடர்பான குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான பிரச்சனைகளை இனங்காணக்கூடியதாக இருந்தது. இவ் அவதானங்களும் கணக்காய்வு விதந்துரைப்புகளும் தொடர்பான திணைக்களங்களுக்கும், ஆளுநருக்கும், கணக்காய்வுக் குழுவுக்கும் கிரமமாக அறிவிக்கப்பட்டது. இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில், இவ் அறிக்கைகள் நாணயச் சபைக்கு அதன் தகவலுக்காக சமர்ப்பிக்கப்பட்டன.

2008 இல், முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் வங்கி முழுவதற்குமான இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையைத் தொடர்ந்து தரமுயர்த்தியது. இடர்நேர்வு முகாமைத்துவத்தில் இடர்நேர்வு அலுவலர்களின் அறிவை அதிகரிப்பதற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் திணைக்களத்தால் தொடர்ந்து நடத்தப்பட்டது. இடர்நேர்வு சம்பவத்தை அறிவிக்கும் கைகளால் செய்யப்படும் முறைமையும் இவ்வாண்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதுடன் திணைக்கள இடர்நேர்வு அளவு மட்டங்களைத் தீர்மானிப்பதற்கும் தொடர்ச்சியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

திணைக்களம் வெளிநாட்டு ஒதுக்குகள் மீதான ஒருங்கிணைந்த அறிக்கையைத் தயாரித்து கவனமான ஒதுக்கு முகாமைத்துவம் மீதான விதந்துரைப்புக்களுடன் நாணயச் சபைக்கு அதன் தகவலுக்காக சமர்ப்பித்தது.

திணைக்களத்தினுள்ளேயான செயல்முறையை மேம்படுத்துவதற்கு கணக்காய்வு கட்டளை மொழி மென்பொருள் பொதியைக் கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டதுடன் அதை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகிறது. 2009இல் சிறப்பாகச் செயலாற்றும் குறிக்கோளுடன் இத்துறையில் இரண்டு அலுவலர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டது.

திணைக்களத்தின் இயலளவு அபிவிருத்தியை மேற்கொள்ளும் நடவடிக்கையாக திணைக்களம் கணக்காய்வு மற்றும் கணக்காய்வு தொடர்பான செயற்பாடுகளில் அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தது.

## 17. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம், கொடுப்பனவை ஒழுங்கு முறைப்படுத்தல், தீர்த்தல் மற்றும் தீர்ப்பனவு முறைமைகள், மத்திய வங்கியின் ஏடுகளிலுள்ள பிணையங்களின் விற்பனை, பணப்பணிகளை வழங்குவோரை ஒழுங்குமுறைப்படுத்தல், காசோலைகளின் இலத்திரனியல் மூலமாக முன்வைத்தல் மற்றும் நாட்டிலுள்ள கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் தொடர்பான எந்தவிதமான செயற்பாட்டுக்கும் இலங்கை மத்திய வங்கிக்கு பல வீச்சிலான அதிகாரங்களையும் அதிகாரம் அளிப்பதனையும் வழங்குகிறது. இலங்கை மத்திய வங்கி இத் தொழிற்பாடுகளை கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினூடாக கையாளுகிறது. இதன்படி, நிதியியல் முறைமையில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு எதிர்ப்புக்களுக்குத் தாக்குப் பிடிக்கத்தக்க ஆற்றலுடைய பாதுகாப்பான, ஆற்றல்மிக்க மற்றும் வினைத்திறன் மிக்க நிதியியல் முறைமையை அடையும் குறிக்கோளுடன் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது முறையான முக்கியத்துவம் வாய்ந்த பெறுமதியுடைய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையான அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாடு, லங்கா செற்றில் முறையினூடாகச் செயற்படுத்தப்படும் மத்திய வங்கியின் கொடுக்கல் வாங்கல்களுக்கான தீர்ப்பனவு வாயில், மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவம் மற்றும் திறந்த சந்தைக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களைச் செயல்முறைப்படுத்துவதற்கான பின்தள அலுவலகத் தொழிற்பாடுகள் சுவிப்ற் கொடுக்கல் வாங்கல்களைக் கையாளல் மற்றும் முகாமை செய்தல், ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தினூடாக வர்த்தக மற்றும் நிதியத்தின் மாற்றல்களை வசதிப்படுத்தல் மற்றும் நாட்டிலுள்ள கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் தொடர்பான செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் ஆகிய அதன் தொழிற்பாடுகளை தொடர்ந்து மேற்கொண்டது.

### 17.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையைத் தொழிற்படுத்தல்

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை தொழிற்பாட்டுப் பிரிவு நிதியியல் சந்தைகளிலான பங்கேற்பவர்களுக்கிடையிலான தீர்ப்பனவுகளையும் அதேபோல் அவற்றின் வாடிக்கையாளரது கொடுப்பனவுகளையும் அதேநேர மொத்த அடிப்படையில் தொடர்ந்து மேற்கொண்டதுடன் 2008ஆம் ஆண்டில் தொழிற்படும் நேரங்கள் முழுவதும் பங்கேற்பவர்களுக்கான உதவிப்பீடப் பணிகளை வழங்கியது. இவ்வாண்டில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையால் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்த அளவு 228,654ஆகவும் மொத்தப் பெறுமதி ரூ.25,131 பில்லியனாகவும் விளங்கியது. 2008இல் ஒரு நாளில் பதிவு செய்யப்பட்ட அதேநேர மொத்தக் கொடுப்பனவுகள் முறைமையின் ஆகக்கூடிய அளவு 1,515ஆகவும் பெறுமதி ரூ.277 பில்லியனாகவும் விளங்கியது. நாளொன்றில் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் சராசரி அளவும், பெறுமதியும் முறையே 949 ஆகவும், ரூ.104 பில்லியனாகவும் விளங்கியது. ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியூடான முறைமையின் சுமுகமான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு மேலதிக நிதியங்களைக் கேட்டுக் கொண்ட அதேநேர மொத்தத் தீர்ப்பனவு பங்கேற்பாளர்களுக்கு நாளொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ.9.0 பில்லியனை விடுவித்தது.

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலான பங்கேற்பாளர்கள் இலங்கை மத்திய வங்கி, 21 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 8 வங்கியல்லா முதனிலை வணிகர்கள், ஊழியர் சேம நிதியம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் மத்திய வைப்பக முறைமையை உள்ளடக்கியிருந்தன. ஸ்ரான்டட் சாட்டட் பாங் (பாக்கித்தான்) லிமிடெட் ஸ்ரான்டட் சாட்டட் பாங்க் லிமிட்டெட்டுடன் இணைக்கப்பட்டமையால் 2008 இறுதியில் லங்கா செற்றிளின் பங்கேற்பாளர்களின் மொத்த எண்ணிக்கை 33 ஆக விளங்கியது. செயலாற்றக் குறிகாட்டியாக, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைத் தொழிற்பாடுகள் பிரிவு 2008ஆம் ஆண்டில் 99.65% முறைமைக் கிடைப்பனவைப் பேணியது. எதிர்பாரா நிகழ்வுகளில் முறைமையின் ஆயத்தத் தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு இவ்வாண்டில் அனர்த்த மீட்புத் தலத்தில் பல நேரடித் தொழிற்பாட்டுப் பிரிவுகள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டதுடன் ஒவ்வொரு பங்கேற்பு நிறுவனமும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் அவற்றின் தொடர்பான நிறுவனங்களில் தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலைத் தரமுயர்த்துவதற்கு ஊக்கமளிக்கப்பட்டது. இதேவேளை, மென்கலப் பொருள் விருத்திகளூடாக அதன் தொழிற்பாடுகளிலான மேம்பாடுகளைக் கவனத்திற் கொண்டு அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மூடப்படும் நேரம் 2008 நவெம்பர் 3 ஆம் நாள் தொடக்கம் பி.ப. 5.15 மணியிலிருந்து பி.ப. 5.00 மணிக்கு முன் நகர்த்தப்பட்டது. பிரதான மற்றும் அனர்த்த மீட்புத்தலம் இரண்டும் கிடைக்காதவிடத்து அனர்த்த வேளையில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையைத் தொழிற்படுத்துவதற்கு தனியாள் கணனி அடிப்படையிலான முறைமையொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### 17.2 வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவத்தின் கீழான வணிகங்களின் தீர்ப்பனவுகள்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தின் வெளிநாட்டு நாணய மாற்று, தங்கம் மற்றும் வெளிநாட்டுப் பிணையங்கள் தீர்ப்பனவு பிரிவு, பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்காக பின்தள காரியாலய செயற்பாடுகளில் திறைசேரி வியாபார அளவு முகாமைத்துவ முறையினூடாக தொழிற்பாட்டை முன்னெடுத்தது. பிரிவானது 2008ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 50.04 பில்லியன் பெறுமதியுடைய 7049 தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை அறிமுகப்படுத்தியது. பிரிவானது திறைசேரி வணிக அறை முகாமைத்துவ முறைமையின் பின்தள அளவீட்டைத் தரமுயர்த்துவதிலும் ஈடுபட்டதுடன் கொடுக்கல் வாங்கல்களின் தேவைப்பாடுகளை வசதிப்படுத்தும் பொருட்டு பன்னாட்டு நிறுவனங்களுடன் தொடர்பான உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திட்டது.

### 17.3 திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவு

திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் தீர்ப்பனவுப் பிரிவு பங்கேற்கும் நிறுவனங்களுடனான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கொடுக்கல் வாங்கல்களில் இலங்கை மத்திய வங்கி சார்பாக இலங்கை மத்திய வங்கி சொத்துப்பட்டியலின் பிணையங்களின் ஒதுக்கீட்டுக்குப் பொறுப்பாகவிருக்கிறது. இப்பிரிவானது ரூ.850 பில்லியன் பெறுமதியான 2,234 மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களையும், ரூ.904.6 பில்லியன் பெறுமதியான 1,037 நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களையும், ரூ.28.3 பில்லியன் பெறுமதியான 252 உடன் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களையும், ரூ.12.5 பில்லியன் பெறுமதியான 49 உடன் கொள்வனவுகள் கொடுக்கல் வாங்கல்களையும் ரூ.176.7 பில்லியன் பெறுமதியான 409 மத்திய வங்கிப் பிணையங்கள் கொடுக்கல் வாங்கல்களையும் தீர்ப்பனவு செய்தது.

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம் பங்கேற்பாளர்களுக்கான ஒரு நாளுக்குள்ளேயான திரவத் தன்மையைத் தொடர்ந்து வழங்கியதுடன் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் தீர்ப்பனவையும் கண்காணித்து 2008ஆம் ஆண்டுப் பகுதியில் நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியின் கீழ் ரூ.2,189.2 பில்லியன் பெறுமதியான 9,645 கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தது.

### 17.4 சுவிப்ற் தொடர்பூட்டல்கள்

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் சுவிப்ற் தொடர்பூட்டல் பிரிவு இலங்கை மத்திய வங்கியின் சுவிப்ற் தொடர்பான செயற்பாடுகளை தொடர்ந்து நிறைவேற்றியதுடன் சுவிப்ற் அபிவிருத்தி வழிகாட்டலுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் முறைமைக்குப் பின்வரும் நவீன முறைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

- புதிய ஆர்எஸ்ஏ திறவுகோல்கள் (சமச்சீரற்ற பாதுகாப்பு இலக்கமானம்) மற்றும் சகல கணிப்பியந்திர முடிவிடங்களுக்கான பூரணப்படுத்தப்பட்ட சான்றிதழை உருவாக்கியது.
- புதிய ஆர்எம்ஏ பிரயோகத்துக்கு (தொடர்புமுறை முகாமைத்துவ பிரயோகம்) இருபுடை முக்கிய பரிவர்த்தனையிலிருந்து தொடர்பான தொடர்புமுறை முகாமைத்துவத்தை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததுடன் சுவிப்ற் வலையமைப்பின் கட்டம் 2 ஐப் பூர்த்தி செய்தது.
- எஸ்ஏஏ/எஸ்ஏஈ/ஆர்எம்ஏ தொகுதி வாசகம் 6.0.5.0 இற்கு பூரணப்படுத்தப்பட்டது.

2008இல் மத்திய வங்கியால் அனுப்பப்பட்ட மற்றும் பெறப்பட்ட சுவிப்ற் செய்திகளின் மொத்த எண்ணிக்கை முறையே 1,206,408 ஆகவும் 794,075 ஆகவும் விளங்கியது. பெறப்பட்ட செய்திகளில், 154,358 மத்திய வங்கியின் சொந்தக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பானவையாகும். எஞ்சியவை லங்கா செற்றிலின் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பானவையாகும்.

### 17.5 ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல் வாங்கல்கள்

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினூடாக மேற்கொள்ளப்பட்ட இலங்கைக் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி 2007இன் ரூ.337 பில்லியனிலிருந்து 2008இல் ரூ.363 பில்லியனுக்கு 8 சதவீதத்தால் அதிகரித்தது. இது பெரும்பாலும் ஈரானிலிருந்தான அதிகரித்த எண்ணெய் இறக்குமதிகளாலும் இவ்வாண்டின் முதல் 10 மாதங்களில் நிலவிய உயர் எண்ணெய் விலைகளாலும் ஏற்பட்டது. 2008இல் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் ரூபாப் பெறுமதி 2008இல் ரூ.315 பில்லியனுக்கு 7 சதவீதத்தால் அதிகரித்தது.

**அட்டவணை II.12**

**ஏனைய ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய நாடுகளுடனான இலங்கையினுடைய வர்த்தகம் மற்றும் ஆ.தீ.ஒ கொடுக்கல் வாங்கல்கள்**

ரூ.பில்லியன்

| | 2007 | 2008 |
|---|---|---|
| ஆ.தீ. ஒன்றியத்தினூடாக வழிப்படுத்தப்பட்ட மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள் | 337.2 | 363.3 |
| ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் | 78.8 | 72.3 |
| ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளிலிருந்தான இலங்கையின் இறக்குமதிகள் | 403.4 | 525.3 |
| ஏனைய ஆ.தீ.ஒ. நாடுகளுடனான இலங்கையின் மொத்த வர்த்தகம் | 482.2 | 597.6 |
| தேசிய ஆ.தீ. ஒன்றிய தீர்ப்பனவுகள் | 293.5 | 315.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

2008யூனில் மியன்மாரில் நடைபெற்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் சபையின் 37ஆவது கூட்டம் பெரும்பாலும் 2008 பெப்புருவரியில் இலங்கை மத்திய வங்கியின் தலைமையிலான ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் தொழில்நுட்பக் குழுவால் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைப்புக்களில் கவனம் செலுத்தியது. பணிப்பாளர் சபை பின்வரும் விதந்துரைப்புக் களுக்கு ஏகமனதாக ஒப்புதலளித்தது.

1. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவை ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறிமுறையினுள் ஐக்கிய அமெரிக்க டொலரிலோ அல்லது யூரோவிலோ மேற்கொள்வதற்கும் இரு தனித்தனியான கணக்கீட்டு முறைமைகளைப் பேணுவதற்கும், ஆசிய தீர்ப்பனவு ஒன்றியச் செயலகத்தில் ஒன்று ஐ.அ.டொலரில் நடத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்காகவும் மற்றையது யூரோவில் நடத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்காகவும் மேற்கொள்ளப்பட்டது.
2. மாதாந்த செய்தி ஏடு மற்றும் ஆண்டறிக்கை தயாரிப்பதற்கும் அதுபோல் நாணயப் பரிமாற்றத்துக்கான தகைமையையும், தகுதியையும் தீர்மானிப்பதற்காகவும் அடிப்படை நாணயமாக டொலரைப் பயன்படுத்துவதற்கு
3. ப.நா.நிதியத்தால் குறிப்பீடு செய்யப்பட்ட சிஎஉ குறுக்கு வீதங்களை தொடர்பான வீதங்களாகப் பிரயோகிப்பதற்கு
4. தீர்ப்பனவுக் காலப்பகுதி இறுதியில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய டொலர் மற்றும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய யூரோக் கணக்குகளுடன் இணைந்த தேறிய பற்றாக்குறையின் அடிப்படையில் நாணயப் பரிமாற்றலின் தகைமையைத் தீர்மானிப்பதற்கு
5. நாணயப் பரிமாற்றலுக்கான தொடர்பான வட்டிவீதமாக பார்க்ளேஸ் வங்கியை பிரித்தானிய வங்கிகள் சங்கத்தால் பிரதியீடு செய்தல்
6. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியச் செயலகத்தால் தயாரிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறிமுறை பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு வர்த்தக வங்கிகளுக்கான கருத்தரங்குகளை நடத்துவதற்கு

2009 சனவரி 1இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் ஒப்புதலளிக்கப்பட்ட விதந்துரைப்புக்களை நடைமுறைப் படுத்துவதற்கு உறுப்பினர் நாடுகளை இயலச் செய்வதற்காக ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய செயலகம் ஆசிய தீர்ப்பனவு உடன்படிக்கை மற்றும் ஒழுங்கமைப்பு விதிகளைத் திருத்தியமைத்தது. இதன்படி, ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய டொலர் மற்றும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய யூரோ என்பவற்றின் கீழ் ஆசிய தீர்ப்பனவுப் பொறிமுறை தொடர்பாக இலங்கை மத்திய வங்கி தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வர்த்தக வங்கிகளுக்கு 2008 திசெம்பரில் வழங்கியது. மேலும், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறை தொடர்பாக சகல வர்த்தக வங்கிகளின் தொடர்பான அலுவலர்களுக்கு அறிவூட்டும் பொருட்டும் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக தற்போதைய நடைமுறைகள் பற்றிய பதிலிறுப்புக்களைப் பெறுவதற்குமான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்றும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தால் 2008 திசெம்பரில் நடத்தப்பட்டது.

38ஆவது ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தை இலங்கையின் கொழும்பில் 2009 யூனில் நடத்துவதற்கு ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் சபை தீர்மானித்ததுடன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் 2009ஆம் ஆண்டுக்கான ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் தலைவராக தெரிந்தெடுக்கப்பட்டார். 38ஆவது ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பணிப்பாளர் சபைக் கூட்டத்தை வசதிப்படுத்துவதற்கு கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தால் ஆரம்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

### 17.6 கொடுப்பனவு முறைமைக் கொள்கை மற்றும் மேற்பார்வை

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் கொள்கை மற்றும் மேற்பார்வைப் பிரிவு வழமையான மேற்பார்வைச் செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்ளும் அதேவேளை 2008ஆம் ஆண்டில் முக்கியமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகளின் தங்கியிருத்தலைப் பேணுவதிலும் இடர்நேர்வுகளைப் படிப்படியாகக் குறைப்பதிலும் கூடிய கவனம் செலுத்தியது. கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் இடையூறுகளால் ஏற்படுத்தப்படக்கூடிய முறைமை ரீதியான இடர்நேர்வின் விளைவுகளைக் கருத்திற்கொண்டு மேற்பார்வைச் செயற்பாடுகள் 2008இல் பங்கேற்பாளர்களின் தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல் மீது தொடர்ந்தும் கவனம் செலுத்தியது. இவ்வாண்டில், கொள்கை மற்றும் மேற்பார்வைப் பிரிவு மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களம், தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் மற்றும் பொதுப்படுகடன் திணைக்களத்தின் அலுவலர்களின் உதவியுடன் 22 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 3 முதனிலை வணிகர்களின் தடங்கலற்ற வியாபாரத் திட்டங்களையும் அனர்த்த மீட்பு ஏற்பாடுகளையும் மதிப்பீடு செய்தது. பரீட்சிப்புக்களின் கண்டுபிடிப்புக்கள் தொடர்பான நிறுவனங்களின் கருத்துக்களுக்காகவும் மேலதிக மேம்பாடுகளுக்காகவும் அவற்றுக்குத் தெரியப்படுத்தப்பட்டன. 2009இல் மத்திய வங்கியால்

வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல் மற்றும் அனர்த்த மீட்புத் தலங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட மேம்பாடுகளை மீள் மதிப்பீடு செய்வதற்கு திணைக்களம் எதிர்பார்க்கிறது.

காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமைக்கான வரையறுக்கப்பட்ட தீர்த்தல் மற்றும் தீர்ப்பனவு முறைமை கால அட்டவணையுடன் இணங்கியிருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு அரை - ஆண்டு அடிப்படையில் காசோலை சமர்ப்பித்தல் /தேறல் செய்தல் தாமதங்களின் விபரங்களைப் பேணுவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளை வேண்டிக் கொள்ளும் சுற்றுநிருபத்தை கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் அவற்றுக்கு வழங்கியது. காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையின் கீழ் வங்கிகளால் கேட்கப்பட்ட மேலதிக நாளின் விபரங்களை மாதாந்த ரீதியில் அறிவிக்குமாறு லங்கா கிளியருக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்பான கணக்குகளின் போதுமானதற்ற நிதியங்கள் காரணமாக காசோலைத் திரும்பல்களின் கணிசமான எண்ணிக்கையூடாக காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையூடாக எதிர்பார்க்கப்பட்ட வினைத்திறன் குறைவடைந்துள்ளதை அறிந்தபின்பு 2008 ஏப்பிறல் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் “காசோலைக்குரியவர்” என்ற குறியீட்டுடன் நிதியங்களின் கிடைப்பனவற்றதன்மை காரணமாக திரும்பல் செய்யப்பட்ட காசோலைகளை மீளச் சமர்ப்பிப்பதை தவிர்ப்பதற்கும் அவர்களின் மதிக்கத் தவறிய காசோலைகளுக்காக வங்கிகள்மீது தண்டப்பணத்தை விதிப்பதற்கும் மத்திய வங்கி பணிப்புரையொன்றை வழங்கியது. மேலும் காசோலைப் பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையின் ரி+1 விதிக்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பின்பற்றுவதில் வாடிக்கையாளரின் கருத்திலிருந்து பதிலிறுப்பைப் பெறும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தின் உதவியுடன் வாடிக்கையாளர் அளவீட்டை நடத்துவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அட்டையை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகள் பாதுகாப்பாகவும் காப்பிடப்பட்டதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் இருப்பதில் ஏற்படும் வளர்ச்சியைப் பாதுகாப்பதற்கும் இலங்கையில் அட்டை வைத்திருப்போரின் நலன்களைப் பாதுகாப்பதற்கும் கொடுப்பனவு அட்டைகளின் பணியை வழங்கும் சகலருக்குமான ஆகக் குறைந்த முன்மதியுடைய தேவைப்பாடுகளை ஏற்படுத்துவதற்காக ஒழுங்கு விதிகளையும் பணிப்புரைகளையும் வரைவதில் இப்பிரிவு ஈடுபட்டது. கொடுப்பனவு அட்டைகள் மீதான இவ் ஒழுங்கு விதிகளும் பணிப்புரைகளும் 2009இல் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக இப்பிரிவு 2008 யூனில் பூர்த்தி செய்யப்பட்ட பங்கேற்பாளர்களுக்கான பாதுகாப்பானதும் செலவு குறைந்ததுமான சுவிப்ற் இணைப்பை வழங்குவதற்கு இலங்கை நிதியியல் பணிகள் பணியகத்தையும் 2009 ஏப்பிறலில் நடைமுறைப்படுத்துவதற்கும் அட்டவணையிடப்பட்ட அதே நேர சில்லறை நிதிய மாற்றல்கள் முறைமைக்கு உதவுவதற்கு பொதுவான கொடுப்பனவு முடுக்கியையும் நிறுவுவதற்கும் வசதிப்படுத்தியது.

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் காலாண்டு கொடுப்பனவு செய்தித் திரட்டை மத்திய வங்கியின் இணையத் தளத்தில் 2008 காலப்பகுதியில் வெளியிட்டது. இத் திணைக்களத்தின் அலுவலர்கள் காசோலை பிரதிமைப்படுத்துல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமை மற்றும் ஏனைய தொடர்பான கொடுப்பனவு முறைமைகள் பற்றி வங்கித் தொழில் சமூகத்தினருக்கும் அறிவூட்டுவதற்காக பல நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தினர்.

**17.7 சார்க் கொடுப்பனவுகள் முன்னெடுப்பு**

உறுப்பினர் நாடுகளிடையே ஆற்றல்மிக்கதும் ஒத்துழைப்புமிக்கதுமான இணைந்து பணியாற்றும் உறவை ஏற்படுத்துவதற்கு திணைக்களம் 2008இல் சார்க் பிராந்திய கொடுப்பனவு முன்னெடுப்பின் தொடக்க விழாவும் சார்க் கொடுப்பனவுகள் சபையின் முதலாவது கூட்டமும் கொழும்பில் 2008 மார்ச்சு 28இல் நடத்தப்பட்டது.

சார்க் நிதிய ஆளுநர் சபையின் ஆதரவின்கீழ் சார்க் கொடுப்பனவுச்சபை சார்க் கொடுப்பனவு முன்னெடுப்பிற்குப் பொறுப்பாக இருக்கிறது. சார்க் கொடுப்பனவுச்சபை சார்க் நிதியக் குழுவின் ஆளுநர்களால் நியமிக்கப்பட்ட சார்க் பிராந்தியத்தின் மத்திய வங்கிகள்/நாணய அதிகார சபையிலிருந்தான 8 பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது.

நாட்டு ஆய்வுகள் மற்றும் மதிப்பீடுகளை ஏற்பாடு செய்தல் விசேட தொழில்நுட்ப உதவிச் செயற்றிட்டங்களை வசதிப்படுத்தல், வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் மற்றும் உறுப்பு நாடுகளின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையை பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு தரமுயர்த்தல் போன்ற நிருவாக மற்றும் ஒருங்கிணைப்புப் பணிக்கு உதவுவதற்கு சார்க் கொடுப்பனவுகள் முன்னெடுப்புச் செயலகம் இரண்டு ஆண்டு காலப்பகுதிக்கு இலங்கை மத்திய வங்கியில் நிறுவப்பட்டது.

அதன் முதலாவது கூட்டத்தில், சார்க் கொடுப்பனவுச் சபை அதன் தொலைநோக்கு, பணி, செயற்பரப்பு, குறிக்கோள்கள் மற்றும் நிறுவன ரீதியிலான கட்டமைப்பு, பங்குகள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை அபிவிருத்திக்கான வழிகாட்டல்களை ஏற்படுத்தியதுடன் சகல பிரதிநிதிகளும் அவர்களது கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள் தொடர்பாக இருப்பு எடுத்தல் நடவடிக்கையை நடத்துவதற்கும் இணங்கினர். சார்க் முன்னெடுப்புச் செயலகம் ஒப்பீட்டு அடிப்படையில் பிராந்தியத்தில் உள்ள கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமையின் தற்போதைய தகுநிலையை விளங்கிக் கொள்வதற்கு உறுப்பினர்களை இயலச்செய்யும் கண்டுபிடிப்புக்களை 2ஆவது சார்க் கொடுப்பனவுச்சபைக் கூட்டத்தில் வெளிப்படுத்தியது. 3ஆவது சார்க் கொடுப்பனவுகள் சபைக் கூட்டம் கொழும்பில் 2008 செத்தெம்பர் 29ஆம் திகதி நடைபெற்றது. சார்க் கொடுப்பனவுகள் முன்னெடுப்புச் செயலகம் சார்க் கொடுப்பனவுகள் செய்தித் திரட்டின் முதலாம் பாகத்தை வெளியிட்டதுடன் உறுப்பினர் நாடுகள் சார்க் கொடுப்பனவுச்சபை மற்றும் சார்க் கொடுப்பனவுகள் முன்னெடுப்பு மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை அபிவிருத்திகள் தொடர்பான விழிப்புணர்வை அதிகரிக்கும் பொருட்டு இக் கூட்டத்தில் சார்க் கொடுப்பனவுகள்

முன்னெடுப்பிற்கான இணையத்தளத்தையும் ஆரம்பித்தது. சார்க் கொடுப்பனவுகள் முன்னெடுப்புச் செயலகத்தால் தயாரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைக்கான சட்ட மற்றும் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு தொடர்பான அணுகுமுறை ஆய்வறிக்கை 2008 திசெம்பர் 20இல் பாக்கித்தானில் நடைபெற்ற 4ஆவது சார்க் கொடுப்பனவு சபைச் கூட்டத்தில் வெளியிடப்பட்டது. எல்லை தாண்டிய கொடுப்பனவுகளின் அளவுகளை மதிப்பிடுவதற்கும் சார்க் பிராந்தியத்தினுள் தொழிலாளர் பணவனுப்பல்களைச் சேகரிப்பதற்கும் முன்னோடிச் செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

## 18. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் பின்வருவனவற்றை மேற்கொள்கிறது. (அ) உபாய திட்டமிடல் செய்முறையை ஒருங்கிணைத்தல் மற்றும் அடுத்த ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கான வங்கியின் வருடாந்த உபாயத்திட்டத்தைப் புதுப்பித்தல், (ஆ) உபாயத் திட்டங்கள் தொடர்பான திணைக்களங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல், (இ) புதிய கொள்கைகளைத் தேவைப்படுத்தும் தற்போதைய பிரச்சனைகள் தொடர்பாக சமகால கொள்கை மீளாய்வுகள் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளல்.

(அ) **உபாய ரீதியான திட்டமிடல் செயல்முறையை ஒருங்கிணைத்தல்:**

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் 2009 - 2013 காலப்பகுதிக்கான உபாயத்திட்டத்தை வடிவமைப்பதற்கும் புதுப்பிப்பதற்குமாக திணைக்களத்தின் சகல தலைவர்கள், அவர்களது பிரதிநிதிகள் மற்றும் மூத்த முகாமைத்துவத்தின் பங்கேற்புடன் இரு நாள் உபாயத்திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டத்தை 2008 ஒத்தோபர் 3 - 5 நாள் காலப்பகுதியில் ஓட்டல் கெறிற்றன்ஸ் கந்தளமவில் ஏற்பாடு செய்தது. இவ் உபாயத்திட்டம் உபாயக் குறிக்கோள்கள், இலக்குகள், இலக்குகளை அடையும் பொறிமுறை, பெறுபேறுகள், பெறுபேறுக் குறிகாட்டிகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்ததுடன் வெவ்வேறுபட்ட கொத்தணிகளின் கீழ்வரும் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு, நிதியியல் முறைமை உறுதிப்பாடு, நாணய வழங்கல்மற்றும் முகாமைத்துவம், முகவர், பணிகள், மனிதவள முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பணிகள், நிருவாகப் பணிகள் மற்றும் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு என்பனவற்றில் குறிக்கோள்களை எய்துவதற்கு நடவடிக்கைத் திட்டங்களுக்கும் திணைக்களம் பொறுப்பாக இருந்தது.

(ஆ) **திணைக்களங்களின் உபாயத் திட்டங்களின் செயற்பாடு களைக் கண்காணித்தல்:**

நடைமுறைப்படுத்தலுக்கு முன்பான காலம் மற்றும் திணைக்களச் செயலாற்றத்தினை காலாண்டு ரீதியில் கண்காணிப்புச் செய்தல் என்பன கண்காணிப்பின் இரு முக்கிய அம்சங்களாகும். கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் வங்கி அலுவலர்களுக்கான உபாயத் திட்டம் தொடர்பாக கொத்தணி ரீதியிலான விழிப்புணர்வு கூட்டத்தொடரை ஆண்டின் தொடக்கத்தில் ஏற்பாடு செய்தது. காலாண்டு ரீதியிலான கண்காணிப்பின் கீழ், பொருத்தமான நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுபேறு தொடர்பாக தனிப்பட்ட திணைக்களங்களின் முன்னேற்றம் மதிப்பிடப்பட்டு வங்கியின் நிருவாக முகாமைத்துவத்தை உள்ளடக்கிய உபாயத் திட்ட மீளாய்வு குழுவுக்கு அறிக்கையிடப்பட்டது. முன்னேற்ற அறிக்கை விலை உறுதிப்பாடு, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பேணல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஏனைய முக்கிய தொழிற்பாடுகளை உள்ளடக்கியிருந்தது.

(இ) **கொள்கை மீளாய்வு மற்றும் ஆய்வுகள்**

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் வட்டி வீதக் கொள்கை, நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகள், தற்போதைய உலகளாவிய நிதியியல் நெருக்கடி மற்றும் இலங்கை மீதான அதன் தாக்கம் மற்றும் பொதுப்படுகடன் முகாமைத்துவம் தொடர்பான பல கொள்கை மீளாய்வு அறிக்கைகளைத் தயாரித்தது. கொள்கை தொடர்பான ஆவணங்களின் மென்பொருள் பிரதிகளை சேமித்து வைப்பதற்காக அதே நேரத்திலான மின் - கொள்கை நூலகம் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியுடன் 2008 திசெம்பரில் திறந்து வைக்கப்பட்டது. மின் - கொள்கை நூலகம் மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் தொடர்பான சட்டவாக்கம் மீதான ஆவணங்கள், ஒழுங்கு விதிகள், சுற்றுநிரூபங்கள் மற்றும் பணிப்புரைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வெளியீடுகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

## 19. பணிமனை

வங்கியின் அலுவலர்களுக்கு போக்குவரத்து, தொடர்பூட்டல் போன்ற துணைப் பணிகளை வழங்குவதற்கு மேலதிகமாக 2008இல் பணிமனைத் திணைக்களம் வங்கிப் பணிமனையைப் பேணுவதனையும், சுத்தமாக வைத்திருப்பதனையும் தொடர்ந்து மேற்கொண்டது.

குறைந்த செலவில் பணிகளை வினைத்திறனுடன் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பேணல் வேலைகளில் பெரும் பகுதியும், போக்குவரத்துப் பணிகளில் ஒரு பகுதியும் வெளி மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது.

ராஜகிரிய வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்திலுள்ள விடுதித் தொகுதி சவறின் வதிவிடங்கள் என மீள் பெயரிடப்பட்டு ரூ.100 மில்லியன் செலவில் முழு அளவில் புதுப்பிக்கப்பட்டது. சவறின் வதிவிடங்களின் முகாமைத்துவம் தேசிய செய்தித் தாள்களில் பகிரங்க விலைக்கோரலுக்கு அழைக்கப்பட்டவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்திற்கு 10 வருட காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடப்பட்டது. பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம் இவ் வதிவிடங்களை மூன்று நட்சத்திர விடுதியாக மாற்றியமைப்பதற்கு கிட்டத்தட்ட ரூ.50 மில்லியனை முதலிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதுடன் தொழிற்பாட்டை 2009 பெப்புருவரி முதற் கிழமையில் ஆரம்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பணிமனைத் திணைக்களம் மாத்தளை பிரதேச அலுவலகத்துக்கான புதிய கட்டட நிர்மாணத்தை ரூ.45

மில்லியன் செலவில் 2008 மார்ச்சில் ஆரம்பித்தது. 160 ஆசனங்களைக் கொண்ட கேட்போர் கூடம் உள்ளடங்கலாக கிட்டத்தட்ட 11,000 சதுர அடி மொத்த தளப்பரப்பளவைக் கொண்டுள்ள இவ் இரண்டு மாடி அலுவலகக் கட்டடம் மாத்தளையில் திருகோணமலை வீதியில் அமைந்துள்ளது. இக் கட்டடம் 2009 பெப்பருவரி 1இல் திறப்பதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது.

அனகாரிக தர்மபால மாவத்தை அகலமாக்கப்படுவதன் காரணமாக மாத்தறையிலுள்ள பிரதேச அலுவலகத்தின் ஒரு பகுதியை இடித்துத் தள்ளப்பட வேண்டியிருந்ததுடன் இவ் அழிப்பின் பணியுடன் முழுப் பிரதேச அலுவலகக் கட்டடத்தையும் ரூ.30 மில்லியன் கொண்ட மொத்தச் செலவில் திருத்துவதற்கும் புதுப்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வேலை முக்கிய அமைப்பு ரீதியில் இடித்துவிடுவதுடனும் மற்றும் சிறந்த அமைப்பின் நிர்மாணிப்பதுடனும் தொடர்புடையதாகக் காணப்பட்டது. சகல முக்கிய இடிப்பு மற்றும் நிர்மாணப் பணிகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் உள்ளக மற்றும் இறுதிக்கட்ட வேலைகள் விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இக் கட்டடம் 2009 மார்ச்சு 1ஆம் திகதியன்று திறந்து வைப்பதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது. இத்துடன் பிரதேச அலுவலக முகாமையாளரின் வதிவிடமும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி தலைமை அலுவலகம் மற்றும் சதாம் வீதி மணிக்கூட்டுக் கோபுரத்தின் வெளிப்புற வர்ணப்பூச்சும் திருப்திகரமாக பூர்த்தியாக்கப்பட்டது. தலைமை அலுவலகக் கட்டடம் 1999இல் கட்டடத்தின் நிர்மாணத்திற்குப் பின் அதனது முதலாவது வர்ணப்பூச்சு பூசப்பட்டதற்குப் பின்பு வர்ணம் பூசப்படவில்லை. மேற்கூறிய இரு வேலைகளுக்கான மதிப்பிடப்பட்ட செலவு கிட்டத்தட்ட ரூ.20 மில்லியனாக விளங்கியது. விரிவாக்கப்பட்ட கட்டடத்தின் ஒளித் தடுப்புக்களைத் துப்பரவு செய்தலும் பூர்த்தி செய்யப்பட்டது.

பணிமனைத் திணைக்களம் அநுராதபுரத்திலுள்ள பிரதேச அலுவலகப் பணிமனையினுள் மிக நவீனத்துவம் வாய்ந்த நாணய நூதன சாலையை நிறுவியுள்ளது. இச் செயற்றிட்டம் ஒன்பது (9) வாரங்களினுள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் பொது மக்களுக்காக 2008 செத்தெம்பர் 5ஆம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியில் உள் மின்தூக்கிகளுக்கான அவசரகால தரையிறக்கல் முறைமை ரூ.8 மில்லியன் செலவில் நிறுவப்பட்டது. உடற் பயிற்சிக் கூடத்தின் நிர்மாணமும் ரூ.3 மில்லியன் செலவில் பூர்த்தி செய்யப்பட்டது.

திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் சகல பணிமனைகளின் வெளியக அழகுபடுத்தலைத் தொடர்ந்து பேணியது.

## 20. பொதுப்படுகடன்

அரசின் முகவர் என்ற ரீதியில் பொதுப்படுகடன் திணைக்களமானது பொதுப்படுகடன் வழங்கல் மற்றும் முகாமையுடன் தொடர்புபட்ட அதன் பொறுப்புக்களை மேம்பட்ட பொறுப்புக்கூறும் தன்மையுடனும் வெளிப்படையான தன்மையுடனும் தொடர்ந்து நிறைவேற்றியது. இதன்படி, பொதுப்படுகடன் திணைக்களம் முன்மதியுடைய இடர்நேர்வு அளவுடன் நடுத்தர தவணையிலிருந்து நீண்ட தவணைவரை சாத்தியமானளவிற்கு குறைந்த செலவில் அரசின் தேவைகளை நிதியிடுவதற்கும் தேவையான நிதியங்களைத் திரட்டி, 100 சதவீத துல்லியத்துடன் உரிய நேரத்தில் அரசின் படுகடன் கடப்பாடுகளுக்கான பணிக்கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதன்மூலம் வழுவற்ற படுகடன் பணிக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் சாதனையைப் பேணியதுடன் அரச பிணையங்கள் சந்தையை விரிவுபடுத்துவதற்கும் உறுதியாக்குவதற்கும் சாத்தியமான ஒவ்வொரு வழிமுறைகளையும் மேற்கொண்டது. 2008இற்கான மத்திய வங்கியின் உபாயத்திட்டப்படி, 2007இல் உருவாக்கப்பட்ட நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ உபாயத்தை பொதுப்படுகடன் திணைக்களம் பூரணப்படுத்தியது. படுகடன் முகாமைத்துவ உபாயமானது ஒரேநேரத்தில் பெருமளவு படுகடன்கள் முதிர்ச்சியடைதல், திறைசேரிமுறி நிகழ்ச்சித் திட்டத்திலான சிறு கூறுகளாக்கல் பிரச்சனை, நீண்டகால விளைவு வளையியின் விருத்தி, நம்பகத்தகுந்ததும் திரவத்தன்மை மிக்கதுமான படுகடன் சந்தையை விருத்தி செய்தல் மற்றும் மத்திய வைப்பக முறைமையில் அரச பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்களில் சகல முதலீட்டாளர் கொடுக்கல் வாங்கல்களையும் பதிவு செய்தல் என்பவற்றைத் தீர்க்கிறது. இது, நடுத்தரக் காலப் படுகடன் / மொஉஉ இலக்கை அடைவதற்கும், முதலீட்டாளர் தளத்தை விரிவுபடுத்துவதற்கும், தற்போதைய ஒழுங்குமுறை மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் கட்டமைப்பைப் பலப்படுத்துவதற்கும், மற்றும் முதனிலை வணிகர்கள் முறைமையை மீள அமைப்பதற்குமாக எச்சரிக்கையுடன் கூடிய கடன்பாட்டுத் திட்டத்தை விதந்துரைத்தது.

வெளிநின்ற படுகடன் தோற்றப்பாட்டின் முதிர்ச்சி அமைப்பு, முதிர்ச்சித் தோற்றப்பாட்டின் குறுகிய காலப் பகுதியில் ஒரே நேரத்தில் பெருமளவு படுகடன்கள் முதிர்ச்சியடைதல் கணிசமாக இருப்பதை எடுத்துக்காட்டுகிறது. 2008இல் பொதுப்படுகடன் திணைக்களம் 364 நாள் திறைசேரி உண்டியல்கள் வழங்குவதை அதிகரித்த அதேவேளை 91 நாள் உண்டியல்களின் வழங்கலை மட்டுப்படுத்தியதன் மூலம் திறைசேரி உண்டியல் நிகழ்ச்சித் திட்டத்தில் ஒரே நேரத்தில் பெருமளவு படுகடன்கள் முதிர்ச்சியடைதல் பிரச்சனையைக் குறைக்கக் கூடியதாகவும் முதிர்ச்சி அமைப்பை எளிதாக்கக் கூடியதாகவும் இருந்தது. எனினும் சந்தையில் நீண்ட தவணை முதிர்ச்சிகளுக்காக உயர் விளைவு வீதங்கள் நிலவியதன் காரணமாக நீண்டகால முதிர்ச்சிகளுடனான திறைசேரி உண்டியல்களை வழங்குவது சாத்தியமாகவில்லை. உள்நாட்டுப்படுகடன் சந்தையில் உயர்ந்தளவில் சிறு கூறுகளாகக் காணப்படும் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு கூடியளவு காத்தியமான அளவுகளுக்கு சந்தைக்கு புதிய முறித் தொடரை அறிமுகப்படுத்துவதை மட்டுப்படுத்தி தற்போதைய திறைசேரி முறித் தொடரை மீளத் திறப்பதற்கான கொள்கையைப் பொதுப்படுகடன் திணைக்களம் தொடர்ந்து மேற்கொண்டது. எனினும், வெளியக வெளிநாட்டுக் கடன்பாடுகளை உள்நாட்டு மூலங்களுக்கு நகர்த்தியமையின் காரணமாக உள்நாட்டு மூலங்களிலிருந்தான கடன்பாடுகள் கடுமையாக அதிகரித்தமையால், 2008இல் பெரும் எண்ணிக்கையான முறித் தொடர்களை திட்டமிட்ட முறையில் குறைப்பது பாதிக்கப்பட்டது. இப் பிரச்சனைக்கு மத்தியிலும், பொதுப்படுகடன் திணைக்களம் திறைசேரி முறித் தொடரின் மொத்த எண்ணிக்கையை 2007இல் இருந்தவாறு 2008இன் இறுதியில் 42இல் பேணக்கூடியதாக இருந்தது. முதனிலை வணிகர் முறையினை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தினைக்

கருத்திற் கொண்டு அவற்றின் நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்துவதற்காக முதனிலை வணிகர் முறைமையை மீள அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் இந் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்ட ஒப்புதலுக்காக காத்திருக்கிறது.

நாட்டுக்கான முறிகளின் திரவத்தன்மையை அதிகரிக்கும் பொருட்டு 2007இல் அரசால் வழங்கப்பட்ட நாட்டுக்கான பன்னாட்டு முறிகளை இரண்டாந்தரச் சந்தையில் கொள்வனவு செய்வதற்கு 2008இல் உரிமம் பெற்ற வங்கிகள் அனுமதிக்கப்பட்டன. அரச பிணையங்கள் சந்தையில் முதலீட்டாளர் தளத்தை விரிவாக்கும் பொருட்டும் உள்நாட்டில் வட்டி மீதான அழுத்தத்தைக் குறைக்கும் பொருட்டும் வெளிநின்ற இருப்பில் 10 சதவீதம் வரையான திறைசேரி உண்டியல்களில் முதலிடுவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களை அனுமதித்ததன் மூலம் திறைசேரிச் சந்தையும் 2008 மேயில் அவர்களுக்கு திறந்து விடப்பட்டது.

சிறு பெறுமதியுடைய அரச பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி பரந்த பிரதேச வலையமைப்பை அடிப்படையாகக் கொண்ட பிரயோகத்தின் அறிமுகத்துடனும் முறைமையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும் கட்டாயத் தேவையின் அறிமுகத்துடனும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையூடாக இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதியும் மத்திய வைப்பக முறைமையில் பேணப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2008இல் கணிசமானளவில் அதிகரித்தது. இவ்வழிமுறை அரச பிணையங்கள் சந்தையில் சிறு முதலீட்டாளர்களின் பாதுகாப்பை அதிகரிக்க உதவியது. இத்துடன், லங்காசெற்றில் பிரயோக முறைமை நீண்ட காலத்துக்கு மீளத் திருத்தப்படமுடியாத சந்தர்ப்பத்தில் பயன்படுத்தக் கூடிய மாற்றுத் தீர்ப்பனவு முறையாக தனியாள் கணனி அடிப்படையிலான கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையை பொதுப்படுகடன் திணைக்களம் அறிமுகப்படுத்தியது.

அரச பிணையத்தை விரிவாக்கும் பொருட்டும் முதலீட்டாளர் தளத்தை பன்முகப்படுத்துவதற்கும் பொதுப்படுகடன் திணைக்களம் ஆண்டு முழுவதும் இலத்திரனியல் ஊடகம் மற்றும், பொதுமக்கள் மற்றும் அறிவூட்டும் கருத்தரங்குப் பிரசாரங்களூடாக தீவிரமான முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தியது. இத்துடன் பொதுப்படுகடன் திணைக்களம் பொதுமக்களை அறிவூட்டுவதற்கு 2008இல் அரச பிணையங்கள் தொடர்பான விவரணத் திரைப்படத்தை வெளியிட்டதுடன், இது பலவகையான தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் பல தரப்பட்ட கூட்டங்கள், பொருட் காட்சிகள் மற்றும் கருத்தரங்குகளூடாக ஒளிபரப்பப்பட்டன. 2008இல் பொதுப்படுகடன் திணைக்களம் பொதுப்படுகடன் தொழிற்பாடுகளின் வெளிப்படையான தன்மையை அதிகரிப்பதற்கும் பொது மக்கள், கொள்கை வகுப்போர் கல்விமான்கள் மற்றும் அரசபடுகடன் சந்தையில் பற்கேற்பவர்களுக்கு பொதுப்படுகடனின் மட்டம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான தகவலை வழங்குவதற்கும் இலங்கையில் பொதுப்படுகடனின் முகாமைத்துவம் என்ற அதன் வருடாந்த வெளியீட்டைத் தொடர்ந்து வெளியிட்டது. பொதுப்படுகடன் திணைக்களம் தெரிந்தெடுக்கப்பட்ட மத்திய கிழக்கு நாடுகளில் முதலீட்டாளர் ஆர்வத்தைச் சோதிப்பதற்கும் முதலீட்டாளர் தளத்தை விரிவாக்குவதற்கும் வணிகத்தில் ஈடுபடாத பிரசாரத்தை ஏற்பாடு செய்தது. இத்துடன், மத்திய கிழக்குச் சந்தையில் முதலீட்டாளர்களைக் கவர்வதற்கு சாறியா தத்துவங்களின் கீழ் வழங்கப்படட பலதரப்பட்ட சாதனங்களில் நிதி அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் மத்திய வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அலுவலர்களைக் கொண்ட குழு பயிற்றுவிக்கப்பட்டது.

2008இல் பொதுப்படுகடன் திணைக்களம் பிச்ட்றேற்றிங் மற்றும் இசுராண்டட் அன்ட் புவர்ஸ் என்பவற்றுடன் இரு நாட்டுக்கான தரமிடல் பணிகளுக்கும் வசதிப்படுத்தியதுடன் ஜே பி மோர்கன் தரமிடல் மதியுரைஞர்களின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கி அலுவலர்களுக்கும் நிதி அமைச்சின் அலுவலர்களுக்கும் நாட்டுக்கான தரமிடல் தொடர்பான கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

## 20.1 2008இன் அபிவிருத்திகள்

### (அ) கடன்பாட்டு இலக்கும் உபாயமும்

2007இன் 61ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் நியதிகளில் பாராளுமன்றம் எதிர்பாராதவற்றுக்கான ரூ.19 பில்லியன் ஒதுக்கம் உள்ளிட்ட ஏட்டுப் பெறுமதி நியதிகளில் 2008இற்கான அரசின் மொத்தக் கடன்பாட்டு எல்லையான ரூ.708 பில்லியனுக்கு ஒப்புதலளித்தது. இக் கடன்பாட்டு எல்லையில் ரூ.475 பில்லியன் உள்நாட்டு மூலங்களிலிருந்து நிதியிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகையில் எஞ்சிய ரூ.233 பில்லியன் வெளிநாட்டு மூலங்களூடாக திரட்டப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இவ்வாண்டின் பிற்பகுதியில் காணப்பட்ட உலகளாவிய நிதியியல் நெருக்கடி எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகளைத் திரட்டுவதற்கு அரசை அனுமதிக்கவில்லை என்பதுடன் இது உள்நாட்டுக் கடன்பாடுகளுக்கு நகர்த்தப்பட்டது. இதன்படி, 2008இல் மொத்தக் கடன்பாடுகளை ஆரம்ப மொத்த கடன்பாட்டு இலக்கினுள் பேணியவேளையில் பெறப்பட்ட உள்நாட்டுக் கடன்பாடுகள் ரூ.76 பில்லியனால் ரூ.551 பில்லியனுக்கு அதிகரித்ததுடன் பெறப்பட்ட மொத்த வெளிநாட்டு கடன்பாடுகள் ரூ.97 பில்லியனால் ரூ.136 பில்லியனுக்கு அதிகரித்தன.

2007இற்குப் பின் நிலவிய உயர் பணவீக்கத்துடன் இணங்கிச் செல்லும் விதத்தில், 2008இல் உள்நாட்டு வட்டி வீதங்கள் தொடர்ந்தும் உயர்வாகக் காணப்பட்டன. எனவே, பொதுப்படுகடன் திணைக்களம் நீண்ட கால படுகடன் கருவிகளைவிட குறுகிய தவணை மற்றும் நடுத்தரகால உள்நாட்டுப்படுகடன் கருவிகளில் கூடியளவு தங்கியிருக்க வேண்டியிருந்தது. இதன்படி, ஆரம்ப இலக்கான முறையே ரூ.10 பில்லியன் மற்றும் ரூ.362 பில்லியன் ஆரம்ப இலக்குடன் ஒப்பிடுகையில் திறைசேரி உண்டியல்களூடாக ரூ.61.9 பில்லியனும் திறைசேரி முறிகளூடாக ரூ.406.5 பில்லியனும் திரட்டப்பட்டது. இத்துடன் ரூ.37.6 பில்லியன் இலக்கிலிருந்து (ஐ.அ.டொலர் 360 மில்லியன்) 2008இல் இலங்கை அபிவிருத்தி முறிகளூடாக ரூ.36.1 பில்லியன் (ஐ.அ.டொலர் 335 மில்லியன்) கடன் பெறப்பட்டது. உள்நாட்டுப்படுகடன் இருப்பிலிருந்து சந்தைப்படுத்த முடியாத படுகடன் இருப்பைக் குறைக்கும் உபாயத்தை தொடர்ந்து மேற்கொள்வதால் 2008இல் பொதுப்படுகடன் திணைக்களம் ரூபாக் கடனை வழங்கவில்லை.

2008இல் பொதுப்படுகடன் திணைக்களம் 91 நாள் திறைசேரி உண்டியல் வழங்கலை மட்டுப்படுத்தி 182 நாள்கள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்களை வழங்குவதன் மூலமும் திறைசேரி உண்டியல்களில் ஒரேநேரத்தில் பெருமளவு கடன்கள் முதிர்ச்சியடைதலால் ஏற்படும் அழுத்தத்தைத் தணிப்பதற்கு முயற்சித்தது. இதன்படி, 3 மாத முதிர்ச்சிகளைக் கொண்ட திறைசேரி உண்டியல்களின் வழங்கல் 2007இன் 67 சதவீதத்திலிருந்து 2008இல் மொத்தத் திறைசேரி உண்டியல் வழங்கல்களின் 32 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டதுடன் 12 மாத உண்டியல்கள் 2007இன் 14 சதவீதத்திலிருந்து 2008இல் 41 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டன. எனினும், இவ் உபாயத்தினை திறைசேரி முறிகளில் வெற்றிகரமாக பின்பற்ற முடியாமற் போனதுடன் சந்தையில் நீண்ட தவணை முதிர்ச்சிகளுக்கு நிலவிய உயர் விளைவு வீதங்கள் காரணமாக 3 ஆண்டுகளுக்குக் கூடிய முதிர்ச்சிகளுடனான திறைசேரி முறிகளின் வழங்கல் மொத்த வழங்கலில் 29 சதவீதமாக மட்டுமே காணப்பட்டது.

பொதுப்படுகடன் திணைக்களம் உலகளாவிய நிதியியல் நெருக்கடி காரணமாக ரூ.67 பில்லியன் இலக்குடன் ஒப்பிடுகையில் 2008இல் வெளியக வெளிநாட்டு மூலத்திலிருந்து ரூ.39 பில்லியனை மட்டுமே கடன் பெறக்கூடியதாக இருந்தது. இதில், ரூ.16 பில்லியன் கூட்டுக்கடனூடாகத் திரட்டப்பட்டதுடன் ரூ.22.9 பில்லியன் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் வழங்கியதன் மூலம் திரட்டப்பட்டது. வெளிநாட்டு சலுகை அடிப்படையிலான மூலங்களிலிருந்து செயற்றிட்டம்/நிகழ்ச்சித்திட்டம் கடன்களூடான அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்காக அரசு ரூ.166 பில்லியனை எதிர்பார்த்த போதிலும் 2008ஆம் ஆண்டில் ரூ.97 பில்லியன் மட்டுமே பெறப்பட்டது.

### (ஆ) படுகடன் கருவிகளின் வழங்கல்

2008இல் பொதுப்படுகடன் திணைக்களம் 52 திறைசேரி உண்டியல் ஏலங்களை நடத்தியதுடன் ஏலங்கள் மற்றும் இடமளிப்புகளூடாக மொத்த நியதிகளில் ரூ.799.6 பில்லியன் (முகப்புப் பெறுமதி நியதிகளில்) திறைசேரி உண்டியல்களை வழங்கியது. இது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நியதிகளிலான ரூ.14.7 பில்லியனை உள்ளடக்கியுள்ளது. இதேவேளை பொதுப்படுகடன் திணைக்களம் 76 திறைசேரி முறி ஏலங்கள் மற்றும் தனியார் இடமளிப்புகளூடாக ரூ.488.8 பில்லியனை (முகப்புப் பெறுமதி நியதிகளில்) திரட்டியது. இதில் ரூ.10.5 பில்லியன் பெறுமதியான வெளிநாட்டு முதலீடுகளும் உள்ளடங்குகிறது.

2008 யூனிலும் செத்தெம்பரிலும் 2 இலங்கை அபிவிருத்தி முறிகள் மீள வழங்கப்பட்டன. இரண்டு ஆண்டு முதிர்சியுடன் கூடிய இலங்கை அபிவிருத்தி முறிகளை வழங்கியதன் மூலம் பொதுப்படுகடன் திணைக்களம் ஐ.அ.டொலர் 275 மில்லியனையும் மேலும் ஐ.அ.டொலர் 60 மில்லியனையும் திரட்டக்கூடியதாக இருந்தது. மேலும், இலங்கை வங்கியின் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவிலிருந்து பெறப்பட்ட ஐ.அ.டொலர் 593.1 மில்லியன் கொண்ட கடன்கள் 2008 யூலையில் 2 ஆண்டுகள் (ஐ.அ.டொலர் 195 மில்லியன்) மற்றும் 5 ஆண்டுகள் (ஐ.அ.டொலர் 398 மில்லியன்) முதிர்ச்சிக் காலப்பகுதியைக் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கு மாற்றப்பட்டது. இத்துடன் ஐ.அ.டொலர்

**அட்டவணை II 13**

**2008இல் உள்நாட்டுப்படுகடனின் வழங்கலும் முதிர்ச்சியும் (அ)**

ரூ. மில்லியன்

| | முதிர்ச்சி | வழங்கல் | மீள்கொடுப் பனவுகள் | தேறிய வழங்கல் |
|---|---|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள் | 91 நாட்கள் | 172,696 | 239,187 | -66,491 |
| | 182 நாட்கள் | 147,654 | 128,036 | 19,618 |
| | 364 நாட்கள் | 156,519 | 97,427 | 59,092 |
| | ஏனையவை | 302,707 | 212,980 | 89,727 |
| | மொத்தம் | 779,576 | 677,630 | 101,946 |
| திறைசேரி முறிகள் | 1 ஆண்டு | 45,549 | 39,154 | 6,395 |
| | 2 ஆண்டுகள் | 179,192 | 2,700 | 176,492 |
| | 3 ஆண்டுகள் | 123,690 | 119,457 | 4,233 |
| | 4 ஆண்டுகள் | 93,423 | 9,100 | 84,323 |
| | 5 ஆண்டுகள் | 26,072 | 43,700 | -17,628 |
| | 6 ஆண்டுகள் | 2,550 | 43,500 | -40,950 |
| | 10 ஆண்டுகள் | 18,261 | - | 18,261 |
| | மொத்தம் | 488,737 | 257,611 | 231,126 |
| ரூபாக் கடன்கள் | 9/10 வருடங்கள் | - | 1,500 | -1,500 |
| | மொத்தம் | - | 1,500 | -1,500 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள்(ஆ) | 2 வருடங்கள் | 36,121 | 34,474 | 1,647 |
| | மொத்தம் | 36,121 | 34,474 | 1,647 |
| வெ.நா.வ.பிரிவு களிலிருந்தான கடன்கள் (ஆ)(இ) | <= 1 வருடம் | 8,078 | 5,400 | 2,678 |
| | 2 வருடங்கள் | 215 | 1,663 | -1,448 |
| | மொத்தம் | 8,293 | 7,063 | 1,230 |
| முழுமொத்தம் | | 1,312,727 | 978,279 | 334,448 |

(அ) முகப்புப் பெறுமதி மூலம்: இலங்கை மத்திய வங்கி

(ஆ) இலங்கை அபிவிருத்தி முறிக்கு மாற்றப்பட்ட ஐ.அ.டொலர் 393.1 பெறுமதி கொண்ட வெ.நா.வ.தொ.பிரிவின் கடன்கள் நீங்கலாக

(இ) 2007 ஒத்தோபரில் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெற்ற ஐ.அ.டொலர் 50 மில்லியன் பெறுமதியான கடனுக்கான கொடுப்பனவையும் உள்ளடக்கியுள்ளது.

77 மில்லியனைக் கொண்ட கடன்கள் உள்ளூர் வங்கிகளின் வெளிநாட்டு வங்கித் தொழில் பிரிவுகளிலிருந்து திரட்டப்பட்டன.

### (இ) படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

2008ஆம் ஆண்டில் பொதுப்படுகடன் திணைக்களம் ரூ.592.8பில்லியன் கொண்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கடன்களைப் பணிக் கொடுப்பனவு செய்தது. பணிக் கொடுப்பனவு செய்த மொத்தப் படுகடனில் ரூ.212.5 பில்லியன் வட்டியாக விளங்குகையில் மூலதன மீள் கொடுப்பனவுகள் ரூ.380.3 பில்லியனாக விளங்கின. பணிக் கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டுப் படுகடன் ரூ.440.9 பில்லியனாக இருக்கையில் பணிக் கொடுப்பனவு செய்யப்பட்ட வெளிநாட்டுப்படுகடன் ரூ.151.9 பில்லியனாக விளங்கியது. இத்துடன் ரூ.678 பில்லியன் கொண்ட முதிர்ச்சியடையும் திறைசேரி உண்டியல்கள் இவ்வாண்டில் மீள வழங்கப்பட்டன.

### (ஈ) விளைவு வீதங்களும் இரண்டாந்தரச் சந்தையின் செயலாற்றமும்

அண்மைக் காலத்தில் அவதானிக்கப்பட்ட அரச பிணையங்களின் விளைவு வீதங்களில் அவதானிக்கப்பட்ட படிப்படியாக அதிகரித்துச் செல்லும் போக்கு 2008இன் ஆரம்பத்திலிருந்து அதற்கு எதிராக மாற்றமடைந்தது. 2008 மேயில் வெளிநாட்டவர்களுக்கு திறைசேரி உண்டியல் சந்தையைத் திறந்து விட்டதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து அரச பிணையங்களுக்கு ஏற்பட்ட உயர்கேள்வி, இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் நிலவிய குறைந்த பணவீக்க

எதிர்பார்ப்புக்கள், சந்தையில் தொடர்ந்து காணப்பட்ட திரவத்தன்மை மிகை என்பன (இவ்வாண்டின் பிற்பகுதியைத் தவிர) உள்நாட்டுச் சந்தையில் விளைவு வீதங்களிலான அதிகரித்துச் செல்லும் போக்கைத் தணிப்பதற்கு உதவிய முக்கிய பங்களிப்புக் காரணிகளாகும்.

இரண்டாம் தரச் சந்தையில் 91, 182 மற்றும் 364 நாள் முதிர்ச்சிகளுக்கான திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள் 2008 சனவரிக்கும் செத்தெம்பருக்கும் இடையில் முறையே 520, 255 மற்றும் 215 அடிப்படைப் புள்ளிகளால் வீழ்ச்சியடைந்திருக்கையில் 2 -5 ஆண்டுகள் முதிர்ச்சிகளுடனான திறைசேரி முறிகளுக்கான விளைவு வீதங்கள் அதே காலப்பகுதியில் 140 -250 அடிப்படைப் புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தன. முதலாந்தர மற்றும் இரண்டாம் தரச் சந்தை விளைவு வளையிகள் படிப்படியாக கீழ்நோக்கிய நகர்வைக்காட்டி 2008 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரை வட்டி வீதங்களிலான வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கை பிரதிபலித்தது. இது முக்கியமாக சந்தையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உயர்மட்டப் பங்களிப்பால் ஏற்பட்டதாகும். எனினும் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டிலுமான விளைவு வீதங்கள் உலகளாவிய நிதியியல் நெருக்கடி மோசமடைந்ததன் காரணமாக அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உடமைகளை குறைத்துக் கொள்வதற்கு அவர்கள் ஆரம்பித்ததால் செத்தெம்பரிலிருந்து திசெம்பர் வரை அதிகரித்து சந்தையில் அளவுக்கதிகமான வழங்கலை ஏற்படுத்தியது. 2008 செத்தெம்பருக்குப் பின்பு சந்தையில் நிலவிய திரவத் தன்மைப் பற்றாக்குறை நிபந்தனைகளும் சந்தையிலான வட்டி வீதங்கள் மீதான அழுத்தத்தை அதிகரித்தன. எனினும், ஆண்டின் இறுதியில் விளைவு வீதங்கள் அதிகரித்துச் செல்லும் போக்கு ஓரளவுக்குக் குறைவடைந்ததுடன் இரண்டாந்தரச் சந்தையிலான விளைவு வீதங்கள் உறுதியடைந்து வீழ்ச்சியடைந்து செல்லும் பணவீக்கத்துக்கும் பணவீக்க எதிர்பார்ப்புக்களுக்கும் சாதகமான சந்தைப் பதிலிறுப்பை எடுத்துக் காட்டுகிறது.

### (உ) பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையும் மத்திய வைப்பக முறைமையும்

#### லங்கா செகுயர்

2008இல் பொதுப்படுகடன் திணைக்களமானது 22 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 8 வங்கியல்லாத முதனிலை வணிகர்கள், ஊழியர் சேம நிதியம் மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் மத்திய வைப்பக முறைமைகள் (தனியார்) லிமிடெட் என்பனவற்றை உள்ளடக்கிய அதன் பங்குபற்றுனர்களுடன் லங்கா செக்குயரின் தொழிற்பாடுகளை தொடர்ந்து பேணக் கூடியதாக இருந்தது. 2008இல் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையினூடாக இடம்பெற்ற மொத்தக் கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை 2007இன் 60 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 85 சதவீதத்தால் கணிசமானளவில் அதிகரித்தது, இக் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி 45 சதவீதத்தால் ரூ.26,038 பில்லியனுக்கு அதிகரித்தது. மத்திய வைப்பக முறைமையில் பேணப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை 2007இன் 41,953 இலிருந்து 2008இல் 56,041இற்கு மேலும் அதிகரித்தது. இது குறைந்த பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை இலவசமாகப் பதிவு செய்வதற்கான இலங்கை மத்திய வங்கியின் பரந்த வலையமைப்பின் அறிமுகம் மற்றும் தீவிர முதலீட்டாளர் விழிப்புணர்வுப் பிரசாரங்கள் காரணமாக முதலீட்டுத்தளம் விரிவடைந்தமையினால் ஏற்பட்டது. லங்கா செக்குயர் முதலீட்டாளர்களின் நம்பகத்தன்மை அளவை அதிகரிப்பதற்காக கூற்றுக்களை முதலீட்டாளர்களுக்கு தொடர்ந்து அனுப்பியது. மத்திய வைப்பக முறைமையில் வைக்கப்பட்டுள்ள முதலீட்டாளர்களின் பேரேட்டைப் பார்ப்பதற்கு முதலீட்டாளர்களின் மத்திய வைப்பக முறைமைக் கணக்குக்கு அதேநேர பெறுதலை வழங்கும் லங்கா செக்குயரால் வழங்கப்பட்ட இன்னுமொரு கட்டணமற்ற பணியாக லங்கா செக்குயர்நெற் விளங்குகிறது.

அனைத்தையுமுள்ளடக்கிய அனர்த்த மீட்புத் திட்டத்தை நோக்கி நகரும் குறிக்கோளுடன் புதிய பணிப்புரையை வழங்கும் கருவியாக பொதுப்படுகடன் திணைக்களம் விளங்கியது.2008 ஓகத்து 18 இலிருந்து நடைமுறைக்கு வந்த தனியாள் கணனி அடிப்படையிலான கொடுப்பனவு மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையின் அறிமுகம், பழைய நிலமைக்கு கொண்டு வரமுடியாத லங்கா செற்றில் பிரயோகமுறை நீண்ட காலத்துக்கு இருக்குமிடத்து அதனை மாற்றும் தீர்ப்பனவு முறைமையாக பயன்படுத்தலாம்.

### (ஊ) முதனிலை வணிகர்களது மேற்பார்வை

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பேணும் நோக்குடன் பொதுப்படுகடன் திணைக்களம் 2008இல் கிரமமான தலத்துக்கு வெளியேயான கண்காணிப்பு, தலத்திலேயான பரீட்சிப்புக்கள் மற்றும் உடன் பரீட்சிப்புக்களினூடாக முதனிலை வணிகர்களைத் தொடர்ந்து மேற்பார்வை செய்தது. திணைக்களம் இவ்வாண்டில் ஏழு கிரமமான தலத்திலேயான பரீட்சிப்புக்களையும் ஒரு உடன் பரீட்சிப்பையும் நிறைவேற்றியது.இது சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு தொழிற்பாட்டு இடநேர்வு மற்றும் ஏனைய இடர்நேர்வுகள் போன்ற இடர்நேர்வுகளுக்கு முதனிலை வணிகர்கள் உள்ளாவதை மதிப்பிடுதலிலும் அவ் இடர்நேர்வுகளை முகாமை செய்வதிலும், வருவாய்கள், மூலதனம் மற்றும் முகாமைத்துவம் போன்றவற்றின் போதுமாந்தன்மையை முகாமை செய்வதிலும், அத்தகைய இடர்நேர்வுகளை முன்மதியுடைய மட்டங்களில் தணிப்பதிலும் கவனம் செலுத்தியது. இதேவேளை, முதனிலை வணிகர் கைத்தொழிலை உரிய விதத்தில் பேணுவதற்கு விடயங்களைக் கலந்தாய்வதற்கும் முதனிலை வணிகர்களின் கிரமமான முதனிலை அலுவலர்களின் கூட்டங்கள் ஆண்டு முழுவதும் நடத்தப்பட்டன.

முதனிலை வணிகர்கள் மற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்அவற்றின் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் பொதுவாகப் பயன்படுத்தக் கூடிய முதன்மை மீள்கொள்வனவு உடன்படிக்கையானது முதனிலை வணிகர்கள் சங்கம் மற்றும் இலங்கை வங்கியாளர் சங்கத்துடன் இணைந்து பொதுப்படுகடன் திணைக்களத்தால் இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, சகல முதனிலை வணிகர்களும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 2009 சனவரி 1இலிருந்து இப்பொதுவான முதல் மீள்கொள்வனவு உடன்படிக்கையை அவற்றின் மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் பயன்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

### (எ) அரச பிணையத்தின் சந்தை அபிவிருத்தி

அரச பிணையச் சந்தையை விருத்தி செய்யும் பொருட்டு முதலீட்டாளர் தளத்தை விரிவாக்குவதற்காக பொதுப்படுகடன்

திணைக்களம் பொதுமக்கள் மற்றும் அறிவூட்டல் கருத்தரங்கு நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகத்தினூடாக தீவிர முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தியது. இவ்வாண்டில் பொதுப்படுகடன் திணைக்களம் 14 பொதுமக்கள் முதலீட்டாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும், 24 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து 30 வானொலி நிகழ்ச்சித் திட்டங்களையும் ஏற்பாடு செய்தது. இதேவேளை, பொதுப்படுகடன் திணைக்களம் பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்காக 2008இல் அரச பிணையங்கள் மீதான விவரணப்படத்தை வெளியிட்டதுடன் பலதரப்பட்ட தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் பலதரப்பட்ட கூட்டங்கள் பொருட்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகளிலும் 28 தடவைகள் ஒளிபரப்பியது. இத்துடன் அரச பிணையம் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டும் பொருட்டு பொதுப்படுகடன் திணைக்களம் உள்நாட்டிலும் அதுபோல் வெளிநாட்டிலும் ஒளிபரப்புச் செய்யப்பட்ட 8 தொலைக்காட்சிக் கலந்துரையாடல்களில் பங்கு பற்றியது.

## 21. பிரதேச அபிவிருத்தி

மீளாய்விற்குரிய ஆண்டில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் முக்கிய உபாயத் துறைகளுக்கான கொடுகடன் வழங்கலை ஒருங்கிணைத்தல் மற்றும் ஊக்குவிப்புக்களினூடாக பிரதேச அபிவிருத்தி முன்னெடுப்புக்களை மேம்படுத்தும் நோக்குடனான செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டது. இது பெரும்பாலும் பல மீள்நிதியிடல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் சிறப்புத் திட்டங்களினூடாக அடையப்பட்டது. 2008இல் புதிதாக விடுவிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் நிலவிய முன்னேற்றமடைந்த பாதுகாப்பு நிலைமை இம் மாகாணத்திற்கு நிதியங்களின் பாய்ச்சலை அதிகரிக்கச் செய்வதில் தீவிரமாக ஈடுபடுவதற்கு பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வாய்ப்பை வழங்கியது. வறுமை ஒழிப்புத்துறையில், இத் திணைக்களம் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்ட சுழலும் நிதியத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்ந்து செயற்பட்டதுடன் கிழக்கு மாகாணத்தில் வறுமையில் இருப்பவர்களை இலக்கிடுவதற்கு விசேட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பெரும்பாலும் மோதல்களால் பாதிப்படைந்த மாவட்டங்களை உள்ளடக்கும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச்செயற்றிட்டம் கட்டம் II மீதான ஆரம்ப வேலையும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2008 ஏப்பிறலில், 2008இற்கான வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட வேளாண்மை கால்நடை அபிவிருத்தி கடன் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ஆரம்பித்தது. இவ்வாண்டில் வேளாண்மையில் ஏற்பட்ட பெருமளவு வளர்ச்சியுடன் இணங்கிச் செல்லும் விதத்தில், வேளாண்மை சம்பந்தமான அநேகமான கொடுகடன் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழான கொடுகடனுக்கான கேள்வியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது. இவ்வாண்டின் மூன்றாம் காலாண்டில் சுனாமி புனரமைப்பு கடன் திட்டங்களின் விளைவு மதிப்பீட்டு அளவீடு மேற்கொள்ளப்பட்டிருக்கையில் இவ்வாண்டில் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டத்தின் அனைத்தையுமுள்ளடக்கிய விளைவு மதிப்பீட்டு அளவீட்டுடன் தொடர்பான ஆரம்ப வேலையும் பூர்த்தி செய்யப்பட்டது.

2008இல், பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதி அல்லது செலுத்தப்பட்ட வட்டி உதவுதொகை தொடர்பாக பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நடைமுறைப்படுத்தப்பட்ட/ ஒருங்கிணைக்கப்பட்ட கடன் திட்டங்கள் கீழேயுள்ள அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளது.

### 21.1 கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி

பிரதேச அபிவிருத்தி திணைக்களம் கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தியை விரைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட செயற்பாடுகளில் கவனஞ் செலுத்துவதற்கு 2008 இல் அம் மாகாணத்தில் நிலவிய முன்னேற்றமடைந்த பாதுகாப்பு நிலைமையிலிருந்து கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தியது. கிழக்கு மாகாணத்தில் சுனாமி புனரமைப்பு செயற்பாடுகளின் முன்னேற்றம் போர் நிலைமை காரணமாக ஆரம்பத்தில் தாமதப்படுத்தப்பட்ட போதிலும், இம் மாகாணத்தில் சுனாமியால் பாதிப்படைந்த சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகள் அனைத்தினதும் செயற்பாடுகளை மீளஆரம்பிப்பதற்கு 6 சதவீத சலுகை வட்டி வீதத்திலான கொடுகடன் வசதிகளை வழங்கும் சுசகன கட்டம் II (சுழலும் நிதியம்) இனை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ஆரம்பித்தது. இந்நோக்கத்திற்காக முதலிலிருந்த சுசகன திட்டத்தின் மீளளிப்புக்களிலிருந்து ரூ.500 மில்லியன் கொண்ட தொகை ஒதுக்கிடப்பட்டுள்ளது. இத்துடன், ஐரோப்பிய முதலீட்டு வங்கி (ஒப்பந்தம் பீ) கடன் திட்டத்தின் கீழான சுனாமி புனரமைப்பிற்கான கொடுகடனும் கிடைக்கத்தக்கதாக உள்ளது. கிழக்கு மாகாண அபிவிருத்திக்குக் கிடைக்கத் தக்கதாகவுள்ள வங்கித்தொழில் வசதிகள் தொடர்பான இரு பத்திரிகை மாநாடுகள் நடத்தியமைக்கு மேலதிகமாக சலுகை வட்டி வீதங்களில் வேளாண்மை மற்றும் ஏனைய அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள விசேட கொடுகடன் திட்டங்கள் பற்றி வங்கி அலுவலர், அரச அலுவல்கள், அரசுசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக அவர்களுக்காக 39 விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பங்கு பற்றியது. இனங்காணப்பட்ட பங்கேற்கும் முகவர்கள் மற்றும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் உதவியுடன் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியத்தின் கீழ் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் இம் மாகாணத்திலுள்ள வறிய நன்மைபெறுவோரையும் இலக்கிட்டது. வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச்செயற்றிட்டம் - சுழலும் நிதியத்தின் கீழ் கிழக்குமாகாணத்தில் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட நன்மைபெறுவோரின் எண்ணிக்கை 2008 இறுதியில் 4,732 ஆக காணப்பட்டது. இவர்களில், வருமானத்தை ஈட்டும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு 1,517 நன்மைபெறுவோருக்கு ரூ.52.1 மில்லியன் மொத்தப் பெறுமதி கொண்ட கடன்கள் வழங்கப்பட்டன. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம், வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச்செயற்றிட்டம் - சுழலும் நிதியம், ஐரோப்பிய முதலீட்டு வங்கி, சுசகன II மற்றும் கிருசி நவோதய திட்டங்களின் கீழ் கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக ரூ.432.7 மில்லியன் பெறுமதியான கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இத்துடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் இவ்விரு மாகாணங்களின் அயல் மாவட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கிய 14 மாவட்டங்களை இலக்கிடும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிகழ்ச்சி செயற்றிட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்துக்கு வறுமை ஒழிப்புச் செயற்பாடுகளுக்காக மேலும் நிதியங்கள் கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

# அட்டவணை II.14

## பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேச அபிவிருத்திக் கடன் வழங்கல் நிகழ்ச்சித் திட்டங்களின் பண்புகள்

| | செயற்றிட்டமும் நிறைவேற்றுக் காலமும் | நிதியிடல் மூலம் | பணித் திட்டங்கள் | நிதி ஒதுக்கீடு | கடன்பாட்டாளருக் ' கான ஆண்டு வட்டி வீதம் | பொருத்தமான விடத்து மீளப்பெறல் வீதம் |
|---|---|---|---|---|---|---|
| **1.** | **வேளாண்மைத் துறை மற்றும் விலங்கு வளர்ப்பு** | | | | | |
| 1.1 | இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் 2006-2014 | | நிரந்தரப்பயிர்கள் துறையை வர்த்தக மயப்படுத்தல், உற்பத்தியை அதிகரித்தல், நாற்றுமேடை அபிவிருத்தி, அறுவடையின் பின்னான கையாளல், பதனிடல் செயற்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் | ரூபா 1.2 பில்லியன் | 9 சதவீதம் | ஏறத்தாழ 90 சதவீதம் |
| 1.2 | தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் (சுழலும் நிதியம்) 2006-2018 | | தேயிலை சிறு உடமையாளர்களின் வருமானத்தை நிலைத்து நிற்கும் அடிப்படையில் அதிகரித்தல் மற்றும் ஏற்றுமதிச் சந்தையின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு தேவையான உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல். இது தொடர்பில் தீங்குப் பகுப்பாய்வு மற்றும் மிக முக்கிய கட்டுப்பாட்டு அளவு சான்றிதழைப் பெறும் விதத்தில் தேயிலை தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்துவதற்கான அடிப்படை உதவிகள் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. | ரூபா 1.1 பில்லியன் | 9 சதவீதம் | ஏறத்தாழ 90 சதவீதம் |
| 1.3 | புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் (தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டம்) | | சிறிய வேளாண்மையாளருக்கான தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டை வழங்குதல்.<br>- குறுகிய கால உற்பத்திக் கடன்கள்<br>- விதைகள் மற்றும் நாற்றுப்பொருட்களின் உற்பத்தி<br>- முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் வேளாண்மை பொருட்களின் கொள்வனவு | பங்கேற்கும் நிறுவனங்கள் தமது சொந்த நிதி மூலம் வழங்கிய கடன்கள் | 2008 யூலை வரை 8 சதவீதமும் அதற்குப் பின்பு 12 சதவீதமும் | ஏறத்தாழ 90 சதவீதம் |
| 1.4 | வேளாண்மை - கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டம் (2008 - 2010) | | பாற்பண்ணைத் தொழிலில் பின்வருவனவற்றுக்கு மூலதனத்தை வழங்குதல்<br>- மாட்டுத் தொழுவங்களை அமைத்தல்<br>- பசுக்களின் கொள்வனவு<br>- திடமான உணவு, விலங்கு மருத்துவ பணிகள் மற்றும் மருந்துகள் போன்றவற்றின் கொள்வனவு<br>- விலங்கு தீன் பயிரிடல்<br>- உயிரின வாயு தாங்கிகளை அமைத்தல்<br>- விலங்கு மருத்துவரால் விதந்துரைக்கப்பட்ட எந்தவொரு ஏனைய தேவைப்பாடுகள் | பங்கேற்கும் நிறுவனங்கள் தமது சொந்த நிதி மூலம் வழங்கிய கடன்கள். மொத்த நிதி வழங்கல் ரூ.5,000 மில்லியனாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. | சிறு பாற்பண்ணை செயற்றிட்டக் கடன்களுக்கு - 12 சதவீதம் பால் மற்றும் பயிர் பதனிடலுக்கு - 14 சதவீதம் | —— |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திரவப் பால் பதனிடல் கைத்தொழில்கள் மற்றும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிலில் பின்வருவனவற்றுக்கு நிதியங்களை வழங்கல்<br>- தொழிற்சாலைக் கட்டடங்களின் நிர்மாணம்/ நவீனமயமாக்கம்<br>- நவீன பொறி மற்றும் கருவியின் கொள்வனவு<br>- களஞ்சியசாலை, குளிர் அறைகள் மற்றும் போக்குவரத்துப் பணிகள்<br>- தேவைப்பட்ட ஏனைய பணிகள், நியமங்களைப் பேணுவதற்கான கருவி | | | |
| 1.5 | கிருசி நவோதய திட்டம் (2007 மாச்சு - 2010 பெப்புருவரி இறுதி) | பங்கேற்கும் நிதி நிறுவனங்களின் சொந்த நிதியும் அரசாங்கத்தின் வட்டி உதவு தொகையும் | வேளாண்மை தொடர்பான கைத்தொழில் மற்றும் மிகச் சிறிய மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் உள்ளிட்ட வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புச் செயற்பாடுகளுக்கான நடுத்தர காலக் கடன்களின் ஏற்பாடு | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் அவற்றின் சொந்த நிதியங்களைப் பயன்படுத்தி வழங்கப்பட்ட கடன்கள். தொழிற்பாட்டு காலப்பகுதியில் வழங்கப்படும் மொத்தக் கடன்கள் ரூ.3,000 மில்லியன் என எதிர்பார்க்கப்படுகிறது. | 8 சதவீதம் | |
| **2.** | **சிறிய நடுத்தர தொழில்முயற்சித்துறை** | | | | | |
| 2.1 | மாத்தளை பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்டம் (சுழலும் நிதியம்) (2007-2009) | வே.அ.ப.நி. | மாவட்டத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு நிதியினை வழங்குவதன் மூலம் கிராமிய மற்றும் வேளாண்மைக் குடும்பங்களின் வருமானத்தினை உயர்த்துதல் | ரூபா 77 மில்லியன் | 10 சதவீதம் | 87 சதவீதம் |
| 2.2 | சப்பிரகமுவ மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (சுழலும் நிதியம்) (2007-2010) | இலங்கை அரசாங்கம் | வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளினை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்டப் பிரதேசங்களிலுள்ள மக்களின் வாழ்க்கை நிலைமைகளை தரமுயர்த்துதல் | ரூபா 100 மில்லியன் | 10 சதவீதம் | 93 சதவீதம் |
| 2.3 | சுனாமிக்குப் பின்னைய தொடர் கொடுகடன் ஐரோப்பிய முதலீட்டு வங்கி ஒப்பந்தம் பீ கடன் திட்டம் (2006 - 2014) | ஐரோப்பிய முதலீட்டு வங்கி | சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் தமது வியாபாரங்களை மீளத் தொடங்குவதற்கு ஆதரவளித்தல் | யூரோ 20 மில்லியன் | 9 சதவீதம் | சலுகைக் காலப்பகுதியினுள் |
| 2.4 | சுசகன கடன்திட்டம் (கட்டம் II) | இலங்கை மத்திய வங்கி | சுனாமியால் பாதிக்கப்பட்ட மிகச்சிறிய, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு உதவுவதற்காக | ரூபா 500 மில்லியன் | 6 சதவீதம் | சலுகைக் காலப்பகுதியினுள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2.5 | கட்டடவாக்கத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் (2007 - 2015) | ஏஜன்ஸ் பிரான்சைஸ் டெவலப்மன்ட் | கட்டடவாக்கம், வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் தரமிடப்பட்ட கம்பனிகளினால் சுனாமிக்குப் பின்னரான கட்டடவாக்கத்திற்காக இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியிடல் | யூரோ 10 மில்லியன் | 9 சதவீதம் | சலுகைக் காலப்பகுதியினுள் |
| **3.** | **நுண்பாக நிதியியல்துறை** | | | | | |
| 3.1 | உலர்வலய ஜீவனோபாய உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித் திட்டம் (2006 - 2012) | வே.அ.ப.நி. | மொனராகலை, குருணாகல், பதுளை மற்றும் அநுராதபுரம் போன்ற தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களிலுள்ள வறிய வேளாண்மையாளர்களுக் கிடையிலான வறுமை ஒழிப்பும், வருமான உருவாக்கமும் | இலங்கை ரூபா 200 மில்லியன் | 10 சதவீதம் | சலுகைக் காலப்பகுதியினுள் |
| 3.2 | சிறு உடமையாளர் பெருந்தோட்ட தொழில் முயற்சியாளர் அபிவிருத்திச் செயற்றிட்டம் (2007-2015) | வே.அ.ப.நி. மற்றும் ஐ.அ. உதவி | நாட்டின் மத்திய பகுதியில் தேயிலை மற்றும் நிரந்தர பயிர்களைப் பயிரிடுகின்ற வசதி குறைந்த சிறு உடமையாளர்களினதும் மொனராகலை பிரதேசத்தின் இடைநில வலையத்திலுள்ள உயர்நிலத்தில் உணவுப்பயிர் செய்யும் வறிய வேளாண்மையாளர்கள் இறப்பரை பயிரிட விரும்பின் அவர்களது ஜீவனோபாயத்தை மேம்படுத்தல் | ஐ.அ.டொலர் 40.7 மில்லியன் | 9 சதவீதம் | பகிர்ந்தளிப்பு ஆரம்பமாக இருக்கிறது |
| 3.3 | சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்ட சுழலும் நிதியம் | இலங்கை அரசாங்கம் | நன்மைபெறுவோரின் பொருளாதார நிலைமைகளையும் பொது நலன்புரிகளையும் மேம்படுத்துவதற்கு வறிய கிராம மக்களுக்கான வருமானத்தை ஈட்டும் செயற்பாடுகளுக்கு அலுவல்சார் கொடுகடனை வழிமுறைப்படுத்துவதற்கான பயனுள்ள கொடுகடன் வழங்கல் பொறிமுறையை ஏற்படுத்துதல் | இலங்கை ரூபா 512.7 மில்லியன் | 16 சதவீதம் - 20 சதவீதம் | 90 சதவீதத்திற்கும் கூடுதலாக |
| 3.4 | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டத் (சுழலும் நிதியம்) திட்டம் | இலங்கை அரசாங்கம் | நன்மைபெறுவோரின் பொருளாதார நிலைமைகளையும் பொது நலன்புரிகளையும் மேம்படுத்துவதற்கு வறிய கிராம மக்களுக்கான வருமானத்தை ஈட்டும் செயற்பாடுகளுக்கு அலுவல்சார் கொடுகடனை வழிமுறைப்படுத்துவதற்கான பயனுள்ள கொடுகடன் வழங்கல் பொறிமுறையை ஏற்படுத்துதல்<br><br>வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதனூடாக அடையாளம் காணப்பட்ட கடன்படுநர்களின் வறுமையை ஒழித்தல்<br><br>முறைசார் வங்கித்தொழில் முறைமையுடன் குறைந்த வருமானமுடைய குழுக்களை இணைப்பதற்கு ஏற்பாடு செய்தல் | இலங்கை ரூபா 1,250 மில்லியன் | 16 சதவீதம் | 90 சதவீதத்திற்கும் கூடுதலாக |

## 21.2 வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்புத்துறை

2008 ஏப்பிறலில் வேளாண்மை கால்நடை அபிவிருத்திக்கடன் திட்டத்தின் அறிமுகம் வேளாண்மை மற்றும் விலங்குவளர்ப்புத் துறையை நிதியிடல் சம்பந்தமாக இவ்வாண்டில் எடுக்கப்பட்ட பாரிய நடவடிக்கையாகும். இலங்கை மத்திய வங்கியின் விதந்துரைப்புடன் வரவுசெலவுத்திட்டம் 2008இல் உள்ளடக்கப்பட்ட இத் திட்டம் நாட்டில் திரவப்பால் உற்பத்தியை ஊக்குவிப்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்தது. பால் பண்ணையாளருக்குப் புறம்பாக, 1,000 - 10,000 பாற் பண்ணையாளர்கள்/ பயிர்ச் செய்கையாளர்களின் (வட்டி வீதங்கள், நிதியின் அளவு மற்றும் தகமைச் செயற்பாடுகள் பற்றிய விபரங்களுக்கு தயவு செய்து அட்டவணை II.14ஐப் பார்க்கவும்). பால் உற்பத்தி/ பயிர் உற்பத்தியைக் கொள்வனவு செய்வதற்கு முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களினுள் நுழைந்த பால் பதனிடல் மற்றும் பயிர் பதனிடல் கைத்தொழிலபிரிவுகளுக்கான கடன்களும் சலுகை வீதத்தில் கிடைக்கின்றது. இக் கடன் திட்டத்தின் முக்கிய பண்பாக சிறந்த விலங்கு வளர்ப்பு நடைமுறைகளைப் பின்பற்றுதல் நிதியங்களை விடுவிப்பதற்கான நிபந்தனையாக ஏற்படுத்தப்பட்டமை விளங்கியது. இக் கடன் திட்டம் பாற்பண்ணையாளர்கள் அது போல் திரவப்பால் பதனிடுவோர்களுக்கு கொடுகடனை வழங்குவதன் மூலம் பால் கைத்தொழிலின் பெறுமதித் தொடர் முழுவதிலும் நிதியிடுகிறது. மொத்தமாக ரூ.880.8 மில்லியன் பெறுமதி கொண்ட 3,549 கடன்கள் 2008இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் வேளாண்மை கால்நடை அபிவிருத்தி கடன் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டன[1].

2008இல் அவதானிக்கப்பட்ட வேளாண்மைத்துறையிலான கூர்மையான வளர்ச்சியுடன் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் பயிர்களின் பயிர்ச்செய்கைக்கான கடன் பகிர்ந்தளிப்பு குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தது. 2007/08 பெரும்போகத்தில் பயிர்களின் பயிர்ச்செய்கைக்காக ரூ.1,571.6 மில்லியன் மொத்தப் பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டன. இது பெரும்போகம் 2006/07 உடன் ஒப்பிடுகையில் வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதியில் 62 சதவீத அதிகரிப்பாகும். 2008 சிறுபோகத்தில் வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதி ரூ.1,178.6 மில்லியனாக இருந்ததுடன் இது சிறுபோகம் 2007 உடன் ஒப்பிடுகையில் 38.4 சதவீத அதிகரிப்பை எடுத்துக் காட்டுகிறது. இதேவேளை, உற்பத்தியாளர்கள் மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்வோர் ஆகிய இருபகுதியினரும் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த பொறிமுறையைப் பயன்படுத்தி அவற்றின் விலை இடர்நேர்வு வெளிப்படுத்துகையை மட்டுப்படுத்த முனைந்ததால் கைச்சாத்திடப்பட்ட முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் எண்ணிக்கை அதிகரித்த வேளாண்மைத்துறையில் அவதானிக்கப்பட்ட உயர் வளர்ச்சி மற்றும் 2008இல் பொருட்களின் விலைகளில் காணப்பட்ட தளம்பல் என்பன உந்துவிசையாக விளங்கியது. பெரும்போகம் 2007/08 இல் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் உற்பத்தியின் கொள்வனவுக்காக வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதி ரூ.3,918.2 மில்லியனுக்கு இற்கு 104.0 சதவீதத்தால் அதிகரித்தது. 2008 சிறுபோகம் தொடர்பான எண்தொகை ரூ.3,866.0 மில்லியனாக விளங்கி முன்னைய சிறுபோகத்துடன் ஒப்பிடுகையில் 52.0 சதவீத அதிகரிப்பை எடுத்துக் காட்டுகிறது. இதேவேளை, கிருசி நவோதய திட்டத்தின் கீழ் மிகச் சிறிய மற்றும் சிறிய வேளாண்மையாளர்களுக்கு வேளாண்மை தொடர்பான செயற்பாடுகளுக்காக சலுகை வட்டி வீதங்களில் நடுத்தர மற்றும் நீண்ட காலக் கொடுகடனை வழங்கும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகளுக்கு தகுதியுடையவர்களாவதுடன், 2008இன் முதலரைப்பகுதியில் ரூ.552.3 மில்லியன் பெறுமதியான கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் பல வங்கிகள் வட மாகாணத்திலும் நியாயமானளவு கடன்களைப் பகிர்ந்தளிக்கக் கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ்வாண்டில் நிலவிய உயர் வட்டி வீத அமைப்புடன் இணங்கிச் செல்லும் வகையில், புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் மற்றும் கிருசி நவோதய திட்டங்களின் கீழான தற்போதைய வட்டி வீதம் 2008 யூலையில் அரசு வழங்கும் 8 சதவீத வட்டி உதவுதொகை கொடுப்பனவுடன் 12 சதவீதத்திற்கு மேல் நோக்கித் திருத்தப்பட்டமையால் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான பயனுறுதியான வட்டி வீதத்தை 20 சதவீதமாக்கியது. இவ்வாண்டில் இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் சுழலும் நிதியம், மற்றும் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் சுழலும் நிதியம் திட்டங்களின் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய கொடுகடன் முறையே ரூ.117.2 மில்லியன் மற்றும் ரூ.262.8 மில்லியனாக விளங்கின. 2008இன் இறுதி மாதங்கள் தேயிலை விலைகளில் பாரிய வீழ்ச்சியைக் கண்டதுடன் விலைகளை உறுதியாக வைத்திருக்கும் பொருட்டு தேயிலையைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கைத் தேயிலைச் சபை தலையிட வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன்படி, தேயிலை விலைகளை உறுதிப்படுத்தும் பொருட்டு தேயிலையைக் கொள்வனவு செய்வதற்காக பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் இலங்கை தேயிலைச் சபைக்கு வழங்கப்பட்ட விசேட வசதி தொடர்பாக இலங்கை வங்கிக்கும், மக்கள் வங்கிக்குமான 12 சதவீத சலுகை வீதத்தில் மீள்நிதியிடல் வசதியை ஒழுங்கு செய்தது. இத்திட்டத்தின் கீழ் 2008இல் ரூ.231.4 மில்லியன் பெறுமதிக்கு மீள்நிதியிடல் விடுவிக்கப்பட்டது.

## 21.3 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதியிடலை ஊக்குவித்தல்

கட்டடவாக்கத் துறை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழான கடன் பகிர்ந்தளிப்பு 2008இல் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட ரூ.632.2 மில்லியன் பெறுமதியான மீள்நிதியிடலுடன் திருப்திகரமாக முன்னேறியது. சுனாமிக்குப் பின்னைய தொடர் கொடுகடன் ஐரோப்பிய முதலீட்டு வங்கி (ஒப்பந்தம் பீ) கடன் திட்டத்தின் கீழ், ரூ.581.6 மில்லியன் மொத்தப் பெறுமதி கொண்ட மீள்நிதியிடல் இவ்வாண்டில் விடுவிக்கப்பட்டது. சப்ரகமுவ ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதியம் மற்றும் மாத்தளை பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்ட சுழலும் நிதியம் என்பனவும் 2008இல் உரிய மாவட்டங்களில் தொடர்ந்து செயற்பாட்டிலிருந்தன. சப்ரகமுவ ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதியத்தின் கீழ் இவ்வாண்டில்

1. இவை ஏறத்தாழ பகிர்ந்தளிக்கப்படவுள்ள கடன்களையும் நன்மை பெறுநர்களுக்கு வங்கிகளினால் ஏற்கனவே பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களையும் எடுத்துக்காட்டுகிறது.

ரூ.42.3 மில்லியன் மொத்தப் பெறுமதியைக் கொண்ட கடன்களின் சார்பில் மீள்நிதியிடல் விடுவிக்கப்பட்டிருக்கையில் மாத்தளை பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்ட சுழலும் நிதியின் கீழ் ரூ.54.9 மில்லியன் மொத்தப் பெறுமதியைக் கொண்ட கடன்களின் சார்பில் மீள்நிதியிடல் விடுவிக்கப்பட்டது. சுசகன, சிறிய வியாபார மீள்எழுச்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஜீவனசக்தி ஆகிய மூன்று சுனாமி புனரமைப்பு கடன் திட்டங்களின் விளைவைத் தீர்மானிப்பதற்கான அளவீடு தொடர்பான களவேலை இவ்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டது.

## 21.4 வறுமை ஒழிப்பு

வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் சுழலும் நிதியம் நிகழ்ச்சித் திட்டம் 2008இல் நாடு முழுவதும் தொழிற் பாட்டிலிருந்தது. இவ்வாண்டில் இந் நிகழ்ச்சித்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நன்மைபெறுவோரின் எண்ணிக்கை 41,827 ஆகும். இவற்றில், 15,200 நன்மைபெறுநர்களுக்கு வருமானத்தை உருவாக்கும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக ரூ.513.9 மில்லியன் பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டன. இதேவேளை, சிறிய வேளாண்மையாளர் மற்றும் காணியற்றோர் கொடுகடன் செயற்றிட்டமும் 5,610 நன்மைபெறுநர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட ரூ.143.9 மில்லியன் பெறுமதியான கடன்களுடன் 2008இல் முன்னேற்றமடைந்தது. வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி செயற்றிட்டம் - II தொடர்பான சகல ஆரம்ப வேலையும் 2008இல் பூர்த்தி செய்யப்பட்டது. யப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு முகவரால் நிதியிடப்பட்ட இத்திட்டம் 2009 முற்பகுதியிலிருந்து முழு அளவில் தொழிற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. வடக்கு விடுவிக்கப்பட்டதுடன் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II வட மாகாணத்தில் 2009இல் முழுமையாகத் தொழிற்படுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்தல் மற்றும் புதிய நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைக்கும் பொருட்டு இலக்கிடப்பட்ட நன்மைபெறுநர்கள் மற்றும் சமூகத்தின் மீது அவற்றின் தாக்கத்தைத் தீர்மானிப்பதற்கு தற்போது நடைபெற்று வரும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அதுபோல் பூர்த்தி செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களையும் மதிப்பிடுவது மிகவும் முக்கியமானதாகும். இக் குறிக்கோளைக் கருத்திற் கொண்டு, ஆரம்ப வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டத்தை மதிப்பிடுவதற்கு ஒருங்கிணைந்த விளைவு மதிப்பீட்டு அளவீடு வடிவமைக்கப்பட்டதுடன், கேள்விக்கொத்து மற்றும் அட்டவணையின் அளவும் வடிவமும் என்பவற்றின் வடிவமைப்பு, மாதிரியைத் தெரிந்தெடுத்தல் மற்றும் அடிப்படைத் தகவலைப் பிரித்தெடுத்தல் உள்ளடங்கலாக சகல ஆரம்ப வேலைகளும் 2008இல் பூர்த்தி செய்யப்பட்டது.

## 21.5 கொடுகடன் பற்றாக்குறையை நிரப்பல்

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் ஆண்டுக் கட்டுப்பணத்தின் சேகரிப்பு, கோரல் விண்ணப்பங்களின் செயல்முறைப்படுத்தல், கோரல்களின் கொடுப்பனவு அல்லது நிராகரிப்பு மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தால் தொழிற்படுத்தப்படும் 12 கொடுகடன் பற்றாக்குறையை நிரப்பல் திட்டங்கள் தொடர்பாக கோரலுக்கு முன்னைய அறவிடலை தொடர்ந்து மேற்கொள்ளல் போன்ற கொடுகடன் பற்றாக்குறையை நிரப்பும் தொழிற்பாடுகள் தொடர்பான கிரமமான செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபாடு கொள்ளவிருக்கிறது. இப் 12 திட்டங்களின் கீழ் 2008 இல் சேகரிக்கப்பட்ட மொத்த கட்டுப்பணம் ரூ.66.4 மில்லியனாக இருக்கையில் கொடுகடன் உத்தரவாதக் கோரல்களின் கொடுப்பனவு இவ்வாண்டில் ரூ.30.6 மில்லியனாக விளங்கியது. ஏனைய திட்டங்கள் தொடர்பான கொடுகடன் பகிர்ந்தளிப்பு இடைநிறுத்தப்பட்டமையால் புதிய கொடுகடன் உத்தரவாதப் பாதுகாப்பின் வழங்கல் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது. அரசின் வேண்டுகோளின்படி பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் உற்பத்திப் பிரிவு நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணத்துறையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகளுக்கு வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களைப் பாதுகாக்கும் புதிய கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. மிகச்சிறிய, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு பிணைய ஆதரவை அடிப்படையாகக் கொண்ட கடன் வழங்கலைவிட செயற்றிட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கடன் வழங்கலை ஊக்குவிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறைக்காக முன்மொழியப்பட்ட புதிய கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் விபரங்களை இறுதி வடிவமாக்குவதிலும் திணைக்களம் ஈடுபட்டது.

## 21.6 பிரதேச அலுவலகங்கள்

கடந்த காலங்களைப்போன்றே, அநுராதபுரம், மாத்தறை மற்றும் மாத்தளையிலுள்ள மூன்று பிரதேச அலுவலகங்கள் அவற்றின் தொழிற்பாட்டு மாவட்டங்கள்/பிரதேசங்களில் நிதியைப் பெறும் வசதி மற்றும் ஏற்பாட்டு உதவியின் வழங்கலை அதிகரிப்பதற்கு மத்திய வங்கியின் பலதரப்பட்ட திணைக்களங்களுக்கு அவற்றின் தொழிற்பாடுகளைத் தொடர்ந்து வழங்கின. நிதி பெறும் வசதியை அதிகரிப்பது தொடர்பான முக்கிய செயற்பாடுகள் நன்மை பெறுவோருக்கான கொடுகடன் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அரச விரிவாக்கப்பணி, மற்றும் பற்கேற்கும் நிறுவனங்களூடாக மத்திய வங்கியால் உருவாக்கப்பட்ட சலுகை அடிப்படையிலான அபிவிருத்திக் கொடுகடன் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்கான உதவிப் பணிகளின் ஒருங்கிணைப்பு / ஊக்குவிப்பு வேளாண்மையாளர்களுக்கும் வாங்குனர்களுக்கிடையே வேளாண்மைப் பொருட்கள் மீதான முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் ஊக்குவிப்பு என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. இவ்வாண்டில், கிட்டத்தட்ட 20,000 நன்மை பெறுவோருக்கு வசதிகளை வழங்கும் 357 விழிப்புணர்வுக் கூட்டங்கள் / நிகழ்ச்சித் திட்டங்கள் பிரதேச அலுவலகங்களால் ஏற்பாடு செய்யப்பட்டன. கைச்சாத்திடப்பட்ட முன்னோக்கிய ஒப்பந்தங்களின் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு வேளாண்மையாளர்களுக்கு வங்கிகளிலிருந்து கொடுகடன் வசதிகளை வழங்குவதற்காக முக்கியமாக சோளம், நெல், சோயா, பெரிய வெங்காயம், இஞ்சி மற்றும் பால் உள்ளிட்ட வேளாண்மை உற்பத்திகளுக்காக மொத்த வருமானம் / புரள்வு ரூ.4,570 மில்லியன் கொண்ட கிட்டத்தட்ட 28,000 முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவது தொடர்பான செயற்பாடுகளில் அநுராதபுரம் மற்றும் மாத்தளை பிரதேச அலுவலகங்கள் ஈடுபட்டிருந்தன. மத்திய வங்கிக்கான ஏற்பாட்டு உதவியின் வழங்கல் கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், ஞாபகார்த்த நாணயக் குத்திகள் மற்றும்

மத்திய வங்கி வெளியீடுகளின் விற்பனைகள், நாணயக் குத்திகளைச் சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல், ஊழியர் சேம நிதியம் மீதான உறுப்பினர் விசாரணைகளைக் கவனித்தல், பல தரப்பட்ட பொருளாதாரத் தரவின் சேகரிப்பும் வழங்கலும், களப் புலன் விசாரணைகளைக் கவனித்தல், பல தரப்பட்ட விடயங்கள் மீதான கள மட்டத்திலான பரீட்சிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. 2008 செத்தெம்பரில் அநுராதபுர பிரதேச அலுவலகத்தில் நாணய நூதனசாலை திறந்து வைக்கப்பட்டதுடன் இங்கு ஏனைய காட்சிப் பொருட்களுடன் அநுராதபுரம் மற்றும் பொலனறுவை காலப்பகுதிக்கு உரித்தான நாணயமும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

நிதியைக் கூடியளவில் அடைவதை வசதிப்படுத்துவதற்கு பிரதேச அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான மத்திய வங்கியின் தீவிர பங்கேற்புக்காக தோற்றம் பெற்றுவரும் தேவைகள் மற்றும் அரச விரிவாக்கப் பணிகளில் மத்திய வங்கியின் பிரதேச இருப்பைக் கவனத்திற் கொண்டு பிரதேச அலுவலகங்களின் தொழிற்பாடுகளை விரிவாக்குவதற்கான கொள்கைத் தீர்மானங்கள் 2009இல் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, தொழிற்பாடுகளுக்கான கொள்கைகளை உருவாக்குவதற்கான தொழிற்பாடுகள் மற்றும் பிரதேச அலுவலகங்களின் செயலாற்றத்தின் கண்காணிப்பு என்பவற்றுடன் 2009இல் புதிய திணைக்களத்தை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் இறுதிப்படுத்தப்பட்டன. மேலும், விடுவிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விரைந்த அபிவிருத்தியை வசதிப்படுத்துவதற்கு புதிய பிரதேச அலுவலகங்களை நிறுவுவதற்கான முன்மொழிவும் பரிசீலனையில் இருக்கிறது.

## 22. செயலகம்

2008 இல் செயலகத் திணைக்களம், பொருட்கள் மற்றும் பணிகளின் நேரம் பிந்தாத கொள்வனவு, முறைமைகளினதும் நடைமுறைகளினதும் தொடர்ச்சியான மதிப்பீடும் தரமுயர்த்தலும், விடுப்பு, ஓய்வூதிய நிதியங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணம் போன்றவை தொடர்பான விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் நிருவகித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பவற்றினூடாக வங்கியின் வினைத்திறன்மிக்க தொழிற்பாட்டை வசதிப்படுத்தியது.

திணைக்களம் இவ்வாண்டில் 48 விலைக்கோரல்களைக் கையாண்டதுடன் தரம், நேரம் பிந்தாமை மற்றும் போட்டி விலைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் ரூ.79.7 மில்லியன் பெறுமதியான மூலதனப் பொருட்கள் மற்றும் பணிகளையும் ரூ.55.9 மில்லியன் பெறுமதியான மூலதனமல்லாப் பொருட்களையும் கொள்வனவு செய்தது. பயன்படுத்தும் திணைக்களங்களுக்கான பொருட்கள் மற்றும் பணிகளின் நேரம் பிந்தாத வழங்கலை ஒழுங்குமுறைப்படுத்தும் பொருட்டு வங்கியின் கொள்வனவு முகாமைச் செயல்முறையைக் கண்காணிப்பதற்கு கொள்வனவைத் திட்டமிடல் பற்றிய எண்ணக்கரு நடைமுறையிலிடப்பட்டது. இதன் விளைவாக, செயலகத் திணைக்களம் இவ்வாண்டில் வங்கியின் மொத்தக் கொள்வனவுத் தேவைப்பாட்டின் 87 சதவீத வழங்கலை வெற்றிகரமாக பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. இதேவேளை, நடைமுறையிலிருக்கும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் ஒளிவுமறைவின்மையைப் பலப்படுத்தும் நோக்கில் வங்கிக் கையேட்டில் ஆகப் பிந்திய தகவலை உள்ளடக்கும் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இது 2009 இல் வெளியிடப்படும். மத்திய வங்கி ஓய்வூதியத் திட்டம், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம், விதுரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டம் என்பன செயலகத் திணைக்களத்தால் நிருவகிக்கப்பட்டன. இத் திட்டங்களின் கீழ் மொத்தமாக 1956 ஓய்வூதியர்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன், இத்திட்டங்களுக்காக நடைமுறையிலிருக்கும் தரவுத் தளத்தின் தன்னியக்கவாக்கம் சேமநிதியத்தை விடுவிப்பதற்கான மென்கல நிகழ்ச்சித்திட்டத்தின் அபிவிருத்தியுடன் தொடர்ந்தும் நடைபெற்றது.

திணைக்களம் 2008 இல் பல சமய மற்றும் ஞாபகார்த்த நிகழ்வுகளையும் நீண்டகாலப் பணிக்கான விழா மற்றும் சுதந்திரதின விழா போன்ற வருடாந்த விழாக்களையும் ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்தது.

## 23. பாதுகாப்புப் பணிகள்

பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் ஊழியர்கள், கட்டடங்கள் மற்றும் சொத்துக்கள், வருகை தருவோர் மற்றும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்லும் நாணயத்தைப் பாதுகாக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியில் பாதுகாப்பை தொடர்ந்து பலப்படுத்தியது. பாதுகாப்பைப் பலப்படுத்தும் பல எண்ணிக்கையான வழிமுறைகள் 2008இல் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் நெருக்கடி நேரத்திலான தொழிற்பாடுகளுக்கான வியாபாரத் தொடர்ச்சித் திட்டத்தின் சோதனைக்காக பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் தீவிர பங்களிப்பு 2008 ஓகத்தில் வழங்கப்பட்டது. தீ அணைத்தல் மற்றும் முதலுதவி உள்ளிட்ட அவசரகால நிலைமைகளைக் கையாளல் தொடர்பாக ஊழியர்களுக்கான எட்டு தீ விபத்து தொடர்பான ஒத்திகைகளும் ஐந்து விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப்பட்டன. பாதுகாப்புப் படைகளின் வான் பாதுகாப்புத் திட்டத்திற்கு உதவும் பொருட்டு தற்போதைய அதிநவீன தொலைக்காட்சிப் படப்பிடிப்புக்கருவிகள் இரவுப்பார்வைத் திறனைக் கொண்ட படப்பிடிப்புக் கருவிகள் மூலம் தரமுயர்த்தப்பட்டன. ஏற்கனவேயுள்ள பழமை வாய்ந்த பொதிகள் மற்றும் சரக்கு ஸ்கானர்களைப் புதியவற்றுடன் பிரதியீடு செய்வதற்கும் குறிப்பிட்ட பாதுகாப்புத் துணைப் பணிகளை புதிதாக வெளியிலிருந்து பெற்றுக் கொள்வதற்கும் ஆரம்ப ஒழுங்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய தீ எச்சரிக்கை முறைமை ராஜகிரியவிலுள்ள வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தில் நிறுவப்பட்டது. பாதுகாப்பு உத்தியோகத்தரின் உடற் தகுதியை அதிகரிக்கும் பொருட்டு பாதுகாப்புத் திணைக்களத்தின் சகல பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குமான உடல் ரீதியாகத் தகுதி பெறும் நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு பாதுகாப்பு ஊழியர்களுக்கு முன்னேற்றகரமான பாதுகாப்பு முகாமை, தீ அணைத்தல், பாதுகாப்பு மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டறை முகாமைத்துவம் பற்றி வெளிநாட்டுப் பயிற்சி வழங்கப்பட்ட வேளையில் பத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு தொடர்பான துறைகளில் உள்நாட்டுப் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

## 24. புள்ளிவிபரவியல் மற்றும் கள அளவீடுகள்

புள்ளிவிபரவியல் திணைக்களம் 2008 இலும் மாகாண தேசிய கணக்குகள், விலைகள், கூலிகள், தொழிற்படை மற்றும் தொழில்நிலை, மற்றும் ஏனைய சமூக பொருளாதார துறைகளின் தரவு சேகரித்தல், திரட்டுதல், பகுப்பாய்வு மற்றும் தரவுகளைப் பரப்பும் அதன் தொழிற்பாடுகளை தொடர்ந்து தொழிற்படுத்தியது. வாராந்த மற்றும் மாதாந்த ரீதியில் தெரிந்தெடுக்கப்பட்ட பொருளாதாரக் குறிகாட்டிகளைப் பிரசுரிப்பதனூடாக திணைக்களம் பொருளாதாரத் தரவு மற்றும் தகவலை கிரமமாக பொது மக்களுக்கு வெளியிட்டது. திணைக்களம் நுகர்வோர் விலைகள் மற்றும் பணவீக்கத்தின் நடத்தை பற்றி கிரமமான மாதாந்த பத்திரிகை வெளியீட்டைத் தொடர்ந்து வழங்கியது.

இத்துடன், திணைக்களம் இவ்வாண்டில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வரங்குகள் மற்றும் ஊடகக் கலந்துரையாடல்கள் என்பவற்றுக்காக இலங்கை மத்திய வங்கியின் பொதுமக்கள் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டத்திற்கான மூலவள ஆட்களைத் தீவிரமாக வழங்கியது. இவ்வாண்டில் அநேகமான அலுவலர்கள் அவர்களது அறிவு மற்றும் தேர்ச்சிகளை மேலும் மேம்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் ஆய்வரங்குகளில் பங்கேற்றனர்.

### 24.1 புள்ளிவிபரவியல் அளவீடுகள்

எதிர்காலப் பணவீக்கம் மீதான நுகர்வோர், முதலீட்டாளர் மற்றும் வர்த்தக சமூகத்தவர்களின் எதிர்பார்ப்புக்களை மதிப்பிடுவதற்கு 2006இல் ஆரம்பிக்கப்பட்ட மாதாந்த பணவீக்க எதிர்பார்ப்புக்கள் அளவீடு 2008 இலும் தொடர்ந்து நடத்தப்பட்டது. இவ் அளவீடுகளின் பெறுபேறுகள் நாணயக் கொள்கை உருவாக்கத்திற்கு உதவுவதற்காக நாணயக் கொள்கைக் குழுவிற்கும் நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுவிற்கும் அவற்றின் மாதாந்தக்கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டன.

### 24.2 இலங்கைக்கான சுபீட்சச் சுட்டெண்

இலங்கைக்கான சுபீட்சச் சுட்டெண் இலங்கை மற்றும் அதன் மாகாணங்களின் சுபீட்சத்தை அளவிடுவதற்காகவும் ஒப்பிடுவதற்காகவும் 2008இல் ஆரம்பிக்கப்பட்டது. இச் சுட்டெண் இரண்டு வருட ஆராய்ச்சிச் செயற்றிட்டம் மற்றும் கலந்தாலோசனைகள், கருத்தரங்குகள் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களூடாக தொழில்சார் நிபுணர்களிடமிருந்து பெறப்பட்ட பதிலிறுப்புகளினதும் உச்ச பெறுபேறாகும்.

### 24.3 தேசிய மற்றும் பிரதேச வருமானக் கணக்கு

பொருளாதாரத்தின் உண்மைத் துறையிலான அபிவிருத்திகளைக் கண்காணிக்கும் செயற்பாடும் தேசிய வருமானத்தை எதிர்வுகூறலும் 2008 இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இது, நாட்டின் உற்பத்தி, நுகர்வு, சேமிப்புக்கள் மற்றும் முதலீடுகளில் முதன்மை மற்றும் இரண்டாந்தரத் தரவின் சேகரிப்பு, அபிவிருத்திகளின் பகுப்பாய்வு மற்றும் எதிர்காலப் போக்குகளை எதிர்வுகூறல் என்பவற்றை உள்ளடக்குகிறது. திணைக்களம் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் தொகுக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியை (மொஉஉ) வகுதிப்படுத்துவதன் மூலம் 2007 இற்கான மாகாண மட்டத்திலான மொத்த உள்நாட்டு உற்பத்தியை தொகுப்பதைப் பூர்த்தி செய்தது. மாகாண மட்டத்திலான மொத்த உள்நாட்டு உற்பத்தி புள்ளிவிபரம் நடைமுறைச் சந்தை விலைகளில் மதிப்பிடப்படுவதுடன் இப் புள்ளிவிபரம் தேசிய மொ.உ.உற்பத்திக்கு மாகாண ரீதியான பங்களிப்பை வெளிப்படுத்துகிறது. மா.மொ.உ.உற்பத்தி மீதான தகவல் மாகாணங்களுக்கிடையேயான வருமான ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்பதற்கு பொருத்தமான உபாயங்களை அறிமுகப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் மாகாண சபைகளுக்கும் அதுபோல் தேசிய திட்டமிடுவோர்களுக்கும் பயனுள்ளதாகும்

### 24.4 நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை

1978இல் ஆரம்பித்த நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை அதன் முப்பது வருடத் தொழிற்பாட்டை 2008இல் பூர்த்தி செய்தது. தரவு சேகரிப்பு, அரச பாடசாலை ஆசிரியர்களின் நாடு பூராகவுள்ள வலைப்பின்னலூடாக நிறைவேற்றப்படுகிறது. அவர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள 18 தரவு சேகரிக்கும் நிலையங்கள் உள்ளடங்கலாக நாட்டில் தொழிற்படும் 101 தரவு சேகரிப்பு நிலையங்களுக்கான புள்ளிவிபரப் பரீட்சகர்களாக பணிபுரிகின்றனர். இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், நுகர்வுப் பொருட்களின் சில்லறை விலைகள், வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியாளர் விலைகள் மற்றும் முறைசாராத் துறைக்கான நாளாந்தக் கூலி வீதங்கள் பற்றிய தகவல் சேகரிக்கப்பட்டது. நெல், தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு உற்பத்தி, சிறிய அளவிலான கட்டடவாக்கம் மற்றும் பணிகள் துறைகளில் நாளாந்த கூலித் தகவல் சேகரிக்கப்பட்டது. புறக்கோட்டைச் சந்தை மற்றும் மரகதமுல்ல அரிசிச் சந்தை மற்றும் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் போன்ற ஏனைய நிலையங்களிலிருந்து முக்கிய உணவுப் பொருட்களின் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விலைகளின் சேகரிப்பு திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட ஆசிரியரல்லாத பரீட்சகர்களால் நிறைவேற்றப்பட்டது. புதிதாக நிறுவப்பட்ட 'நாரகேன்பிட்டி விசேட பொருளாதார நிலையம்' பற்றிய சந்தைத் தகவலின் சேகரிப்பும் பரப்புலும் 2008 திசம்பரில் அதன் திறப்பு விழாவை உடனடுத்து திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டது. கிரமமான தலமேற்பார்வையூடாக பரீட்சகர்களால் அனுப்பி வைக்கப்பட்ட விலைகளின் தலத்துக்கு வெளியேயான மேற்பார்வை மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பினூடாக தரவு சேகரிப்பின் தரமும் நேரம்பிந்தாத தன்மையும், மேலும் பலப்படுத்தப்படும். சில பொருட்கள் மற்றும் வர்த்தகப் பெயர்கள் இல்லாமல் போதல் மற்றும் அலகின் அளவுகளால் ஏற்பட்ட மாற்றங்கள் போன்ற சந்தைகளில் ஏற்பட்ட தற்போதைய அபிவிருத்திகளைக் கருத்திற் கொண்டு சில தரவு சேகரிப்புப் படிவங்கள் திருத்தப்பட்டன.

அவர்களது தரவு சேகரிப்பில் துல்லியம், தரம், நேரம்பிந்தாத தன்மை என்பவற்றை மேம்படுத்தும் பொருட்டும் நிலையங்கள் மற்றும் பிரதேசங்களுக்கிடையே விலை அபிவிருத்திகளிலான வேறுபாடுகளுக்கான காரணங்கள் மீதான அவர்களின் உள்ளீட்டைப் பெறுவதற்காகவும் தரவு சேகரிப்போருக்கு புத்துயிர் அளிக்கும் பயிற்சியை வழங்கும் பொருட்டு 2008இல் கொழும்பு, மாத்தறை, அநுராதபுரம் மற்றும் கண்டியில் நான்கு பிரதேச ஆய்வரங்குகள் நடாத்தப்பட்டன. இந் நிகழ்ச்சித்திட்டங்களில், அறிவை பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூகத்தின் ஏனைய

உறுப்பினர்களுக்கு மாற்றும் நோக்கில் பணவீக்கம் மற்றும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், இலங்கை சுபீட்சச் சுட்டெண் மற்றும் இலங்கையில் அரச பிணையங்களின் சந்தை போன்ற துறைகளில் பொருளாதாரத்திலான சமகால அபிவிருத்திகள் தொடர்பாக அவர்களுக்கு அறிவூட்டுவதற்கான விசேட கூட்டங்களும் நடத்தப்பட்டன. அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களின் பயனுறுதி ஆசிரிய பரீட்சிப்பாளர்களால் காட்டப்பட்ட மேம்பட்ட விழிப்புணர்வு மற்றும் ஆர்வத்தில் பிரதிபலிக்கப்பட்டது.

### 24.5 விலைகள், கூலிகள் மற்றும் தொழில்நிலை

2007 நவெம்பரில் தொகைமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைப் (கொநுவிசு), (2002 = 100) பயன்படுத்தி நுகர்வோர் விலைகள் மற்றும் பணவீக்கத்திலான அசைவுகளை திணைக்களம் தொடர்ந்து பகுப்பாய்வு செய்கிறது.

திணைக்களம் 2003 - 2005 ஐ அடிப்படைக் காலப்பகுதியாகக் கொண்டு ஆகப் பிந்தியதான நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2003/2004 இன் அடிப்படையில் மாகாண நுகர்வோர் விலைச் சுட்டெண்களையும் முழு நாட்டுக்குமான நுகர்வோர் விலைச் சுட்டெண்ணையும் தொடர்ந்து தொகுத்து வருகிறது.

திணைக்களம் முதலாந்தரச் சந்தை மட்டத்தில் உற்பத்தியாளர் மற்றும் மொத்த விற்பனை விலைகளிலான அசைவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணையும் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையிலான கூலித்தரவை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கான முறைசாராத்துறைக் கூலி வீதங்களையும் தொகுக்கிறது.

திணைக்களம் வருடாந்த மற்றும் காலாண்டு அரச துறை தொழில்நிலை அளவீடுகளை நடாத்தியது. அளவீடுகள் 2007 இன் வருடாந்த மற்றும் காலாண்டு அரசதுறை தொழில்நிலை அளவீட்டில் அறிவிக்கப்பட்டவாறு ஒவ்வொன்றும் 1,000 ஊழியர்களுக்கு மேல் கொண்டுள்ள சகல மத்திய அரசு மற்றும் அரசதுறை நிறுவனங்களை உள்ளடக்கியிருந்தது. திணைக்களம் 2008 இல் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு, தொழில் உறவுகள் மற்றும் தொழில் சந்தைச் சீர்திருத்தங்கள் ஆகிய துறைகளை உள்ளடக்கும் தொழிற்படை மற்றும் தொழிற்சந்தை மீது சேகரிக்கப்பட்ட தகவலையும் பகுப்பாய்வு செய்தது.

### 24.6 புள்ளிவிபரங்களைப் பரப்புதல்

இவ்வாண்டில் திணைக்களம் அதன் இரண்டு வருடாந்த வெளியீடுகளான "இலங்கையின் சமூக பொருளாதாரத் தரவு 2008 - தொகுதி XXIX" ஐ 2008 மாச்சிலும் "இலங்கையின் பொருளாதார சமூகப் பொருளாதாரத் தரவு - தொகுதி XXXI" ஐ 2008 யூனிலும் வெளியிட்டது. இத்துடன் வங்கியின் 2008 இற்கான கையடக்கத் தினக்குறிப்பிலுள்ள புள்ளிவிபரவியல் அட்டவணைகளும் புதிய தகவல்களுடன் பூரணப்படுத்தப்பட்டன.

திணைக்களம் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரம் தொடர்பான தரவு நூலகத்தை நிறுவுவதற்கான புதிய செயற்றிட்டமொன்றையும் 2008இல் ஆரம்பித்தது.

## 25. வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை

வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் 1988இன் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டம் மற்றும் 2000இன் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டம் என்பனவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகிய அதன் தொழிற்பாட்டைத் தொடர்ந்து மேற்கொண்டது.

2008ஆம் ஆண்டில், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி ஒன்றும் புதியபொதுக்கம்பனி ஒன்றும் நிதிக் கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டதுடன் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் எண்ணிக்கையை 32இலிருந்து 34இற்கு அதிகரித்தது. மூன்று பொதுக்கம்பனிகளும் ஒரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்டன. நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் கீழான நான்கு புதிய கம்பனிகளின் பதிவுடன் பதிவு செய்யப்பட்ட நிதி குத்தகைக்குவிடும் நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை ஆண்டிறுதியில் 78இற்கு அதிகரிக்கப்பட்டது.

### 25.1 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்

இத் திணைக்களம் தலத்துக்கு வெளியேயான கண்காணிப்பு மற்றும் தலப்பரீட்சிப்புக்களூடாக அதன் ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகளை நிறைவேற்றியது. சகல கம்பனிகளுக்குமான தலத்துக்கு வெளியேயான கண்காணிப்பு மாதாந்த அடிப்படையில் செயற்படுத்தப்பட்டிருக்கையில் தலப் பரீட்சிப்புக்கள் முன்னரே திட்டமிடப்பட்ட அட்டவணையின்படி, இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டது. இவ்வாண்டில் தலப்பரீட்சிப்புக்களுக்கு உட்படுத்தப்படாத கம்பனிகள் தொழிற்பாடுகளின் குறிப்பிட்டதுறைகளில் உடன் பரீட்சிப்புக்களுக்கு உட்படுத்தப்பட்டன.

(அ) **தலத்துக்கு வெளியேயான கண்காணிப்பு**

பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் தலத்துக்கு வெளியேயான கண்காணிப்பு பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் நிதியியல் நிலைமை மற்றும் தொடர்பான சட்டங்களின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் நாணயச்சபையால் இயற்றப்பட்ட விதிகளுடன் அவை இணங்கியிருக் கின்றனவா என்பதைக் கண்டறிவதற்காக காலத்துக்குக் காலம் கம்பனிகளால் சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தரக் கூற்றுக்களூடாகப் பெறப்பட்ட தகவலைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ) **தல மற்றும் உடன் பரீட்சிப்புக்கள்**

தல பரீட்சிப்புக்கள் திரவத்தன்மை, சொத்துக்களின் தரம், மூலதனப் போதுமாந் தன்மை முகாமைத்துவ வினைத்திறன், வருவாய்கள், இலாபகரத்தன்மை, முறைமைகளும் கட்டுப்பாடுகளும் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் கம்பனி ஆளுகையின் தகுதி என்பவற்றை மதிப்பிடுவதற்கு மேற்கொள்ளப் படுகின்றன. 2008ஆம் ஆண்டில் இத்திணைக்களம் அதன் பரீட்சிப்புத் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட நிதிக்

கம்பனிகளின் 11 தலப் பரீட்சிப்புக்களை நடத்தியது. இத்துடன் திரவத்தன்மை, கொடுகடன் நிருவாகம், சொத்துக்களின் சொத்துப்பட்டியல், மூலதனப் போதுமாந்தன்மை மற்றும் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய துறைகளைப் பரீட்சிப்பதற்கு இவ்வாண்டில் அனைத்தையும் உள்ளடக்கிய தலப் பரீட்சிப்புக்களுக்கு உட்படாத 17 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மீது உடன் பரீட்சிப்புக்கள் நடத்தப்பட்டன.

அனைத்தையும் உள்ளடக்கிய தலப் பரீட்சிப்புக்கள் மற்றும் உடன் பரீட்சிப்புக்களின்போது கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பான பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் பணிப்பாளர் சபைக்கும் மூத்த முகாமைத்துவத்திற்கும் அறிவிக்கப்பட்டதுடன் குறைபாடுகள் தொடர்பாக உடனடி சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்குமாறு பணிக்கப்பட்டனர். எந்தவொரு குறைபாட்டையும் திருத்துவதற்காக விசேட கால நிர்ணயத்துடனான உறுதியான கடப்பாடுகளை வழங்குமாறு பணிப்பாளர் சபைகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. இத் திணைக்களம் சீர்திருத்த நடவடிக்கைகளின் மேம்பாட்டை நெருக்கமாகக் கண்காணித்தது.

(இ) **பணிப்புரைகள் வழங்குதல்**

இவ்வாண்டில் பின்வரும் நான்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

(i) **2008ஆம்ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை**: 2005இன் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரையை இரத்துச் செய்த இப் பணிப்புரை கால வைப்பு, சேமிப்பு வைப்பு, முறி அல்லது கழிவில் வழங்கப்பட்ட ஏனைய கருவி மீது எந்தவொரு நிதிக் கம்பனியாலும் செலுத்தப்படக்கூடிய ஆகக் கூடிய வருடாந்த வட்டி வீதம் மீது வரையறைகளை நிர்ணயிக்கிறது.

(ii) **2008ஆம்ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை** - இப்பணிப்புரை 2008ஆம்ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரையின் திருத்தப்பட்ட வடிவமாகும் என்பதுடன் இது அதே நேரத்தில் அப் பணிப்புரையை இரத்துச் செய்கிறது.

(iii) **2008ஆம்ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்புரை** - உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கம்பனி ஆளுகையின் குறிப்பிட்ட தத்துவங்களின் அடிப்படையில் விருத்தி செய்யப்பட்ட கம்பனி ஆளுகை மீதான பணிப்புரைகள் 2009 சனவரி 1இலிருந்து பிரயோகிக்கத்தக்க வகையில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டன. இதில் உள்ளடக்கப்பட்ட முக்கிய அம்சங்களாக பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள், பணிப்பாளர் சபையின் உள்ளமைப்பு, பணிப்பாளர்களின் தகுதி மற்றும் நேர்மையை மதிப்பிடுவதற்கான பிரமாணம், சபையால் அளிக்கப்பட்ட முகாமைத்துவத் தொழிற்பாடுகள், தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலரின் கடமைகளை வெவ்வேறாக்கல், சபை நியமித்த குழுக்கள் மற்றும் நிதியியல் கூற்றுக்கள் என்பன விளங்குகின்றன. புதிய தேவைப்பாடுகளுக்கான சுமூகமான மாற்ற இடையீட்டு நிலையை வசதிப்படுத்துவதற்கு பணிப்புரையின் பல முக்கிய அம்சங்கள் மீது பல எண்ணிக்கையான இடையீட்டு நிலைக்குரிய ஏற்பாடுகள் வழங்கப்பட்டன. இப்பணிப்புரையின் முக்கிய நோக்கம் யாதெனில் நிதிக் கம்பனியின் பொதுவான ஆற்றலைப் பேணும் பொருட்டு நிதிக் கம்பனிகளுக்கான செழிப்பானதும் வலுவானதுமான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு நிதிக் கம்பனியின் விடயங்களுக்கு பணிப்பாளர் சபையை கூடியளவிற்கு பொறுப்பினைக் கொண்டவர்களாகவும் பதில் சொல்லும் பொறுப்புக்கூறச் செய்வதுமாகும்.

(iv) **2008ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் கம்பனிகள்/ கம்பனி ஆளுகை - திருத்தம் பணிப்புரை .** இப் பணிப்புரை 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கம்பனி) ஆளுகை இடையீட்டு நிலை ஏற்பாடுகளுக்கு சில மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக வழங்கப்பட்டது.

### 25.2 பதிவு செய்யப்பட்ட நிதி குத்தகைக்குவிடும் நிறுவனங்கள்

(அ) **நிதி குத்தகைக்கு விடும் நிறுவனங்களின் பதிவு**

மீளாய்விற்குரிய ஆண்டில் மூன்று பொதுக் கம்பனிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றும் நிதி குத்தகைக்கு விடும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டன. இதன்படி, 2008 இறுதியில் பதிவு செய்ப்பட்ட நிதி குத்தகைக்குவிடும் கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை 78ஆக விளங்கியதுடன் 14 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 9 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த கம்பனிகள், 33 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் 22 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளையும் உள்ளடக்கியுள்ளது.

(ஆ) **சிறப்பியல்பு வாய்ந்த நிதி குத்தகைக்குவிடும் கம்பனிகளின் கண்காணிப்பு**: இத் திணைக்களம் 2008ஆம் ஆண்டிலும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் தலத்துக்கு வெளியேயான கண்காணிப்பை மாதாந்த அடிப்படையில் தொடர்ந்து மேற்கொண்டது.(ஏனைய பதிவு செய்யப்பட்ட நிதி குத்தகைக்குவிடும் நிறுவனங்கள் அதாவது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் தனியான சட்ட விதியின் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்யப்பட்டன) மேலும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் 6 தலப் பரீட்சிப்புக்களும், 12 உடன் பரீட்சிப்புக்களும் திணைக்களத்தால் இவ்வாண்டில் நடாத்தப்படடன. நிதியியல் செயலாற்றம், குறிப்பிட்ட சிறப்பியல்பு வாய்ந்த கம்பனிகள் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை மற்றும் முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் பயன்பாட்டை மதிப்பிடுவதற்கு தலப்பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டன. நிதியியல் அறிக்கையிடலின் துல்லியத் தன்மையை கண்டறிவதற்கும், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் பணிப்புரைகளுடன் இணங்கிச் செல்வதைச் சரி பார்ப்பதற்கும் இப் பரீட்சிப்புக்கள் பயன்படுத்தப்பட்டன. இப்பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாத கம்பனிகள் ஒரு குறிப்பிட்ட காலவரையறையினுள் சீர்திருத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு பணிக்கப்பட்டதுடன் அவர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான செயலாற்றத்தைத் திணைக்களம் நெருக்கமாகக் கண்காணித்தது.

### 25.3 முறிவடைந்த நிதிக் கம்பனிகள்

முறிவடைந்த ஒன்பது நிதிக் கம்பனிகளின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் நிதிக் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1988இலிருந்து நாணயச் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளன. அக் கம்பனிகளுள் நான்கு கம்பனிகள் 2008 இறுதியில் ஒடுக்கிவிடப்பட்டன. ஐந்து கம்னிகள் விடயத்தில் ஒடுக்கிவிடும் செயல்முறை தொடர்ந்தது. தொடர்பான அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட முறிவடைந்த நிதிக் கம்பனிகள் தொடர்பாக எடுக்கக் கூடிய நடவடிக்கையை விதந்துரைக்கும் அறிக்கைகள் தொடர்ந்தும் மீளாய்வின்கீழ் காணப்பட்டன. முறிவடைந்த நிதிக் கம்பனிகள் தொடர்பான விடயங்களை விசாரணை செய்யும் சனாதிபதி ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையை மாண்புமிகு சனாதிபதிக்கு 2008 திசெம்பர் 15ஆம் திகதி கையளித்தது.

### 25.4 நிதி வியாபாரத்தின் அதிகாரமளிக்கப்படாத நடத்தை

அதிகாரமின்றி நிதி வியாபாரத்தில் ஈடுபட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் புலனாய்வுகளை திணைக்களம் 2008இலும் தொடர்ந்து மேற்கொண்டது. நிதிக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 1இன் கீழ் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளைக் கவனத்திற்கொண்டு ஏழு கம்பனிகள் அதிகாரமின்றி நிதி வியாபாரத்தை நடத்துகின்றன என செத்தெம்பரில் நாணயச்சபை தீர்மானித்ததுடன் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளில் நடவடிக்கை எடுக்குமாறு திணைக்களத்தைப் பணித்தது. 2008 திசெம்பர் இறுதியில் திணைக்களம் 56 கம்பனிகள் தொடர்பான முறைப்பாடுகளைப் பெற்றது. நிதிக் கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகவோ அல்லது நாணயச்சபையால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்காமலோ நிதி வியாபாரத்தை நடத்தும் 14 கம்பனிகளுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதிகாரமின்றி வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களின் பரீட்சிப்பு தொடர்பான ஏற்பாடுகளைப் பலப்படுத்தும் பொருட்டு நிதிக் கம்பனிகள் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்கள் முன்மொழியப்பட்டன.

### 25.5 பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

நிதி வியாபாரத்தை அதிகாரமின்றி நடத்துவது தொடர்பான விடயங்களில் திணைக்களம் பொதுமக்களுக்குத் தொடர்ந்தும் அறிவூட்டியது. திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன.

**சட்டத்திற்கிணங்க மத்திய வங்கியுடன் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் - 31.12.2008இல் உள்ளவாறு**

| பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் | பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்கு விடும் கம்பனிகள் |
|---|---|
| 1. அபான்ஸ் பினான்ஷியல் சேர்விசஸ் லிமிடெட் | 1. ஏசியா கொமர்ஸ் லிமிடெட் |
| 2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடெட் | 2. அசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட் |
| 3. ஏஎம்டபிள்யூ கபிடல் லீசிங் லிமிடெட் | 3. கப்பிட்டல் றீச் கிறடிற் லிமிடெட் |
| 4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி லிமிடெட் | 4. சீலீஸ் பினான்சியல் சேவிசஸ் லிமிடெட் |
| 5. ஏசியா அசற் பினான்ஸஸ் லிமிடெட் | 5. செலிங்கோ டெவலப்மென்ட் பாங்க் லிமிடெட் |
| 6. ஏசியன் பினான்ஸ் லிமிடெட் | 6. செலிங்கோ பினான்ஸ் பிஎல்சி |
| 7. அசோசியேட்ரட் மோட்டார் பினான்ஸ் கம்பனி லிமிடெட் | 7. செலிங்கோ லீசிங் கோபரேசன் லிமிடெட் |
| 8. பார்ட்லீட் பினான்ஸ் லிமிடெட் | 8. கொமர்சல் லீசிங் கம்பனி பிஎல்சி |
| 9. பிம்புத் லங்கா இன்வெஸ்ட்மன்டஸ் லிமிடெட் | 9. கோபரேடிவ் லீசிங் கம்பனி லிமிடெட் |
| 10. கப்பிட்டல் றீச் லீசிங் லிமிடெட் | 10. இந்திரா பினான்ஸ் லிமிடெட் |
| 11. சென்றல் பினான்ஸ் கம்பனி லிமிடெட் | 11. இசுறு பினான்ஸ் கம்பனி லிமிடெட் |
| 12. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட் | 12. களுத்தோட்ட இன்வெஸ்மென்ட் அன்ட் லீசிங் லிமிடெட் |
| 13. சிலிங்கோ இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் ரியல்டி லிமிடெட் | 13. கொசீபா லீசிங் கம்பனி லிமிடெட் |
| 14. சிலோவ் பினான்ஸ் லிமிடெட் | 14. லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனி பிஎல்சி |
| 15. கொமர்சல் கிறடிட் லிமிடெட் | 15. லிஸ்வின் இன்வெஸ்மென்ட் லிமிடெட் |
| 16. எதிரிசிங்க ரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட் | 16. எல்ஓஎல்சி மைக்ரே கிறடிற் லிமிடெட் |
| 17. இன்டஸ்றியல் பினான்ஸ் லிமிடெட் | 17. மர்ச்சன்ட் பாங்க் ஒப் சிறீலங்கா பிஎல்சி |
| 18. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடெட் | 18. ஒறியன்ட் பினான்சியல் சேவிசஸ் கோபரேசன் லிமிடெட் |
| 19. எல்பீ பினான்ஸ் லிமிடெட் | 19. பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி லிமிடெட் |
| 20. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட் | 20. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பாங்க் பிஎல்சி |
| 21. மர்ச்சன்ட் கிறடிட் ஒப் சிறிலங்கா லிமிடெட் | 21. சம்பத் லீசிங் அன்ட் பக்டறிங் லிமிடெட் |
| 22. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட் | 22. செலான் மெர்ச்சன்ட் பாங்க் பிஎல்சி |
| 23. நெக்ஸ்ற் பினான்ஸ் லிமிடெட் | |
| 24. செங்கடகல பினான்ஸ் கம்பனி லிமிடெட் | |
| 25. செலான் மர்ச்சன்ட் லீசிங் லிமிடெட் | |
| 26. சில்வறீன் பினான்ஸ் கம்பனி லிமிடெட் | |
| 27. சிங்கர் பினான்ஸ் (லங்கா) லிமிடெட் | |
| 28. சிங்கபுத்ர பினான்ஸ் லிமிடெட் | |
| 29. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் சேர்விஸஸ் லிமிடெட் | |
| 30. த பினான்ஸ் அன்ட் கரன்டி கம்பனி லிமிடெட் | |
| 31. த பினான்ஸ் கம்பனி லிமிடெட் | |
| 32. த மல்ரி பினான்ஸ் கம்பனி லிமிடெட் | |
| 33. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட் | |
| 34. வாலிபெல் பினான்ஸ் லிமிட்டெட் | |

(அ) **செய்திப் பத்திரிகைளில் வெளியீடுகள்**

வைப்புக்களின் வரைவிலக்கணம் பல்வேறு சட்டங்களின் கீழ் வைப்புக்களை ஏற்றுக்கொள்ள அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்கள்/ அமைப்புக்களின் வகைகள் மற்றும் மத்திய வங்கியினால் வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களின் பட்டியல் என்பவற்றை வழங்கும் விளக்கக் குறிப்புடனான மாதாந்த பத்திரிகை அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. இந்த அறிவித்தல்கள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்துடன் இணைந்து மாதாந்த அடிப்படையில் வெளியிடப்பட்டன. இத்துடன், குறிப்பாக அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான 19 பத்திரிகை அறிவித்தல்கள் இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் வெளியிடப்பட்டன.

(ஆ)திணைக்களத்தின் அலுவலர்கள் நிதி வியாபாரத்தை அதிகாரமின்றி நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கு நான்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றினர்.

(இ)"அதிகாரமளிக்கப்படாத நபர்கள் மற்றும் நிறுவனங்களால் பொதுமக்களிடமிருந்து நிதியங்களைத் திரட்டல்" என பெயரிடப்பட்ட துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டதுடன் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளூடாக பொது மக்களிடையே விநியோகிக்கப்பட்டன.

### 25.6 நுண்பாக நிதியிடும் நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தல்

பெரும் எண்ணிக்கையான நுண்பாக நிதியிடல் நிறுவனங்கள் நாடு முழுவதும் நுண்பாக நிதியிடல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன. இந் நிறுவனங்கள் விசேட ஒழுங்கமைப்பு மற்றும் மேற்பார்வை அதிகார சபையூடாகவோ அல்லது ஒழுங்குமுறையூடாகவோ ஒழுங்குமுறைப் படுத்தப்படுவதோ அல்லது கண்காணிக்கப்படுவதோ இல்லை. நுண்பாக நிதித்துறையின் பரவலாக்கம் மற்றும் சிக்கலான நிலைமை, மற்றும் தற்போதைய சட்டங்களைக் கவனத்திற் கொண்டு இந் நிறுவனங்கள்மீது குறிப்பிட்ட ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகள் விதிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப் பட்டுள்ளது. எனவே இத்துறைக்கான ஒழுங்கமைப்பு மற்றும் மேற்பார்வை அமைப்பொன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

## 26. நலன்புரி

மீளாய்விற்குரிய ஆண்டில், நலன்புரித் திணைக்களம் பணிகளின் தரத்தை மேம்படுத்திய அதேவேளை ஊழியர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருப்போருக்கு நலன்புரி வசதிகளை அதிகரித்தது. நலன்புரித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வசதிகள் மருத்துவ நன்மைகள், வீடமைப்பு மற்றும் ஊர்திகளுக்கான கடன்கள், உள்ளக மருத்துவ சிகிச்சை நிலையம், உணவக வசதிகள், சலுகை ரீதியிலான கடன் திட்டங்கள் மற்றும் ஏனைய துணைப் பணிகளையும் உள்ளடக்குகின்றன.

2008ஆம் ஆண்டில் மத்திய வங்கியின் மருத்துவ நன்மைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ நன்மை வசதிகள் ஊழியரின் உரித்தில் ஏற்பட்ட அதிகரிப்புடனும் ஊழியர்களுக்கும் ஓய்வூதியர்களுக்குமான நீரிழிவு நோய்க்கான மீள்கொடுப்பனவு வசதி போன்ற புதிய வகைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் கணிசமானளவில் விரிவடைந்தன. இதேவேளை, கட்டடவாக்கம், காணி விலைகள் மற்றும் உந்து ஊர்திகளின் அதிகரித்த செலவைக் கருத்திற் கொண்டு நடைமுறையிலிருக்கும் ஏற்பாடுகளின் போதுமாந்தன்மையைப் பரிசீலனை செய்த பின்பு திணைக்களம் வீடமைப்பு மற்றும் ஊர்திக் கடன் வசதிகளை கணிசமானளவில் அதிகரித்தது. புதிய திட்டமொன்று 2009இல் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது. வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற ஊழியர்கள் ஓய்வு பெற்ற திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு அவர்களது வீடமைப்புக் கடன் தவணைக் கொடுப்பனவுகளை இடைநிறுத்தி நன்மைபெற அனுமதிப்பதன் மூலம் வீடமைப்புக் கடன் வசதிகள் மேலும் விரிவாக்கப்பட்டன. மேலும், வீடமைப்புக் கடன் வழங்கும் முறைமையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு 2009இலிருந்து முறைமையை தன்னியக்கமாக இயங்குவதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. திணைக்களம் நீண்ட காலப்பகுதிக்கு வீடமைப்புக் கடனைச் செலுத்தாதோரின் கடன் நிலுவைகளிலிருந்து கிட்டத்தட்ட ரூபா 9 மில்லியனை மீளப் பெறக்கூடியதாக இருந்தது. இதேவேளை, திணைக்களம் கடன்களை மிகக் குறுகிய காலப்பகுதியினுள் விடுவிப்பதன் மூலம் அலுவலர்களின் கடன் வசதிகளின் தேவைப்பாட்டை மிகக் குறுகிய காலப்பகுதியினுள் வழங்கியது. இவ்வாண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட வீடமைப்புக் கடன்களின் எண்ணிக்கை 90ஆக விளங்குகையில் ஊழியர் நன்மைத்திட்டக் கடன்கள், கணனிக் கடன்கள், ஊர்திக் கடன்கள் போன்றவை உள்ளடங்கலாக வழங்கப்பட்ட ஊழியர் சேமநிதியக் கடன்களின் எண்ணிக்கை 1,073ஆக விளங்கியது.

உணவகங்களில் காணப்படும் சுயபரிமாறல் முறைமை இலங்கை மத்திய வங்கி ஊழியர்கள் சிறந்த பணியையும் சிறந்த தேர்வையும் கொண்டிருக்க உதவியது. பணி வழங்கப்படும் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு மத்தியிலும் கிடைக்கக்கூடிய அலுவலர்களுடன் வினைத்திறன்மிக்க உணவு வழங்கற்பணி மேற்கொள்ளப்பட்டது.

நலன் மற்றும் பொது விடயங்கள் போன்ற பல தரப்பட்ட தலைப்பில் அலுவலரின் நன்மைக்காக திணைக்களத்தால் 2008இல் தொடர் விரிவுரைகள் நடத்தப்பட்டன. இலத்திரனியல் ஊடகத்தைப் பயன்படுத்தி பயனுள்ள நலத்துறை குறிப்புக்கள் சுற்றோட்டப்படுத்தப்பட்டன.